கோவைத் தமிழ்ச் சங்க வெளியீடு:

இந்திய பத்திரிகைத் தொழிலியல்

6990

(INDIAN JOURNALISM)

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

6990

3239

கோயமுத்தூர், விளாங்குறிச்சி,

வி. நா. மருதாசலக் கவுண்டர்

இயற்றியது.

விலாசம்:

கோவைத் தமிழ்ச் சங்கம்,

வைசியாள் வீதி,

கோயமுத்தூர்.

1935

உரிமைப் பதிவு]

[விலை ரூ. 1-8-0

6990

தமிழ்ச் சங்க வெளியீடு :

திய பத்திரிகைத் தொழிலியல்

(INDIAN JOURNALISM)

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

கோயமுத்தூர், விளாங்குறிச்சி,

வி. நா. மருதாசலக் கவுண்டர்

இயற்றியது.

(3239)

விலாசம் :

கோவைத் தமிழ்ச் சங்கம்,

வைசியாள் வீதி,

கோயமுத்தூர்.

உரிமைப் பதிவு] 1935 [விலை ரூ. 1-8-0

"சுதேசமித்திரன்" பத்திரிகாசிரியர்

திரு. C. R. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், B A., அவர்கள் எழுதிய

முகவுரை

இந்நூலுக்கு முகவுரையொன்று நான் எழுத வேண்டும் என்று ஸ்ரீமான் வி. நா. மருதாசலக் கவுண்டர் என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். அவரை எனக்கு இதற்குமுன் பரிசயமில்லை. அவரைப்பற்றிநான் முதன்முதலாகத் தெரிந்து-கொண்டது இந்த நூல் மூலமாகவேயாகும். இருந்தாலும், அவர் கேட்டுக்கொண்டபடி இம்முகவுரையை எழுத நான் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். ஏனெனில், முதன்முதலாகப் பத்திரிகைத் தொழிலின் கோட்பாடுகளையும், முறைகளையும் ஆராய்ந்து வெளியிடப்படும் நூல் இதுதான். இத்துறையில் ஸ்ரீமான் கவுண்டர் விசேஷ உத்ஸாகத்தைக் காட்டியிருக்கிறார். நான் அறிந்த வரையில் தமிழ் நாட்டில் வழங்கி வரும் எந்தத் தினசரிப் பத்திரிகையிலும் அவர் சம்பந்தப்பட்டவரல்லர். அப்படிக்கிருந்தும், தினசரிப் பத்-திரிகைத் தொழிலில் ஈடுபட்ட பலரும் வியக்கத் தக்கவாறு தொழிலின் அடிப்படையான அமிசங்களை அவர் நன்கு விளக்-கிக் காட்டியிருக்கிறார்.

பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு இப்புத்த-கம் ஒரு சிறந்த வழிகாட்டியாகும். தவிரவும், இந்தச் சந்தர்ப்-பங்களில் இப்படிப்பட்ட புத்தகம் ஒன்று வெளி வருவதும் அவசியமாகும். ஏனெனில், பத்திரிகைத் தொழிலைப் பற்றிப் பல விதமான தப்பெண்ணங்கள் இருந்து வருகின்றன. வேலையற்றவர்கள் சிறிது எழுதத் தெரிந்தாலும் பத்திரிகைத் தொழிலுக்கு அவசியமான யோக்கியதை ஏற்பட்டுவிட்ட-

தாக நினைத்துக்கொண்டுவிடுகின்றார்கள். பத்திரிகைகளில் வெளியான சில வியாசங்களை ஆதாரமாகக்கொண்டு பத்திரிகைத் தொழிலில் நுழைய நூற்றுக் கணக்கான அபேக்ஷகர்கள் என் உதவியை நாடியிருக்கின்றார்கள். நன்றாக எழுத யோக்கியதை பெற்றவர்களனைவரும் பத்திரிகைத் தொழிலை நடத்த யோக்கியதை உடையவர்களென்று நினைத்துவிடுவது தவறு. இதை மெய்ப்பிக்க எனது சொந்த அனுபவத்திலிருந்து ஓர் உதாரணத்தையும் கூறலாம்: காலஞ்சென்ற சுப்பிரமணிய பாரதியார் என்னுடன் "சுதேசமித்திரன்" காரியாலயத்தில் சிறிது காலம் உழைத்து வந்தார். அவருடைய வசன நடை அழகையும் கவிதா சக்தியையும் அறியாதவர் ஒருவரும் இருக்கமாட்டார்; அறிந்தவர் எவரும் போற்றாமலும் இருக்கமாட்டார். அப்படிப்பட்ட அபார சக்தி வாய்ந்த ஒருவரைப் பத்திரிகைத் தொழிலில் தேர்ந்தவர் என்று சொல்ல நான் சற்றுச் சங்கோஜப்படுவேன். ஏனெனில், தொழிலுக்கு இயற்கையான வரையறைகளுக்கும் கட்டு திட்டங்களுக்கும் அடங்கி நடப்பதென்பதே அவருக்கு மிகவும் சிரமமாகவிருந்தது. கற்பனா சக்தியில் வல்லவர் ஒருவரைக் கேவலம் அன்றாட நிகழ்ச்சிகளை விளக்கிக் கூற ஈடுபடுத்துவதால் அவர் மனம் அதில் எப்படி ஈடுபடும்? அவர் மனம் ஈடுபடாத வேலை எவ்விதம் பரிமளிக்கும்?

பத்திரிகைத் தொழிலில் பொது மக்களுக்கு விசேஷ பிரமையுண்டு. உபாத்தியாயர் தொழிலைக் கண்ட பள்ளிப் பிள்ளைகள் எப்படிப் பிரமைகொள்ளுகிறார்களோ, அதற்குச் சமமாக இதைச் சொல்லலாம். அதற்குக் காரணமும் உண்டு. ஏனெனில்பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு உபாத்தியாயாகள் எப்படி விஷய ஞானத்தை ஊட்டி வருகிறார்களோ, அதே பிரகாரந்தான் பத்திரிகைகளும் வயது முதிர்ந்து பல்

வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கும் பிரஜைகளுக்கும் ஞானோபதேசம் செய்து வருகின்றன. இவ்விரண்டில் பத்திரிகைகள் செய்துவரும் கடமையையே பெரிதாகப் பாவிக்க வேண்டும். அது மிகுந்த பொறுப்புமுள்ளது. அப்படியிருந்தும் பள்ளிஉபாத்தியாயர்களுக்குப் போதனைமுறையைக் கற்றுக்கொள்ளப்பயிற்சி ஸ்தானங்கள் இருக்கையில்பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு அப்படிப்பட்ட சாதனம் இதுகாறும் ஏற்படவில்லை. ஆனால், காலக்கிரமத்தில் அஃது ஏற்பட்டுவிடுமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அஃது ஏற்படுமுன் பத்திரிகைகளை நடத்துவோருக்கும், பத்திரிகைகளைப் படிப்பவருக்கும் அவசியமான அறிவு முதிர்ச்சி உண்டாக வேண்டும். 'பத்திரிகைகள் என்றால் என்ன? அவை செய்யக் கூடிய கடமைகள் என்ன? இதர தேசங்களில் அவை செய்து வரும் தொண்டு என்ன? இந்நாட்டிலும் அவை எவ்விதம் வளர்ந்தோங்க வேண்டும்?' என்பன போன்ற விஷயங்களை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும். அதற்கு இந்நூல் இன்றியமையாத ஒரு சாதனமாக இருக்குமென்று நான் நம்புகிறேன்.

இப்புத்தகம் முழுவதையும் நான் சிரத்தையுடன் படித்துப் பார்த்தேன். குறுகிய அளவில் பரந்த விஷயத்தைச் சுலபமாக ஆசிரியர் விளக்கிக் கூறியிருக்கிறார். படிப்பதற்கு ருசியாகவும், விஷயங்கள் நிறைந்ததாகவும் இந்நூல் இருக்கிறது. இந்நாட்டில் தோன்றி வளர்ந்து வரும் பத்திரிகைகள் நல்வழிப்பட்டு நல்ல வேலை செய்ய வேண்டுமென்பதே ஆசிரியரின் நோக்கம். அஃது இப்புத்தகத்தினால் வெகு தூரம் ஈடேறுமென்று நான் நம்புகிறேன்.

சி. ஆர். ஸ்ரீநிவாஸன்,

"சுதேசமித்திரன்" ஆசிரியர்.

மதிப்புரைகள்

கோயமுத்தூர் வழக்கறிஞரும்
கோவைத் தமிழ்ச் சங்கத்தின் உதவித் தலைவருமாகிய

சைவத் திருவாளர்:

C. K. சுப்பிரமணிய முதலியார், B.A. அவர்கள்

(Member of the Senate and of the Academic Council of the Madras University)

எழுதியது.

எனது நண்பர் விளாங்குறிச்சித் திரு. வி. நா. மருதாசலக் கவுண்டர் அவர்கள் இயற்றிய "இந்திய பத்திரிகைத் தொழிலியல்" (Indian Journalism) என்ற நூலைப் படித்துப் பார்த்து மகிழ்ந்தேன். இப்பொருள் பற்றிய தமிழ் உரை நூல் இதுவே முதலாவதாம். இந்நூலை ஆசிரியர் மூன்று பெரும்பகுதிகளாகப் பிரித்து உள்ளார். அவற்றில் மூன்றாவது சிறப்பியல் என்பதில் இத்தொழிலின் தேர்ச்சிபெறும் முறைகளைப்பற்றிப் பேசி வருவதே பெரும்பகுதியாகும். பத்திரிகை உருவாக்கல், தொழிலாளரும் தொழில் முறையும் என்ற பகுதிகள் படிப்போர்க்கு மிக்க பயன் தருவன. பத்திரிகைத் தொழிலைப் பற்றிய கல்வி பயிலப் பெறவேண்டுமென்று பல்கலைக் கழகத்தார் கருதும் இந்நாளில் இந்நூல் மிகவும் வேண்டப் பெறுவதாம். நூல் அழகிய இலகுவான நடையில் அரிய கருத்துக்கள் பொதிந்து அமைந்துள்ளது. இந்நாள் உலகமே பத்திரிகை உலகமாக இருக்கின்றபடியால் இந்நூல் அவசியம் யாவரும் வாசிக்கத் தக்கதொன்றும். இதை யாவரும் வாசித்துப் பயன் பெறுவாராக. இதன் ஆசிரியரும் எல்லா நலன்களும் எய்துவாராக.

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்

எழுதியது.

எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் எந்த நிலைமையிலும் பத்திரிகைத் தொழில் மிகவும் மேன்மையானதாகக் கருதப்படுமென்பது யாவரும் அறிந்ததே. பத்திரிகாசிரியருக்குரிய பொறுப்புக்களோ, மிக அதிகம். அவர்கள் பாஷா விற்பன்னர்களாகவும், உலக அனுபவத்தில் சிறந்தவர்களாகவும், சட்ட நிபுணர்களாகவும் இருக்க வேண்டும். பொது ஜனங்களுக்குத் திருப்தி உண்டாகும்படியும், அரசாங்கத்தாருடைய அவமதிப்பைப் பெருமலும் அவர்கள் தங்கள் தொழிலை நடத்தவேண்டியவர்களாக இருக்கிறார்கள். குடிகளின் மேன்மையைக் கருதிப் பலர் அதனை மேற்கொள்ள ஆவல் கொள்ளுகின்றனர். ஆனால், அத்தொழிலுக்கு ஏற்ற முறைகளைச் செவ்வனே கற்பிக்கக் கூடிய புத்தகங்கள் தமிழில் இதுவரையில் எழுதி வெளியிடப் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

இப்பொழுது கோயமுத்தூர் ஸ்ரீமான் வி. நா. மருதாசலக் கவுண்டர் அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள "இந்திய பத்திரிகைத் தொழிலியல்" என்னும் புத்தகம் இக்குறையை நீக்குகின்றது. அவர்கள் பல நூல்களைக் கற்றும், சிறந்த அனுபவ முதிர்ச்சியைக் கொண்டும், கால தேச வர்த்தமானங்களைச் செவ்விதின் உணர்ந்தும் நல்ல வசன நடையில் பல அதிகாரங்களாக முறைப்படுத்தி இப்புத்தகத்தை லோகோபகாரமாக வெளியிட்டிருக்கிறார்கள். இதுபோன்ற நூல் இது வரையில் வெளி வராததாலும், பத்திரிகைத் தொழில் நடத்துபவர்களுக்கு இது சிறந்த சாதனமாக இருக்குமாதலாலும், அவர்களுக்கும் கலாசாலை மாணவர்களுக்கும் இந்நூல் மிகப் பயன்படுமென்று நம்புகிறேன்.

கோயமுத்தூர் வழக்கறிஞரும்
கோயமுத்தூர் ஜில்லாக் கல்விச் சங்கத்தின் தலைவரும்
"கொங்கு மலர்"ப் பத்திரிகாசிரியருமாகிய

திரு. ராவ் சாகிப்

C. M. இராமச்சந்திர செட்டியார் பி.ஏ., பி.எல். அவர்கள்

எ ழு தி ய து.

"இந்திய பத்திரிகைத் தொழிலியல்" (Indian Journalism) என்னும் நூலைக் கோயமுத்தூர் விளாங்குறிச்சி வி. நா. மருதாசலக் கவுண்டர் அவர்கள் இயற்றியுள்ளார். தமிழில் தற்காலத்திற்கு வேண்டிய நூல்கள் மிகவும் குறைவு. அவற்றிலும் பத்திரிகைத் தொழில்களைப் பற்றி இதுவரை எழுதினர் ஒருவருமில்லை. பத்திரிகைத் தொழிலே நம் தமிழ் நாட்டில் சமீபத்திலேதான் ஓங்கி வருகின்றது. இன்னும் அத்தொழிலுக்குப்போதுமான ஆதரவு ஏற்படவில்லை. எந்நாட்டில் பத்திரிகைத் தொழில் அதிகமாக மேம்பட்டு வருகிறதோ, அந்நாட்டிலேதான் மக்கள் அபிப்பிராயமும் ஒன்றுபட்டும் மேம்பட்டும் நிற்கும். அப்போதுதான் அந்நாட்டில் நாகரிகமும் முதிர்ந்து நிற்கும். அந்நாட்டு மொழியும் முன்னேற்றமடையும். தமிழ் நாட்டில் இதுகாறும் இத்தகைய நிலைமை வரவில்லை. முதல் முதலாக அந்நிலையைக் கொண்டு வரும் எண்ணத்துடன் திரு. மருதாசலக் கவுண்டர் [redacted]கள் இவ்வரிய நூலை இயற்றியுள்ளார். இதனைத் தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்வார்களாக.

மேலும், சர்வகலாசங்கத்தாரும் பத்திரிகைத் தொழிலின் விருத்தியை உத்தேசித்து அத்தொழிலைப்பற்றியபரீக்ஷையும் ஏற்படுத்த உத்தேசம் வைத்திருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் அத்தொழிலைப்பற்றிய நூல்கள் அவசியம் ஏற்பட

வேண்டும். காலத்திற்கேற்ப நமது கவுண்டர் அவர்கள் இந்நூலை இயற்றியது மாணவர்களுக்கு மிகுந்த பயன் ஏற்படக் கூடியதே. சர்வகலா சங்கத்தாரும் இந்நூலை ஆதரிப்பார்களாக. இந்நூல் ஏனைய நாட்டுப் பத்திரிகைத் தொழில்களைப் பற்றி எடுத்துக்காட்டியிருப்பதோடு நம் நாட்டுப் பத்திரிகைத் தொழில் எவ்வாறு மேம்பாடு அடையும்என்றும் கூறுகிறது. இந்நூல் நடையும் பிரசுரமும் அழகாகவே இருக்கின்றன.

"சுதேச மித்திரன்" பத்திரிகை

.........பத்திரிகைத் தொழிலிற் பயிற்சி பெற விரும்புவோருக்கு மூல பாடமாக இருப்பதற்கு "இந்திய பத்திரிகைத் தொழிலியல்" என்னும் இந்நூல் தகுதியுடையதாக இருக்கிறது. இதனை ஆக்கியோர்............அத்தொழிலில் ஈடுபடுகிறவர்களுடைய கடமைகளையும், பொறுப்புகளையும், அவர்களுக்கு முக்கியமாக இருந்து வரவேண்டிய குணங்களையும் அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்............

.........பத்திரிகைகள் வளர்ச்சியும், முக்கியமாகத் தாய் பாஷைப் பத்திரிகை வளர்ச்சியும் மிகவும் அவசியமாக இருக்கும் இக்காலத்தில் இத்தொழிலைப் பற்றிய ஞானம் பரவுவது அதிக பலன் தரத்தக்கதாக இருக்கும். பொது அறிவுடன் இத்தொழிலைப் பற்றிய அறிவையும் பெற்றுள்ள மாணவர்கள் சிறிது செல்வ பலமும் உள்ளவர்களாக இருப்பின், தங்கள் தங்கள் பிரதேசங்களில் பத்திரிகைகளைத் தோற்றுவித்து அவைகளை நேரிய வழியிலும் திறம்படவும் நடத்துவதன் மூலம் தங்களுடைய எதிர் காலத்தைப் பற்றிய பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளுவதோடு, பொது மக்களுக்கும் அரிய தொண்டாற்றலாம்.

"தமிழ் நாடு" பத்திரிகாசிரியர்

.........அரிய நடையில், மாணவர்க்கும் விளங்கும் முறையில், சிறந்த ஆராய்ச்சியுடன் "இந்திய பத்திரிகைத் தொழிலியல்" என்னும் இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கின்றது. பத்திரிகைத் தொழிலின் தத்துவத்தையும், அனுஷ்டான முறைகளையும்தெளிவாக எடுத்துக் காட்டியிருப்பதற்காக ஸ்ரீமான் வி. நா. மருதாசலக் கவுண்டரைப் பாராட்டுகிறேன்.

"லோகோபகாரி" பத்திரிகாசிரியர்

.........உலகப் பத்திரிகைத் தொழில் வரலாறும்இந்திய பத்திரிகைத் தொழில் வரலாறும் இந்நூலில் விரிவாகக்கூறப்பட்டிருக்கின்றன. அன்பையும் அறிவையும் அறத்தையும் உலகத்தில் பரப்ப வேண்டிய பத்திரிகைகள் நமது நாட்டிலும் நிலையான இடம் பெறவேண்டுமாதலின், பள்ளிப் பிள்ளைகளும் கல்லூரி மாணவர்களும் இதனைப் படித்தல் விரும்பத் தக்கது. இத்தகைய நூல் ஒன்று இதுவரை வெளிவராத குறையை நீக்க முன் வந்த கொங்கு நாட்டு அன்பர் வி. நா. மருதாசலனர் திருப்பணியை நாம் போற்றுகின்றோம்.

"இந்து நேசன்" பத்திரிகாசிரியர்

.........பத்திரிகைத் தொழிலின் இயலை ஆசிரியர் மூன்று பகுதிகளாகப் பிரித்து, முதலிரண்டு பகுதிகளிலும் பத்திரிகையின் ஊகக கற்பனலங்கார அபிநிவேசத்தை (Theoretical Aspect) விரிவாக உரைத்திருக்கின்றார். மூன்றாவது பகுதியில் பத்திரிகையைப் பண்பும் பரிவுங் கொண்டு நடத்த வேண்டிய பத்ததிக்கிரமத்தை அனுபவரீதி-

இலக்கிய வளர்ச்சியால் அத்தொழிலும் வளர்ச்சி பெறும் எனத் தகும்.

இந்நூல் பொதுவியல், பொதுச் சிறப்பியல், சிறப்பியல் என்னும் மூன்று பகுதிகளை உடையது: முதற் பகுதி பத்திரிகை வரலாற்றைப் பற்றிச் சொல்கின்றது; இரண்டாம் பகுதி பத்திரிகைத் தொழிலைப் பற்றிக் கூறுகின்றது; மூன்றாம் பகுதி பத்திரிகைத் தொழின்முறையைப் பற்றி இயம்புகின்றது. முதலிரண்டு பகுதிகளும் பத்திரிகைத் தொழிலின் கல்விப் (Theoretical) பகுதிக்கு ஏற்றன; மூன்றாம் பகுதி அத்தொழிலின் பயிற்சிப் (Practical) பகுதிக்கு ஏற்றது. ஒவ்வொரு பகுதியும் பற்பல பிரிவுகளைக் கொண்டுளது. பெரும்பான்மையான பிரிவுகள் சில அல்லது பல உட்பிரிவுகளாய்ப் பிரிந்துள்ளன. அவற்றுக்கெல்லாம் இலக்கங்களும் எழுத்துக் குறிப்புக்களும் தலைப்புப் பெயர்களும் தரப்பட்டிருக்கின்றன. ஆங்காங்குப் பத்தித் தலைப்புக்களும் (Paragraph headings) காணலாம். தலைப்புக்கள் தடித்த எழுத்துக்களால் திகழ்கின்றன. இப்பாகுபாட்டு முறை, இந்நூலை ஓதுவோர் அவ்வப்பொருள் மொழிகளை எளிதிலே உணர்தற்குப் பெரிதும் உதவி புரியும். அன்றியும், பரீட்சைக்குப் பயிலும் மாணவர்க்கு இப்பாகுபாடுகள் பொருள் மொழிகளை வகுத்தும் தொகுத்தும் தெளிந்து கோடற்கு இன்றியமையாத கருவிகள் போன்று இலங்குகின்றன.

இந்நூல் சிறப்பு வகையிலே இந்திய பத்திரிகைத் தொழில் துறையை விளக்கும் பெற்றியினது. பொது வகையிலே தமிழிலக்கிய வளர்ச்சிக்குரிய நூலினத்தின் பாற்படுந் தன்மையினது. மற்றும், கலைப்புலவோர் ஒப்புக்கொள்ளுகிற

படி இஃது ஒரு நுண்கலை(Art) நூலும்ஆகும் நீர்மையினது. மாணவர்க்கு ஏற்ற முறையான் இயன்றுள்ள இத்தகைய புத்தம்புதிய இலக்கியத்தைக் கல்வித்துறை அதிகாரிகள் கல்லூரி மாணவர்க்குப் பாடமாக அமைத்து, நூலெழுதும் எனது முயற்சிக்கு ஊக்கம் அளிக்குமாறு அன்னவர்களைப் பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறேன். மேலும், பத்திரிகைத் தொழிற் புலமை நடத்துகின்றவரும், இனி நடத்த வருபவரும் இந்நூலைக் கற்றுப் பயனடைவர்; பிறரையும் பயனடைவிப்பர் என்பது எனது எண்ணம். இன்னும், இந்நூல் பொது மக்களை நல்ல பத்திரிகைகளினிடத்து ஆர்வம் கொளச் செய்து பத்திரிகைத் தொழிலாளரையும் பக்குவராக்கும் என்று எண்ணுகிறேன். எல்லாம் வல்ல தெய்வத் திருவருள், பொது மக்கள் உலகினுக்கும், பத்திரிகை உலகினுக்கும், பல்கலைக் கழக மாணவ உலகினுக்கும் இந்நூலைப் பயன்படுத்துவதாக!

இந்நூல் 1934-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் "இந்திய பத்திரிகைத் தொழில்" என்னும் பெயருடன் "லோகோபகாரி", "இந்து நேசன்" என்னும் சென்னை வார வெளியீடுகள் இரண்டிலும் பகுதி பகுதியாக வெளிவரத் துவங்கிற்று. "லோகோபகாரி"யில் முதற் பகுதியின் முன்னுரை முழுதும் வெளியாயிற்று; நூற் பகுதியைத் துவங்கிவிட்டு அப்புதினத்தாள் சிறிதுகாலம் நின்றுவிட்டது. "இந்து நேசன்" மூன்றும் பகுதியை வெளியிட்டானவுடனே "லோகோபகாரி"யால் விடப்பட்ட முதற் பகுதியுடன் இரண்டாம் பகுதியையும் சேர்த்து முறையே வெளியிட்டு வந்து, 13-4-1935ல் நூலை முடித்தது. எனது வேண்டுகோளுக்கு அன்புடனே இணங்கித் தமது பத்திரிகைகளில் இந்

நூலை வெளியிட்டுத் தந்ததற்காக "லோகோபகாரி" ஆசிரிய ருக்குப் பொது வகையிலும், "இந்து நேசன்" ஆசிரியருக் குச் சிறப்பு வகையிலும் மனமார்ந்த நன்றி செலுத்து கின்றேன்.

இந் நூலை அச்சிடும் போழ்து எனக்கு மலேரியா என் னும் காய்ச்சல் கண்டது. அக்காலையிலே, சென்னைப் புர சைப்பாக்கம் லுத்தரன் மிஷன் உயர் கலாசாலைத் தலை மைத் தமிழாசிரியர் வித்துவான் திரு மே. வீ. வேணுகோ பாலப் பிள்ளையவர்கள், தமக்கு நிரம்பிய வேலைகள் இருந் துங்கூட, எனது வேண்டுகோளை விருப்புடன் ஏற்று, இந் நூலைப் பிழை பார்த்துக் கொடுத்து அச்சுவாகனம் ஏற்று வித்தனர். அவ்வாறு எனக்கு உற்ற சமயத்திற் கைகொடுத்து உதவிய அப்பெரியாருக்கு எனது நன்றி உரித்தாகுக.

இந்நூலை முழுக் கவனிப்புடன் குறித்த காலத்திலே அழகாக அச்சிட்டுக் கொடுத்தவர் சென்னை மவுண்டு ரோட்டு பி. என். அச்சுக்கூடத்தின் (The B. N. Press, Mount Road, Madras) தலைவர் திரு. பாலசுந்தர முதலியாரவர்கள் ஆவர். அன்னார்க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

விளாங்குறிச்சி, காளப்பட்டி P. O., (via) போத்தனூர், S. I. Ry. 27-5-1935.	இங்ஙனம், வி. நா. மருதாசலம்

பொருளடக்கம்

முதற் பகுதி

பொதுவியல் - பத்திரிகை வரலாறு

		பக்கம்
I	முன்னுரை	1–25
II	நூல்	26–71

இரண்டாம் பகுதி

பொதுச் சிறப்பியல் - பத்திரிகைத் தொழில்

1.	பிரிட்டிஷ் அமெரிக்க பத்திரிகைத் தொழிலும் இந்திய பத்திரிகைத் தொழிலும்	72–89
2.	இந்திய பத்திரிகைத் தொழில் வளர்ச்சித் தடைகளும் விடைகளும்	90–101
3.	பத்திரிகைத் தொழிலும் இந்திய வாலிபரும்	102–128

மூன்றும் பகுதி

சிறப்பியல் - பத்திரிகைத் தொழில் முறை

1.	பத்திரிகை உருவாக்கல்	129–169
2.	தொழிலாளரும் தொழில் முறையும்	170–238
3.	பத்திரிகைச் சிறப்பு	239–247

முடிப்புரை

1.	பத்திரிகை முப்பால்	248
2.	இந்திய சகோதரருக்கு வேண்டுகோள்	249–250
3.	பத்திரிகைத் தொகைவகை கடமைகள்	251

ஆக்கியோன் உரை

கோல் வளமும் குடி வளமும் திருந்தியும் பொருந்தியும் மிளிரும் மேனாடுகளிற் பத்திரிகைத் தொழிலைப் பற்றிய நூல்கள் மலிந்து கிடக்கின்றன. அங்குள்ள பல்கலைக் கழகங்கள் மாணவர்க்குப் பத்திரிகைத் தொழிற் பயிற்சியைச் சாத்திர (Scientific) முறையிலே பாடங்கள் வாயிலாகவும் நடைமுறை வாயிலாகவும் ஊட்டுகின்றன. அங்கு ஆட்சி முறையுங்கூடப் பத்திரிகையாற் செப்பஞ் செய்யப்படுகின்றது. ஆதலினால், அந்நாடுகளிற் பத்திரிகைத் தொழில் பல்வகையினும் விரைந்து முன்னேறிச் செல்கின்றது. நமது அரிய பெரிய இந்தியத் தாய் நாட்டிலோ, அவை அவ்வாறு நடைபெறுவதில்லை. மேனாட்டுப் பத்திரிகைத் தொழில் ஓடிக்கொண்டிருக்கும் நீரைப் போன்று நலன்கள் விளைக்கின்றது. இந்திய பத்திரிகைத் தொழில் தேங்கு நீரை ஒப்ப நலன்கள் விளைப்பது போன்று காட்டுகின்றது. இக்காரணங்களால் இந்திய பத்திரிகைத் தொழில் மேனாட்டுப் பத்திரிகைத் தொழிலுடன் போட்டி போட முடியாத நிலையிலே வளர்ந்து வருகின்றது.

இத்தகைய இந்திய பத்திரிகைத் தொழில் முன்னேற்றம் அடையும் வழி வகைகள் வருமாறு: 1. இந்திய பல்கலைக் கழகங்கள் பத்திரிகைத் தொழிற் பயிற்சியைப் பாடமாக ஏற்படுத்தல் வேண்டும்; ஒரு சில இந்திய பல்கலைக் கழகங்கள் இவ்வகையில் முயன்று வருகின்றன. 2. பத்திரிகைத் தொழிற் பயிற்சி பெற்ற மாணவர்க்குப் பட்டமும் நற்சாட்சிப் பத்திரமும் (Degree and Certificate) அளித்தல் வேண்டும். 3. பத்திரிகை நிலையங்கள் அப்பட்ட

தாரிகளை அவரவர்க்குத் தகுந்த பகுதியின் கீழ்த் தொழிலில் அமர்த்திக்கொள்ளல் வேண்டும். 4. ஆங்கிலேயங்கள் பெரும்பான்மையான பட்டதாரிகளை உள்நாடு வெளிநாடுகளுக்கு நிருபர்களாக அனுப்பிப் பயிற்றி வருதல் வேண்டும். 5. பத்திரிகைகளின் முதலாளிகள் அல்லது சொந்தக்காரர்கள் தொழிலனுபவம் பெற்ற ஊழியர்களுக்கு அவரவர் தகுதிக்கு ஏற்றபடி உபகாரச் சம்பளம் (Pension) முதலிய உதவிகள் புரிந்து வருதலும் வேண்டும்.

பத்திரிகைத் தொழில் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருப்பன பத்திரிகைத் தொழிலைக் குறித்த கல்வி நூல்களும் பயிற்சி நூல்களும் (Theoretical and Practical Works on Journalism) அல்லவோ? அத்தகைய நூல்களின்றிப் பத்திரிகைத் தொழில் எவ்வகையினும் வளராது. எனவே, பத்திரிகைத் தொழிற்குரிய நூல்களின் இன்றியமையாமையும் ஏற்படவில்லையா? யான் அறிந்த மட்டில் இத்தொழில் பற்றிய இரண்டு சிறிய நூல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றின் பெயர் "ஏ பிரைமர் ஆன் ஜர்னலிஸம்" (A Primer on Journalism); மற்றொன்றின் பெயர் "ஜர்னலிஸம் ஆஸ் ஏ புரோபேஷன்" (Journalism as a Profession). இவற்றுள் முன்னது பொருள் மொழிகளை நன்கு விளக்குகின்றது; பின்னது நுனிப்புல் மேய்ந்து கொண்டுபோகின்றது. இவற்றுள் ஒன்றும் இந்திய பத்திரிகைத் தொழிலின் தோற்றம் வளர்ச்சி முறைகளைச் சொல்லவே இல்லை. அதனை அறிந்த என் மனக் கருவிலே இந்திய பத்திரிகைத் தொழிலியல் என்னும் இந்நூல் அமைந்து வளர்ந்து உருப்பெறல் ஆயிற்று. பத்திரிகைத் தொழிலின்

யாக (Practical Side) விளக்கிக் காட்டியிருக்கின்றார். இப்படிப்பட்ட நூலை நானிதுவரையில் நம் தமிழகத்திற் கண்டதில்லை...........நூதன முறையில் நூதன வகையாகப் பயிலுவித்துப் பழக்கமளிக்கப் பெருஞ்சாதனமாயுள்ள இந்நூலினால் தெய்வ பக்தி, ராஜ பக்தி, தேச பக்தி (Devotion in God, Crown and Country) ஆகிய மூவகைப் பக்திகளும் மாணவர் மனத்தில் நன்கு பதிவதற்குச் சிறிதும் ஆக்ஷேபமின்று...........

"கூட்டுறவு" பத்திரிகை

........"இந்திய பத்திரிகைத் தொழிலியல்" என்னும் நூலில் பத்திரிகைத் தொழிலைக் குறித்த எல்லா அம்சங்களையும் திரு. வி. நா. மருதாசலக் கவுண்டர் வெகு அழகாய் விவரித்திருக்கிறார். தமிழர்களுக்கு அவரது புத்தகம் மிக உபயோகமுள்ளது. அவரது ஆரம்ப ஆராய்ச்சி போற்றத் தக்கது.

"செந்தமிழ்ச் செல்வி"

.........முதன்முதலாகத் தமிழில் பத்திரிகைத் தொழிலைப் பற்றி வெளி வரும் நூல் இதுவேயாகும். சீரிய தமிழ் நடையில் பத்திரிகைத் தொழிலைப்பற்றிச் சிறந்த ஆராய்ச்சி உரையாக வந்திருக்கும் இந்நூலை, உவகையுடன் வரவேற்று ஆசிரியர் வி. நா. மருதாசலக் கவுண்டர் அவர்கள் பெருமுயற்சியைப் போற்றுகிறோம். இன்னும் இத்தகைய நலன் விளைக்கும் பல நூல்களை அன்னார் வெளியிட்டுதவுமாறு இறைவன் திருவடிகளை வழுத்துகிறோம்.

உ

குருவே துணை.

இந்தியப் பத்திரிகைத் தொழிலியல்

முதற் பகுதி

பொதுவியல் - பத்திரிகை வரலாறு

I

முன்னுரை

1. உரிமை

உரிமை பெற்ற நாடுகளிற் பேச்சுரிமையும் அச்சுரிமையும் வளனுற வழங்கப்பெற்றுள்ளன. ஆதலின், அந்நாடுகளிற் பத்திரிகைத் தொழில், வகையினும் தொகையினும் நடைமுறையினும் தலைசிறந்துளது. நம் இந்தியாவிலோ, பேச்சுரிமை என்பது வளம்பட வாய்த்திலது. பேச்சுரிமை வாய்க்கப்பெறாமையினால் எழுத்துரிமை அல்லது அச்சுரிமைவாய்ப்பும் குறைந்துள்ளது. இங்ஙனேயில் இந்தியாவிற் பத்திரிகைத் தொழில் எங்ஙனம் வளனுறக் கூடும்? ஆயினும், சர்வ கலா சாலை வகுப்புக்களிற் பத்திரிகைத் தொழிற் பயிற்சி மாணவர்களுக்குக் கற்பித்தால், அத்தொழில் வளர்ச்சியடைந்து, அதன் வழியே வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு சிறிது குறையும் என்பது அறிஞர் கருத்து.

2. நூற் பொருள்

இனி, எடுத்துக்கொண்ட நூல் நுதலிய பொருளைப் பற்றிச் சிந்திப்போம்: யான் அறிந்த மட்டிற் பத்திரிகையைப்பற்றிய துண்டுத் துணுக்குகளும் கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளனவே அன்றி, இந்திய பத்திரிகைத் தொழில் வரலாறு என்பது இந்தியாவின் எந்த மாகாணத்திலும் முறையாக முழுவதும் எவராலும் இதுவரை எழுதப்பெற்றிலது. ஆகையால், வாய்த்துள ஒரு சில சான்றுகளைக் கொண்டும், என் சிற்றறிவின் துணையையும் பற்றி, திருவருள் அசைப்பித்த அளவிலே இத்தொழிலின் தோற்றம், வளர்ச்சி, முறை இவற்றை முறையே எடுத்துக் காட்டுவேனாக.

முதற்கண், பத்திரிகைத் தொழில் எந்நிலையிலே வைத்து எண்ணற்பாற்று என்பது குறித்து நாம் சற்று ஆராய்வோம்; பின், பத்திரிகையின் முதற்பிறப்பு வளர்ப்புக்களுக்கிடம் மேனாடாதலின், மேனாட்டுப் பத்திரிகைத் தொழில் வளர்ச்சியைச் சிறிதாராய்வோம்; அதன் பின்னர்க் கீழ்நாட்டில் சீனம், ஜப்பான், பர்மா, சிலோன் முதலிய நாடுகளின் பத்திரிகைத் தொழில் வளர்ச்சியைத் தொழிலியைபு பற்றிச் சிறிது சீர் தூக்கிப் பார்ப்போம்; இறுதியில் நம் இந்திய பத்திரிகைத் தொழிலின் பிறப்பு வளர்ப்பு இவற்றின் முறைகளில் முறையே புகுவோம்.

3. பத்திரிகைத் தொழில் நிலை

அரசரும், அமைச்சரும், தவத்தினரும் கொண்டாடும் அறிவுத் தொழில்களிலே, தவத் தொழிலுக்கு அடுத்தது பத்திரிகைத் தொழில் என்பதில் எட்டுணையும் ஐயமிலது. தவத் தொழிலானது, நல்லாசிரியனது திருவடி பற்றி ஒழுகுவோரது பிறவிப் பிணிக்கு ஒப்புயர்வற்ற சாவா மருந்தாய், 'அறிவை அறிவது பொருள்,' என்னும் மறுமை இன்பப் பயனைச் சிறப்பு வகையிற் சொல்லுதலோடு அமை

யாது, நடை முறையினும் ஊட்டும் வன்மைத்து. பத்திரிகைத் தொழில் அவ்வரம்பிலாப் பேரின்பப் பெரும் பயனைப் பொது வகையில் ஒருவாறு மட்டும் எடுத்தியம்பு தலும், இம்மையின்ப நுகர்ச்சிக்குரிய பன்னெறிகளை யும் செய்திகள் முதலிய வடிவுகளிற் சிறப்பு வகையிற் கூறு தலும் மட்டும் வல்லது. ஆதலால், பத்திரிகைத் தொழில் தவத் தொழிலுக்கு அணித்தாம் நிலையையுடையதெனக் கூறத் துணியலாமன்றோ?

இனி, பத்திரிகைத் தொழிலை அரசுத் தொழிலுக்கும், அமைச்சுத் தொழிலுக்கும் மேன்மையாகச் சொல்லுதல் முறைதானோ என்னும் கேள்விக்கு விடை ஈண்டுக்காண்போம்: அரசு என்பது உலகத்தின் கண்ணாகும். அந்தக் கண்ணி னுண்மணியே அமைச்சு என்பதாகும். அக்கண்ணினிமையே பத்திரிகையாம். 'அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்,' என்பது ஆன்றோர் மொழி அன்றோ? வரும்பொருள் உரைத்த லாதிய நல்லறிவுச் சுடர் கொளுத்தி, அரசனைச் செங்கோன் முறையிற் கோடாமல் நன்னெறி முறையிற் செலுத்துந் தன் மைத்தாதலின், அமைச்சுத் தொழில் அரசுத்தொழிலிற் சிறந்தது. அவ்வமைச்சரையும், கொடுநெறிகளில் அரசைச் செலுத்த ஒட்டாமல் செந்நெறிகளிற் செலுத்தச் செய்யத் தூண்டுவது பத்திரிகையேயாகும். மக்கட் கூட் டத்திற்கு அவ்வப்போது இன்றியமையாச் சீர்திருத்தத் துறைகளை நடுநிலை பெயராமல் வகுத்துக் காட்டி, அத்துறை களில் மக்களை ஊக்குவிப்பதும் பத்திரிகையே அன்றோ? அமைச்சுங் கோலும் குடியும், அகத்தும் புறத்தும் குழப்ப மின்றி ஒத்து வாழ வைப்பதும் பத்திரிகையே ஆகும். அரசன் அமைச்சன் குடிமக்கள் முதலியோரிடம் சிறிது தவறு காண்கினும், அஞ்சா நெஞ்சுடன் வீர மொழிகள் பொழிந்து நடுநிலைமைக்கு அழைத்துச் சென்று, உலகினுக்கு

இருமைப் பயனுங் காட்டும் உறு துணையாகி மிளிர்வதும் பத்திரிகையே என்பதை எவரும் மறுக்கமாட்டார். ஆதலால், பத்திரிகைத் தொழிலானது, அரசுத் தொழிலுக்கும் அமைச்சுத் தொழிலுக்கும் முன்னணியிலே நிலைகொள்ளும் எல்லாச் சிறப்புக்களையும் உடையதெனக் கூறத் தடையு முளதோ ?

4. பத்திரிகைத் தொழில் நோக்கம்

பத்திரிகைத் தொழில், முதன்முதலிற் போதனு முறையில் திகழ்ந்தது; பின்னர், அரசியல் (Political) செய்திகளைத் தழுவியது; அப்பால் பொருளாதார (Economical) நெறியிற் சென்றது; அதன் பின்னர், வியா பாரத் துறை வளர்ச்சிக் (Commercial advancement) குப் பயன்பட்டது. நாளடைவில், பிரித்தாளுதல் (Divide and Rule Policy or Dual Government), அல்லது உள் நாட்டுக் கலகம் உண்டு பண்ணல் (Creating Civil war), நாடு சேர்த்தல் (Annexation policy) முதலிய கெட்ட நோக்கங்களைக் கொண்டு நடித்தது; வெள்ளை கறுப்பு என்னும் நிற வேற்றுமையைப் பூண்டு நின்று, தேசம் ஆட்சி மதம் முதலிய வேறுபாடுகளுக்கேற்றபடி உலாவத்தொடங்கியது. நாள்பல கழிந்ததும் தேசிய முதலிய கட்சிக் கொள்கைகளைப் பரப்பும் (Spreading party feelings) தொழிலை மேற்கொண்டது; இறுதியாகச் சர்வ தேச நலம் (World welfare) பேணுதலையும் நோக்கமா கக் கொண்டு வருகிறது. இவ்வாறு பத்திரிகைத் தொழில், பல்வகைப்பட்ட நோக்கங்களுடன் வளர்ச்சியடைந்து வந் துளது. எனினும், ஒரு நல்ல பத்திரிகைத் தொழிலாளர், தமது பத்திரிகை அல்லது பத்திரிகைகளின் வழியே, யாவ ரும் எளிதில் உணரும்படி செய்திகளைச் சுவை நிரம்பிய அழகிய உரை நடையில் அமைப்பாராக; மற்றும், கோலுங்

குடியும் தம்முள் அமைதியுடன் ஒத்துவாழும்படி தூண்டுதலும், பொதுவாக உலக சமுதாய நன்மையை ஆதரித்தலும், தமது நிலைத்த நன்னோக்கமாகக் கொள்ளக் கடவாராக.

5. பத்திரிகைத் தொழிலின் காலம்

பன்னரிய சால்புடைச் செல்வத்தினதாய பத்திரிகைத் தொழிலானது, 'பீகிங் கெஜெட்டு' என்னும் பெயரால் முதன்முதலிற் சீன தேசத்தில் தோன்றியதென்பர். அஃது உண்மையாயினும், இதுகாலையிற் கைக்குக் கிடைத்துள்ள ஒரு சில சான்றுகளைக்கொண்டு ஆராயின்,பத்திரிகைத்தொழிலுக்குப் பிறப்பிடம் மேனாடென்பதும், அதன் காலம் சுமார் 2000 ஆண்டுக்கு முற்பட்டதென்பதும் தெரியவருகின்றன. பத்திரிகைத் தொழிலின் பிறப்பிடம் இத்தாலி (Italy)தேசமாகும். உரோமா புரியின் ஆட்சித் தலைவரான ஜூலியஸ் சீஸர் (Julius Caesar, Roman Dictator) பத்திரிகைத் தொழிலின் தந்தையாரென்று அழைக்கப்பட்டார். ஆனால், உள்ளபடி பார்க்குமிடத்து, கி. மு. 106-ஆம் ஆண்டிற் பிறந்த சிசரோவுக்கே (Cicero, Roman Political Orator) அந்தப் பெருமையான பட்டம் தகும் என்பது ஒரு கல்வெட்டுச் சான்றினால் அறியக் கிடக்கின்றது. அதைக் குறித்து ஈண்டு நோக்குவோமாக:

'இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் பத்திரிகைகள்'

"அகலமான கற்பாறைகளில் எழுதப்பட்ட பத்திரிகைகள் இத்தாலியிலுள்ள ஆஸ்டிரியா (Austria) என்ற இடத்திற் பூமியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கற்பலகைகளுள் ஒன்றில் கி. மு. 49-ஆம் வருஷத்திற் பாம்பே இறந்துபோன செய்தி குறிக்கப்பட்டிருக்கிறது. உரோமாபுரி வாசிகளுக்கு ஜூலியஸ் சீஸர் எழுதிவைத்த ஓர் உயிலும் இதில் காணப்படுகிறது. கால் நாட்டில் சண்டை

நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அங்கிருந்து அவ்வப் பொழுது யுத்தச் செய்திகளைச் சீஸர் அனுப்பிக்கொண்டிருந் தார். இதனால், அவர் 'பத்திரிகைத் தொழிலின் பிதா' என்று அழைக்கப்பட்டார். ஆனால், கி. மு. 106-ஆம் ஆண் டிலே பிறந்த சிசரோவுக்கே இந்தப் பெருமை உண்டு. முக் கிய சம்பவங்கள் அடங்கிய குறிப்பையும், ஜனன மரணக் குறிப்புக்களையும் சிசரோ, தம் வாசஸ்தலத்திற்கு முன்னர்த் தொங்கவிட்டு வைப்பதுண்டு. சுருக்கெழுத்து முறையைச் சிசரோ உபயோகித்துக்கொண்டிருந்தாரென்றும் தெரி கிறது." ('நவசக்தி', 4-12-29, பக்கம் 7.)

மேனாட்டு அறிஞர் பெரேரா (E. W. Pereira) என்பவர், 'பத்திரிகைகளும் பத்திரிகைத் தொழிலிய லும் '(Journals and Journalism) என்னும் பொருள் பற்றி ஒரு விரிவுரை செய்துள்ளார். அவ்வுரையால் உல கத்தில் மிகப் பழமையான முதற் பத்திரிகை 'பீகிங் கெஜெட்டு' (Peking Gazette) என்பதென்றும், அதன் காலம் சுமார் 8-ஆம் அல்லது 9-ஆம் நூற்றாண்டாகுமென் றும், அக்காலத்தில் அப்பத்திரிகை மரத்தாற் செய்த அச்சுக் கருவிகளைக் கொண்டு வெளியிடப் பெற்றதென்றும் எண்ணு தற்கு இடமுளதென்று 'ஏ ப்ரைமர் ஆன் ஜர்னலிஸம்' (A Primer on Journalism, page 74) தெரிவிக்கின்றது.

"முதன்முதலிற் செய்தித் தாள் (News paper) வேனிஸ் (Venice) நகரத்தில் திங்கட்கு ஒரு முறை வெளி இடப்பட்டதாம்" என்றும், "The first English News paper was the Weekly News which appeared in 1622" என்றும், 'ஞான சாகரம்' பத்திரிகாசிரியர், சென்னைப் பல்லாவரம் சுவாமி வேதாசலம் என்னும் மறை மலையடிகள் 5-6-1929ல் எனக்கு எழுதியுள்ள கடிதத்திற் குறிப்பிட்டுள்ளார்கள்.

அக்கடிதத்தின்படி நோக்கின், அச்சுப் பொறியில் அமைந்த பத்திரிகைத் தொழிலுக்கு இஞ்ஞான்று 312 ஆண்டு வயது கூறலாம். எனவே, மேல்நாட்டுப் பத்திரிகைத் தொழில் மேற் குறித்த கல்வெட்டுச் சான்றின்வழி 2000 ஆண்டுகட்கும், மறைமலையடிகளுடைய கடிதத்திற்கிணங் கப் பத்திரிகை உருவில் அச்சிட்டகாலம் 312 ஆண்டுகட்கும் முற்பட்டதாகும். கீழ்நாட்டுப் பத்திரிகைத்தொழில் பெரேரா உரைக்கிணங்க மரக்கருவி அச்சமைப்பில் வந்தகாலம் 1100 ஆண்டுகட்கு முற்பட்டதாகும்.

6. மேனாட்டுப் பத்திரிகைத் தொழில் வளர்ச்சி

(a) பொது வகை

மேலே குறிப்பிட்ட பெரேரா (E. W. Pereira) என்னும் அறிஞர் கூறியுள்ளவாறு காணின், பத்திரிகைத் தொழில், ஐரோப்பாவில் 1702-ஆம் ஆண்டில் தொழில் அமைப்புடன் வேலை செய்யத் தொடங்கியுள்ளதாகத் தெரிகின்றது. ஆனால், அத்தொழில் ஒரு நிலைப்பட்ட வளர்ச்சி நெறியிற் செல்ல இயலாமை பற்றி முதலில் வெளியிடப் பட்ட பத்திரிகை விரைவில் வீழ்ந்தொழிந்தது. பின்பு, 1704-ஆம் ஆண்டில் ரிவ்யூ (Review) என்னும் புதினத் தாள் வெளி வந்ததாம்.

சென்ற நூற்றாண்டுகளுக்குள், பத்திரிகைத் தொழில் வளர்ப்பு முறையில் எத்துணையோ நல்ல மாறுதல்கள் பல ஏற்பட்டுள்ளன. தற்காலப் பத்திரிகைத் தொழில், இன்றுள்ளபடி மேலோங்கி வளர்தற்குக் காரணம் அச்சியந்திரப் பரப்பேயாம். 18-ஆம் நூற்றாண்டில் தோன்றிய அச்சுத் தொழிலின் பகுதிகளாகிய அச்செழுத்து அடுக்கலும், அச்சுப் பதிப்புமே, மக்கட் கூட்டத்தின் கருத்துக்கள் ஆங்காங்குப் பரவுதற்கு அடிப்படையாக இருக்கின்றன. குறிப்பிட்ட

எழுத்துக்களைப் பரபரப்புடன் பொறுக்கி எடுப்பதும், அடுக்குவதும் எழுத்து அடுக்குவோனுடைய (Compositor) வேலையாம். அடுக்கினவற்றை அச்சுப் பொறியில் ஏற்றிச் சுறுசுறுப்புடன் பதிப்பித்தல் பதிப்புப் பொறியாளனுடைய (Press man) வேலையாம். நாம் ஒரு பெரிய அச்சுக்கூடத்திற்குப் போய்ப் பார்ப்பின், அச்சுப்பொறிகள் அச்சிடும் நெறிமுறையையும், மேனாட்டு நாகரிகத்தையும், அச்சுத் தொழிலின் மேன்மையையும் நன்றாக அறியலாம்; மற்றும் அத்தொழின் முறை, பத்திரிகைத் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத தென்பதைச் செவ்வனே உணரலாம். தினசரி வெளியீடு அச்சிலமைந்து வருவதை நேரிற் காண்கின்றவர், அச்சுப் பொறியால் இயங்கும் பத்திரிகைத் தொழிலின் நடை முறையைக் கண்டு மிகக் களித்தல் கூடும்.

பத்திரிகை அச்சிலமைந்து வெளிவருமாறு கண்டோம். அவ்வெளியீட்டுக்குச் செய்தி தொகுத்தலும், அவற்றைப் பரப்பலும், செய்திகளின் தெளிபொருட் பொதிதலும், வணிகருக்குள் வாணிகத்தை வளம்படப் புகுத்து வளர்த்தலும் ஆகிய இத்திறப் பாகுபாட்டு முறையிற் பத்திரிகைத் தொழில் வளர்ச்சி பெற்று வந்தது. அவற்றுட் செய்தி தொகுத்தலும் பரப்பலும் ஆகிய தொழிற் பாகுபாடு நாடுகளுக்கேற்ப வேறுபட்டு வளர்ந்தது. அமெரிக்க நாட்டுப் பத்திரிகைகள், ஐம்பொறிகளுக்கு உற்சாகம் ஊட்டக் கூடிய பொருள் மொழிகளிலேயே கண்ணுங் கருத்தும் உடையனவாயின. எனவே, அப்பத்திரிகைகள் அத்தகைய இழிபொருள் மொழிகளைப் பற்றிய செய்திகளையே பெரிதும் விரும்பிப் போற்றி வெளியிட்டு வளர்த்து வந்தன. மக்கட் கூட்டத்தின் நலத்திற்கு இயைந்த கட்டுரைகளோ, இறுதிப் பகுதியில் தள்ளப்பட்டு வந்தன. அமெரிக்கா, தன்னைப் பொறுத்தமட்டிற் செய்திகளைப் பரப்புவதற்கு ஏற்றபடியான

அச்சுப்பொறியமைப்பிற் கவலேயும் பரந்த நோக்கமும் பூண்டிருந்தது. அமெரிக்க பத்திரிகைகளின் இதழாசிரியர் கூட்டத் தொழிலாளர் பலரும், தத்தம் கடமைகளை நன்கு உணர்ந்து பணியாற்றி வந்தமை பாராட்டற்குரியது.

பத்திரிகைத் தொழில் வளர்ச்சிக்குச் சுருக்கெழுத்து (Shorthand) முறை பெரிதும் உதவியது. அம்முறையே தற்காலப் பத்திரிகை நிருபர்களுடைய தொழில் தகுதியை அரண் செய்வதாகும். ஒரு பத்திரிகையின் சீர்த்திக்கும் கீர்த்திக்கும், உதவிப் பத்திராசிரியருடைய உழைப்பும் பொறுப்பும், பத்திராசிரியருடைய உழைப்பினும் பொறுப்பினும் பெரியனவென்று அக்காலத்திலும் மதிக்கப்பட்டு வரலாயின.

இங்கிலாந்து அமெரிக்கா முதலிய தேசங்களினின்று ஐரோப்பாவின் உள் நாடுகளுக்கும் வெளி நாடுகளுக்கும் எளிதிற் செய்திகளை அனுப்புதற்குப் பல வழிகளும் வகைகளும் ஏற்படலாயின: புகை வண்டி, நீராவிக் கப்பல், தந்தித் தபால், கம்பியில்லாத் தந்தி முதலியன கண்டு பிடிக்கப்பட்டன; இறுதியாக, ஆகாய விமானம் என்னும் வானூர் பொறியும் கண்டு பிடிக்கப்பட்டது. அவற்றால் பத்திரிகைத் தொழில் நாளுக்குநாள் பல நல்ல மாறுதல்களுடன் வளரத் தலைப்பட்டது. ராய்ட்டர், அசோசியேடெட் பிரஸ், சென்ட்ரல் நியூஸ் என்னும் செய்திச் சாலைகள் பத்திரிகைத் தொழிலை மிக வளர்க்கலாயின.

பத்திரிகைத் தொழிலின் வளர்ச்சி முறையில் இக்காலத்தில் ஏற்பட்ட மூன்று புதியநெறிகள் இங்குக் குறிப்பிடத்தக்கனவாம். அவற்றுள் அறிவைச் செப்பஞ் செய்யத் தக்க இயற்கை செயற்கைக் காட்சிகளின் நிழலுருவப் படங்கள் (Photographs) அமைந்த வெளியீடு ஒன்று; பேட்டி காண்கை என்பது மற்றொன்று: அதாவது நிலைத்த

புகழாளர்களேயும், மரபுள் உயர்ந்தோரையும், அறிவாற்ற லுள்ள பெரியோரையும் கண்டு பேசி, அவருடைய உய ரிய கொள்கைகளேயும், நோக்கங்களேயும், மக்கட் குழு ஓதக் கூடிய வகையிலும், உணரக்கூடிய வகையிலும், செய்தித் தாள்களில் வெளியிட்டுப் பயன் படுத்துதலாம். மூன்றுவ தாய நெறி ஞாயிறு வெளியீடு (Sunday News paper) எனலாம். முற்காலத்தில் விடுமுறை நாட்களிற் காலையிலே னும் மாலையிலேனும் எல்லாப் பத்திரிகைகளும் வெளியிடப் பட்டனவாம். ஆனல், சில்லாண்டுகட்கு முன்னிருந்து 'ஞாயிறு வெளியீடு' வந்துகொண்டிருக்கிறது. தற்கால 'ஞாயிறு வெளியீடு' ஒரு புதிய தோற்றத்தோடு கூடியது. அது, செய்திகளே விரித்துரைப்பதில்லை. ஆங்காங்குச் சுட்டிக் காட்டுதல், சுருங்க உரைத்தல், சமையற் குறிப்புக்கள் ஏந்தி வருதல் முதலியவற்றுடன் உலாவுகின்றது. அகத் தூய்மைக் கான ஓய்வு நாளுக்கென ஏற்பட்ட மேனுட்டு ஞாயிறு வெளி யீடு, மன ஒருமைப்பாட்டிற்குரிய உயர்ந்த நெறிகளேத் தொகுப்பதில் ஈடுபடாமை ஒரு பெருங்குறையே என்பது என் கருத்து. முக்கியமானவையும், மிக நவீன முறைப்பாடு உடையனவும் ஆகிய சில ஞாயிறு வெளியீடுகள் வாரச் செய்திகளின் சுருக்கங்களேத் தாங்கும் பகுதிகளோடு திகழ் கின்றன.

பகைவருடைய பழிப்புக்குத் தப்புமாறு பெரும்பா லான கட்டுரைகளும் கடிதப் போக்குவரத்துக்களும், எழு தினவருடைய கையொப்பமின்றி வெறும் மொட்டைகளாக (அனுமதேயங்களாக) வெளி வந்தன. பிரான்சு (France) தேசத்திலும் இத்தாலி (Italy) தேசத்திலும் கையொப்ப மிட்ட பொருள் மொழிகளே நன்கு நோக்கப்பெற்று வந்தன.

ஒரு சாரார், எல்லாக் கட்டுரைகளும் கையொப்பத்தோடு கூடியிருக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். மற்றொரு சாரார், அக்கொள்கைக்கு மாறுபடக் கருதினர். எப்படி எனில், கையொப்பத்தால் வாசகருடைய மனப் போக்கு அடிக்கடி அழுக்காற்றிற் செலுத்தப்பட்டது என்பதேயாம். பொருள் அவ்வாறு கொள்ளப்படுவதால், கட்டுரையின் வழித் தங்கள் பெயரை நிலை நாட்ட விரும்பும் எதிர்காலப் பத்திரிகைத் தொழிலாளர் யாவருக்கும், கையொப்பமில்லாக் கட்டுரைகளின் வெளியீட்டு முறை முற்றிலும் பயனற்றதென்றே கருதுகின்றேன். ஆதலின், அன்னவர் திறத்தில் பத்திராசிரியரும், உதவிப் பத்திராசிரியரும் இரக்கம் காட்டுவார்களாக. ஏனையோர் திறத்திற் புனைபெயருடன் கட்டுரைகளை வெளிப்படுத்தலாம்.

(b) சிறப்பு வகை

இனி, மேனாட்டுப் பத்திரிகைத் தொழில் வளர்ச்சியைச் சிறிது சிறப்புவகையில் நோக்குவோம்: இங்கிலாந்திற் பத்திரிகைத் தொழில், முதன்முதலில் எலிஜபெத்து அரசியார் (Queen Elizabeth) காலத்தில் தொடங்கியது என்னலாம். ஸ்பெயின் தேசத்தார் பெருத்த கப்பற் படையுடன் இங்கிலாந்தின்மீது படையெடுத்த காலத்தில் (During the invasion of the Spanish Armada) 1588-ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் முதற் செய்தித்தாள், சாதாரண விளம்பரம்போல வெளியிடப்பட்டதாம். அக்காலத்தில் அரசியார் எலிஜபெத்தும், அவருடைய முதலமைச்சரும் அப்பத்திரிகையை மிக்க கருத்துடன் காத்து வந்தனராம். அந்நாள் முதல் பிரிட்டிஷ் பத்திரிகைத் தொழில், சிறிது சிறிதாக முன்னேற்றமடைந்து வந்தது. நெப்போலியன் படையெடுப்புக் காலத்தில் பிரிட்டிஷ் பத்திரிகை, தக்க முறையிற் பத்திரிகை வடிவத்துடன் வெளி வந்ததாம். விக்டோரியா பேரர

சியார் (Queen Victoria) காலத்திற் பத்திரிகைத்தொழில் வளனுற்றது. அன்று முதல் இன்றுவரை பலபடியானும் அத்தொழில் உயர்ந்துளது. இங்கிலாந்தின் பத்திரிகைத் தொழிலைத் தற்கால நாகரிக முறையிற் பற்பல செய்திகளை யும் திரட்டிப் பரப்பும் வழக்கத்திற் கொண்டு வந்துவிட்டவர் ஸ்டெட் (Mr. W. T. Stead) என்னும் ஆங்கிலேய அறிஞ ராவர். அவர் அத்தொழின் முறையைப் 'பால்மால் கேஜெட்டு' (Pall Mall Gazette) என்னும் பத்திரிகையி னிடத்தில் முதலில் காட்டினாராம். லண்டன் முதல் தினசரி 'போஷ்டு பாய்' (The Post boy) எனப்படுகிறது. அடுத் துச் சொல்லக்கூடிய தினசரி இந்நாள் காறும் நிலைபெற் றுள்ள 'மார்னிங் போஷ்டு' (The morning Post) என் னும் வெளியீடாம். திறத்தினும் உயர்வினும் தூய்மையி னும் விளக்கத்தினும் பரப்பினும் பிரிட்டிஷ் பத்திரிகையும், அமெரிக்க பத்திரிகையும் உலக முழுதினும் சான்ற சிறப் பினவாகப் பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகின்றன. இக் காலத்து இங்கிலாந்தில் மிகவும் கீர்த்தி வாய்ந்த பத்திரிகை 'லண்டன் டைம்ஸ்' (The London Times) ஆகும். அவ் வெளியீட்டுக்கு உலகத்தில் எல்லாப் பக்கங்களிலும் நிருபர் உளர். அந்நிருபர், தத்தம் எல்லையில் நிகழும் அக்கறையை உண்டுபண்ணும் செய்திகளை அவ்வப்போதே பத்திராதி பருக்குத் தெரிவிக்கின்றனர். அவ்வேற்பாட்டினால், உலக மெங்கும் நடக்கும் முக்கியமான செய்திகளையெல்லாம் 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையில் நன்கு காணலாம். ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆசியா என்னும் ஐம்பெருங்கண்டங்களின் செய்திகளையும், அப் பத்திரிகையைப் பார்த்த அளவிலே தெரிந்துகொள்ளும்படி அவ்வளவு தெளிவாகப் பத்திரிகை வடிவந் தீட்டப்பெற்ற வாறு பாராட்டத் தக்கது. செய்திகளைத் தெளிவுபட

அமைக்கும் முறையில் 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை உலகத்தில் எல்லாப் பத்திரிகைத் தொழிலாளராலும் பின் பற்றத் தக்கதென்பதை எவரும் மறுக்கமாட்டார்.

பிரிட்டிஷ் பத்திரிகை

அத்துணைச் சிறப்புற்ற பிரிட்டிஷ் பத்திரிகைத் தொழில், அமெரிக்காவைப் பின்பற்றிய முறையுடைத்தென்று மாஷிங்காம் (Mr. H. W. Mashingham) என்னும் மேனாட்டு அறிஞர் கூறியுள்ளார். பிரிட்டிஷ் பத்திரிகைத் தொழிலின் வளர்ச்சி முறை முக்காலே மூன்று வீசமும் அமெரிக்க பத்திரிகை முறையைப் பின்பற்றியதாகவே இருக்கிறதென்று அவ்வறிஞர் தெரிவித்துள்ளார். மிகப் பெரியனவாகிய எழுத்துக்களால் அமைந்த தலைப்பு வரிகள், வருணித்தெழுதும் நிருபங்கள், தாழ்ந்த உணர்ச்சிகளுக்கு உற்சாகம் ஊட்டத் தக்க நடை முறைகள், பெரும்பாலும் எல்லாப் பொருள் மொழிகளைப் பற்றியும் எழுதப்பட்ட நேரிய எளிய ஒருவாறு வழக்கலான முறை முதலியவற்றில் பிரிட்டிஷ் பத்திரிகை, அமெரிக்க பத்திரிகையைப் பின்பற்றி இருக்கின்றதாம். சிறிய கதை, அல்லது கதையின் வரிசை முறையானது, மக்கட் கூட்டத்தால் விரும்பிப் பாராட்டப்படும் பிரெஞ்சுப் பத்திரிகையின் வழிப்பட்டதாகும். மக்களுடைய உரிமைக்குரியதாகப் பத்திரிகையைப் பாராட்டாமல் ஆண் பெண்களின் கூட்டுறவைப் பற்றிக் கொச்சையாக உருவாக்குவதினும் ஆங்கில பத்திரிகை அமெரிக்க பத்திரிகையைச் சார்ந்து ஒழுகியுளது. பெண்டிர்க்கு விருப்பம் வளர்க்கும் கொள்ளத் தகாத பகுதிகள் பலவும் கொள்ளப்படும் வகையினும் அப்படியே சார்ந்துளது. இன்னும் உண்மையாகக் கூறுமிடத்து, இப்பத்திரிகைகளிற் பெரும்பான்மையும் பெருந்தொகையான மகளிர் சிப்பந்திகளை அமைப்பதிலும் அமெரிக்க மக்களுடைய வழியே பிரிட்டிஷார் சார்ந்துளர்.

இவ்வாறாகக் கடந்த ஒரு தலைமுறையிற் பிரிட்டிஷ் பத்திரிகைத் தொழின்முறை, அமெரிக்க பத்திரிகைத் தொழின் முறையின் வழிப்பட்டு வந்துளதாகத் தெரிகிறது. தற்போதைய பிரிட்டிஷ் பத்திரிகைத் தொழிலின் வளர்ச்சி முறை மிக்க வேறுபாடுடைத்து. அவ்வேறுபாட்டைப் பழைய பிரிட்டிஷ் பத்திரிகைகளைப் பார்த்தவுடனே கண்டு கொள்ளலாம். தலைமையான கட்டுரை எவையும் வருவதில்லை; அம்முறைக்கு மீறி எப்பொழுதேனும் வரின், பெரும்பாலும் அவை கட்டுரை வடிவிலே காணப்படமாட்டா. அப்பொருள் மொழிகள் செய்திப் பகுதிகளின் கருத்தைச் சுருங்கக்கொண்ட அமைப்பிலே கண்டோர் விரும்புந் தகுதியுடனே வெளியிடப்படுதல் மெய்ம்மையே. இன்னும் சுருங்கச் சொல்லப் புகின், பிரிட்டிஷ் பத்திரிகை உலகத்திற் பத்திராசிரியன் என்னும் பழைய பட்டம் போய், அமெரிக்கர் மொழிவதுபோல 'செய்தியாசிரியன்' என்னும்படியான மாறுதலை அடைந்திருக்கிறது என்னலாம்.

பிரிட்டிஷ் பத்திரிகை, பல்வேறு செய்திகளைச் சுருக்கி விளக்கும் தன் ஆசிரியனது குறிப்பின்வழிச் செல்லும் புதுமை பூண்டதென்க. அரசினர், நாகரிக மக்கள், விருந்துகள், பெரும்பாலும் கொழுத்த செலவோடு கூடிய விருந்துகள் ஆகியவையெல்லாம் அப்பத்திரிகையில் தெளிவான இடத்தைப்பெறும். சிக்கலானவும், மகிழ்வு தருவனவும், அல்லது ஒழுக்கக் கேடுடையனவுமான செய்திகளில், பல திறப்பட்டவற்றைத் திரட்டும் வகையில் பேருழைப்பு மேற்கொள்ளப் படுகின்றது. செல்வரின் குழறுபடைகள், செருக்குத் தன்மைகள், புதிய குற்றங்கள் அல்லது நிகழ்ச்சிகள், சண்டை சச்சரவுகள், புத்தம்புதிய நாகரிக வெளிக் காட்டுகள், வீரச் செயல்கள், நூதனக் கருவிகள், நடிகர்கள், பாடகர்கள், ஓவியந்தீட்டுவோர், வரும்பொருள் உரைப்போர், மற்றுமுள்ள மேதகு

கலைவல்லோர் என்னும் பலதிறப்பட்ட பகுதிகளினும் செய்திகளைத் திரட்டித் தெளிவுபடுத்தி வெளியிட்டால்தான், உதவிப் பத்திராசிரியரின் வேலை வெற்றியுள்ளதாகும். அத்தகைய உதவிப் பத்திராசிரியரின் தொழில்பற்றி ஆராய்ந்துரைக்கப் பெறுவதில்லை. வழக்கமாக அன்னவருடைய பணி, ஏற்றுக்கொள்ளும் வகையிலும், புகழ்ச்சியுரையிலும், அறிவாராய்ச்சியில்லா மொழியிலும், எடுத்து விளக்கப்படுகின்றது. ஆதலால், அதைப்போன்ற பத்திரிகையானது, மூளைக்கும் உடலுக்கும் உரிய வேலை முடிந்தபின், பெரியவேடிக்கை விளையாட்டுப் பொழுதுபோக்கில் நாட்டமுடைய தற்காலத் தவருக்கு இன்றியமையாத ஒரு கருவியாம். இவ்வுண்மை, அப்பத்திரிகையின்செய்திகள், உடற்கருவி கரணங்கள் நல்ல உழைப்பினால் எய்திய களைப்பை ஆற்றும் வகையிற் பொறி புலன்களுக்கு மகிழ்வையும் ஊக்கத்தையும் மேன்மேலும் ஊட்டி வளர்ப்பதினின்றும் அறியக் கிடக்கின்றது. தற்கால வாழ்க்கையின் முழுக்கடிக்கும் தருக்குநிலையும், சிறியகொண்டாட்டங்களிலுள்ள கூர்ந்த ஆவலும், அவற்றை விளம்பரப் படுத்தலும் புறக்கணிக்கப்படுவதில்லை. அருங்கலையாளர், அரசியல் அதிகாரிகள் முதலியோருடைய வரலாறுகள் பொதுவாகவே தகுதியான போக்கிற் பன்னியுரைக்கப்படுகின்றன. அத்தகைய செய்திகளால் இன்புறாத பிரிட்டிஷ் பொது மக்கள் இலர்.

அமெரிக்க பத்திரிகை

பத்திரிகைத் தொழிலின் வளர்ச்சித் துறையில் இங்கிலாந்துக்கு அடுத்த உயர்நிலையில் நிற்பது அமெரிக்கா தேசமாகும். அமெரிக்க பத்திரிகைத் தொழிலின் வளர்ச்சி முறை, விரிவும் பலதிறப்பட்ட உயரிய போக்கும் உடையதாகும். அதைப்பற்றிச் சில சிறப்பானஉண்மைகளும்சொல்லவேண்டுவனவே. அமெரிக்க தினசரிகளின் அமைப்புக்கள் வரு

மாறு: பல்வேறு நிழலுருவப் படங்கள் (Photographs), குற்றச்சார்புகள், பொறி புலன்களுக்கு விருந்தூட்டக் கூடிய நிகழ்ச்சிகள், அழகு பெறக் காட்டப்படும் பெரிய தலைப்புக்கள், பற்பல சரக்குகளைப் பற்றிய மனத்தைக் கவரும் விளம்பரங்கள் ஆகியவைகளே அமெரிக்க நாள் வெளியீடுகளின் முக்கிய அமைப்புக்களாகும். வியாபாரப் பகுதி மற்றெல்லாப் பகுதிகளைக் காட்டிலும் பொதுவாகப் பெரிதாயிருக்கிறது. அப்பெரும்பகுதியில் எல்லா வகை வர்த்தகக் குறிப்புக்களும் விலை விவரங்களும் தெளிவாகக் காணப்படுகின்றன.

ஜெர்மானிய பத்திரிகை

இனி, ஜெர்மனி தேசத்தைக் குறித்து ஆராய்வோம்: பண்டைய ஜெர்மானிய பத்திரிகையின் முக்கிய அமைப்பு; அதன் உள் நாட்டுத் தன்மைத்தேயாகும். மற்றொன்று, அதன் பொதுப்படையான கவர்ச்சியற்ற தோற்றம் எனலாம். ஒரு பிரெஞ்சு பத்திரிகை அல்லது ஆங்கில பத்திரிகையிலுள்ள பொருள் மொழிகளை விரைவில் அறிந்துகொள்ளலாம். ஜெர்மானிய பத்திரிகைகளின் பொருள் மொழிகளை அறிந்துகொள்வதற்கோ நீண்ட நேரம்செல்கிறது. ஒருசெய்தியின் முக்கியமான சிறு பகுதி, சில சமயங்களில் ஏதோ ஒரு மூலையில் தள்ளப்பெற்று இலை மறை காய்போலத் தென்படுவதில்லை. பல சமயங்களில் அரசியலைப்பற்றிய கட்டுரைகள் மிகப் பளுவாய்க் காண்பதுமுண்டு. அக்கட்டுரைகள் நற்பொருள்களைவிளக்கினும் அவற்றைப் படித்தற்குமிக்கமுயற்சிவேண்டி இருக்கின்றது. இருப்பினும், இலக்கியப் பத்திரிகைகளும் அவை போன்ற பிற செய்தித் தாள்களும் நன்கு தேர்ந்தவர்களால் எழுதப்படுகின்றன. மிக்க வியப்பும் விருப்பும் உண்டாகுமாறு அமைக்கப்பெறும் விளம்பர முறையில் ஜெர்மானிய பத்திரிகைகள் பெயர் பெற்றவைகளே. பத்திரிகைகளிற் பெரும்பாலானவை, அரசியற் கட்சியைச் சார்ந்

தனவாய் இருக்கின்றன. அவையைப்போன்ற சில பத்திரிகைகள் அரசியற் கட்சியையும் தழுவுவதில்லை; மக்கட் குழுவையும் சேர்வதில்லை; இரண்டுமற்ற பொதுக் கட்சியைச் சேர்ந்திருக்கின்றன. அப்பொதுக் கட்சிப் பத்திரிகைகள் பணம் சேர்ப்பதிலேயே கருத்துடையனவாய்த் தொழில்புரிகின்றன. அப்படியிருப்பதால், அவை பொது மக்களிடம் ஏற்படக் கூடியதான உறவு முறையின்மையை வலுப்படுத்துகின்றன: இருப்பினும், தற்பொழுது ஜெர்மானிய பத்திரிகைத் தொழில், பல்லாற்றினும் முன்னேறி வருகிறது.

7. கீழ்நாட்டுப் பத்திரிகைத் தொழில் வளர்ச்சி

(a) சீனப் பத்திரிகை

இனி, கீழ் நாடுகளில் முக்கியமான சீனம் ஜப்பான் தேசங்களின் பத்திரிகைகளைப்பற்றி ஒரு சிறிது சொல்லிப் பின் இந்திய பத்திரிகைகளைப்பற்றிப் பேசுவோம்:

முன் குறிப்பிட்ட அறிஞராகிய பேரேரா என்பவருடைய ஆராய்ச்சியின்படி சீனாவிலே, உலகமுதற் பத்திரிகை மரத்தாற் செய்த அச்சுக் கருவியில் அமைந்து, பீகிங் கெஜெட்டு(Peking Gazette)எனும் பெயரால்,8 அல்லது 9-ஆம் நூற்றாண்டில் வெளிவந்ததாக எண்ணப்படுகிறதென்று கூறினேன். அதன் பிறகு பத்திரிகைத் தொழில் எந்நிலை அடைந்து வளர்ந்ததென்பது விளங்கவில்லை. சீன தேசம் மற்றெல்லாவற்றைக் காட்டினும் அதன் பத்திரிகைகள் பல திறத்தனவாயிருக்கும் தன்மைகளில் மேம்பாடுடையது. சிறப்புச் செய்திப் பகுதிகளுக்கும், சாதாரணப் பகுதிகளுக்கும் இடையில் அவற்றை வேறு பிரித்துக் காட்டும் ஒரு கோடு அமைக்கப்பெற்றிருக்கிறது. சாதாரணமான பத்திரிகைகள் ஆங்கிலத்தில் வெளியிடப்படுகின்றன. அவற்றின் எண்ணிக்கை மிகக் குறைவு என்று கூறுவர். சீனத்திற் பெரும்பான்மையானபத்திரிகைகள், அரசியற்கட்சிக்காரர்

களாலும் அரசியல் இலாகாக்களாலும், தனிப்பட்ட நபர்களாலும், முதலீடுக்கும் வகையில் ஊட்டி வளர்க்கப்படுகின்றன. தனிப்பட்ட நபர்களால் நடத்தப்படும் பத்திரிகைகளின் செட்டு நட்டத்தால், பொது மக்கள் அவற்றை நிர்வகிப்போரைக் குறை கூற நேர்வதும் இயல்பன்றோ? அப்பத்திரிகைகள் மக்கட் கூட்டத்தால் தக்கபடி ஆதரிக்கப் பெறுவிடினும், அவர்களைக் குறை கூறுவது இயல்பென்னலாம்; இவ்வகை அறியாமை, சீன மக்களிடத்திருப்பது போலவே, இந்திய மக்களிடத்தும் பொதுவாக உள்ளது.

சீன அரசியல் நிருவாகக் கூட்டத்தினர், போர்க்குரிய மந்திரிகள், பொருள் வருமான அதிகாரிகள், அயல் நாட்டு விஷய அதிகாரிகள் எனப்பட்ட அனைவரும், தங்கள் வேலைகளைத் திறம்படக் காட்டும் வகையிற் கவலையுள்ளவர்களாவார்கள். அங்குள்ள அரசியற் கட்சிகள் நிலையுற்றனவும் நிலையற்றனவுமாகிய தம் கொள்கைகளையும், அரசியல் நிர்வாகிகளையும் புகழ விரும்புகின்றன. அப்புகழ்ச்சிகளை ஆதரித்துப் பேசுவதற்காக அவ்வவ்விலாகாக்களும், கட்சிகளும், தத்தம் நோக்கத்திற்கேற்ற பத்திரிகைகளை நடத்துகின்றன. ஆனல், அப்பத்திரிகைகள், அக்கறையுள்ள பொருள் மொழிகளிலும் விருப்புடையனவேனும், அதற்கான முயற்சியிற் பிற்போக்குடையனவே. வியாபாரத் துறைகளிற் புறச்சார்பற்றுத் தன்னம்பிக்கையோடு உழைக்கக் கூடிய ஒரு பத்திரிகையாவது சீனத்தில் நிலை பெறுகிறதில்லை. இனிமேலாகிலும் அவ்வகையிற் பண்டை நாகரிகத் தேசமாகிய சீனம் முன்னேறுவதாக. சீன தேசம் குடியாட்சி பெற்ற பின் பல்வேறு துறைகளில் முன்னேறி வருதல் போலவே, பத்திரிகைத் தொழில் துறையிலும் முன்னேறத் தொடங்கியுள்ளது. பத்திரிகைத் தொழிற் பயிற்சியை ஒரு பாடமாக அமைக்க வேண்டுமென்று சீனத்தின் தேசீய சர்க்கார் சின்

ளுட்களுக்கு முன் ஓர் அறிக்கை வெளியிட்டிருத்தலைக் கண்டு பலரும் இன்புறுகின்றனர். நம்மிந்தியா அவ்வகையிற் சீனத்தைப் பின்பற்றும் நாள் எந்நாளோ!

(b) ஜப்பான்

ஜப்பானிய பத்திரிகைத் தோற்றம் வளர்ச்சிகளைப் பற்றி அறிந்த மட்டில் ஆராய்வோம்: ஜப்பானிய பத்திரிகை 1845-ஆம் ஆண்டில் பிறந்தது என்னலாம். அக்காலத்தில் ஓர் அரசியல் அதிகாரி, தம்முடைய வீட்டை எல்லா வியாபாரிகளுக்காகவும் திறந்து வைத்தார். அவருடைய விருந்தினர் அவ்வப்போது அங்குச் சொல்லி வந்த கதைகளெல்லாம் நூல் வடிவிலே அச்சிட்டு வெளியிடப்பட்டன. அவ்வெளியீடுகளே ஜப்பானிய பத்திரிகைத்தொழிலின் ஆக்கத்திற்கு வித்துக்கள் ஆயின.

தற்போதைய ஜப்பானிய பத்திரிகையின் தொடக்கக் காலம் 1861-ஆம் ஆண்டாகும். அக்காலத்தில் டச்சு(Dutch) தேசப் பத்திரிகைகளின் செய்திகள் சீனத்திலே மொழி பெயர்க்கப்பட்டு வந்தன. அதன்மேல் 1878-ஆம் ஆண்டில் முதலாவது தினசரிப் பத்திரிகை, "காலை தோறும் செய்திகள்" ("The News of Every Morning") என்று பொருள்படும் பெயரால் வெளி வந்தது. அச்செய்தித்தாள் 'யோகஹாமா' ("Yokahama") நகரிலே வெளியிடப்பெற்றது. பொது மக்கள் அப்புதினத்தாளைப் போற்றிக் கொண்டாடி, அத்தொழிலின் முன்னேற்றத்தில் ஈடுபட்டு வந்தார்கள். அதனால், நான்காண்டுகள் கழிந்த பின், ஜப்பானில் ஒரு நூறு பத்திரிகைகளுக்குமேல் வளர்ந்தோங்கின.

1898-ஆம் ஆண்டில் எல்லா ஜப்பானிய பத்திரிகைகளும் சீனப் போரின் நீதிக்காக மன்றாடி வந்தன. அப்பொழுது நாட்டின் பொருளாதார நிலை பொருத்தமான வளனுறுதிருந்தது. அப்படியிருந்தும், பத்திரிகைகள் பொது மக்களு

டைய ஊக்கத்தைக் கிளர்ச்சிசெய்து வந்தன. ஜப்பான் போற்றத் தகுந்த வெற்றியடைந்தது. ஜப்பானிய வெற்றிக்குரிய பரிசுகளை ரஷ்ய தேசம் கவர்ந்துகொண்டதனால், ஜப்பான் முழுதும் ரஷ்யாவின்மீது தீராச் சீற்றங்கொண்டிருந்தது. அக் காலத்துக்கு ஏற்றபடி ஜப்பானிய பத்திரிகைகளின் நேர்மையான சீரிய கட்டுரைகளே உள்நாட்டுக் குழப்பம் மூளவொட்டாமல் செய்தன. தாழ்வுப் படுகுழியிலே ஆழ்த்தும்படியான அந்தத் தற்கொலையான பெருந்துன்பத்தில் தன்னை விழவொட்டாமல் தனக்குத் தற்காப்பளித்த நன்றிக்காக ஜப்பான், தன் பத்திரிகைகளுக்கு என்ஞான்றும் மிகப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. ஜப்பானிய பத்திரிகைகள், உள்நாட்டு நடவடிக்கைகளிலும், வெளி நாட்டு நடவடிக்கைகளிலும் வேற்றுமை உடையன. எஃது எப்படி இருந்தபோதிலும், தேசியப் பெருமைக்குக் குறைவு அல்லது அழிவு நேரும் எச் சமயத்திலும் ஜப்பானியர் ஒன்றிய கட்டுப்பாடும், தேசப் பற்றும் பூண்டு விளங்குகின்றனர்.

ஜப்பானிய பத்திரிகைத் தொழில் வளர்ச்சி

கல்கத்தா "மாடர்ன் ரிவ்யூ" பத்திரிகையின் 1928ஞு ஜூன் மீ வெளியீட்டின் 736-ஆம் பக்கத்திலே 'ஜப்பானிய பத்திரிகை அரசன்' ('The Magazine King of Japan') என்னும் தலைப்பிலே வந்துள்ள ஒரு கட்டுரை, அறிஞர் நோமா (Mr. Noma) என்பவரைப்பற்றிச் சொல்லு முகத்தானே ஜப்பானிய பத்திரிகைத் தொழில் முன்னேற்றத்தையும், பத்திரிகை படிக்கும் ஜப்பானியர் தொகையையும் ஒருவாறு விளக்கிக் காட்டுகின்றது. இங்கு ஒரு சில குறிப்புக்களை மட்டும் எடுத்துக் காட்டுவோமாக: சீஜி நோமா (Mr. Seiji Noma) என்னும் ஜப்பானிய அறிஞர் 20 ஆண்டுகட்கு முன்னே எளிய சம்பளத்தில் அமர்ந்த ஒரு பாடசாலை உபாத்தியாயராயிருந்தனர். ஆனால், அப்

போது அவர், ஜப்பானில் செல்வப் பொருளுடையவ ராகவும் சூயஜ் கால்வாய்க்குக் (Suez Canal) கிழக்கே உள்ள பத்திரிகை வெளியிடுவோர் அனைவரினும் பெரியவராக வும் இருந்தார். அவர் பல நூல்களை வெளியிட்டதுமன்றி, ஒன்பது பெரிய திங்கள் வெளியீடுகளுக்கு முதலாளியாகவும் (Proprietor of Nine big Monthlies) இருந்தார். அவ்வொன்பது பத்திரிகைகளுள் கிங் (The King) என்னும் பெயரிய பத்திரிகை ஒன்றுக்கு உத்தரவாதத்தோடு கூடிய 15 லட்சம் சந்தாதாரர்கள் இருந்தார்கள். ஏனைய 8 வெளியீடுகளில் ஒவ்வொன்றுக்கும் 10,0000 சந்தாதாரர்கள் இருந்தார்கள். அவருடைய பத்திரிகையைப் படித்து வந்தவர் தொகை ஒரு கோடிக்கு அதிகமென்று மதிப்பிடப்படுகிறது. ஐந்து ஜப்பானியருள் ஒருவர் வீதம் சொந்தச் சந்தாவில் பத்திரிகை படிப்போராய் உளர் எனினும் அமையும்.

அறிஞர் நோமா தம் ஒன்பது பத்திரிகைகளும் ஒன்றைவிட ஒன்று சிறந்திருக்குமாறு அவற்றை நன்கு நடத்தி வந்திருக்கின்றார். அவர் அறவும் மிகுந்த உழைப்பாளர்; அவ்வுழைப்பினால் தம் 9 பத்திரிகைகளையும் தடையின்றி வெளியிட்டு வந்தார். அவரது பேருழைப்பினைக் கண்டு அவர் கீழ் வேலையில் அமர்ந்தோரும் ஒன்றிய வன்மை கருத்துக்களுடன் ஊக்கம் பெருகப் பெருகப் பணியாற்றி வந்தனர். அவர் சில சமயங்களில் சிறந்த ஒரு பத்திரிகாசிரியராகவும், சில சமயங்களில் நல்ல ஒரு நிருபராகவும், சில சமயங்களில் நுணுக்கமுள்ள ஒரு தொழிலாளராகவும், சில சமயங்களில் தேர்ச்சி பெற்ற ஒரு விளம்பரப் புலவராகவும் விளங்கினர். அவ்வொன்பது பத்திரிகைகளின் ஒவ்வொரு பக்கமும் அவரது தன்மை, கருத்து, நோக்கம் என்னுமிவற்றை எடுத்துக் காட்டிற்று. அவர் தமது வாழ்க்கையை

மக்கட் கூட்டத்தின் போதகராய்க் கழிக்கும் கருத்தினர்; தம் வாழ்நாளெல்லாம் அத்தொண்டிலேயே கழிக்கும் விருப்பினர். அவர் ஜப்பான் தேசத்திலே மிக்க புகழ் பெற்ற போதகாசிரியருள்ளும், அன்பு நெறி வளர்ப்பவருள்ளும் ஒருவராய்த் திகழ்ந்தனர் என்பது மிகையாகாது.

அறிஞர் நோமா வெளியிட்ட பத்திரிகைகளுள் ஒன்று மகளிரைப்பற்றியது; ஒன்று சிறுவர் சிறுமிகட்கேற்றது; ஒன்று இளங்குழவிகட்குரியது; மகிழ்ந்தேற்கத் தக்க தூய்மைக்கும் எளிமைக்கும் பேர் போனது; ஒன்று, ஒன்றுபட்ட தன்மையோடு கூடியதும், அறிஞர் நோமாவுக்குத் தருக்கை விளைப்பதுமாக இருந்தது. அதன் பேர் "ஸ்யூபென் எலெக்வென்ஸ்" ([Xuben Eloquence] சொற்பொழி வாற்றல்) என்பதாம். விரிவுரை நிகழ்த்தலைப்பற்றிய நூல்கள் உள. ஆனால், சொற்பெருக்காற்றல் என்னும் தொண்டிலே முழுதும் ஈடுபடக் கூடிய ஒரு தனிப்பத்திரிகை ஜப்பானைத் தவிர வேறு எத்தேசத்தினும் கிடைக்காது. இதுதான் அறிஞர் நோமாவுக்குச் செல்வப் பத்திரிகை. ஏனெனில், இது தன்மையிலே ஒப்பற்றது; அவரைப் பத்திரிகைத் தொழில் உலகத்திலே முன்னுக்குக் கொண்டு வந்தது. எனவே, அறிஞர் நோமா, "ஜப்பானிய பத்திரிகை அரசர்" என்னும் பேருக்கும் புகழுக்கும் ஏற்றவர் என்க. 1927-ஆம் ஆண்டில் கணிக்கப்பட்ட கணக்குப்படி 4,592 பத்திரிகைகள் ஜப்பானில் நடந்திருக்கின்றன.

(c) பர்மா

இனி, பர்மாவிலுள்ள பத்திரிகைகளில் சிலவற்றைப் பார்ப்போமாக: பர்மாவிலே ஆங்கிலப் பத்திரிகைகளைவிடச் சுதேச மொழிப் பத்திரிகைகளே மிக்குள. அங்கே நீடித்து நடைபெற்று வரும் இரண்டு ஆங்கிலோ இந்தியன் தினசரிக

ளும் உள. அவை "ரங்கூன் கெஜேட்டு" (The Rangoon Gazette) "ரங்கூன் டைம்ஸ்" ("The Rangoon Times") என்பனவாம். அவை, முக்கியமாக ஆங்கிலோ இந்திய வகுப்பினருக்குள் பரவி வருகின்றன. "ரங்கூன் டேய்லி நியூஸ்" ("The Rangoon Daily News") என்ற தினசரியும் உளது. அஃது ஓர் உயர்தர வெளியீடு. அதன் இயல்பான எளிய நடையும், இலக்கண இலக்கிய அமைதியும், மனக்கூர்மையும் பாராட்டற்பாலன. "ரங்கூன் மேய்ல்" ("The Rangoon Mail") என்பது ஒரு பெரிய வார மும்முறைப் பதிப்பு. அது தேசீயக் கொள்கையுடையது; அதனால், அம் மாகாணத்திற்குப் பெருமை தந்துளது; தன் கருத்துக்களைத் தாராளமாக வெளியிடுகின்றது; புகழ்ச்சி இகழ்ச்சிகளைப் பொருட்படுத்தாமல் தன் கடமையை ஆற்றி வருகின்றது. முக்கியமான பர்மிய பத்திரிகைகளின் தொகை மொத்தம் சுமார் அறுபதாகும்.

(d) சிலோன்

இனி, சிலோனுக்குச் செல்வோம்: சிலோன் என்பது, இலங்கைத் தீவு. இஃது, பண்டை இந்தியாவைச் சேர்ந்ததாகலின், இதன் வெளியீடுகள் சிலவற்றை இந்திய பத்திரிகைகள் என்ற தலைப்பில் குறிப்பிட நேர்ந்தது. அறிஞர் பெரேரா (Pereira) என்பவர், சிலோன் பத்திரிகைகளைப் பற்றிக் குறிப்புரைகளால் விளக்கியுள்ளார். அவ்விளக்கத்தின்படி பார்த்தால், 1802-ஆம் ஆண்டிலே "சிலோன் கெஜேட்டு" பத்திரிகை முதன்முதல் வெளியிடப்பட்டதாம். ஆரம்பத்திலே அது முப்பகுதிகளை உடைத்தாயிருந்தது: ஒரு பகுதி ஆங்கிலத்திற்கும், ஒரு பகுதி சிங்களத்திற்கும், ஒரு பகுதி தமிழுக்குமாம். அம்மூன்றும் ஒன்றைப் போலவே மந்த தரத்துடன் திகழ்ந்தன. அவ்வெளியீட்டில் கவிஞனுக்கெனவும் ஒரு மூலை ஒதுக்கப்பட்டிருந்தது.

அடுத்த பத்திரிகை 1832-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலே வெளி வந்தது. அதன் பேர் "கொழும்பு ஜர்னல்" ("The Colombo Journal") என்பது. அஃது, அரசப் பிரதிநிதியின் கூட்டுறவு பெற்றிருந்தும், அரசியல் முறையைத் தாக்கி எழுதியபடியால், அடுத்த ஆண்டில் அரசினரால் நிறுத்தப்பட்டது. ஆனால், அரசப் பிரதிநிதியின் கட்டளையால் அப்பத்திரிகை மறுபடியும் துவங்கப்பட்டது. பின் அஃது உள்நாட்டு அரசியல் முறைகளிலே உரனும் பயனும் வாய்ந்து, சில்லாண்டுகள் நன்கு நடந்து வந்தது. அப்பத்திரிகை, 'கிரானிகிள்" ("The Chronicle") என்ற பேரால் வெளியிடப் பட்டு வந்தது. ஆயினும், அவ்வரசப் பிரதிநிதிக்குப் பிறகு, 1837 ல் அது நின்றுவிட்டது; அப்படி நின்றுங்கூட, அடுத்தாற்போல "ஹெரால்டு" என்ற பேரால் வெளி வந்துலாவியது. ஆனால், இம்முறை அரசினர் சார்பின்றித் தற்சார்பில் நிலவியது.

பின்னர், "கண்டி ஹெரால்டு" ("The kandy Herald") என்ற பத்திரிகை, "சிலோன் டைம்ஸ்" ("The Ceylon Times") என்ற பத்திரிகையுடன் ஒருவாறு ஒத்துழைப்பதற்கு 1868 ல் தோற்றுவிக்கப் பெற்றது. அதன் பிறகு சிலோனில், "அப்சேர்வர்" ("The Observer") "டைம்ஸ்" ('The Times') "எக்ஸாமினர்" ("The Examiner") என்ற பத்திரிகைகள் வெளிவரலாயின. அம் மூன்றும் வாரம் இரு முறைப் பதிப்புக்களானபடியால், நாளும் ஒரு பத்திரிகை வருமாறு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு நடைபெற்று வந்தன. பிறகு சில பத்திரிகைகளும் வெளியிடப்பட்டு வந்தன. அவற்றையடுத்து, "சிலோன் மார்னிங் லீடர்" "The Ceylon Morning Leader") "சிலோன் டெய்லி நியூஸ்" ("The Ceylon Daily News") என்ற பத்திரிகைகள் தோன்றின. கத்-

தோலிக் கிறிஸ்தவ வகுப்பினரின் நலத்துக்கு வன்மையுடன் உழைத்து வந்த "கத்தோலிக் மெஸெஞ்சர்" ("The Catholic Messenger") என்ற பத்திரிகையும் இங்குக் குறிப்பிடத் தக்கதே.

சிலோனிலே நல்ல முறையில் நடத்தப்படும் சிற்சில தினசரிகள் இருக்கின்றன. அவை நன்னிலையிலே உள. அவற்றுட் சில 1,840-1850க்குட்பட்ட காலத்திற் பிறந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது. அவை போதியபடியான நல்ல அமைப்புக்களுடன் ஏற்படுத்தப்பட்டவை. சிலோனி லுள்ள "டைம்ஸ் ஆப் ஸிலோன்" ("The Times of Ceylon") என்ற முற்பட்ட தினசரி, "சண்டே டைம்ஸ்" ("Sunday Times") என்ற பேரால் நல்ல படங்களோடு கூடிய ஒரு வாரப் பதிப்பை வெளியிடுகின்றது. "சிலோன் டேய்லி நியூஸ்" "சிலோன் அப்சேர்வர்" என்ற பத்திரிகை கள் வளமான இதழாசிரியர்களாலும், மேற் பார்வையாள ராலும் ஒழுங்குபெற நடத்தப்பெறுகின்றன. "சிலோன் இண்டிபெண்டேண்டு" ("The Ceylon Independent") என்ற பத்திரிகை சிலோனிலுள்ள தேசீயக் கட்சிக்கு ஓர் ஊன்றுகோல் போன்றது. "சிலோன் மார்னிங் லீடர்" பத்தி ரிகைத் தொழிலுக்குப் பெருமை தரும் ஒரு நல்ல தினசரி. சிலோனில் உள் நாட்டு மொழிப் பத்திரிகைகள் நன்கு மதிக் கப்பட்டு வருகின்றன. அவை, அரசியல் துறையிலே நன் மதிப்புடன் ஆற்றலைச் செலுத்துவன; ஏனைக் கொள்கை களிற் போலவே சிலோனின் அரசியற் கொள்கையிலும் நல் வழிகள் காட்டுவன. உள்ளூர் மொழிகளிலே வெளியிடப் படும் அப்பத்திரிகைகளின் வரன்முறை தெரியவில்லை. எனவே, இம்மட்டிலே அவற்றின்விஷயம் நிறுத்தப்படுகின் றது. முக்கியமான சிலோன் பத்திரிகைகளின் மொத்தம் சுமார் ஒரு நூறு ஆகும்.

II

நூல்

1. இந்திய பத்திரிகைத் தொழில் வரலாறு

(a) பண்டை இந்தியாவில் செய்திகள் பரப்பிய முறை

இந்தியா மற்றெல்லாத் துறைகளிலும் போலவே, பத்திரிகைத் தொழில் துறையிலும் பிற்போக்குடையது. இனி இந்திய பத்திரிகைத் தொழிலின் பிறப்பு வளர்ப்புகளில் எட்டிய மட்டிலே திட்டமாக நுழைவோமாக: இற்றைக்குப் பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்னைய பெருமை சான்ற தமிழ் இந்தியாவில் செய்திகள் பரப்பிய வகை, ஓலை கடிதம் முதலியவற்றால் என்க. மணச்செய்திகளும், பிணச் செய்திகளும், அரசியல் முதலிய ஏனைச் செய்திகளும், ஓலையிலே பொறிக்கப் பெற்றன. ஓலையின் பின் கடிதமும் பயன் படுத்தப்பட்டது. ஓலையுங் கடிதமும் பயன்படுத்தப்பட்ட வகையைப் பின்வரும் மொழி நூலார் கூற்றினின்றும் அறியலாம்:

"முடங்கலென்பது மூங்கிலையும், மூங்கின் மடலையும் பனையேட்டினையும் உணர்த்தும். சுவடியென்பது சுவடென்னும் சொல்லிற் பிறந்ததாகலின், பனையேட்டின்கட் சுவடுபட எழுதப்படுவதென்பது பொருள். இன்னும் அக்காலத்தில் பூர்ச பத்திரத்தில் குங்குமம் பச்சைக் கற்பூரம் முதலியவற்றாற் கூட்டப்பட்ட குழம்பினாலே எழுதி வந்தனர். காளிதாசர், ஓர் நாடகத்தில் ஊர்வசி புரூரவ சக்ரவர்த்திக்குப் பூர்சபத்திரத்திற் சேதி தெரிவித்தனளென்பர். பூர்ச பத்திரமாவது ஓர் மரத்தின் பட்டை. அது மஞ்சணிற நார் மடி போன்றுள்ளது. அபரகம்போலப் பிளவுபடத் தக்கது. சீனக் கடிதம் போலே மெல்லிய தன்மையுமுடையது." (மொழி நூல், இலக்கணவியல்.)

மேற்கூறிய ஓலை, கடிதம் இவற்றால் முதலில் காலாட்கள் மூலமும், அடுத்து அரசியற் செய்திகளைச் சிறுபான்மை (தலை நகர்களில்) யானைமேற் பறையறைதலின் மூலமும், அதனையடுத்து விரைவிலே செய்தியெட்டுவிக்கும் பொருட்டுக் குதிரையாட்கள் மூலமும், இந்திய தமிழ மன்னரும், பிற வேந்தரும், அவர்தம் குடிமக்களும் ஒருவர்க்கொருவர் செய்திகள் தெரிவித்தும் தெரிந்தும் வந்தனர்; போர், கலகம் முதலியன நிகழ்வுழிப் புறாக்களின் மூலம் கடிதப் போக்கு வரவு செய்து வந்தனர். மற்றும், அசோக சக்கரவர்த்தி (சுமார் கி. மு. 272—232) தமது கல்வெட்டுக்களால் குடிமக்களுக்கு அறநெறிகளையும், நீதி நெறிகளையும் வகுத்த சமரச சன்மார்க்கச் செய்திகளும் ஈண்டுக் குறிக்கற்பாலன.

சிற்றூர்க் கிராமச் சாவடி முதல் பெருநகர்க் கல்விக் கழகமும், பொதுக் கூட்டம் கூடுமிடங்களும், சிற்றுண்டிக் கடைகள், பேருண்டிக் கடைகள், வட்டிக் கடைகள், சந்தைக் கடைகள் ஆகிய பல வாணிக நிலையங்களும், அன்ன சாலை, வழிப்போக்கர் தங்குமிடம் முதலிய அற நிலையங்களும் ஆகிய இவைகள் செய்திகள் திரண்டு பரவும் நிலையங்களாய் நிலவின. 16-ஆம் நூற்றாண்டின் இடையிலே அரசாண்ட இந்தியாவின் மொகலாய சக்கரவர்த்தியான 'ஷேர்ஷா' என்பவர் குதிரையாட்கள் மூலம் கடிதப் போக்கு வரவு செய்து செய்திகள் பரப்பினர். அன்றியும், ஷேர்ஷாவின் காலத்திலே தான் முதன்முதல் தபால் வண்டிகளின் வாயிலாகச் செய்திகள் பரவலாயின. பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னே கை எழுத்துச் செய்திகளாய கடிதங்கள், அரசினர் கச்சேரியிலே பிரபுக்களும் சிற்றரசர்களும் ஏற்படுத்திய செய்திகள் நிருபரால் அவ்வப்போது ஒழுங்காக எழுதப்பட்டு வந்தனவாம். அந்நிருபர்களின் வழி அப்பிரபுக்களும் சிற்றரசர்களும் அச்செய்திகளை அறிந்து வந்தார்கள். அக்கடிதங்

கள் போன்ற செய்திகள் அரசினர் அவைக்களம், தலை நகர்கள் இவற்றிலே நிகழும் முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றினவாய் இருந்தன. 17-ஆம் நூற்றாண்டிலே அத்தகைய செய்திக் கடிதங்கள் லண்டனிலிருந்து ஆங்கில உள் நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்தனவாம். ஆனால், இந்தியாவிலே அவை போன்ற செய்திக் கடிதங்கள், சிற்றரசர்க்கும் செல்வருக்கும் மட்டும் அனுப்பப்பட்டு வந்தனவேயன்றி, கல்வி நலம் படைத்த நடு வகுப்பு மக்கட் குழுவுக்கு நேராக அனுப்பப் படவில்லை என்க. ஆயினும், அக்கடிதங்களிலுள்ள செய்திகளும், முக்கியமான இந்திய வியாபாரிகளின் தொலைவிலுள்ள செய்திகள் நிருபர் விடுத்த அறிக்கையிலுள்ள செய்திகளும் அடிக்கடி வெளிப்போந்து பெருநகர்களின் மக்களிடையே பரவி வந்தன.

அச்செய்திக் கடிதங்கள் செய்திகளைப் பற்றிய அபிப் பிராயமாவது, அரசாட்சியைப்பற்றிய ஆராய்ச்சியாவதுகுறிப் பிடாமையின், அரசியல் மணம் சிறிதும் இல்லாதிலகின. ஆகவே, செய்தித் தாள்கள் என்று நாம் தற்காலத்திலே கொள்ளும் வகையில் அச்செய்திக் கடிதங்களைச் சிறிதும் கொள்ளுதற்கு இடனில்லை என்க. இவ்வழி வகைகள் நாற் புறங்களினும் செய்திகள் பரப்புவதற்குக் காலத்தாழ்ச்சி, பேருழைப்பு முதலியன தந்தன. எனினும், இவையே அக் காலத்திற்கு ஏற்ற வழி வகைகளாய் உதவின. இக்காலத்தி லோ, இருப்புப் பாதை, நீராவிக் கப்பல், தபால், தந்தித்தபால், (டெலிபோன்) தொலைவிலுணர் கருவி, கம்பியில்லாத் தந்தி (Wireless Telegraph), விண்ணூர் பொறி (Aeroplane) ஆகிய இவ்வேழுவகையானும் செய்திகள் பரவி வருகின்றன. இவ்வேழுவகைத் தபாலும் பத்திரிகைத் தொழிலுக்கு உதவி வருகின்றன. வெளியீட்டு முறையிலே அச்சுப்பொறி அடிப் படையாக நிலவுகின்றது.

(b) இந்திய பத்திரிகைப் பிறப்பு

இனி, இந்நூற் பெயருக்கேற்ப இந்திய பத்திரிகைத் தொழில் பிறந்து வளர்ந்து வந்தவாறு சிறிது ஆராயப்படுகின்றது: கிழக்கிந்தியா கம்பெனி ஆட்சிக் காலத்திலேதான் முதல் இந்திய பத்திரிகை தோன்றிற்று. இந்தியாவின் பத்திரிகைத் தொழிலுக்கு இன்றைக்கு (155 ஆண்டு) ஒன்றரை நூற்றாண்டுக்கு மேல் வயதாகிறது. ("The first English Newspaper printed in India was Hickey's Bengal Gazette, which commenced publication on 29th January, 1780. [See "The Modern Review" for November, 1928, page 553; Bengal Public Consultations, Vol. 55, 17 Oct. 1822, No. 8 Minute, India Office Records]) "ஹிக்கீஸ் பெங்கால் கெஜேட்டு" என்ற ஆங்கில முதற் பத்திரிகை 1780-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29-ஆம் நாளில் கல்கத்தாவில் ஆரம்பிக்கப்பட்டது. ("Hickey's Bengal Gazette, started at Calcutta on 29th January, 1780, was the first English Newspaper printed in India." [See "The Modern Review" for April, 1931; page 408]) இதுதான் இந்தியாவிற்கு முதற் பத்திரிகை. ஆனால், இவ்வாங்கில முதற் பத்திரிகை, அக்காலத்திலே அரசப் பிரதிநிதியாயிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings) என்பவரால் குற்றஞ் சாட்டப்பட்டு, அந்தோ! அழிக்கவும்பட்டது.

(c) இந்திய பத்திரிகை வளர்ச்சி

இளங்குழந்தைப் பருவத்திலே அரசினரால் நசுக்குண்டு அழிந்தொழிந்த "ஹிக்கிஸ் பெங்கால் கெஜெட்டு"க்குப் பின் வேறு பத்திரிகைகளும் அடுத்தடுத்துத் தோன்றின. "இந்தியா கெஜெட்டு" (The India Gazette), "கல்கத்தா

கெஜெட்டு" (The Calcutta Gazette), "பெங்கால் ஹர்க்காரன்" ("The Bengal Harkara") முதலாகவுள்ள இன்னுஞ் சில பத்திரிகைகளும் வெளிவந்துலாவின. பின்னர் அரசப் பிரதிநிதியாக வந்த லார்டு வெல்லெஸ்லி (Lord Wellesley) என்பவர், 13-5-1799 ல் அப்பத்திரிகைகளைத் தாம் புதிதியற்றிய கொடிய சட்ட வரம்பிற்குள் அடக்கி ஆண்டு வந்தார். அவருக்குப் பின்பு வந்த அரசப் பிரதிநிதிகளோ, முன்னினுங் கொடுஞ்சட்டங்களியற்றிப் பத்திரிகைத் தொழில் வளர்ச்சியைப் பின்னுந் தகைந்தார்கள். ஆனால், அவர்களுக்குப் பின் வந்த அரசப் பிரதிநிதியாகிய லார்டு ஹேஸ்டிங்ஸ் (Lord Hastings, a man of very liberal views) என்பவர் 19-8-1818 ல் தமது தாராளமான மனப் பான்மையினால் அக்கொடிய சட்டங்களைக் களைந்தெறிந்துவிட்டுப் பத்திராசிரியர்களுக்குத் துணைக்கோடான சில பொது விதிகளை மாத்திரம் வகுத்திட்டார். ஹேஸ்டிங்ஸ் காலத்திலேதான் தேச பாஷைப் பத்திரிகை முதன்முதல் வெளி வந்தது. அவர், செய்தித் தாள்கள் அரசினரின் நியாய நடவடிக்கைகளைப் பற்றிய குண தோஷ விசாரணைகளைச் செய்யலாம் என்றும், ஆனால் சில பொருள் மொழிகளைப் பற்றி மட்டில் அவைகள் எவ்விதமான விளக்க உரையும் செய்யக் கூடாதென்றும் உத்தரவிட்டார்.

(d) இந்திய பத்திரிகைகள்

முதன்முதல் வெளி வந்த வங்காளிப் பத்திரிகை ஒரு வார வெளியீடாகும். (The first Bengali Newspaper, a weekly Edition, was "The Samachar Darban") அது 23-5-1818 ல் சிராம்பூர் சங்கத்தவரின் (Serampur Mission) ஆதரவு கிடைக்கப்பெற்று நடந்து வந்தது. அதற்கு முன் 1816 ல் ஒரு பத்திரிகை தோன்றி, விரைவிலே மறைந்து போய்

விட்டது. ("A short - lived paper Gangakishore Bhathacharya's Bangala Gazette, had made its appearance earlier in 1816— "The Modern Review" for April 1931, page 409.) ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் தாராளமான கொள்கைகளால் கல்கத்தாவிலே ஆங்கிலத்திலும் தேச மொழிகளிலும் பல பத்திரிகைகள் தோன்றலாயின. ஆகவே, 4-12-1821 ல் "சம்பத் கௌமுதி" (The Sambad Kaumudi) என்ற வங்காள வார வெளியீடு தனி இந்தியராலேயே நடத்தப்பட்டு வந்தது. நமது அரிய பெரிய தாய் நாடாகிய இந்தியாவின் முன்னேற்றத்துக்குப் பல வகையினும் அடிகோலி வைத்த அறிஞர் ராஜா ராம் மோஹன் ராய் (Raja Ram Mohan Roy) என்பவர் அப்பத்திரிகையினைப் போற்றி வளர்த்தவருள் ஒருவராவர். அன்னார் இந்திய பத்திரிகைத் தொழிலை வளனுற வளர்க்கும் பொருட்டுப் பாடுபட்டுவந்தார். அவர் கிழக்கிந்தியா கம்பெனி வேலையினின்றும் நீங்கியபின், 1815 ல் கல்கத்தாவில் குடி இருந்தார்; அங்கிருந்துகொண்டு, தமது நாட்டவரின் அக்கறையை உணர்ந்தவராய், இந்திய தேசப் பத்திரிகைத் தொழிலை வளம்பட வளர்த்தலில் தமது கருத்தைச் செலுத்தினார். பத்திரிகையின் வழி இந்தியர் திருந்திய செவ்விய வாழ்வு பெறுதல் கூடும் எனக் கண்டுகொண்ட அவர், பாரசீகத்தில் ஒன்றும் வங்காளியில் ஒன்றும் ஆக இரண்டு தேச மொழிப் பத்திரிகைகள் ஏற்படுத்தி நடத்தி வந்தார்; அவற்றின் வழியே தமது நாட்டவர்க்கு அரசியற் பொருண் மொழிகளையும் உணர்த்தி வந்தார். பவானி சரண பானர்ஜி (Bhawani Charan Banerji) என்பவர், 13-ஆம் இதழ் வரை கௌமுதியை நடத்தி வந்தார். பிறகு, 5-3-1922 ல் அதற்குப் போட்டியாக "சமாசார சந்திரிகை" (The Samachar Chandrika) என்னும் வங்காளிப் பத்திரிகையை

ஆரம்பித்து நடத்தினர். கௌமுதிப் பத்திரிகை, இந்து மக்களின் சில தீய பழக்க வழக்கங்களை, முக்கியமாகக் கைம் பெண்களைத் தீக்குளிப்பித்தலைக் கடிந்து வந்தபடியாலும், இந்துக்களிற் பலர் அதனை ஓர் ஆபத்தான பத்திரிகை என்று நினைத்து அனுதரவு செய்தபடியாலும், பொதுவாகவே மக்கட் கூட்டத்தின் ஆதரவு போதாதிருந்தபடியாலும், 1822ல் மறைந்து, 1823-ஆம் ஆண்டில் ஏப்பிரல் திங்களில் ஆனந்த சந்த்ர முக்கர்ஜி (Ananda Chandra Mookerji) என்பவரின் தலைமையிலே புத்துயிர் பெற்றெழுந்ததாம். பின், அது 1830-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் வாரம் இரு முறையாக வெளி வந்ததாம்.

1822 ன் துவக்கத்திலே "மிராட்-உல்-அக்பர்" ("The Mirat-ul-Akbar") என்ற ஒரு பர்சிய வெளியீடு, அறிஞர் ராம் மோஹன் ராயின் தலைமையில் வெளியாயது. 1822ல் வார வெளியீடுகளாகிய நான்கு தேச மொழிப் பத்திரிகைகள் கல்கத்தாவினின்று வெளி வந்தன. அவற்றுள் முதலிரண்டும் வங்காளிப் பத்திரிகைகளாம். (Viz. "The Sambad Kaumudi" "The Samachar Chandrika," "The Jami-Jahan Numa," and "The Mirat-ul-Akbar") 28-3-1822ல் "ஜாமி ஜஹான் நுமா" (Jami Jahan-Numa) என்ற இந்துஸ்தானி வார வெளியீடு கல்கத்தாவிலே ஏற்பட்டு நடந்து வந்த போதிலும், "மிராட்-உல்-அக்பர்" என்ற பர்சிய பத்திரிகையின் தேவை உணரப்பட்டு வந்ததாகவே தெரிகிறது. அப்பர்சிய வெளியீடு முதன்முதல் 12-4-1822ல் தோன்றியதென்று அறியப்படுகின்றது. ராம் மோஹன் ராய்தான் முதலாவதாக அது போன்ற ஒரு பர்சிய வாரப் புதினத்தாளை வெளியிட்டவராம். அஃது, அவ்வறிஞரின் தலைமையின்கீழ் வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்பட்டது;

நவ நாகரிக மக்கட் பகுதிக்கேற்ற பொருள் மொழிகளைத் துலக்கி வந்தது.

ஆனால், வங்க நாட்டுப் பத்திரிகைகள், இந்தத் தடை அற்ற அச்சுரிமையை ஒரு சிறிது காலந்தான் நுகர்ந்தன. "கல்கத்தா ஜர்னல்" ("The Calcutta Journal") ஆசிரியரான ஜேம்ஸ் சில்க் பக்கிங்காம் (Mr. James Silk Buckingham) என்பவரால் வெளிப்படுத்தப்பட்ட கட்டுரைகள் சட்டத்திற்கு முரணாயிருந்தனவென்று கருதிய அரசினர், மீண்டும் பத்திரிகை உரிமைகளைப் பெரிதும் ஒடுக்கும் வகையை ஆய்ந்து பார்த்துச் செய்திட்டனர். இவ்வுண்மையை, 10-10-1822ல் கல்கத்தா அரசினர் அவையிலே பேய்லி என்ற அறிஞர் ஒருவர் (Mr. W. B. Bayley) ஆற்றிய ஒரு சொற்பொழிவினின்றும் வெள்ளிடை மலைபோலத் தெள்ளிதின் உணரலாம். அச்சொற்பொழிவினின்றும் தேச மொழிப் பத்திரிகைகளுங்கூட ஆங்கிலப் பத்திரிகைகள் அடைந்ததைக்காட்டினும் மிகையான புகழை அடையவில்லை என்பதை அறியலாம். அறிஞர் ராம் மோஹன் ராயின் தலைமையிலே நடைபெற்ற 'மிராட்-உல்-அக்பர்' என்ற பத்திரிகையைப் பற்றி அச்சொற்பெருக்கு விரிவாக எடுத்துரைப்பதுடன் நில்லாமல், அதில் வெளிவந்த சில கட்டுரைகள் சட்ட விலக்கானவை என்றும் விளக்கிக் காட்டுகின்றது.

அரசினருக்கு முதலமைச்சரின் ஆட்சிப் பொறுப்பிலே, அச்சுரிமை அல்லது எழுத்துரிமையால் ஆகும் வெளியீடுகள் விடப்பட்டிருந்தன. 1799-ஆம் ஆண்டு முதற்கொண்டே அவ்வமைச்சரது அங்கீகாரத்தின்மேலேதான் அவைகள் வெளியிட அநுமதிக்கப்பட்டன. இவ்வொடுக்கமான சட்ட வரம்பானது, லார்டு வெல்லெஸ்லி என்னும் அரசப் பிரதிநிதியின் ஆட்சிக் காலத்திலேயே ஏற்படுத்தப்பெற்றது. பத்

திரிகை ஆசிரியர்களின் நடைமுறைக்கும் அரசினரது முதலமைச்சரின் துணைக்குமாக ஏற்ற சட்டதிட்டங்களை அரசினர் அக்காலத்திலேயே வகுத்துக் காட்டியபடி இங்கு யான் எடுத்துக் காட்டவில்லை. [See for details "The Modern Review" for November, 1928; Bengal Public Consultations, Vol. 55, 17 October, 1822, No. 8, Minute. (India Office Records)] அன்றியும், அரசினர் அவைக்களத்தே, இந்தியரின் அச்சுரிமையைப் பெரும்பாலும் அடக்கியொடுக்குமாறு ஜான் ஆதாம், ஜான் பெண்டால் (John Adam, John Fendall) என்னும் இருவரும் நிகழ்த்திய சொற்பெருக்குகளையும் கண்டு ஆய்ந்து ஈண்டு எடுத்துக்காட்டுவது மிகையாமென்று குறிப்பிடுகின்றேன்.

ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் காலத்திற்குப் (1823-ஜனவரி) பிறகு அவருக்குப் பதிலாக வந்த அரசப் பிரதிநிதி ஜான் ஆதாம் (John Adam) என்பவர், 14-3-1823ல் அச்சுரிமையைப் பெரிதும் ஒடுக்கத் தக்க கடுமையான சட்டங்களை வகுத்தனர். அத்தகு கொடிய சட்டங்களும் அவ்வாண்டின் ஏப்பிரல் திங்கள் 4-ஆம் நாளிலே முறையானவை என்று நீதி மகா மன்றத்தினரால் (The Supreme Court) அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பதிவு செய்யப்பட்டன. அப்புதுச் சட்டங்களின் பயனாக அறிஞர் ராம்மோஹன்ராய் அவர்களது தலைமையிலே நடந்து வந்த 'மிராட்-உல்-அக்பர்' பத்திரிகை உடனே நிறுத்தப்பட்டது.

அச்சுரிமையை அரசினர் தொடக்கத்திலிருந்தே தகைந்து வந்தனர். இந்தியாவின் ஆங்கில முதற் பத்திரிகை 29-12-1780ல் பிறந்து, நெடுங்காலம் நிற்கவில்லை. சிறிது காலத்தில் வாரன் ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings) அதனைக் குற்றஞ் சாட்டி வீட்டினர் என்று கண்டோம். அதனையடுத்தாற்போலப் புதிய பத்திரிகைகள் தோன்றின.

அவை ஐரோப்பியரால் நடத்தப்பெற்ற ஆங்கிலப் பத்திரிகைகள் அவை, மட்டு மரியாதையின்றி அரசினரைத் தாக்கி வந்தமையறிந்த லார்டு வெல்லெஸ்லி (Lord Wellesley) 13-5-1799ல் இந்திய அச்சுரிமையை ஒருவாறு ஒடுக்கும் பொருட்டு விதிகள் வகுத்தனர். அதனால், அரசினரின் முதலமைச்சரின் அங்கீகாரத்தின்மேலேதான் பத்திரிகைகளை வெளியிடும்படி நேர்ந்தது. இவ்வடக்கு முறை சுமார் பதினேழாண்டுகள் வரையில் அமுலில் இருந்து வந்தது. இதனை நீக்கிவிட்டு, பத்திராதிபர்கள் சாதாரணமாகக் கவனித்துக் கீழ்ப்படியத் தக்க சட்டங்களை 19-9-1818ல் மார்க்விஸ் ஆப் ஹேஸ்டிங்ஸ் (Marquis of Hastings) வகுத்தனர். அவ்வடக்கு முறை அச்சுச் சட்டம் ரத்தானதன் பயனாக இந்தியாவெங்கும் கொண்டாட்டத்துடன் நில்லாமல், கல்கத்தாவிலே ஆங்கிலத்திலும் தேச மொழிகளிலும் பற்பல பத்திரிகைகள் தோன்றலாயின.

ஜாடுநாத்துச் சர்க்கார் (Jadunath Sirkar) என்னும் இந்திய அறிஞர் வெளியிட்ட "இந்தியா த்ரூ தி ஏஜெஸ்" ("India through the ages") என்னும் ஆங்கில நூலின் 28-ஆம் பக்கத்தில் கிழக்கிந்தியா கம்பெனியாரால் பத்திரிகைகள் கடினமான கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டு இருந்தனவென்று எழுதப்பட்டிருக்கிறது. ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் இடத்திலமர்ந்த ஜான் ஆதாம் (John Adam) 14-3-1823ல் பத்திரிகை வாய்ப்பூட்டுச் சட்டங்கள் உண்டு பண்ணியதை நினைவு கூர்க. 1794, 1803, 1823 இவ்வாண்டுகளின் அரசப் பிரதிநிதிகளால் நான்கு ஆங்கிலப் பத்திரிகாசிரியர் இந்தியாவினின்று நாடு கடத்தப்பட்டனராம். 1823-ஆம் ஆண்டின் வங்க நாட்டுச் சட்டங்களும், 1825, 1827 இவ்வாண்டுகளின் பம்பாய்ச் சட்டங்களும் பத்திரிகை உரிமையை ஒடுக்கியதற்கு எடுத்துக் காட்டுக்கள்

ஆவனவாம். பிரஞ்சு யுத்தங்களின் காலத்தில் பகைவருக்குச் செய்தியெட்டுவதைத் தடுக்கும்பொருட்டு ஏற்படுத்தப் பட்ட அச்சுரிமைத் தடைகள் 1818ல் ஹேஸ்டிங்ஸ் பிரபுவால் வாபீஸ் வாங்கப்பெற்று அவற்றினிடத்தே பத்தி ராதிபரின் பொது நடைமுறைக்கேற்ற நெறிகள் அமைக்கப் பெற்றன. ஆனால், அவருக்குப் பின் வந்த ஜான் ஆதாம் (John Adam) 1823ல் அச்சுரிமையைக் கடுமையான சட்டங்களால் பெரிதும் ஒடுக்கியதற்கேற்ப, "கல்கத்தா ஜர் னல்" பத்திராசிரியரையும் (The editor of "The Calcutta Journal") நாடு கடத்திவிட்டனர். பின்பு வில்லியம் பெண்டிங்கு பிரபு (Lord William Bentinck) தமது காலத்திலே பத்திரிகை உரிமை திட்டமான கட்டுப்பாட்டுக் குள் வைக்கப்பட வேண்டுவதென்பதை உறுதிப்படுத்திய வராய்ப் பத்திரிகைத் தொழிலாளர்க்குச் சாதாரணமான வழிகளில் உரிமை வழங்கி வந்தார். கிழக்கிந்தியா கம் பெனி உத்தியோகஸ்தருள் திறமைசாலிகளில் ஒருவரான சர் சார்லெஸ் மெட்கால்ப் (Sir Charles Metcalfe) என்பவர், பெண்டிங்கு பிரபுவுக்குப் பதிலி வரும் வரை யில் அவ்வேலையிலமர்ந்திருந்தார். அக்குறுகிய காலம் இந்தியாவின் அச்சுரிமையைப் பெரிதும் வழங்கிப் பாது காத்த வகையிலே பேர் போனது. சர் சார்லஸ் மெட் கால்ப், இந்தியரின் முழு உரிமையிலே நம்பிக்கையும் காவ லும் பூண்டிருந்த பெருந்தகைமையால், கல்கத்தாவிற்கும், ஐரோப்பிய பத்திராதிபருக்கும் குறிப்பாக அமைத்த உரி மையை, எல்லா வகையான அச்சுரிமைத் தடைகளையும் எடுத்துவிட்டு, இந்தியா முழுதுக்கும் பொருந்திய ஓர் அச் சுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் வழியே வழங்கினார். 1835-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலே அவர் வகுத் திட்ட அச்சட்டத்தினால் இந்திய அச்சுரிமைக்குப் பெரி

தும் இடம் வாய்த்தது. இந்தியருக்கு அக்காலத்திலே ஆங்கிலத்தில் சொந்தப் பத்திரிகை ஒன்றுதானும் இருக்கவில்லை; தேச மொழிப் பத்திரிகைகள் மட்டும் இருந்தன. அவையும் இலக்கியப் பத்திரிகைகளாய் இருந்தனவே ஒழிய, அரசியற் பொருள் மொழிகளைப் பெரிதும் தழுவவில்லை.

1. சுதேசிகளின் ஆங்கிலப் பத்திரிகைகள்

1853-ஆம் ஆண்டிலே மக்கட் கூட்டத்தின் உரிமையைக் காப்பாற்றுதற்காக இந்தியர் முதன்முதல் உரமுடன் கிளர்ச்சி செய்தனர்; அரசியல் உரிமைக்கும் ஆக்கந் தேட முயன்றனர். இதன் சார்பாகச் சொற்பெருக்காற்றிய முதல் இந்தியர் ராம் கோபால் கோஷ் (Ram Gopal Ghosh) என்பவராவர். நிலைமை இவ்வாறு மாறி வர, 1853ல் சுதேச இந்தியரின் முதல் ஆங்கிலப் பத்திரிகை பிறந்தது. அதன் பேர் "ஹிந்து பேட்ரியட்டு" ("The Hindu Patriot"). அதனைத் தொடங்கியவர் கிரிச் சந்த்ர கோஷ் (Girish Chandra Ghosh). அவருக்கு உதவியாசிரியராகவும் அவருக்குப்பின் ஆசிரியரேயாகவும் வந்தவர் ஹரிச் சந்த்ர முக்கர்ஜி (Harish Chandra Mukherji) ஆவர். இதற்கு முன் கிரிச் சந்த்ர கோஷ் என்பவரும் அவரது உடன் பிறந்தவரும் 1851-ஆம் ஆண்டிலே "பெங்கால் ரெகார்டர்" ("The Bengal Recorder") என்ற பத்திரிகையை ஆரம்பித்திருந்தனர். ஆனால், அஃது அடுத்த ஆண்டிலே நின்றுவிட்டது. ஆகலின், அது சுதேச இந்தியரின் முதல் ஆங்கிலப் பத்திரிகையென்னும் கணக்கிலே சேர்ந்தும் சேராமற் போயிற்றென்க. ஆனால், அப்பத்திரிகைகளெல்லாம் கல்கத்தாவில்மட்டும் பரவியிருந்தன. அக்காலத்திலே கல்வியாளரின் தொகை மிகவும் குறுகியிருந்தமையின், பத்திரிகை படிப்போரின் தொகையும் அவ்வாறே குறுகியிருந்தது. அப் பத்திரிகைகளும் காலந் தப்பியே வெளி வந்தன. அவற்றின்

சொந்தக்காரர் ஆண்மையுடனே அவற்றை நடத்தி வந்துங் கூட, ஆதரிப்பவரின் தொகைக் குறுக்கத்தால், அன்னவர்க்குப் பெருத்த சேதமே விளைந்தது.

சிப்பாய்க் கலகத்தின் பின் (1860-1862) வங்க நாட்டுக் குடித்தனக்காரர் நீலம் பயிரிடும் ஐரோப்பியரை எதிர்த்துக் குழப்பம் செய்தனர். அக்காலை ஐரோப்பியருடன் சேர்ந்து கொண்டு ஹரிச்சந்த்ர முக்கர்ஜி முதலிய இந்திய பத்திரிகை ஆசிரியர்கள் அக்குழப்பத்தை வெற்றியுடன் அடக்கினார்கள். இவ்வகையிலும் இந்திய பத்திரிகைகள் நாட்டின் நலத்திற்கு உழைத்து வந்தன.

2. முடியாட்சியின்கீழ்ப் பத்திரிகைகள்

1877-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் விக்டோரியா அரசியார் இந்தியா சக்கரவர்த்தினியாரானார். இந்தியரின் அரசியல் உரிமையை முன்னிட்டு வந்த கிளர்ச்சி, அரசப் பிரதிநிதி லிட்டன் பிரபுவின் (Lord Lytton) காலத்தில் (1876—1879) பன்மடங்கு ஆக்கம் பெற்றது. லிட்டன் பிரபு 1878ல் ஒரு சட்டம் இயற்றி (The Vernacular Press Act in 1878) இந்தியரின் அச்சுரிமையைக் குறுக்கினர். அச்சட்டத்தால் சுதேச மொழிப் பத்திரிகையின் வழி, மக்கட்கூட்டத்தின் கருமத்தைத் தாராளமாக வெளியிடும் உரிமை மிகப் பெரிதும் குறுக்கப்பட்டது. ஆயுதச் சட்டமொன்றும் (The Arms Act) வகுக்கப்பட்டது. அச்சட்டத்தால் இந்தியர் உத்தரவின்றித் துப்பாக்கி முதலிய ஆயுதங்கள் வைத்துக்கொள்ளக்கூடாது என்னும் நிபந்தனை ஏற்பட்டது..

இவ்விரு சட்டங்களும் இந்தியா முழுதும் சீற்றத்துடன் கண்டிக்கப்பெற்றன. அக்காலையிலேதான் உயர் வகுப்பினர் நலத்திலே ஊன்றிப் பாடு பட்டு வந்த கிருஷ்ண தாஸ் பால் என்பவரது 'ஹிந்து பேட்ரியட்' (The Hindu Pat-

riot of Krishna Das Pal) பத்திரிகையின் எதிரியாக மக்கட் கூட்டத்தின் தேசிய உரிமைக்குப் பாடுபடும் நோக்கத்தோடு சிசிர் குமார் கோஷும் அவரது உடன் பிறந்தவர்களும் மிக்க முயற்சியுடனே 'அமிர்த பஜார் பத்திரிகை'யைத் ("The Amirta Bazaar Patrika")தோற்றுவித்தார்கள். அப்பத்திரிகை தேசிய முன்னேற்றத்திற்காக இந்நாளும் பெருந்தொண்டாற்றி வருகின்ற உண்மையை அறியாத இந்திய பத்திரிகாசிரியரும் உளரோ! அதன் பின்னே, இந்தியாவுக்கு 'அப்பன்' என்று புகழப்பட்ட அரசப் பிரதிநிதி ரிப்பன் பிரபுவின் (Lord Ripon) காலத்திலே (1882ல்), லிட்டன் பிரபுவால் ஏற்படுத்தப்பட்ட அச்சுச்சட்டம் இரத்துச் செய்யப்பட்டது. அந்த ரத்து அச்சுச் சட்டத்தால் இந்தியரின் குறுக்கப்பட்ட அச்சுரிமை முன்போல விரிவுற்றது. (The Vernacular Press Act which had been passed by Lord Lytton in 1878, was repealed by Lord Ripon in 1882.)

கடுமையான சட்டங்களும் தேசீய தாகமும்

ரிப்பன் பிரபுவின் ஆட்சியிலே "இல்பேர்ட்டு மசோதா"வை (Ilbert Bill - 1883) இந்தியாவிலுள்ள பத்திரிகாசிரியர்கள் உட்பட்ட எல்லா ஐரோப்பியரும் இந்திய ஐரோப்பியரும் தங்கள் வகுப்புரிமைகளைக் காப்பாற்றும் பொருட்டு ஒன்று கூடி எதிர்த்து வந்தனர். இதனால், சுதேச இந்தியர்களுடைய உரிமை நலம் காப்பாற்றப்பட வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. எனவே, இவர்கள் தங்கள் அரசியல் உரிமைகளுக்காக, வெள்ளையரின் வழியைப் பின்பற்றி, அற நெறியிலே அரசினருடன் போராட விரும்பி முன் வந்தார்கள். இவ்விருப்பத்தால், 1887-ஆம் ஆண்டிலே, 'இந்திய தேசீய மகா சங்கம்' (The

Indian National Congress) நிறுவப் பெற்றது. அந்நாள் முதல் இந்நாள் வரை அரசியல் முதலாகவுள்ள தேசிய முன்னேற்றத் துறைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றின. தோன்றிய பின், அத்துறைகள், பொதுவாக உலோகமானிய பால கங்காதர திலகரைப் போன்ற பல இந்திய தியாக வீரர்களாலும், சிறப்பாகத் தன்னலமற்ற மகாத்துமா காந்தியின் தேசியத் தியாகத் தொண்டினாலும் சிறிது சிறிதாகத் தொழிற்பட்டு வருகின்றன. இந்தியரின் இவ்விழிப்பு நிலையானது, பத்திரிகைத் தொழில் துறையிலும் புகுந்தது. புகவும், இந்திய பத்திரிகைத் தொழில் தலை நிமிர்ந்து நடந்தது.

ஆனால், எல்ஜின் பிரபு தம் காலத்தில் (1894–1898) பத்திரிகை உரிமையைக் குறைப்பதற்கான சட்ட திட்டங்களை ஏற்படுத்தினர். மாஜிஸ்திரேட்டுகள் பத்திரிகாசிரியர்களை நன்னடக்கைக்காகக் கட்டுப்படுத்தவும், அவ்வாசிரியர்கள் ரொக்க ஜாமீன் கொடாவிடின் அவர்களைத் தண்டிக்கவும் அதிகாரம் பெற்றார்கள். இச்சட்டங்களுக்குப் பல பத்திரிகாசிரியர்கள் இலக்காயினார்கள்; பால கங்காதர திலகர் முதலிய தலைவர்களும் இலக்கானார்கள். பின்பு, மிண்டோ பிரபு தமது காலத்தில் (1905–1910) பத்திரிகைகளுக்கும், பொது ஜனக் கூட்டங்களுக்கும், தேசாபிமானிகளுக்கும் இருந்த உரிமைகளைக் குறைப்பதற்கான சட்டங்களை வகுத்தனர். சிறந்த தேசாபிமானியாகிய லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்டார் நாட்டிற் குழப்பங்கள் நிகழ்ந்தன. பின்பு, செம்ஸ்பார்டு பிரபு தமது காலத்தில் (1916–1920) மக்கள் கூட்டங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் உரிய உரிமைகளைக் குறைக்கத் தகுந்த (ரௌலேட்டு ஆக்டு முதலிய) கடுமையான சட்டங்களை உண்டு பண்ணினர். அச்சட்டங்களின் பயனாகப் பல பத்திரிகைகள் துன்புற்றன. மக்களின் தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டார்கள். தேசத்தில் அமைதி

இன்மை மிக்கது. அச்சுரிமை முதலிய தேசீய உரிமைகளுக்குப் பின்னும் இடையூறுகள் ஏற்பட்டு வந்தன; வருகின்றன; இனியும் வரும். பத்திரிகை உரிமையைப் பாதுகாப்பதிற் காங்கிரஸ் காரியக் (கமிட்டி) கூட்டம் கருத்துடன் ஆற்றியுள்ள பணியை இங்கு நினைவோமாக.

இந்தியரின் தேசீய விடாயைத் தணிவிக்கும் முயற்சியிலே பல பத்திரிகைகள் ஈடுபட்டு வந்ததை உணர்ந்த அரசினர், 1910-ஆம் ஆண்டில் பத்திரிகைச் சட்டம் ஏற்படுத்த நினைத்தனர். அப்போது பண்டித மாளவியாவும், சர். பூபேந்திரநாத்து போசும் அதனை எதிர்த்தனர். ஆயினும், அரசினர் எவ்வித எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், சட்டமாக்கினர். அச்சட்டத்தால் இந்திய பத்திரிகை உரிமை பெரிதும் பறிக்கப்பட்டது. அதன் பின், 1930ல் காந்தியடிகளின் தலைமையில் இந்தியாவில் சட்ட மறுப்பியக்கம் தோன்றி, மக்கள் எல்லாம் கண் விழித்ததும், அரசினர் போலீசாரைக் கொண்டு தடியடி அடிக்கவும், தலைவர்களை அடக்கு முறையைக் கையாண்டு கைது செய்யவும், ஏற்பாடு செய்துவிட்டனர். இறுதியில், பத்திரிகைகளை ஒடுக்கும்பொருட்டுப் பத்திரிகை அவசரச் சட்டத்தைத் (1930ல்) திரும்பவும் புதுப்பித்துவிட்டனர். அப்படியிருந்தும், அவ்வியக்கம் வெற்றி அடைந்தது. அதன் பயனாகவே, 1931ல் காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. அவ்வொப்பந்தத்தின் பயனாகப் பழைய அவசரச் சட்டங்கள் ஒழிந்தன. (6-3-1931, புது டில்லி, சர்க்கார் கெஜெட்டின் அறிக்கையின்படி) அரசப் பிரதிநிதி இர்வின் பிரபு, இந்திய சர்க்கார் சட்டத்தின் 72-ஆம் பிரிவின்படி தமக்குள்ள விசேஷ அதிகாரத்தால் ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தார். அதற்கு 1931-ஆம் ஆண்டின் இரத்து அவசரச் சட்டமென்பது பேர். அச்சட்டத்தால், 1930-ஆம் ஆண்டு சட்ட விரோத ஸ்தாபனங்கள் அவசரச்சட்டம், பத்

திரிகை அவசரச் சட்டம், வரி மறுப்புத் தடை அவசரச் சட்டம் இவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

1930-ஆம் ஆண்டின் பத்திரிகை அவசரச் சட்டம் 1931-ஆம்ஆண்டிலே இரத்துச் செய்யப்பட்டுங்கூட, இந்தியா அரசினர், பத்திரிகை உரிமைகளைப் பெரிதும் பறித்தற்காக இரண்டு மசோதாக்களின் மூலம் முயன்றனர். அவற்றுள், புதிய அச்சு மசோதா ஒன்று; புதிய பத்திரிகை மசோதா மற்றொன்று. 1930ல் அரசினர் புதிய அச்சு மசோதாவைக் கொண்டு வந்தனர். இந்தியரின் பலத்த எதிர்ப்பைக் கண்ட அரசினர், 7-9-1931ல், இந்தியா சட்டசபைச் சிம்லாக் கூட்டத்திலே அதனை வாபீஸ் வாங்க நேர்ந்தது. அதற்கு முன்பே புதிய பத்திரிகை மசோதாவைச் சர்க்காரார் கொணர்ந்திருந்தனர். இதனையும் இந்தியர் பலமாகக் கண்டித்தனர். இம் மசோதாவைப்பற்றி இந்தியாவின் எண்ணம் யாதென்பதைப் பத்திரிகைத் தொழிலையே தமது சிறந்த வாழ்க்கையாகக் கொண்டு வளர்த்து வந்த திரு. கே. சி. ராய் இந்தியா சட்டசபையிலே இம்மசோதாவை எதிர்க்கும் பொருட்டுக் காட்டிய பேராற்றலினின்றும் அறிந்துகொள்ளலாம். அவர் இந்திய பத்திரிகைகளின் உரிமைகளை இறுகப் பிணைக்க நேர்ந்த புதிய பத்திரிகை மசோதாவை எதிர்த்து, அவ்வுரிமைகளைக் காப்பாற்றுதற்காகவே தமக்கேற்பட்டிருந்த நோயினையும் பொருட்படுத்தாதவராய்ச் சட்ட அவைக்களத்தே அமர்ந்திருந்தனர். பின்னர், அவர் அவ்விடத்தே மயங்கி வீழ்ந்ததனால், அவரை டோலியில் தூக்கிச் செல்ல நேர்ந்தது. அம்மாலையிலேயே அவர் உயிர் துறந்தனர். இந்நிகழ்ச்சியைவிடப் பத்திரிகை உரிமைப் பாதுகாப்பிலே பூண்டிருக்கும் இந்திய பெருமக்களின் தெள்ளத்தெளிந்த உள்ளெண்ணத்தை மெய்ப்பித்தற்குரிய வேறு சான்ற சான்றுகள் வாய்ப்பனவாமோ? உண்மை இஃதாகலின், மக்களின் பேச்சு,

எழுத்து, கூட்டம் அல்லது கூட்டம் என்னும் உரிமைகளுக்கு ஊறு விளைப்பனவாகிய பத்திரிகை மசோதா போன்ற அடக்கு முறைகளைச் சர்க்கார் நிறைவேற்றக் கூடாதென்க.

3-10-1931ல் இந்தியா சட்ட சபையிலே புதிய பத்திரிகை மசோதா, பலத்த எதிர்ப்பினிடையே நிறைவேறியது. இந்தியா சட்ட சபை அங்கத்தினர் பலரும் புரிந்த புதிய பத்திரிகை மசோதாக் கண்டனங்களைச் சர்க்காரார் சிறிதும் பொருட்படுத்தாமல், மசோதாவை நிறைவேற்றிவிட்டனர். இம்மசோதாவின்படி புதிய பிரமாண வாக்கு மூலம் அல்லது யாதாஸ்து (Declaration) செய்துகொள்ள வேண்டியிருப்பின், எல்லா அச்சுக் கூடங்களும் பத்திரிகைகளும் ஜாமீன் தொகை கட்டவேண்டி இருக்கும். பத்திரிகையின் உரிமைக்கு இம்மசோதா மிகப் பெரிய தடையேற்படுத்துவதாக உளது. பறி முதல் செய்வதென்ற கொள்கையால் பத்திரிகைகளின் உரிமைக்கு மிக்க தீங்கு விளையும். அதனால், செய்திகளைக்கூட வெளியிட முடியாது. மக்கள் எண்ணங்களைத் தாராளமாக வெளியிடும் உரிமையைக் காந்தி-இர்வின் ஒப்பந்தம் கண்கூடாக மீண்டும் தந்தது. இம்மசோதாவின் நிறைவேற்றம், அவ்வொப்பந்தத்தை மீறுவதேயாம். எனவே 1931-ஆம் ஆண்டிலும் சட்டத்தின் வழியாக அரசினர் இந்திய பத்திரிகை உரிமையைப் பெரிதும் கட்டுப்படுத்தியவாற்றை உணர்க.

பத்திரிகைகளின் தன்மை வன்மைகளையும் உயர் நிலையினையும் பொறுப்பினையும் வரையறுக்கக் கூடிய பொறுப்பை மக்கட் கூட்டத்திற்கே விட்டுவிடுதல் சீரிய அரசியல் முறை அல்லவோ? மக்கள் மனப்பான்மையினையும் அரசியல் உண்மைகளையும் நன்குணர்ந்த பிரிட்டிஷ் அரசினர், காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் பின் தேசமெங்கும் புதிய பத்திரிகைகள் மிகுதியாகத் தோன்றி வருதல் கண்டு, கலங்க வேண்டுவ

தில்லை. இந்தியரின் கருத்திற்கு நேர் முரணாகச் சர்க்காரார் நிறைவேற்றிய புதிய பத்திரிகை மசோதாவைப் பற்றி 5-10-31ல் "தமிழ் நாடு" தினசரி 6-ஆம் பக்கம் 'அச்சுச் சட்டம்' என்ற தலைப்பின் கீழே தரும் ஆராய்ச்சி வீரமொழிகளை இந்திய பத்திரிகைத் தொழிலாளர் யாவரும் பசுமரத் தாணிபோல மனத்திற் பதிக்கக் கடவர். அம்மொழிகள் வருமாறு:—

"அச்சுச் சட்டம் இந்திய சட்ட சபையில் நிறைவேறி விட்டது. அதனால் உண்டாகப் போகும் துன்பங்களைக் குறித்து மறுபடியும் நாம் எழுத வேண்டுவதில்லை. சர் அப்துர் ரகீம் சாகிபும், சர் ஹரிசிங்கவரும், அச்சுச் சட்டத்தை எதிர்த்துப் பேசியிருப்பது ஆணித்தரமாக இருப்பதைக் கண்டு, ஒருவாறு நாம் ஆறுதலடைகிறோம். அச்சுச் சட்டத்தின் ஷரத்துக்களைப் படிக்கும்போது கருட புராணம் நமது ஞாபகத்திற்கு வருகிறது. உலக மக்களின் பாவ புண்ணியங்களை விசாரித்து நீதி வழங்குவதற்காக எமதர்ம ராஜாவுக்கு நீதிஸ்தலம் ஒன்றுண்டு. எமதர்ம ராஜனுடைய தலைக்கு மேல் மயிர் முனையில் கற்பாறை ஒன்று தொங்குகின்றது. சிங்காசனத்திற்கு அடியில் நெருப்பு ஆறு ஒன்று ஓடுகின்றது. தனது நீதி பரிபாலனத்தில் எள்ளளவு எமதர்மன் பிசகினால், கற்பாறை அறுந்து விழுந்து, அவனை நெருப்பாற்றில் ஆழ்த்திவிடும் என்று கருட புராணம் கூறுகின்றது. இந்திய பத்திராதிபர்களின் நிலைமையும், கருட புராணக் கதைக்கு ஒப்பாகிவிட்டது. அச்சுச் சட்டத்தின்படி, எப்பக்கம் திரும்பினாலும் பத்திராதிபர்களுக்கு ஆபத்துக்கள் காத்துக்கொண்டிருக்கின்றன. சர்க்காருடைய சண்டித்தனத்தை இனிக் கண்டிப்பதிலும் பிரயோஜனமில்லை. தேசம் முழுதும் எதிர்த்ததையும் பொருட்படுத்தாமல் அச்சுச் சட்டத்தை நிறைவேற்றிய சர்க்காருக்கு, என்ன சொல்லி

யும் பயனில்லை. ஆனால், ஒரு விஷயத்தைத் தெளிவாகக் கூறி விட விரும்புகிறோம்: இந்திய பத்திரிகைகளுக்கும் அதிகார வர்க்கத்திற்கும் இடையில் ஆரம்பித்துள்ள இப்போராட்டத்தில், முடிவில் பத்திராதிபர்களே வெற்றி பெறுவார்களென்பது நிச்சயம். அச்சுச் சட்டத்தினால் அநேக அச்சுக் கூடங்களும், பத்திரிகைகளும் அடிபட்டுப் போகலாம். ஆயினும், சர்க்காரார் எண்ணம் ஈடேறாது. தேச பக்தியும், தேசியத் துணிச்சலும் ஒரு நாளும் ஒடுங்கா. அவையுள்ள வரையில், அச்சுச்சட்டம் வெற்றி பெற முடியாது. கேவலம் அச்சுச் சட்டத்திற்குப் பயந்து, ஆண்மை இழந்து, எந்தத் தேசியப் பத்திரிகையும், முன் வைத்த காலைப் பின் வைக்கப் போவதில்லை. பத்திராதிபர்களுக்கு வரப்போகும் துன்பங்களைக்கண்டு நமக்கு வருத்தமுண்டாகிறதெனினும், இந்திய பத்திரிகைகளை அழிக்கும் சக்தி யாருக்குமில்லையென்பதை உணர்ந்து மன உறுதி அடைகிறோம்.''

1780-ஆம் ஆண்டிலே பிறந்த இந்திய பத்திரிகைத் தொழில், இதுகாறும் எடுத்துக் காட்டியவற்றால் 1931-ஆம் ஆண்டு வரையில் பற்பல இடையூறுகளிடையே வளர்ந்து வந்ததை அறிகிறோம். இவ்வாராய்ச்சியால், இந்தியாவின் பத்திரிகைத் தொழில் வளர்ச்சியை அரசினர் முளையிலிருந்தே ஒடுக்க முயன்று வந்தவாற்றைத் தெளிவாக அறியலாம். அப்படியிருந்தும், இந்திய பத்திரிகைத் தொழில், அரசியற் சட்ட திட்ட முட்டுக் கட்டைகளாகிய கடின கண்டங்களுக்கெல்லாம் உயிர் தப்பிப் பிழைத்துளது.

2. முக்கியமான இந்திய பத்திரிகைகள்

கண்ணேறு, நாவேறு, சட்ட திட்டவேறு எனப்பட்ட ஒரு சில ஏறுகளாலே ஏறுண்டும் கூறுண்டும், தத்துண்டும் மொத்துண்டும், சிறையுண்டும் கறையுண்டும் வளர்ந்து வந்திருந்த போதிலும், இந்திய பத்திரிகைத் தொழில், நிகழும் இருபதாம் நூற்றுண்டின் துவக்கத்திலிருந்து படிப்படியாக மேனிலையுற்று வருவதற்காக இந்தியர் மகிழ்வுறுதிருக்க முடியாது. இத்தொழில், அச்சுரிமையோடு கூடிப் பரபரப்புடன் வளர்ச்சியுறுவதை அரசினர், அரசியற் பொருளைப் பொறுத்த மட்டில், பன்முறையும் தடை செய்து வருவதற்காகக் கவற்சியுறுதிருக்கவும் முடியாது. நிலைமை இப்படி இருந்த போதிலும், உள்ளதைக் கொண்டு இன்புறும் நிலையிலே வைத்துப் பேசின், இந்திய பத்திரிகைத் தொழில் வளர்ச்சி தற்போழ்து எவ்வளவோ சிறப்புற்றுளது என்னலாம். இந்திய பத்திரிகைகள், தொகையினும் வகையினும், முறையினும் நிறையினும், மெதுவாகவே செழித்து வளர்ந்து வருகின்றன. இச்சிறப்பு வளர்ச்சியினுல் இங்கிலாந்தின் தினசரிகளோடு பெரும்பாலும் ஒப்பிடக்கூடிய இந்திய தினசரிகளும் பிற வெளியீடுகளும் உள்ளன. அவற்றுள் "ஹிந்து" (The Hindu), "இந்தியன் டெய்லி மெய்ல்" (The Indian Daily Mail), "ஸ்டேட்ஸ்மன்" (The Statesman), "சுதேச மித்திரன்" (The Swadesamitran), "தமிழ் நாடு" ("Tamil Nadu") "ஆந்திர பத்ரிகா" முதலியன தினசரிகளாம். உயர்தரத் திங்கள் வெளியீடுகளில் "மாடர்ன் ரிவ்யூ" ("The Modern Review"), "செந்தமிழ்ச் செல்வி" முதலியனவும், வாரப் பதிப்புக்களில் நடுவு நிலையோடு கூடிய தூய்மையிலே ஈடும் எடுப்புமற்ற, ஆனுல் மறைந்துபோன "யங் இந்தியா" ("The Young India")வும், "நவசக்தி"யும்,

இலக்கியப் பெருமையைப் பாதுகாத்து வரும் "லோகோப காரி" "இந்து நேசன்" "கலாநிலயம்" முதலியனவும் இங்கே குறிப்பிடத் தக்கன.

(a) வங்காள மாகாணம்

இனி, இந்தியாவின் முக்கியப்பகுதிகளிலுள்ள முக்கிய மான சில பத்திரிகைகளைச் சுட்டிக் குறிப்பிடும் வகையிலே இந்திய பத்திரிகைத் தொழில் வளர்ச்சி காணத்தகும். "ஹிக்கீஸ் பெங்கால் கெஜேட்டு" என்ற இந்தியாவின் முதற் பத்திரிகையைத் தோற்றுவித்த நாடு வங்காளம் ஆகலின், அவ் வங்காள மாகாணத்திலுள்ள சில குறிப்பிட்ட பத்திரிகை களைப் பற்றிப் பேசியபின், ஏனையவும் எடுத்துக்கொள்ளப் படும். முன்னேற்றத் துறைகள் எல்லாவற்றினும் முன்னேற்ற முற்று விளங்கும் வங்க நாட்டிற்கு இந்திய பத்திரிகைத் தொழில் பிறந்த பெருமை மட்டுமன்றி, சுதேச மொழிப் பத்திரிகைகளின் தொகை ஆங்கிலப் பத்திரிகைகளைக்காட்டி னும் மிக்குற்றிருக்கும் பெருமையும் உளது.

கல்கத்தாவில் உள்ள தினசரிகளிலே அதிக சந்தாதார் களை உடையதும், முன்னணியில் நிற்பதும், படக் காட்சிக ளோடு கூடியதும், தற்கால நவீன முறையில் நடத்தப்படுவ தும், "ஸ்டேட்ஸ்மன்" ("The Statesman") பத்திரிகை ஆகும். பத்திரிகைத் தொழில் ஆற்றலும் அநுபவமும் நிரம் பிய வாட்சன் (Mr. Watson) என்னும் ஆசிரியரால் அது பெரிதும் முன்னேறியுளது. "இங்கிலீஷ்மன்" என்பதும் ஒரு தினசரியாம். அஃது, ஆங்கிலோ இந்திய மக்கட் கூட்டத் தின் பெரும்பகுதியினரால்தழுவப்படுகின்றது.காலஞ்சென்ற C. R. தாஸர் என்னும் வங்கச் சிங்கத்தால் துவக்கப்பட்ட நல்ல பத்திரிகை "பார்வர்டு"("The Forward")என்பதாம். அது, சுயராஜ்யக் கட்சியைப் பெரிதும் தழுவுவதாம். திரு B. சக்கரவர்த்தி என்பவரால் நடத்தப்படும் "பெங்காளி" (The

Bengalee) என்னும் பத்திரிகை முன்னே வங்க நாட்டின் தாராளக் கட்சியைச் சார்ந்திருந்தது; சில ஆண்டுகளாகத் தேசியக் கட்சியில் இறங்கித் திறம்பட உழைக்கின்றது. அப் பத்திரிகைக்கு ஓர் உயரிய இதழாசிரியர் கூட்டமும் (Editorial Board) உளது. அஃது, அதன் ஆசிரியரால் இந்தியாவுக்கு நல்ல எதிர் காலப் பயனை ஊட்டும் என்று நம்பப் படுகிறது. தேசிய உரிமைகளைக் காப்பதற்கென்றே தோற்றுவிக்கப்பட்ட "அமிர்தபஜார் பத்திரிகை" ("The Amirta Bazaar Patrika") எப்போழ்தும்போலப் புகழுடன் உலாவி வருகின்றது. அது சுமார் 60 ஆண்டுகளாக மக்கட் கூட்டத்திற்கு அருந்தொண்டு ஆற்றி வருகின்றது. திறம்பட நடத்தப்படும் இந்திய பத்திரிகைகளுள் "ரிவ்யூ" ("The Review") என்பதும் ஒன்று. அஃது இந்தியாவின் மேதக்க அறிவு நுணுக்க வாழ்க்கையை எடுத்துக் காட்டுவதாகும். அதன்கண் எல்லாப்படியானும் தனிச் சிறப்புற்ற கட்டுரைகள் மிளிரக் காணலாம். கல்கத்தாவில் வெளியாகும் முதல் தரத் திங்கள் வெளியீடு 'மாடர்ன் ரிவ்யூ' ("The Modern Review"). அது மேனுடும் கீழ்நாடும் கொண்டாடும் முறையிலே வெகு அழகாக நடத்தப்படுகின்றது. அஃது இந்தியாவின் தன்னரசு வேட்கையோடு முன்னணியில் நின்று தேசத் தொண்டாற்றும் பத்திரிகைகளுள் மிகமிகச் சிறந்ததே. அதன் ஆசிரியர் அறிஞர் எம். இராமானந்த சட்டர்ஜி (Mr. M. Ramananda Chatterjee, M. A.) ஆவர். இவர் பத்திரிகைத் தொழில் திறமையும், நுட்பமும், பரந்த நோக்கும், அரசியல் அறிவும் வளம்பட வாய்ந்தவர். இவரது தலைமையிலே "மாடர்ன் ரிவ்யூ" உயர் தரத்தில் உயர் தரமான திங்கள் வெளியீடு என்னும் பேரை உலகமெங்கும் நாட்டிவிட்டது. இவையன்றி, வியாபாரம், துறைமுகம், கைத்தொழில், இயந்திர சம்பந்தம் ஆகிய இவற்றுக்குழைக்கும் வார வெளியீடு

களும் உள. அவற்றுட் சிறந்தவை "காபிடல்" ("The Capital") "காமேர்ஸ்" ("The Commerce") என்பவையே. "காபிடல்" கைத்தொழிற் பத்திரிகை மாத்திரமன்று. அஃது, அவ்வக்கால அரசியற் பொருண்மொழிகளையும் சிறுபான்மை தாங்கி வரும். அதன் நுணுக்கமான அறிவு சான்ற குறிப்புரைகள் வேறு இந்திய பத்திரிகைகளால் எடுத்துக் காட்டப்படுவதும் உண்டு. இயந்திர சம்பந்த பரிபாஷைப் பொருண்மொழிகளோடு வெளி வரும் பத்திரிகை ஒன்றேதான். அதன் பேர் "இந்தியன் அண்டு ஈஸ்டர்ன் இஞ்சினியர்" (The Indian and Eastern Engineer) என்பதாகும். அப்பத்திரிகை, ஓர் உயர்தர முறையிலே நடைபெறுவதாம்.

(b) பம்பாய் மாகாணம்

இனி, பம்பாய் மாகாணப் பத்திரிகைகள் சிலவற்றைப் பற்றிக் குறிப்பிடுவேனுக. 1822-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 10-ஆம் தேதியில் அறிஞர் பேய்லி (W.B. Bayley) என்பவர் கல்கத்தா சட்ட சபையிலே பேசியதிலிருந்து அக்காலத்திலே பம்பாயில் சுதேச மொழியிலே ஒரு பத்திரிகை தோன்றியிருந்ததாகத் தெரிகிறது. தற்போழ்துள்ள ஆங்கில தினசரிப் பத்திரிகைகளிலே தலைமை பெற்று விளங்குவது "டைம்ஸ் ஆப் இந்தியா" (The Times of India) ஆகும். அஃது எல்லா மரபினருள்ளும் உலாவிவருகின்றது. ஒரு சில ஆங்கிலோ-இந்திய பத்திரிகைகள் வெள்ளை கறுப்பு என்னும் நிற வேற்றுமையால் பிணிப்புண்டு, வெள்ளையை ஒட்டியும், கறுப்பை வெட்டியும் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு ஊறு விளைத்து வருகின்றன. ஆனல், "டைம்ஸ் ஆப் இந்தியா"வோ, அவ்வாறன்றி, இந்திய அரசியல் முன்னேற்றத்திற்கும், இயன்ற மட்டும் முன்னின்று பாடு படுகின்றது. இக்காரணத்தாலேதான் அப்பத்திரிகையைப் பலரும் வர

வேற்றுப் போற்றி வருகின்றனர். "டைம்ஸ் ஆப் இந்தியா" வின் இயந்திர அநுபந்தம் பலராலும் மிகவும் புகழப்படுகின்றது. அப்பகுதி, இயந்திரம், கைத்தொழில் இவற்றின் சார்புப் பொருண்மொழிகளைப் பற்றிப் பேசுவதாகும். அப்பகுதி, அத்துறையிலே மிக்க தேர்ச்சி பெற்றவரால் இனிமையாக நடத்தப்பட்டு வருகின்றது. அவரது ஆராய்ச்சிக் குறிப்புக்கள் நன்னயத்தோடும் பயனூட்டும் செவ்விய முறையினும் எழுதப்படுகின்றன. அவ்வநுபந்தம் படிப்போர் தொகை மிகுதி. அதன் வார வெளியீடும் ஒன்றுளது. அது படங்களோடு கூடியது. அதன் அழகொழுகும் சிறந்த படங்களும், இயல்பின் எழுந்தொழுகும் கட்டுரைகளும், இந்தியாவிலே படக்காட்சியோடு கூடிய முதல்தரப் பத்திரிகை அஃது ஒன்றே என்று சொல்லும்படி மிளிர்கின்றன. அரசியல் துறையிலே அநுப்புற்றவர்களுக்கு அஃது எளிதிற் படித்தற்கு உதவுகிறது. "இந்தியன் டெய்லி மெய்ல்" ("The Indian Daily Mail") என்றதும் பம்பாயின் முதல் தரமான தினசரிகளில் ஒன்றும். முன்னேற்றமுற்ற இந்திய மக்கட் கூட்டத்தின் கருத்தை அஃது உள்ளபடியே காட்டுவதாகும். அதன் ஆசிரியர் அறிஞர் நடராஜன் (Mr. Natarajan) ஆவர். அவர் புகழ் மிக்க சென்னையைச் சேர்ந்தவர்; பத்திரிகைத் தொழிலுக்கு ஒரு நந்தாமணி விளக்கம் போன்றவர். மற்றும் அவர் "சோஷியல் ரிபார்மர்" ("The Social Reformer") பத்திராசிரியரும் ஆவர். அது, மிக நன்றாக எழுதப்படுகின்றது. அப்பத்திரிகை பெரிதும் இந்திய மக்களின் சீர்திருத்தத்திற்கே முனைந்து உழைப்பதாம். பம்பாய் மாகாணத்திலே மேனிலையுற்று விளங்கும் பத்திரிகைகளுள் "பம்பாய் கிரானிகிள்" ("The Bombay Chronicle") ஒன்றும்; "இந்தியன் நாஷனல் ஹெரால்டு" ("The Indian National Herald") என்பது மற்றொன்

ரும. அப்பத்திரிகை பிறந்த சிறிது காலத்திலேயே ஓர் அரிய பெரிய தினசரி என்னும் பேர் பூண்டுவிட்டது. அதன் புதை பொருளுள்ள கட்டுரைகள் எல்லோராலும் நன்கு புகழப்படுகின்றன. அஃது, அறிவு நுணுக்கத்தோடு கூடிய உற்சாகத்தையும், தெருண்ட அன்பையும் மேலும் மேலும் விளைத்து வருவது. கல்வி நூற் சார்பான அரும்பொருள் களைப் பற்றிப் பேசும் ஒரே பத்திரிகை "இந்தியன் டெக்ஸ் டைல் ஜர்னல்" ("The Indian Textile Journal") என்பதாம். அதன் அருமையை அறிஞர் அறிந்துகொண்டனர். எனவே, அது மேற்கோளுக்கும் பயன்படும் முறையுடைத்து என்க. அன்றியும், பம்பாயில் சினிமா என்னும் இயக்க விளக்கப் படக்காட்சியைப் பற்றிய மாதப் பத்திரிகை ஒன்று 1935-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் பிறந்துளது. அஃது ஆங்கில வெளியீடு. அதன் பேர் "ஜர்னல் ஆப் தி மோஷன் பிக்சர் ஸொஸைடி ஆப் இந்தியா" (Journal of the Motion Picture Society of India) என்பதாம். அது காலத்திற்கேற்ற பத்திரிகைதான். கராச்சியிலே "டெய்லி கெஜெட்டு" ("The Daily Gazette") என்னும் தினசரி வெள்ளைப் பத்திரிகை வெளியாகிறது. "சிந்து அப்சேர்வர்" ("The Sind Observer") என்பதும் கராச்சிப் பத்திரிகையாம். இவ்விரு பத்திரிகைகளும் முன்னிலையிலுள்ள தினசரிகள். இவை அரசியற் கொள்கையிலே கருத்து வேறுபாடு உடையன. "மராட்டா" ("The Mahratta") என்னும் பூனைப் பத்திரிகை பூனாவிலன்றி, இந்தியாவின் ஏனைப் பகுதிகளிலும் பரவி வருகின்றது. இந்திய ஊழியர் சங்கத்திற்குரிய (The Servant of India Society) "சேர்வெண்டு ஆப் இந்தியா" ("The Servant of India") என்னும் பத்திரிகையும் பூனாவில் வெளியாகின்றது. அஃதும், ஒரு மதிப்புள்ள பெரிய வாரப் பதிப்பு. அவ்வெளியீடு, இந்தியா

வைப் பற்றி ஏற்றுக்கொள்ளக் கூடியதும் பயன்படக் கூடியதுமான பொருள் மொழிகளையே பெரிதும் தாங்கி வருகின்றது. அஃது, அரசாட்சிக்கேற்ற வகைகளில் (Constitutional means) இந்தியா படிப்படியாக மேலோங்கி வருதலை விழைந்துள்ளவர் அனைவருக்கும் பற்று விளைப்பதாகும். ஆமதாபாத்தில் மகாத்துமா காந்தியால் வெளியிடப்பட்டு வந்த "யங் இந்தியா" ("Young India") பத்திரிகையும் இங்குக் குறிப்பிடத்தக்கதே. அஃது, இந்தியாவெங்கும்பரவி வந்த வார வெளியீடு. அஃது எளிய உரை நடைக்கும், கொள்கையின் நேர்மைக்கும், தேசியச் சீர்மைக்கும், தூய கடப்பாட்டிற்கும் பேர் போனது: அன்றியும், உலகமெங்கும் மதிப்புடையது. ஆகையினால், அதன் ஒரு சில கட்டுரைகள் பல பத்திரிகைகளால் எடுத்தாளப்பட்டு வருகின்றன. அவ் வெளியீடு, உடல் பொருளாவிகளைப் பொருளாகக் கருதாமல், தேச நலத்திற்குப் பாடு படுவது. தூய்மையான எளிய உயரிய சொல்லும் பொருளும் நடை முறையும் ஒன்றுபடுவதில் ஒப்புயர்வின்றித் திகழும் பத்திரிகையும் பத்திராசிரியரும் உலகெலாந் தேடித் தேடிப் பார்க்கினும், "யங் இந்தியா"வையும் காந்தியடிகளையும் தவிர வேறு காணவியலாது என்பது திண்ணமே. "யங் இந்தியா" நின்றுவிட்ட பின், காந்தி அடிகளால் பூனாவில் "ஹரிஜன்" (Harijan) என்னும் ஆங்கில வாரப் பத்திரிகை திரு. மகா தேவ தேசாய் அவர்களால் நடத்தப்பட்டு வருகின்றது. அது, தீண்டாதார் முன்னேற்றத்திற்கு முன்னணியில் நின்று அரும்பாடு படுவதாகும். விளம்பரம் என்பது ஒன்றேனும் விரும்பாத வெளியீடுகள் "யங் இந்தியா" என்பதும், "ஹரிஜன்" என்பதும் மாத்திரந் தான் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதே. அன்றியும், பீர், பிராந்தி முதலிய குடி வகைகளைப்பற்றி விளம்பரப்படுத்தாத இந்திய பத்திரிகைகளும் ஒரு சில உள. இத்தகைய

வாய்மையும் தூய்மையும் பூண்ட புதினத் தாள்கள் ஏனை நாடுகளில் இரா.

(c) சென்னை மாகாணம்

இனி, நமது சென்னை மாகாணப் பத்திரிகைகளிற் சில குறிப்பிடப்படுகின்றன. சென்னையிலே சிறப்புற்ற நிலையில் சுமார் பத்துத் தினசரிகள் வெளியாகின்றன. அவற்றின் குறிப்புக்கள் வருமாறு:—

"மெட்ராஸ் மெயில்" ("The Madras Mail") என்னுந் தினசரியானது, ஆங்கிலோ-இந்தியரைப் பற்றியது. அஃது ஆங்கிலோ இந்தியர் ஐரோப்பியர் இவர்தம் நலன்களைப் பெரிதும் விரும்பி உழைப்பது; பத்திரிகைத் தொழிலில் பயிற்சி பெற்ற கனம். டி. ஸ்காட்டு பிரேம்னோர் (Mr. D. Scott Bremner) என்பவரை ஆசிரியராகக் கொண்டது.

"ஹிந்து" ("The Hindu") என்ற தினசரி மிக்க புகழ் பூண்டது. அது காலஞ்சென்ற ஜி. சுப்பிரமணிய ஐயரவர்களால் 1878ல் தோற்றுவிக்கப்பெற்றது. அதற்கு இப்போது 56 வயது கூறலாம். அது முதலில் ஒரு வார வெளியீடாயிருந்து பின் வாரம் மும்முறையாகிப் பின் தினசரியானது. தொடர்ச்சியாக முதல் 20 ஆண்டு மட்டும் அது ஜி. சுப்பிரமணிய ஐயரவர்களால் நடத்தப்பட்டது. அது, துவக்கத்திலிருந்து இந்நாள் வரையிலும் ஓர் உயர்ந்த தேசியப் பத்திரிகையாய்த் திகழ்ந்து வருகின்றது. "இந்தியாவின் உண்மையான குறைகள் என்னவென்று அறிய வேண்டுமானல் உடனே 'ஹிந்து' பத்திரிகையைப் பாருங்கள்," என்ற அரசப்பிரதிநிதி ரிப்பன் பிரபு (Lord Ripon) அவர்களின் வாக்கியமே அப்பத்திரிகையின் பெருமைக்குச் சான்று பகராநிற்கும். தற்போழ்தும் "ஹிந்து" இந்திய முன்னேற்றத்தையும், சென்னை இராசதானி மக்கட் கூட்டத்தின் உள்ளக் கருத்தையும் விளக்கும் ஒரு கூர்ந்த கருவியாகவே துலங்கி வருகின்றது. அது, திரு.

கே. சீனிவாசன், B. A. அவர்களால் வெகு திறமையாக நடத்தப்படுகின்றது. அதற்கு 30,000 சந்தாதாரர் உளர்.

"சுயராஜ்யா" ("The Swarajya") மறைந்துபோன ஒரு தினசரியாகும். அஃது, இந்திய சுயராஜ்யத்திற்காகத் தொண்டு புரிந்தது; தேசியக் கோரிக்கையை நிறைவேற்றி வைத்ததில் இந்தியாவுக்கு ஒரு தனிக் கருவி போன்றது. அதனை இந்திய தேசீயப் பகுதியினர் போற்றி வந்ததும் இயற்கையே. அறிஞர் டி. பிரகாசம் (Mr. T. Prakasam) என்பவர் அதன் ஆசிரியர். சென்னையிலே ஓர் உயர்தர வழக்கறிஞராயிருந்த இவர், வக்கீல் தொழிலை விட்டுவிட்டுப் பொது மக்கள் ஊழியத்தைக் கைக்கொண்டுள்ளார். தேசீயத் தொண்டிலே முனைந்து நிற்கும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ("The Indian Express") என்பதும் ஒரு நல்ல வெளியீடாகும்.

பத்திரிகை படிக்கும் ஆர்வத்தை விரைந்து வளனுற வளர்த்தது பெரும்பாலும் "நியூ இந்தியா" என்னலாம். மிகுந்த கிழப் பருவத்திலுங்கூட, பெஸண்டு அம்மையார் (Mrs. Besent) பத்திராசிரிய பீடத்திலமர்ந்து நாடோறும் களைப்பின்றி இதற்குத் தொண்டாற்றி வந்துள்ளார் அவருடைய கட்டுரைகள் "நியூ இந்தியா"வை அழகு படுத்தியவையாம். அவை, இலக்கியச் சுவையைப் பெருகப் பெருகத் தருவனவாகவும், படித்தற்கெளியனவாகவும், இனிய நடையினவாகவும், பொதிந்த பொருளனவாகவும் துலங்கின.

"ஜஸ்டிஸ்" பத்திரிகையும் ஒரு நல்ல தினசரியே. அது பார்ப்பனரல்லாதாராலேயே பெரிதும் விரும்பப்படுகின்றது. அது அக்கூட்டத்தாருக்கு ஒரு சிறந்த உறுப்புப் போன்றது.

"சுதேசமித்திரன்" "ஜெயபாரதி", "தமிழ் நாடு", "தினமணி" என்னும் தினசரிகள் நான்கும் உயர்ந்த தமிழ் வெளியீடுகளின் கணக்கில் சேர்ந்தவை. பிற சுதேச மொழிகளி

னுள்ள தினசரிகளும் உள. அவற்றுள் "ஆந்திர பத்ரிகா" என்பதும் ஒன்றாகும்.

தமிழ்ப் பத்திரிகைகள்

எனக்குத் தெரிந்தமட்டிலே முதன்முதல் வெளிவந்த தமிழ்ப்பத்திரிகை "கிலோன் கெஜெட்டு" ஆகும். அது 1802ல் தோன்றியது. ஆனால், அஃது ஆங்கிலம், சிங்களம், தமிழ் என்னும் முப்பகுதிகளைக் கொண்டிருந்தது. பின்னர்த் தோன்றிய வெளியீடுகளைப்பற்றி எனக்கு ஒன்றுந் தெரியாது. சென்னை மாநகரிலே முன்னே "ஜன விநோதினி" முதலிய ஒரு சில பத்திரிகைகள் வெளிப்பட்டன. அவற்றின் விவரம் தெரியவில்லை. ஆனால், சென்னைத் தமிழ்த் தினசரிகளைப்பற்றி எடுத்துக்கொண்டால், ராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை B.A. B.L., அவர்களை ஆசிரியராய்க் கொண்ட "தின வர்த்தமானி" என்றதே முதல் தமிழ்த் தினசரி என்றெண்ணுகிறேன். அஃது 1852-ஆம் ஆண்டிற்குமேல் துவங்கப்பட்டதாகத் தெரிகிறது. எனவே, அது சுமார் 75 ஆண்டுக்கு முன் தோன்றிய நாள் வெளியீடு ஆகும்.

இனி, சென்னையில் வெளியாகும் குறிப்பிட்ட சில தமிழ்ப் பத்திரிகைகளைப் பற்றிச் சிறிது கவனிக்கலாம்: தொழின்முறை தவறாத வெளியீடுகளில் 'சுதேசமித்திரனும்' ஒன்று. அது "ஹிந்து" பத்திரிகையின் முதற் பேராசிரியரான திரு. ஜீ. சுப்பிரமணிய ஐயரவர்களால் 1880-ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டது. முதன்முதல் அது வார வெளியீடாய்த் திகழ்ந்தது; பின்னே வாரம் மும்முறைப் பதிப்பாகவும் வெளிவந்தது; சிறிது காலத்திலே தினசரியாக்கப்பட்டுத் தமிழகம் முழுதும் பரவியது. தமிழ் நாட்டின் நூற்றுக்கணக்கான சிற்றூர்கள் முதல் நகரங்களின் எல்லாப் பகுதிகளிலும் பத்திரிகை படிக்கும் ஆவலையும், அரசியல் உணர்ச்சியையும், தேசீய அறிவையும், முதன்முதலில் உள்ளபடி

விளக்கிய பத்திரிகை சுதேசமித்திரனேயாகும். உலகச்செய்திகளைப் பொது நிலையிலே நின்று ஆராய்ந்து சிக்கறுத்துத் திரட்டி நல்ல பணியாற்றி வருவதும் அதுவே. இந்நாளிலும் அது தன்னிலை வழாது பணி புரிகின்றது. தமிழுலகத்திற்குப் பத்திரிகை உணர்ச்சியை ஆரம்பத்திலிருந்து மிகவும் ஊட்டி வளர்த்து இந்நாள்காறும் சுதேசியத் துறையிலே இளைக்காமல் உழைக்கும் பத்திரிகையும் அதுவே. தினசரிப் பத்திரிகைத் தொழில் முறையிலே "சுதேசமித்திரன்" தமிழகத்தில் நிகரற்று விளங்குகின்றது. தற்போதைய "சுதேசமித்திரன்" ஆசிரியர் திரு. C. R. சீனிவாச ஐயங்கார் ஆவர். அவரது தலைமையின் கீழ் "சுதேச மித்திரன்" ஆங்கிலம் அறியாத தமிழ் மக்களுக்கு உலகியலறிவையும், அரசியலறிவையும் தற்கால முறையிலே ஊட்டி வருகின்றது. வீரம், தீரம், திட்டம், நனி ஆராய்ந்து முடிவு கட்டப்பெற்ற தலையங்கங்கள் இவற்றால் "சுதேச மித்திரன்" அறிஞர் மெச்சும்படி சிறந்து விளங்குவது. "சுதேச மித்திரன் வார வெளியீடு" ஒன்றுமுளது. அது படங்களோடு கூடியது.

"தமிழ் நாடு" சுதேச மித்திரனைப் போலவே நாடோறும் உள்நாடு வெளி நாடுகளின் பல்வேறு செய்திகளையும் முறையே பொதுவும் சிறப்புமான வகையிலே திரட்டி நாகரிக முறையிலே அவற்றைத் தமிழ் நாடு முழுதும் கொண்டாடும் வகையில் பரப்பி வருகின்றது. அதன் தலைவர் பொது நலத் தொண்டிலும், தேசிய வீரத் தொண்டிலும் மிக்கு வீறிய டாக்டர் P. வரதராஜுலு நாயுடுகாரு ஆவர்.

"இந்தியா" என்பது ("India" A Nationalist Tamil Daily) சென்னையில் வெளி வந்த ஒரு தேசியத் தமிழ்த் தினசரியாகும். அது, தேசியத் தொண்டில் வீரம் செறிந்தது; திரு. சனக சங்கர கண்ணப்பரை ஆசிரியராகக் கொண்டு உலாவியது. சமீப காலத்தில் "இந்தியா" பத்திரி

கை, புகழ் மிக்க தினசரியாகிய "தினமணி"யுடன் இணைக் கப்படலாயிற்று. சென்னையிலுள்ள "ஜெயபாரதி"யும் "தின மணி"யும், சிறந்த தேசீயப் புதினத் தாள்களாம். சென்னை யின் முக்கியமான தமிழ் நாள் வெளியீடுகள் இவையே.

சென்னையில் வெளியாகும் உயர்தர வார வெளியீடு களில் பழைமையான பெருமையுடைய்து 'லோகோபகாரி' யாம். அது 1896-ஆம் ஆண்டு பிறந்தது. அதன் கட்டுரைகள் மெச்சுந் தரத்தன; இலக்கியச் சுவை ஊறித் தழைப்பன.

உயர்தர வார வெளியீடாய்ப் பன்னாள் தொண்டாற்றி வந்த "நவ சக்தி" ஒரு திங்கள் வெளியீடாயிருந்தது. அதுவும் மறைந்தமை, தமிழகத்தின் நல்வினைக் குறைவே யாம். "நவ சக்தி" ஓர் உயர்தர வார வெளியீடாக நிலவிய காலத்தில் தமிழ் மொழிக்கும், தேசீய முன்னேற்றத்திற்கும், பத்திரிகைத் தொழிலுக்கும், எழிலும் உரமும் தரமும் முறையே செய்து வந்தது. அது நல்ல தமிழ் நடை தழுவி யது; இந்திய அரசியல் முன்னேற்றத்திலே கண்ணுங் கருத் துமாக உழைத்து வந்தது; சமயப் பிணக்கு, வகுப்புப் பிணக்கு, கட்சிப் பிணக்கு முதலியவற்றைத் தீர மொழி களால் களைந்தெறியும் நடுவு நிலையும் வாய்ந்திருந்தது; உள்ள படி தேசத்துக்கும், தமிழணங்குக்கும் தொழும்பு புரிந்து வந்தது. அது களங்கமற்ற போக்கினது; நேரிய நோக்கினது; சீரிய வாக்கினது; எதிர் காலப் பார்வையினது; படிப்போர் உளத்தைத் தெருட்டும் சீர்த்தியினது; கொள்கையில் ஒரே படித்தான கீர்த்தியினது; ஏருடைத்து; கூருடைத்து. "நவ சக்தி"யின் இத்துணைச் சிறப்பினுக்கும் காரணர், அதன் ஆசிரி யர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களே. இவரது விழுமிய பொது நோக்கும், அரிய எளிய தூய நேயத் தமிழ் நடையும், செய்திகள் தொகுத்து வகுத்துப் பரப்பும் தொழில் நெறியும், வடித்தெடுத்த தலையங்கம் அமைக்கும்

தேர்ந்த தொழின்முறையும், தண்டமிழ்த் தேர்ச்சியும், பண்டிதத் தன்மையும், பாவலத் தன்மையும், வளனொடு பொருந்திய இனிய நிலை வழாத பத்திராசிரியர் குறிப்புரைகளும், அரிய மதிப்புரைகளும் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட விரும்பும் யாவரும் தாவிப் பிடித்து வேட்கையுடன் பின்பற்றத் தக்கனவாம்.

"ஆனந்த போதினி"யும் "கலா நிலய"மும் சென்னை வாரப் பத்திரிகைள். சென்னை நகரின் திங்கள் வெளியீடுகளில் பல நல்ல கட்டுரைகள் கொண்டதும் "ஆனந்த போதினி"யே.

"சுதந்திரச் சங்கு" ("Swathanthra Sangu") "மணிக்கோடி" ('Mani kodi') என்னும் இரண்டும் சென்னையினின்று வெளி வரும் தேசீயத் தமிழ் ஞாயிறு வெளியீடுகளாம். "மணிக்கொடி" பின்னர்த் திங்கள் வெளியீடாக்கப்பட்டு, அத்துடன் "காந்தி" பத்திரிகை இணைக்கப்பட்டுளது. "சுதந்திரச் சங்கு" சமீபத்தில் தினசரியாக்கப்பட்டது. "காந்தி' ("Gandhi") என்பது வாரம் இரு முறை வெளி வந்த ஒரு தீரமான தேசீயப் புதினத் தாள்.

"இந்து நேசன்" ("Hindu Nesan") இந்து சமயத்துக்கும் தமிழ் இலக்கியத்துக்கும், இந்திய தேசீய முன்னேற்றத்துக்கும் உழைத்து வரும் ஓர் அழகிய சனிவார வெளியீடாம். அது திரு. ல. அனந்தய்யர் அவர்களால் முறை தவறுமல் நடத்தப் பெறுகிறது.

"ஆனந்த விகடன்" அதன் பேருக்கேற்ப ஆனந்தமான விகடங்களால் உலகிய லறிவைப் பெருக்கும் ஒரு வார வெளியீடு. இன்னும் ஒரு சில விகடப் புதினத் தாள்களும் சென்னையினின்றும் வெளியாகின்றன.

சில சமயப் பத்திரிகைகள்

"ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்" என்னும் வேதாந்த வெளியீடு சென்னையிலே வெளியாகின்றது. அது மைலாப்பூர்

ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் திங்கள் வெளியீடாம். அப்புதினத் தாள் வேதாந்தக் கருத்தை இனிய தமிழில் விளக்கி வருகின்றது.

'சித்தாந்தம்'' என்பது ஓர் உயர்தர வேதாந்தத் தத்துவப் பத்திரிகை. (A high class philosophical Tamil Monthly). அது, சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜ வெளியீடு; இனிய கட்டுரைகள் கொண்டது; சுத்த அத்துவித சைவ சித்தாந்த விளக்காய்த் திகழ்வது; அறிவிற் சிறந்தோரால் எழுதப்பெறும் தெளிவான செந்தமிழ் நடையான் இயன்ற நல்ல பொருண்மொழிகள் ஏந்தியது; ஆங்கிலத்தின் தமிழ் மொழி பெயர்ப்பான உயரிய கட்டுரைகளையும் ஆங்காங்குக் கொண்டு மிளிர்வது; சித்தாந்த சாத்திரப் பொருள் நுணுக்கங்களை மேனாட்டு விஞ்ஞான சாத்திர முறையிலும் தெரிவிப்பது. அம்முறை, ஆங்கிலங் கற்ற சித்தாந்த நுண்பொருள் அறியாத மக்களுக்கு மிக்க பயன் கூட்டுவதாம்.

''செந்தமிழ்ச் செல்வி'' என்பது மற்றோர் உயர்தரத் திங்கள் வெளியீடு. அது நெல்லையிலும், சென்னையிலும் நிறுவப்பெற்றிருக்கும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாம்; சென்னையினின்று வெளி வருவது; இனிமையூறும் அரிய செந்தமிழ்க் கட்டுரைகளோடு கூடியது. தேர்ந்த புலவர் பெருமக்கள் அரிதினுணர்ந்த உண்மைகளையும், பொருண் மொழிகளையும் தழுவிய உயரிய உரை நடைகளைக்கொண்டு உலாவுவது; மேனாட்டு நுண்ணூல் நுட்பங்களைத் தமிழ் மக்களுக்கு அழகுமிழும் ஆராய்ச்சியுடன் ஊட்டுவது; தமிழின் இலக்கண இலக்கியப் பொருள்களையும், சைவ சித்தாந்த அறிவு நூற் கருத்துக்களையும் நன்காராய்ந்து காட்டுவது; ஓர் உயரிய இதழாசிரியர் கூட்டத்தால் (Editorial Board) செவ்விய முறையிலே நடத்தப்பெற்று வரு

வது. அது தன் பேருக்கிணங்கவே, நந்தமிழ் மக்கட்கு ஒரு செந்தமிழ் நந்தாமணி விளக்காம். தமிழ் மொழிக்கு அரு மருந்தன்ன திருந்து செந்தமிழ் இலக்கிய வெளியீடு (A high class Literary Tamil monthly) உளதாயின், அது "செந்தமிழ்ச் செல்வி" ஒன்றேதான். அப்புதினத்தாள் நம் தமிழகத்திலே நீடூழி நின்று தொண்டாற்றுவதாக.

"ஞான சாகரம்" என்பது 1902-ஆம் ஆண்டு முதற் கொண்டு இன்றுகாறும் நின்று நிலவும் இரு திங்கட்கு ஒரு கால் வெளிவரும் ஓர் உயர்தனிச் செந்தமிழ்ப் புதினத்தாள். அது மந்திரம், யோகம், தத்துவ ஞானம், தமிழ் இலக்கண இலக்கிய நுட்பங்கள், நாடகங்கள், சரித்திரங்கள், கதைகள் முதலியவற்றைச் சென்ற 32ஆண்டுகளாக விளக்கமான தமிழ் நடையில் வெளியிட்டு வருவது. அது, சென்னைப் பல்லாவரம் பொதுநிலைக் கழக வெளியீடு. அதன் ஆசிரியர் அக்கழக ஆசிரியராகிய சுவாமி வேதாசலம் என்னும் மறைத்திருவாளர் மறைமலை அடிகளார் ஆவர். இவ்வாசிரியர், தமது தமிழ்த் தொண்டு சிவத்தொண்டுகள் ஆங்கில நாடுகளிலும், ஆங்கில முணர்ந்த இந்தியரிடையிலும் பரவுதல் வேண்டி, 'தி ஓஷன் ஆப் விஸ்டம்' (The Ocean of Wisdom) என்னும் ஓர் ஆங்கில இதழும் 1935 ஜனவரியிலிருந்து துவங்கி நடத்தி வருகின்றார்.

பிற வெளியீடுகள்

இனி, சென்னைக்கு வெளியிலுள்ள வெளியீடுகளில் ஒரு சிலவற்றை மட்டும் குறிப்பேனாக: கிருஷ்ணா ஜில்லாவைச் சேர்ந்த மசூலிப்பட்டினத்தில் சில தெலுங்கு வெளியீடுகள் உள. பெஜவாடாவிலும் சில உள. தஞ்சையில் "தமிழ்ப் பொழில்" முதலியன உள. மதுரையில், ஆண்டுக்கு இருமுறைப் பதிப்பான "அமெரிக்கன் காலேஜ் மாகஜீன்" என்ற ஆங்கிலப் புதினத் தாளும், "பாரதி" முதலிய தமிழ்த் திங்கட் புதினத்

தாள்களும் வெளியாகின்றன. திருச்சியில் "சிடிஜேன்" (Citizen) முதலிய ஆங்கிலத் திங்கள் வெளியீடுகளும், "பிரஜாநுகூலன்" முதலிய தமிழ்த் திங்கள் வெளியீடுகளும் உள. "யாத்ரா மார்க்கம்" என்னும் பேரால், தென்னிந்திய யாத்திரிகர்களுக்குப் பயன்படும் வகையிலே, வழவழப்பான சீமைக்காகிதத்திலே, அழகியபடங்களோடுகூடிய ஒரு தமிழ்த் திங்கள் வெளியீடு திருச்சியினின்று வெளியேறிச் சில்லாண்டு களாகத் தமிழ் மக்களிடை உலாவி வந்தது. அதனைத தென்னிந்திய இருப்புப் பாதை அதிகாரிகள் நடப்பித்தார்கள். "அகில இந்திய யாத்ரா மார்க்கம்" ("The All India Yatra Margam", an Illustrated Tamil Monthly Journal Edited by T. S. Srinivasa Iyer) என்பதும் திருச்சியினின்றும் வெளி வருவது. இஃது இந்தியா, பர்மா, இலங்கை இவற்றிலுள்ள முக்கிய ஸ்தலங்களின் சரித்திரம், அமைப்பு, வியாபாரம், ஸ்தல மகிமை இவற்றைப்பற்றித் தெரிவிக்கும் ஓர் உயர்தர மாதப் பத்திரிகை. இதன் ஆசிரியர் திரு. T. S. சீனிவாச ஐயர் ஆவர். இவ்விரு புதினத் தாள் களும் மூர்த்தி தலம் தீர்த்தங்களில் ஆர்வமுடையவருக்கு மெத்தவும் பயன் தருவன. சேலத்தில் "சேலம் மித்திரன்" என்ற தமிழ் வார வெளியீடு நடைபெறுகிறது. ஈரோட்டில் "பகுத்தறிவு" என்னும் வாரப் பத்திரிகை தோன்றியுளது. கோயமுத்தூரில் முன்னே ஒரு, சில வெளியீடுகள் தோன்றி நின்று மறைந்தன. தற்போழ்து "கூட்டுறவு" என்னும் மாதம் இரு முறை வெளியீடும், "ஆனந்த சோதிடன்" "கோங்கு மலர்" என்னும் திங்கள் செய்தித் தாள்களும், "மெட்ராஸ் அக்ரிகல்சுரல் ஜர்னல்" "மெட்ராஸ் பாரெஷ்டு காலேஜ் ஜர்னல்" ("The Madras Agricultural Journal" "The Madras Forest College Journal") என்னும் ஆங்கில மாதப் பத்திரிகைகளும் கோவைமா நகரினின்

றும் வெளியாகின்றன. எல்லா ஜில்லாக்களிலும் உள்ள பத்திரிகைகளுக்கும் இந்நூல் இடந் தராமையின், 'சென்னை மாகாணத்தில் சற்றேறக்குறைய 350பத்திரிகைகள் உள்ளன; அவற்றுள் தமிழ்ப் பத்திரிகைகள் மட்டும் சுமார் 130' என்று கூறி, இம்மட்டில் நிறுத்துகிறேன்.

(d) பிற மாகாணங்கள்

(1) ஐக்கிய மாகாணம்

இனி, ஐக்கிய மாகாணங்களுக்குச் (The United Provinces) செல்வோமாக: ஐக்கிய மாகாணங்களிலே சிறந்த மூன்று தினசரிகள் உள: "பயோனியர்" ("The Pioneer") என்பது ஆங்கிலோ இந்திய வெளியீடுகளிலே சிறந்த ஒன்றாம். அஃது அரசியல், இலக்கியம் இவற்றைச் சார்ந்த கட்டுரைகளும், நூல் மதிப்புரைகளும், விரைந்து செல்லும் ஆராய்ச்சி உரைகளும் ஆகிய இவ்வமைப்புக்களை அகன்றும், ஆழ்ந்தும், நுணுகியும் செல்லும் அறிவுக் குறிப்புரைகளோடு எடுத்துக் காட்டி வருவதால், பொது மக்களின் மதிப்பைப் பெரிதும் பூண்டுளது. "இந்தியன் பயோனியர் மெய்ல்" ("The Indian Pioneer Mail") என்பது, படக்காட்சிகளோடு கூடிய ஒரு வார வெளியீடு. அஃது, ஐக்கிய மாகாணங்களுக்கு எளிய முறையிலே அறிவு விளக்கத்தை உண்டு பண்ணுவதால், அதைப் படிக்கும் பொது மக்கள் பெரிதும் ஆதரிக்கின்றார்கள். அலகபாத்தில் வெளியிடப்படும் "லீடர்" பத்திரிகை தாராளக் கட்சியின் சிறந்த உறுப்பாய் விளங்குவது. அம்மாகாணங்களிலே நீடு நிலவி வரும் தினசரி, "இந்தியன் டேய்லி டெலிகிராப்பு" (The Indian Daily Telegraph) என்பதாம். அப்பத்திரிகை ஐக்கிய மாகாணங்களின் அரசியல் துறையிலே சுயராஜ்யக் கொள்கையை நிலை நாட்டும் சீரிய தொண்டினையுடையது.

(2) மத்திய மாகாணம்

மத்திய மாகாணப் பகுதி (The Central Provinces) பத்திரிகைத் தொழில் வளர்ச்சியிலே மிகவும் பின்னீடு உடையது. பொதுவாக மக்களின் குறைகளைப் போக்கத் தக்க ஒரு தினசரியாவது ஆங்கிலே. மக்கள் தேவைகளை அறிந்து முற்றுவிக்கத் தக்க ஆங்கிலப் பத்திரிகை, "ஹித வாதம்" (Hita vada) என்பதாம். அது மக்கட் கூட்டத்திற்கு நல்ல தொண்டாற்றி வருகின்றது. தினசரி வெளியீட்டுக்கு ஏற்ற வழி வகைகளெல்லாம் பொருந்தியிருக்கும் அங்கே, 'ஹிதவாதம்' கூடிய விரைவிலே ஒரு தினசரி ஆக்கப் படுவதாக. ஆண்டைய பொது மக்கள் அதற்கு வேண்டிய துணை புரிவார்களாக.

(3) டில்லி

இந்தியாவின் தலை நகராகிய டில்லியிலே (Delhi) "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" (The Hindustan Times) என்ற பத்திரிகை வெளியிடப்படுகின்றது. அஃது ஓர் உயர் தரத் தினசரியாம். அதன் சொந்தக்காரர், பண்டித மதன் மோஹன மாளவியா என்னும் தேசிய வீரப் பெரியார் ஆவர். அவ்வெளியீடு திரு. J. N. சானி (Mr. J. N. Sahni) என்னும் ஆசிரியரால் திறம்பட நடத்தப்பட்டது. அதன் தற்போதைய ஆசிரியர் திரு. போதன் ஜோஸப்பு (Mr. Pothan Joseph) ஆவர். அவரது தகுதி வாய்ந்த திறன்களால் அத்தினசரி, படிப்போர் தன்னை வாஞ்சையுடன் மதிக்கும்படி செய்து வருகின்றது. அன்றியும் டில்லிமா நகரிலே ஒரு வாரப் பதிப்பும் வெளியாகின்றது. "யூனைட்டெட்டு இந்தியா அண்டு இந்தியன் ஸ்டேட்ஸ்" (The United India and the Indian States) என்பது அதன் பேர். அது நீண்ட காலமாக வெளி வரும் ஒரு வார வெளியீடு. அதில் அகில இந்திய செய்திகளும் இந்திய சமஸ்தானங்களின் செய்திகளும் நன்கு

ஆராய்ந்து முடிவு கட்டப்பட்டு வருகின்றன. "சில்ட்ரேன்ஸ் நியூஸ்" ("The Children's News", an illustrated monthly) என்னும் திங்கள் வெளியீடும் டில்லியிலே உளது. அது, படங்களையுடையதும், குழந்தைகளுக்கென்றே ஏற்பட்டதும், சிறுவர் சிறுமியர்களின் விருப்பம் தேவைகளுக்கு ஏற்றதும் ஆன ஒரு புதினத் தாள்.

(4) பஞ்சாப்பு

பஞ்சாப்பு (The Punjab) மாகாணத்திலே, 'டிரிப்யூன்' (The Tribune) என்ற உயர்தரப் பத்திரிகை நடைபெறுகின்றது. அஃது, அம்மாகாணத்திலுள்ள நாகரிகத்திலே தெருண்ட மக்கட் கூட்டத்தின் கருத்தை விளக்கும் ஒரு விளக்குப் போன்றது என்னலாம். ஆங்கிலோ - இந்தியரின் நலன்களுக்கு உழைக்கும் "சிவில் அண்டு மிலிடேரி கேஜேட்டு" (The Civil and Military Gazette) என்ற பத்திரிகையும் ஆண்டுளது. "பீபிள்" ("The People") என்ற வார வெளியீடும் உளது. அது பாஞ்சால சிங்கம் என்னும் காலஞ் சென்ற லாலா லஜபதி ராய் அவர்களால் நடத்தப்பட்டு வந்தது. இப்பொழுதுள்ள இந்திய வார வெளியீடுகளின் நிலையிலே வைத்து நோக்கின், அப்பத்திரிகை அடைய வேண்டிய அளவு நன்மதிப்பை அடைந்துளது எனலாம். அதனிடத்தே ஓதி உணரத்தக்க உயர் பொருள்கள் மிளிர்கின்றன. ஆதலின், அதனை மகிழ்ச்சியுடனும் பயனுடனும் யாவரும் படிக்கலாம். நேஷன் ஆப் லாகூர் ("The Nation of Lahore") என்னும் பத்திரிகை லாகூரினின்றும் வெளியாகின்றது. அது முன்னே வார வெளியீடாயிருந்து, பின்பு நாள் வெளியீடாயிற்று. அது சுயராஜ்யக் கட்சியினரால் வரவேற்கப்படுவது; G. S. இராகவன் என்பவரது ஆசிரியத் தலைமையின்கீழ் அமைந்தது. "முஸ்லிம் அவுட்லுக்கு" ("The Muslim Outlook") என்

பது ஒரு நேர்த்தியான வெளியீடாம். அதற்குப் பஞ்சாப்பிலும் மதிப்பில்லாமற் போகவில்லை. "ஹிந்து ஹெரால்டு" ("The Hindu Herald") ஒரு தினசரியாம். அது நல்ல அடிப்படையோடு கூடிய அமைப்புடன் துவங்கப்பெற்று நடந்து வருகிறது. "சண்டே டைம்ஸ் ஆப் லாகூர்" ("The Sunday Times of Lahore") இந்தியாவிலுள்ள உயர் தர வார வெளியீடுகளில் ஒன்றும்.

(5) பீகாரும் ஒரிஸாவும்

பீகாரிலும் ஒரிஸாவிலும் "சர்ச் லைட்டு" ("The Searchlight") என்னும் பத்திரிகை எப்போதும் போல உற்சாகத்துடன் நடத்தப்பட்டு வருகிறது. "எக்ஸ்ப்ரேஸ் ஆப் பாங்கிப்பூர்' ("The Express of Bankipore") என்பது அம் மாகாணத்திலே நன்மதிப்புள்ள ஒரு தினசரியாம். "பீஹார் ஹெரால்டு" ("The Behar Herald") என்ற பத்திரிகையும் அங்கு நன்மதிப்புக்குரியதே.

வட இந்தியாவின் முக்கியப் பத்திரிகைகள் மாத்திரம் சுமார் அறுநூற்றெண்பது.

3. சுதேச சம்ஸ்தானங்களும் பத்திரிகைகளும்

இதுகாறும் பிரிட்டிஷ் இந்தியா பர்மா இவற்றின் பத்திரிகைகளிற் சிலவற்றைப் பற்றிக் கூறினேன். இனி, இந்தியா என்னும் சுதேச சம்ஸ்தானங்களின் பத்திரிகைகளைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசாமல், பொது வகையிலே பேசலாம்.

உலகியல் முன்னேற்றத்திற்கும், அருளியல் முன்னேற்றத்திற்கும் பேச்சுரிமையும் அச்சுரிமையும் கழக உரிமையும் முக்கியம் வேண்டப்படுவனவாம். தற்காலத்தில் நாகரிக மக்களுக்கு இன்றியமையாத சாதனங்களில் இவ்வுரிமைகளும் கணிக்கப்பட்டு வருகின்றனவேனும், கெட்ட காலத்

தின் பயனாகவே இவ்வுரிமைகள் நமது சுதேச சம்ஸ்தானங்களில் தடையற்ற வகையிலே வழங்கப்படுவதில்லை. அன்றியும், குற்றஞ் சாட்டுதல், விசாரணைக்குக் கொண்டு வருதல், ஜாமீன் அநுமதித்தல் ஆகிய இம்முறைகளின்றியே எவர்க்கும் தண்டனை விதித்தலையும் எவரையும் நாடு கடத்தலையும் தடுப்பதற்கு ஒரு வழியாவது இல்லையே! நாகரிக நாடுகளில் அநீதி, கொடுங்கோன்மை இவற்றை அம்பலத்திற்குக் கொண்டு வந்துவிடவும், குற்றங்குறைகளைத் தவிர்த்து நீதி நெறி முறைகளைக் காட்டி நன்மை புரியவும், மக்கட் கூட்ட ஊழல்களைப் போக்கிச் சீர்திருத்தவும், எல்லாத் துறைகளையும் பற்றிய பயன் தரும் செய்திகளை உதவவும் பத்திரிகைகள் ஏற்பட்டிருக்கின்றன. பத்திரிகை நிலையத்தைப் போதனை முறை நிலையம் எனலாம். உலக நிகழ்ச்சிகள் யாவை என்பதைப் பத்திரிகையே எடுத்துக் காட்டுகின்றது. ஆகலின், நமது எல்லாச் சம்ஸ்தானங்களிலும் பத்திரிகைத் தொழிலை அன்புடன் போற்றி வளர்த்தல் வேண்டும். ஆனால், அவ்வாறில்லாமை கவலைக்கிடனானதே.

இந்திய சம்ஸ்தானங்களின் நிலப்பரப்பைக்காட்டினும் பிரிட்டிஷ் இந்தியாவின் நிலப்பரப்புச் சுமார் சரி பாதிக்கு மேலே உளது. ஆனால், பிரிட்டிஷ் இந்திய ஜனத்தொகை, சம்ஸ்தானங்களின் ஜனத் தொகையைவிட மூன்று மடங்கிற்கு அதிகம். நமது சுதேச சம்ஸ்தானங்களின் நிலப்பரப்பிற்கும் ஜனத் தொகைக்கும் தகுந்தபடி பத்திரிகை தொகையினும் வகையினும் உயர்த்தப்படவில்லை. பத்திரிகைத் தொழிலும் தகுந்தபடி இன்னும் உரிமையிலே முன்னேற்றப்படவில்லை. டில்லிமா நகரிலே 'யுனைட்டெட்டு இந்தியா அண்டு இந்தியன் ஸ்டேட்ஸ்'' ("The United India and the Indian States'') என்ற ஆங்கில வார வெளியீடு பதிப்பிக்கப்பட்டு வருகின்றதென்

றும், அஃது இந்திய நிகழ்ச்சிகளையும் இந்திய சம்ஸ்தானங்களின் செய்திகளையும் ஆராய்ந்து காட்டுகிறதென்றும் கண்டதை ஈண்டு நினைவு கூர்வோமாக. பிரிட்டிஷ் இந்தியாவில் பத்திரிகைகளின் தொகை மிகுதியாகவும், நமது சம்ஸ்தானங்களில் அவற்றின் தொகை குறைவாகவும் காணப்படுகின்றன. இதனாற் சிலர் ஆய்ந்தோய்ந்து பார்க்காமல், அன்னிய ஆட்சியுள்ள நாடுகளுக்குத்தான் பத்திரிகைகள் மிகுதியும் வேண்டற்பாலன என்கின்றனர். அது தவறு. சரியெனின், அயலாட்சியின் தீங்குகளைப்பற்றி எழுதுதற்கே பத்திரிகைள் தேவை என்று ஏற்படுமல்லவா? சர்க்காரை, அல்லது அதிகார வர்க்கத்தைக் குற்றங் கண்டக்கால் மட்டும் கண்டிப்பது பத்திரிகைகளின் முக்கியக் கடமைகளில் ஒன்ருகும். ஓரே குருதிக் கலப்புள்ள தம் இனத்தவரின் ஆட்சி முறையையும் அவ்வினத்தின் அரசாள்வோரையுங் கூடக் குற்றங் குறைகள் கூற நேர்ந்திடுதல் பல தேச சரித்திரங்களினும் தெளியும் உண்மையல்லவா? இக்காரணம் பற்றியே, ஆள்வோரும் ஆளப்படுவோரும் ஓரே இனத்தவராயும் மதத்தவராயும் இருந்த நாடுகளினும் உள் நாட்டுப் புரட்சிகளும், விடுதலைப் போராட்டங்களும் நிகழ்ந்துள. இவ்வுண்மைக்குப் பிரேஞ்சுப் புரட்சியும் (The French Revolution) அமெரிக்க விடுதலைப் போராட்டமும் (The American War of Independence), இன்ன பிறவும் எடுத்துக் காட்டுக்களாம்.

ஒரு நாட்டின் பத்திரிகையுரிமை எத்தன்மைத்தோ, அத்தன்மைத்தாம் அதன் குடிகளின் வாக்குரிமையும்; அல்லது ஒரு நாட்டின் ஆட்சி முறைக்கேற்பவே பத்திரிகையுரிமையும் அமையும் எனலாம். நம் சம்ஸ்தானங்களை ஆளும் அரசர்கள் இந்தியத் தாயின் அருமை மைந்தர்களே. ஆனால், அவர்களுடைய ஆட்சி முறைகள் இன்னும் அவ்

வளவாகக் கனியவில்லை. உண்மையில் பெரும்பாலான சம்ஸ்தானங்களில் வழுக்காட்சி இருப்பதாக நம்பப்படுகின்றது. அவற்றின் ஆட்சி முறைத் திருத்தத்திற்குத் தக்க கருவி பத்திரிகையே. நல்ல பத்திரிகைகள் கோடிய கோலையும் நேர் ஆக்க வல்லனவாகையால், அத்தகு வெளியீடுகள் சம்ஸ்தானங்களில் இருத்தல் வேண்டும். பத்திரிகைகளின் பெருக்கமும், திருந்திய முன்னேற்ற அரசாட்சியும் காரண காரியம் அல்லது காரிய காரணம் என்த்தகும் என்பதைப் பழுத்த பத்திரிகைத் தொழிலாளரும், கனிந்த உலக சரித்திரப் புலவரும் மெய்ம்மையென்று ஒப்பிக் கொண்டாடுவார்கள் என நம்புகின்றேன். ஒரு தேசம் எவ்வளவுக்கெவ்வளவு விடுதலையுற்றும் நன்காளப்பட்டும் உளதோ, அவ்வளவுக்கவ்வளவு நன்கு நடத்தப்படும் பத்திரிகைகளின் தொகையும் அத்தேசத்திலே பெருகும். அன்றியும், உயர்தரப் பத்திரிகைகளின் தொகை பெருத்தமட்டும் ஒரு தேசம் தன்னரசுரிமையாகிய மிக்க பயனையும் உயரிய ஆட்சியின் செவ்வியையும் எய்தற்கியலும். இவ்வுண்மைகளை இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளில் உயர்தர வெளியீடுகளின் தொகை வகை நடை முறைகளாலும், அரசாட்சி முறைகளாலும் தெரிந்துகொள்க.

4. பிரிட்டிஷ் இந்திய பத்திரிகைகளும் இந்திய சம்ஸ்தானங்களும்

போதுவாகப் பேசுங்கால், இந்திய சம்ஸ்தானதிபதிகள் தங்கள் இராச்சியங்களிலே பத்திரிகை உரிமை வளத்திற்கு ஏதோ ஒவ்வொரு தறுவாயில் ஒருவாறு அரசியல் காரணத்தை முன்னிட்டுத் தடை செய்வதுண்டு. பிரிட்டிஷ் இந்திய பத்திரிகைகளிற் சிலவற்றையும் சமயம் வாய்த்தபோது

தங்கள் எல்லைகளில் நுழையவொட்டாமல் தடை செய்துள்ளார்கள். பத்திரிகையின் அருமை பெருமை உரிமைகளை உள்ளபடி ஆய்ந்தோய்ந்து பாராமையாலோ, ஒவ்வொரு வேளை நிகழக்கூடிய தங்கள் சம்ஸ்தான நிர்வாக ஊழல்களைப் பத்திரிகைகள் தீரத்துடன் நடுவு நிலை பெயராமல் கண்டனம் செய்வதாலோ, அவ்வூழல்களை உலக அம்பலத்திற்குக் கொண்டுவந்துவிடுவது கண்டு அஞ்சுவதாலோ, தம் கடமைகளையே தவறாதாற்றும் நல்ல பத்திரிகைகளையுங்கூடச் சம்ஸ்தானாதிபதிகள் அண்டவொட்டாமல்தடுக்கிறார்கள்போலும்! இந்திய சுதேச மன்னர்கள் அவ்வளவிலே நின்றுவிடவில்லை. அவர்கள் இந்திய அரசினரைக் கொண்டு, சிற்றரசர் பாதுகாப்புச் சட்டம் ("The Princes' Protection Act") ஒன்று நிரூபணம் செய்துகொண்டார்கள். அச்சட்டத்தின் பயனாக ஒரு சம்ஸ்தான அரசரின் நடை முறையை அல்லது ஆட்சி முறையை, அவை பெரும்பாலும் ஊழல்களாயிருந்துவிட்டாலுங்கூட, மிகக் கண்டித்தாவது விரித்தாவது தாக்கி எழுதுவதும் ஒருவாறு ஆபத்தாய் முடியும். பிரிட்டிஷ் இந்திய பத்திரிகைகளுக்கு அஞ்சியோ, அல்லது பிரிட்டிஷ் இந்திய சட்ட சபையை மன்றாடிக் கேட்டுக்கொண்டோ, தங்கள் பாதுகாப்புச் சட்டம் வகுக்கப்பெற்று மகிழும் இந்திய சம்ஸ்தான வேந்தரின் நிலை, அந்தோ! ஒரு வகையில் இரங்கற்பாற்று; மற்றொரு வகையில் நகைத்தற்பாற்று. பிரிட்டிஷ் இந்திய பத்திரிகைகள் என்ன அப்படிப்பட்ட கேடு சூழ்ந்திடும் வன்கண்மையினவா? நட்பினரை, அறிஞர் "சமயம் வரின் இடித்துரைப்பர்" என்னும் குசேலோபாக்கியானத்தின் பொருள் இங்கே சிந்தித்துத் தெளியத் தக்கது. பிரிட்டிஷ் இந்திய பத்திரிகைத் தொழிலாளர், இந்திய சம்ஸ்தானங்களைச் சீர்திருத்தும் நோக்கத்தோடு நன்னயமாக ஏதேனும் மொழியலாம். அதற்காக நமது சம்ஸ்தானாதிபதிகள் இந்

திய பத்திரிகைகளை எவ்வகையினும் தடுத்தல் அரச நீதிக்கு அழகாகாது.

இதன் சார்பாக இன்னுஞ் சிறிது சொல்ல விரும்புகிறேன்: வெள்ளைப் பத்திரிகைகளைப் படிப்போர் பெரும்பாலும் ஐரோப்பியர்களும் அரசியல் அதிகாரிகளும் அரசினரும் ஆவார்கள். அவர்கள் இந்தியாவின் உண்மை நிலையை அறிய முடியாமல் போவதுடன், தவறான நெறியிலே செல்லவும் ஒரு சில வெள்ளைப் பத்திரிகைகள் இடந் தருகின்றன என்று நம்பப்படுகின்றது. அவற்றைப் படிப்போர் முக்கியமாக இந்தியாவின் நெருக்கடியான சமயங்களிலே மிகுதியும் விழித்திருப்பார்களாக. உள்ளதை உள்ளபடி சொல்லித் திருத்தத்திற்கு இடமிருப்பின், அதனை வீரத்துடன் வகுத்துக் காட்டுவதே பத்திரிகைகளின் அறநெறி. அப்படியன்றி, விண்ணிடையே கோட்டை கட்டுவதால் என்ன பயனும் இல்லையே! பிரிட்டிஷ் இந்திய பத்திரிகைகளும் இந்திய சம்ஸ்தானங்களின் பத்திரிகைகளும் தத்தம் அரசரையும், அரசியலதிகாரிகளையும் பற்றிப் பேசும் சமயங்களில் மணலைக் கயிறாகத் திரித்தல், மாறுபடக் கூறுதல் முதலிய குற்றங்களாய நெறியல்லா நெறிகளை மறந்துங் காட்டக் கூடாது. மற்று, அப்பத்திரிகைகள் ஆள்வோருக்கும், ஆளப்படுவோருக்கும் உண்மைச் செய்தி நெறிகளையும், அரசியல் முறைகளையும் காலத்திற்கேற்றவாறு வகுத்து உண்மைத்தொண்டு புரிவனவாக. இந்திய சம்ஸ்தானாதிபதிகளும் பத்திரிகைத் தொழிலுக்குத் தக்கபடி உரிமைகள் வழங்குவார்களாக. பத்திரிகைகளுக்கு உரிமைகள் வழங்கினாலன்றி, அவை தொகையினும் வகையினும் தொழில் நடை முறையினும் தடையற்ற வளர்ச்சி அடையா என்பது திண்ணம். இந்தத் தலைப்பினைத் தென்னிந்திய சம்ஸ்தானங்களின் பத்திரிகை

களின் மொத்தம் சற்றேறக்குறைய இருநூற்றைம்பது என இயம்பி முடிக்கிறேன்.

இந்தியா, பர்மா, சிலோன் இவற்றிலுள்ள ஒரு சில முக்கியப் பத்திரிகைகளைப் பற்றி மட்டும் இதுவரை குறிப்பிட்டு வந்தேன். அம்முறையிலே எனக்குத் தெரியாமல் விடப்பட்ட பத்திரிகைகளும் பற்பல இருக்கலாம். பழைய பத்திரிகைகள் பல கழிந்தும், புதிய பத்திரிகைகள் பலப்பல புகுந்தும், பத்திராசிரியர் சிலர் மாறியுமிருக்கலாம். எல்லாவற்றையும் அறிந்து எடுத்துரைத்தற்கு இயலாமைபற்றியே சிற்சில சிறந்த வெளியீடுகளைப்பற்றி மட்டும் குறிப்பிடப்பெற்றது. இந்நூற் பெயருக்கேற்ப எழுத வேண்டி நேர்ந்தமையின், பேர் வாங்கிய மேனாட்டுப் பத்திரிகைகளையும் கீழ்நாட்டுப் பத்திரிகைகளையும் தனித்தனி அறிந்து குறிப்பிட இயலவில்லை. ஆகலின், 1927-ஆம் ஆண்டின் குறிப்பின்படி பத்திரிகைத் தொழில் வளர்ச்சியால் உலகின்கண் 50,000 புதினத் தாள்கள் வெளி வருகின்றன என்று மட்டும் தொகுத்துக் கூறுகின்றேன். அவற்றுள், இந்திய பத்திரிகைகள் மாத்திரம் 3,449 என வகுத்துரைக்கின்றேன். இவ்வாண்டின் கணக்குப்படி பார்த்தால், பத்திரிகைகளின் தொகை இன்னும் மிக்கிருக்குமென எண்ணுதற்கு இடனுளது.

முதற் பகுதி முற்றிற்று.

இரண்டாம் பகுதி

பொதுச் சிறப்பியல் - பத்திரிகைத் தொழில்

1. பிரிட்டிஷ் அமெரிக்க பத்திரிகைத் தொழிலும் இந்திய பத்திரிகைத் தொழிலும்

பத்திரிகைத் தொழில், தன்னுட்சியுரிமை பெற்ற பிரிட்டன் அமெரிக்கா முதலிய நாடுகளிலே தழைத்தோங்கி வருகின்றது. ஆட்சி உரிமை பெறாத இந்தியாவிலோ, உரிமையாகிய எருவின்மையின், அது வளன் குன்றி வருகின்றது. பொதுவாகச் சொல்லின், அம்மேற் புலங்களிலே பேச்சுரிமை அச்சுரிமைத் தடைகளில. ஆட்சி முறையும் அங்குப் பத்திரிகையாற் செப்பஞ் செய்யப்படுகின்றது. ஆனால், நமது இந்தியாவிலோ, பத்திரிகைத் தொழில் முறையே ஆட்சி முறையால் வகுக்கப்படுகின்றது. இத்தகு ஒடுக்கமான நெறியிலே இந்திய பத்திரிகைத் தொழில் வளர்ந்து வருகிறது.

(a) பிரிட்டிஷ் பத்திரிகைத் தொழில்

இங்கிலாந்திலே "ஸ்பேனிஷ் ஆர்மடா" ("Spanish Armada") என்னும் கப்பற் படையெடுப்புக் காலமாகிய 1588-ல் முதன்முதற் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட போது, எலிஜபெத்து அரசியாரும் அவரது முதலமைச்சரும் அவ்வெளியீட்டிலே ஆழ்ந்த உருக்கஞ் காட்டி வந்தனராம். அதுமுதல் ஆங்கில பத்திரிகைத் தொழில் படிப்படியாக வளரத் துவங்கியது. சென்ற நூற்றுண்டின் இந்திய பத்திரிகைகளைப்போல, ஆங்கில பத்திரிகைகள் இடைக் காலத்திலே உயர்ந்த பொருளாழமுள்ள கட்டுரைகளை வெளியிட்டு வந்தன. பிரிட்டிஷ் பத்திரிகைத் தொழிலிலே வல்லுநரான

ஆங்கிலேய அறிஞர் ஸ்டெட்டு (Mr. W. T. Stead) என்பவர் காலத்திலே பத்திரிகைத் தொழில் துறையிலே நல்ல மாறுதல்கள் ஏற்பட்டனவாம். பின் வந்த நார்த்கிளிப்புப் பிரபுவும் (Lord Northcliffe) அச்சீர்திருத்தங்களைப் பின்பற்றினராம். அவருக்குப் பின் வந்த பத்திரிகைத் தொழிலாளரும் அவரைப் பின்பற்றி அச்சீர்திருத்தங்களில் இறங்கி உழைத்தனர் என்று அறிஞர் வாட்சன் (Mr. Watson) கூறியுள்ளார். ஆழ்ந்த கருத்துக்களடங்கிய பொருண்மொழிகளை மாத்திரம் வெளியிடும் வழக்கத்தைப் பெரும்பாலும் விட்டுவிட்டு, மக்கள் வாழ்க்கையின் தினசரி நிகழ்ச்சிகளையெல்லாம் வெளியிடும் வழக்கம் மேற்கொண்டு வரப்பட்டது. அவ்வாறு சீர்திருந்திய முறையில் வெளிவந்த தினசரிச் செய்திகள் பொது மக்களால் விருப்புடன் ஏற்றுப் போற்றப்பட்டன. மக்கள்விருப்பத்திற்கிணங்கிய நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டதிலிருந்து பத்திரிகைத் தொழிலின் வெற்றிக்கறிகுறி மிகுத்த ஊதியமென்று, தற்கால இந்திய பத்திரிகைத் தொழிலாளருட் பலர் நடைமுறையிற் காட்டி வருதல்போல அம்மேற் புலத்தவரும் காட்டி வந்தனர். இந்நடை முறையால், பிரிட்டிஷ் பத்திரிகைக்காரர், சந்தாதாரரை இலட்சக் கணக்காகப் பெருக்குதலினும், விளம்பர வருமானத்தைப் பன்னூறாயிரம் பவுன்களாகக் குவித்தலினும் முனைந்து நின்றனர்.

பிரிட்டிஷ் பத்திரிகைகள் முன்னே பத்திரிகைத் தலைவர் கருத்துக்களையே தழுவி வந்தன; இப்போழ்து எத்துணையோ பலர் கருத்துக்களையும் செயல்களையும் காட்டி வருகின்றன. பொருள் வரும்படியின் வளத்தினால், உலகின் பல பகுதிகளின் செய்திகளையும் அறிந்தெழுதும் நிருபருக்கு வேண்டியபடி பொருளுதவி செய்து பத்திரிகைகளை

நாநா விதமான செய்திகளால் அழகுபடுத்தினர். இதனால், நன்றாக எழுத மாத்திரம் தெரிந்த பேருக்கு மதிப்பும் பண மும் விலகிப்போயின. பத்திரிகைத் தொழில் மூளையும், பல் வகையான செய்திகளைத் திரட்டிப் பிரித்தமைக்கும் நுட்பமும் வாய்ந்தவர்க்கே மதிப்பும் பணமும் வழங்கப் பட்டன. இம்முறையினால், பிரிட்டிஷ் பத்திரிகைத் தொழில் வளம் ஓங்கியது. மசி (மை), காகிதம், எழுத்தடிக்கும் இயந்திரம் (Type writing Machine), அச்சியந்திரங்கள் (Printing machines) பல்வகை அச்செழுத்துக்கள், (Types) உருவம் பதிக்கும் கருவிகள் (Printing blocks), பத்திரிகை அச்சிடுவோர் (Printers), வெளியிடுவோர் (Publishers), எழுத்தடுக்குவோர் முதலியோர் (Compositors etc.,), விளம்பரக் கலையாளர் (Advertising Artists), பத்திராசிரியர் (Editors), உதவிப் பத்திராசிரி யர் (Sub-editors), நிருபர் (Correspondents), செய் திச் சாலைகள் (News Agencies), மதிப்புரையாளர் (Opinion writers), வரவு செலவுக் கணக்கெழுதுவோர் (Accountants), மேற்பார்வையாளர் (Managers), முதலாளிகள் (Proprietors) ஆகிய வினையாளர்கள், தங்கள் தங்கள் பிரிவின்படி பணி செய்து வருதலை மேற்கொண்டு பத்திரிகைத் தொழிலை வளர்த்து வரலானார் கள். பத்திரிகைத் தொழில், இவ்வளவு பிரிவுபட்ட தொழில் நடை முறையை நன்கு கொண்டு நடாத்துந் திறத்திலே அமைந்தவாறு காணப்பட்டது. முன்னே, பிரிட்டிஷ் பத்திரி கைத் தொழில், அரசியற் கருத்துக்களை முக்கியமாக்கி உல கியல் நிகழ்ச்சிகளைச் சிறிதளவு காட்டி வந்தது. ஆனால், சென்ற 30 ஆண்டுகளாக, மக்களுக்குச் சுவையூட்டும் எந் தச் சிறிய செய்தியும் இல்லாத ஆங்கில பத்திரிகையே இல்லையாயிற்று. செய்திவகைகள் நாளும் நிரம்பிவருகின்றன.

(b) பிரிட்டிஷ் இந்திய பத்திரிகைகளின் ஒற்றுமையும் வேற்றுமையும்

பிரிட்டிஷ் பாராளும் மன்றத்திலே (The British Parliament) நடக்கும் அரசியல் வாக்கு வாதப் போரிலே கண்ணுங் கருத்தும் செலுத்தி வந்த பிரிட்டிஷ் பத்திரிகைகளைப்போல, தற்கால இந்தியபத்திரிகைகள் அரசியற்செய்திகளிலே மிகுந்த ஆர்வங் காட்டி வருகின்றன. பிரிட்டிஷ் பத்திரிகைகள் குறிப்பிட்ட நபரை இழிவாகப் பேசாமல் கொள்கைகளின் நன்மை தீமைக்குத் தக்கபடியே முறையே ஒட்டியும், வெட்டியும் பேசி வருகின்றன. ஆனால், ஒரு சில இந்திய பத்திரிகைகள் குறிப்பிட்ட நபரைச் சிறு பிள்ளைத்தனமாகத் தாக்குவதில் அழுத்தமும், எடுத்துக் கொண்ட கொள்கையை ஆராய்ந்துரைப்பதில் பிற்போக்கும் காட்டி வருகின்றன. இது மாத்திரமா! ஒரு சில இந்திய பத்திரிகைகள் ஆராய்ச்சியும், நல்லெண்ணமும் இன்றி அரசினரையுங்கூட அவமதித்தும் கண்டித்தும் வருகின்றன. இவ்விரண்டுங் கூடா. இதனால் அரசியற் கொள்கை, வரவு செலவுத் திட்டம் முதலியவற்றிலே அரசினருக்கு ஆதரவு காட்டியே எழுத வேண்டுமென்று சொல்ல நான் முன் வரவில்லை. மக்கள் முன்னேற்றத்திற்கு முரணான அரசியல் முதலிய நடவடிக்கைகளை நாகரிக முறையிலே எடுத்துக் காட்டி அவற்றின் நேர்மையான சீர்திருத்தங்களையும் குறிப்பிட்டு எழுதுவதே பத்திரிகைத் தொழிலுக்கு அழகாகும். இனி மேலாவது அத்தகு சில இந்திய பத்திரிகைகள், குறிப்பிட்ட நபரையும், அரசினரையும் கண்மூடித் தனமாகத் தாக்கும் அழிவு வேலையிலே இறங்காதிருப்பனவாக. அவை, கண் விழிப்புடனே நடுவு நிலை பெயராமல் ஆராய்ந்து நயந் துரைக்கும் ஆக்க வேலையிலே இறங்கி உழைப்பனவாக.

இந்தியாவிலுள்ள ஆங்கிலோ - இந்திய பத்திரிகைகள் பிரிட்டிஷ் பத்திரிகைகளைப்போலவே உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகளையும், தந்திகளையும் வெகு அழகுபட அமைக்கின்றன. அவற்றைப் படித்தால் உலக நிகழ்ச்சிகளையெல்லாம் நன்கு உணரலாம். ஆனால்,சில சுதேச இந்திய பத்திரிகைகள், ஆங்கிலோ - இந்திய பத்திரிகைகளிலுள்ள பற்பல தந்திகளை எடுத்தாள்வதுபோல, சொந்த எல்லையாகிய உள் நாட்டுச் செய்திகளையறிந்து திரட்டுவதில் அவ்வளவு முயற்சியுடையனவாகத் தெரியவில்லை. சுதேச இந்திய பத்திரிகைகள் இம்முறையினும் சிறிது சீர்திருந்துவனவாக. ஒரு சில சமயங்களில் சிற்சில பிரிட்டிஷ் பத்திரிகைகளும் ஆங்கிலோ-இந்திய பத்திரிகைகளும் வெள்ளை கறுப்பு என்னும் நிற வேற்றுமை பாராட்டி, நடுவு நிலை தப்பி எழுதி வருதலுமுண்டு. இவ்வோரச் செயலும் சீர்திருத்தத் தக்கதே. இனியேனும் அப்பத்திரிகைகள் இந்தியரை உடற்பிறப்புரிமையுடன் பாராட்டி இந்தியாவின் தன்னரசுரிமையிலும், வியாபாரத் துறையிலும், கைத்தொழில் துறையிலும் முரண் விளைக்காதிருப்பனவாக; இந்திய தேசிய முன்னேற்றத்தைப் பின்னிடச் செய்யாதிருப்பனவாக.

பிரிட்டிஷ் பத்திரிகைகள், நல்ல காகிதத்தில் நல்ல அச்சில் வெளியிடப்படுகின்றன. சிற்சில இந்திய பத்திரிகைகள் தாழ்ந்த காகிதத்தில் தாழ்ந்தஅச்சிற் பதிக்கப்படுகின்றன. ஆகலின், அப்படிப்பட்ட நமது வெளியீடுகளைக் கையால் எடுக்கவும், கண்ணாற் பார்க்கவும், வாயாற் படிக்கவும், மனத்தால் எண்ணவும் அருவருப்பாயிருக்கிறது. இவ்வருவருக்கத் தக்க நிலையிலே பத்திரிகை வெளிப்படின், மிகவும் தேர்ந்த முறையிலே எழுதப்பட்ட பொருண்மொழிகளும், விரும்பத்தக்க செய்திப் பகுதிகளும் கூடப் புறக்கணிக்கப்படுவதும் உண்டு. அவ்வாறாயின், அவ்வெளியீடுகளால் என்ன பயனும் இல

தாய்விடும் அலவோ? அப்படிப்பட்ட நமது பத்திரிகைகள் தொழிலின் பெருமையை விளக்குமாறு விரிந்து பரவாமலும் அதாவது அதிக சந்தாதாரர்கள் இல்லாமலும், விளம்பர வருமானம் மிகக் குறைந்தும் இவ்வாறு மக்களின் ஆதரவு தக்கபடி வாய்க்கப் பெருமல் இருப்பதைப் பலரும் அறிவர். இத்தாழ்ந்த நிலைக்குக் காரணமாக இந்தியரது எளிய நிலையையும் மேனுடுகளிற்போலப் பத்திரிகைத் தொழிலுக்கு ஏற்ற எல்லா வசதிகளும் இல்லாமையையும் சிலர் சொல்வதுண்டு. ஆனல், அது போதிய விடையன்று. நமது நாட்டில் வெளிவரும் 'ஹிந்து' ('The Hindu') 'சுதேச மித்திரன்' ("The Swadesamitran") "ஸ்டேட்ஸ்மன்" "The (States man") "மாடர்ன் ரிவ்யூ" ("The Modern Review"), "டைம்ஸ்ஆப் இந்தியா"("The Times of India"),"தமிழ் நாடு", "செந்தமிழ்ச் செல்வி", "ஊழியன்" முதலான உயர் தரப் பத்திரிகைகளை உலகம்விரும்புவதில்லையா? புகழ்வதில்லையா? எத்தனையோ மக்கள் புகழ்ந்தும் ஆதரித்தும் அவற்றுட் பலவற்றில் ஏராளமாக விளம்பரஞ் செய்தும் வருகிருர்கள். அதனல், அப்பத்திரிகைத் தொழிலாளருக்கு நல்ல வரும்படியும் மதிப்பும் நாளும் பெருகி வருகின்றன. நல்ல முறையிலே நடத்தப்படும் பத்திரிகைகளைப் பொது மக்கள் எவ்வகையிலும் ஆதரிப்பார்கள். அச்சுப் பதிப்பு, காகிதம், செய்தி விளக்கம் இவற்றிலே இழிந்துள்ள பத்திரிகைகளை வெளியிடுதல் பத்திரிகைத் தொழின்முறைக்கு ஒரு போதும் ஒவ்வாது. அவ்விழிதரப் பத்திரிகைகள், படிப்பவர்க்கு அருவருப்பை உண்டுபண்ணுவதோடு அமையாமல், விளம்பரம் செய்வோரையும் அச்சுறுத்துகின்றன. நன்கு அச்சிடுதற்கு விரிவான அச்சியந்திர அமைப்பு இன்றியமையாததன்று. அவரவர்க்கு உள்ள அளவிலே அச்சுக் கருவிகளை அமைத்துக்கொள்க. பத்திரிகை, உயர்வும் மட்டமுமல்லாத

தும் தொழில் முறைக்கேற்றதுமான காகிதத்தில், ஊறிக் கெடுக்காத மையிலே பல வகையிலும் கவனித்து அச்சிடப் படுவதாக. அவ்வாறு செய்யின், பத்திரிகை வெகு அழகும், திருத்தமும், அழுத்தமும், தொழில் முறையும், மிக்க ஆதரவும், ஏராளமான விளம்பரங்களும், பொருள் வரவும் உடையதாகும். இந்நெறி முறைகளோடு பொறுப்புள்ள செய்திகளை இனிய உரை நடையிலே வெளியிடுதல் பத்திரிகைத் தொழிலின் வெற்றிக்கும், செல்வத்திற்கும், வளர்ச்சிக்கும் ஏதுவாகும்.

(c) பிரிட்டிஷ் பத்திரிகைகளும் அமெரிக்க பத்திரிகைகளும்

பிரிட்டிஷ் பத்திரிகைகளும் அமெரிக்க பத்திரிகைகளும் எத்தனையோ வகையான பொருள்பற்றியவையாக இருக்கின்றன. சர்வ கலாசாலைக்கும், கலாசாலைக்கும், இலக்கியங்களுக்கும், கற்பனைக் கதைகளுக்கும், நுண்ணூல்களுக்கும், பேரறிவுக்கும், சமயத்துக்கும், சட்டதிட்டங்களுக்கும், பல தொழில்களுக்கும், வேடிக்கை விநோதங்களுக்கும், பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், குடும்ப வாழ்க்கைக்கும், தையல் வேலைகளுக்கும், தமியங்கி (Motor - bus, motor-car) களுக்கும், துவிச்சக்கர (Bicycle) வண்டிகளுக்கும், பல்வகை இயந்திரங்களுக்கும், உண்டிவிடுதிகளுக்கும், சிறைச்சாலைகளுக்கும், யாத்திரைக்கும், கால் நடை வளர்ப்புக்கும், கோழி வளர்ப்புக்கும், உழவு முன்னேற்றத்துக்கும், பந்தாட்டங்களுக்கும் இன்னும் எவ்வளவோ பொருள்களுக்கும் தனித்தனி பத்திரிகைகள் உள்ளன.

கல்வியறிவுள்ள ஒவ்வோர் ஆங்கிலேயரும், அமெரிக்கரும், மற்ற மேனாட்டாரும் பத்திரிகைகள் படிக்காத நாளே இல்லை. ஒவ்வொருவரும் இரண்டு அல்லது மூன்றுக்குக் குறையாத தினசரிகளையும் சஞ்சிகைகளையும் வருவித்துப் படிக்கிறார்களாம். மிகு தொலைவிலுள்ள மூலை முடுக்குக்களி

லுள்ள குடியானவர்களும் பத்திரிகை வருவிக்கிறார்கள். பத்திரிகை எட்டாத இடமே இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் காண்டற்கு அரிதென்ப. தங்கள் சொந்தப் பத்திரிகைகளோடும் சிலர் அமைவதில்லையாம். புத்தக சாலைகளுக்கும், வாசக சாலைகளுக்கும் சென்று, வகைவகையான பல பத்திரிகைகளையும் படித்து மகிழ்கிறார்களாம். பத்திரிகை மீது அவ்வளவு அடங்கா ஆர்வம் இருப்பதனாலேதான் அந் நாடுகளில் ஒவ்வொருபத்திரிகைக்குஞ்சில ஆயிரங்களிலிருந்து பற்பல இலட்சங்கள் வரை சந்தாதாரரின் தொகை ஏறி வந்துகொண்டிருக்கிறது. அமெரிக்க ஐக்கிய மாகாணங்களிலே (The United States of America) வெளியாகும் "டெய்லி மெய்ல்" ("The Daily Mail") பத்திரிகைக்கு இலட்சக் கணக்கான சந்தாதாரர் உளராம். "சாட்டர்டே யீவ்னிங் போஸ்டு" (The Saturday Evening Post) என்ற வாரப் பத்திரிகைக்குமப்படியே. "லிடரரி டைஜெஸ்டு" (The Literary Digest) என்ற உயர்தர வார வெளியீட்டுக்கு ஏராளமான சந்தாதாரர் உளராம். பெரிய நகரங்களிலுள்ள பத்திரிகைகளுள் ஒவ்வொன்றுக்கும் 5 இலட்ச சந்தாதாரர் உளராம்.

(d) புதுமைச் செய்திகளில் போட்டி

மேனாட்டுப் பத்திரிகைகள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு தங்கள் தங்கள் எல்லையில் நடக்கும் புதுமையான நிகழ்ச்சிகளை வெளியிடுகின்றன. இத்தகைய போட்டியினால் ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சியும், கொண்டாட்டமும், விசாரணையும், இன்ன பிறவும் விரைந்து வெளியிடப்படுவதில் அச்சிடுவோரும், நிழலுருவப் படம் பிடிப்போரும், நிருபரும் போட்டிப் பந்தயம் வெல்பவர்களைப்போல முழு வன்மையுடன் பத்திரிகைத் தொழிலில் முனைந்து நின்று வேலை செய்கின்றனர். இஃது இப்படியிருப்

பதனுல், ஒரு பத்திரிகை மறைத்த செய்தியை இன்னொரு பத்திரிகை பச்சைப் பச்சையாக வெளிப்படுத்தி வருகின்றது. இவ்வேறுவால் மேனுட்டில் மக்களறியாத புதுமைச் செய்திகளே இல்லையென்க. புதுமையான சாவு செய்திகளேத் தெரிவிப்பதில் நிருபரும், நிழலுருவப் படம் பிடிப்போரும் பிணம் விரும்பும் கழுகுகளேப்போல அல்லது தேன் விரும்பும் ஈக்களேப்போலப் பறந்து சென்று திரும்புகின்றனர். அவர்கள் பிணம் விழுந்த இடத்தையும், பிணக் காட்சியையும்பற்றி எழுதியும், அவற்றைப் படம் பிடித்தும் வந்துவிடுகிருர்கள். அச்செய்தியும் காட்சியும் அப்படியே அன்றைக்கே வெளியாகின்றன. அத்தகைய செய்திப் போட்டியிலே முந்திக்கொள்வதற்காகக் கோரமான பிணச்செய்தியையும் பிணக்காட்சியையும் ஆகாய விமானங்களில் சென்று கண்டும், கொண்டும், அச்சிட்டும், வெளியிட்டும் வருகின்றனராம். இத்தகைய கோரமான செய்திகளும், விவாகரத்து விவகாரங்களும் முதல்தரமான செய்திகளாக மேனுடுகளில் விரும்பப்படுகின்றன.

மனத்தைக் கோதுபடுத்தும் அப்படிப்பட்ட செய்திகள் சில சமயங்களில் சத்துவ அறிவு வளர்ச்சிக்கு மட்டும் தடையாவன என்று அறிஞர் உன்னுகின்றனர். இந்திய பத்திரிகைத் தொழிலாளரும் கோரச் செய்திகளே வெளியிடுவதில் பற்றுடையராகி வந்த போதிலும் மேற்புலத்தவரைப் போல அவ்வகையில் அடிமைத்தனமான பற்றுள்ளவர்களாகத் தெரியவில்லே. தாழ்ந்த உணர்ச்சிகளேத் தூண்டிவிடத் தக்க அப்பேர்ப்பட்ட செய்திகளேப் பெரிதும் விரும்பிப் படிக்கும் மேனுட்டு மக்களுக்கு அறிவு நிலேக்கு மாருக அறிவு நிலேத் தளர்ச்சியே இன்றியமையாமை போலும்! பிரிட்டிஷ் பத்திரிகைகள் ஐம்பொறியுணர்ச்சிகளுக்குக் கிளர்ச்சி உண்டு பண்ணும் செய்திகளில் அமெரிக்க பத்திரிகைகளேப்போல

அவ்வளவு பற்றுடையனவல்ல. இவ்வகையிலே பிரிட்டிஷ் பத்திரிகைத் தொழில் சிறிது சீர்திருத்தத்துடன் முன்னேறி வருகின்றது. அமெரிக்க பத்திரிகைத் தொழிலாளரும் இச்சீர்திருத்த முறையிலே இறங்கி வருகின்றனர். அதற்கறிகுறியாக நல்ல அமெரிக்க பத்திரிகைகள் தற்காலத்திலே மக்கட்கூட்டம் அறிவு நெறியிலே சீர்திருத்தத்துடன் முன்னேறத் தக்க செய்திகளையும் வெளியிடுகின்றன. அறிவியற் செய்திகளை உலகியற் செய்திகளுடன் வெளியிடுவதில் இயல்பாகவே முன்னணியில் நிற்கும் சுதேச இந்திய பத்திரிகைத் தொழிலாளரைச் சிறப்பாகவும் ஜெர்மானிய பத்திரிகைத் தொழிலாளரைப் பொதுவாகவும் பின்பற்ற வேண்டியவர்கள், பிரிட்டன், அமெரிக்கா, பிரான்சு முதலிய மேற்புலப் பத்திரிகைத் தொழிலாளிகள் என்று ஒரே துணிவாகச் சொல்லுகின்றேன். நல்ல காகிதம், அழகிய அச்சு, நடுத்தரமை, புத்தம்புதிய செய்திகள் முதலானவற்றைக் கொள்ளும் வகைகளில் சுதேச இந்திய பத்திரிகைத் தொழிலாளர் மேற்புலப் பத்திரிகைத் தொழிலாளரைப் பின்பற்ற வேண்டுபவர்களே ஆவார்கள்.

(e). உரை நடையின் முன்னேற்றம்

மேனாட்டுப் பத்திரிகைகள் உரை நடை எழுதுவதில் முன்னேறியுள்ளன; குறுகிய அறிவுள்ள மக்களும் எளிதில் உணரத்தக்க கட்டுரைகளை வெளியிடுகின்றன. ஆனால், அவற்றுட் சில, மக்களின் கீழாய உணர்ச்சிகளைத் தூண்டாமல் இருப்பதில்லை. ஆன போதிலும் அக்கட்டுரைகளிற் பல, எளிய நடையோடும், சிக்கலான அரிய பெரிய பொருள்களையும் ஆய்ந்து சிக்கறுத்து விளக்குந் திறத்தோடும் கூடியவைகளாய் இருக்கின்றன. கருத்து விளக்கங்கள் படங்களைப் போல எடுத்துக் காட்டப்படுகின்றன. இவ்வெடுத்துக்காட்டுந் திறன் சிறிதன்று; இத்திறனோடு அறிஞர் விழையும் அறிவுத்

தூய்மையும், அமைதி நிலையும் ஒரு சிலவே காணப்படுகின் றன. விவரிப்புக்கள் எழிலும் அழுத்தமும் உடையன. தலை அங்கங்கள் குறுக்கமும், ஆற்றலும், தெளிவும், விரைவும் உடையன. மிகச் சுறுசுறுப்புள்ள மேற்புலத்தவர்கள் செய்தி களையெல்லாம் முதலிருகப் படித்துணரக் காலம் போக்க மாட்டார்கள். ஆகையினுல், செய்திகளைப் பார்த்த மாத்தி ரத்திலும், ஒவ்வொரு செய்தியின் தலைப்பையோ முதல் இரண்டொரு வாக்கியங்களையோ படித்த மாத்திரத்திலும் கட்டுரையின் கருத்தை நன்கு உணர்ந்துகொள்ளும்படியான அமைப்பிலே வெளியீட்டுத் தொழில் திருந்தியுளது. விக் டோரியா பேரரசியார் காலத்து உரை நடைக்கும், தற் காலத்து உரை நடைக்கும் வேற்றுமையுளது. அக்காலம், எழுதுவோர்க்கும் படிப்போர்க்கும் வேண்டிய அளவு நீட்டிக் கொள்ளும்படியாய் இருந்தது. இக்காலமோ, சுருங்கிய நேரத்திலே பலப்பல விரிந்த பொருள்களை உணரும்படி பர பரப்புடன் கூடியது. தமியங்கி (Motor-car) யின் வேக மும், விண்ணூர் பொறி (Aeroplane) வேகமுங்கூடத் தற் காலத்திற்குப் போதா போலும்! அதற்குத் தகுந்தபடியே பத்திரிகைகளும் செய்திகளைச் சுருக்கியும், விளக்கியும் எழுதி வருகின்றன. ஆகையால், கால நீட்டிப்பும் இலக்கண இலக்கிய நுட்பமும் பத்திரிகைத் தொழில் முறையிலே பொருளாகப் பெரும்பான்மையும் கருதப்படுவதில்லை. திருந் திய எளிய உரை நடையிலமைந்த மணித்திரள் போன்ற பொருட் குறிப்புக்களே பொருளாகக் கருதிப் பின்பற்றப் பட்டு வருகின்றன. பிரிட்டிஷ் பத்திரிகைத் தொழிலாளர் திருத்தி அமைத்து வரும் இவ்வுரை நடை முறையே அமெ ரிக்க பத்திரிகைத் தொழிலாளரும் இந்திய பத்திரிகைத் தொழிலாளரும் கையாண்டு வருகின்றனர். இவ்வகையில் அமெரிக்கா பெரிதும் முன்னேறிவிட்டது.

(f) அமெரிக்க பத்திரிகைகளின் விரிவு

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பத்திரிகை மொத்தம் 20, 681 என 1927-ஆம் ஆண்டிற் கணக்கிடப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் பத்திரிகைகளைவிடச் சில அமெரிக்க பத்திரிகைகள் அதிக பக்கங்களை உடையனவாம். 50 முதல் 75 பக்கமுள்ள அமெரிக்க தினசரிகளும் உளவாம். ஞாயிறு வெளியீடுகளோ, 176 பக்கம் வரை விரிந்துளவாம். அவற்றுட் பெரும்பகுதி விளம்பரப் பகுதியாம்; எஞ்சிய பகுதியோ விளையாட்டுக்கும், வேடிக்கை விநோதங்களுக்கும், நாடகங்களுக்கும், கட்டுக் கதைக்கும், தமியங்கி வண்டிகளுக்கும், இலக்கியத்துக்கும், நகைச் சுவைக்கும், படக் காட்சிகளுக்கும், ஃபேசும் படங்களுக்கும், வியாபாரத்துக்கும் ஆகப் பகுக்கப்பட்டிருக்கின்றன. படங்களின் பகுதிக்கு மிக உயர்ந்த அழுத்தமும் வழுவழுப்புமான காகிதங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பொதுவாகவே அமெரிக்க வெளியீடுகள், ஏனை மேற்புல வெளியீடுகளைவிட அதிக பக்கமுடையன. "சாட்டர்டே யீவ்னிங் போஷ்டு" ("The Saturday Evening Post") போன்ற சில வெளியீடுகளின் காகிதங்கள் (Art Paper) மிகவும் உயர்தரத்தன. அமெரிக்க வெளியீடுகளின் விரிந்த செய்திக் கடற் பகுதிகளின் தலைக் குறிப்புக்கள் மாத்திரம் படித்தற்கியன்றவை. அச்செய்திக் கடலுள் முழுகிக் கரை சேர்வதற்கு வெகு நேரம் பிடிக்கும். இவ்விவரம் 'தி வெஸ்ட்டு' ('The West') என்னும் ஆங்கில நூலின் 'நியூஸ் பேபர்ஸ்' என்னும் அத்தியாயத்தில் காணலாம்.

(g) "சந்திரன்" சஞ்சிகை

அமெரிக்காவில் "சந்திரன்" சஞ்சிகை என்ற பொருண்மொழியைப் பற்றி 14-8-1931ல் "தமிழ் நாடு" வாரப் பதிப்பில் படித்துப் பார்த்தேன். அது வருமாறு: "சந்திர யாத்

திரையைப் பற்றியும் சந்திரனில் அடங்கியிருக்கும் விஷயங் களைப் பற்றியும் வேடிக்கையான கதைகள் வெளி வரும் ஒரு மாதச் சஞ்சிகையை அமெரிக்காவில் வெளியிட்டு வரு கிறார்கள். அதில் அதிக வேகமாய்ப் போகக்கூடிய வாணங் களைக் கண்டு பிடித்து, அவற்றின் மூலமாகச் சந்திரனிடம் பறந்து செல்ல முடியுமென்று ஒருவர் எழுதியிருக்கிறார். மேனாடுகளில், பல காரியாலயங்களில் கடிதங்களை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அனுப்புவதற்கு வேலையாட்களை உபயோகிப்பது இல்லை. அதற்கான ஒரு வித மின்சாரக் குழாய்களை ஏற்படுத்தியிருக்கிறார் கள். அந்தக் குழாயினுள் கடிதத்தை வைத்துவிட்டால், அக்கடிதம் குறிப்பிட்ட காஷியருக்கோ, மானேஜருக்கோ போய்ச் சேரும். அதேபோலச் சந்திரனிலிருந்து பூமிக்கு மின்சாரக் குழாய்கள் வைக்க வேண்டுமெனவும், அவற்றின் வழியாகப் பூமியிலிருந்து ஒரு மனிதனை அனுப்பினால் அவன் நேராகச் சந்திரனிடம் போய்ச் சேருவானெனவும் ஒருவர் எழுதி இருக்கிறார்."

இச்செய்தி மிகவும் நூதனமான ஒன்றுதான். "சந் திரன்" பத்திரிகையும் நூதனந்தான். ஆனால், குழாய் வழி யாகச் சந்திரனுக்கு மக்கள் போகக்கூடும் எனல் ஆராய்ச்சிக் குரியது. "பூதங்கள் ஐந்துங் கலந்தது உலகம்" என் றார் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார். மக்களுடம் பும் அவ்வைந்தின் கலப்பினதே. சந்திரனிடத்துள்ள குளிர்ச் சியைத் தாங்கத்தக்க வன்மை மக்களுடம்பில் அமைந்துள்ள ஐம்பூதங்களில் ஒன்றான நீரின் பகுதிக்கு இல்லையென்பது எனது துணிபு. கடவுளின் திருவருள் வலத்தாற்சந்திரன் முத லிய உலகங்களுக்குப் போகவும், அங்கே தங்கவும், வாழவும் இயலுமேயன்றி, மக்கள் முயற்சியால் இயலாது. மக்க ளுடம்பினுள்ள சாதாரணமான குளிர்ச்சிப் பகுதியின்

ஆற்றல் சந்திரவுலகிற்போய்த் தங்குவதற்குப்போதியதன்று. இக்காரணம் பற்றி மக்கள் சந்திர உலகிலே தங்குதற்கு இயலுமெனல் பகற் கனவென்று எண்ணுகிறேன். அன்றியும், மேற்கூறியபடி குழாய் வழியே மாந்தர் சந்திரனிடம் போய்ச்சேரலாம் எனல் ஒருவேளை இயலினும், பூமியில் வைத்தலைப்போல் சந்திரனில் குழாய் வைத்தலும், சாதாரண மக்களுடம்போடு சந்திரனில் தங்குதலும் இயலாவென்க. நமது நூல்களிற் கூறப்படும் பரலோக தத்துவம், கன்ம தத்துவம் இவற்றை ஆய்ந்தறிவார்க்கு இதனுண்மை புலனும். ஆனல், அமெரிக்காவிலுள்ள "சந்திரன்" சஞ்சிகை பத்திரிகை இனத்தில் மிக்க புதுமைத்தாகலானும், சந்திரனில் அடங்கியிருக்கும் பல பொருள்களைப்பற்றி உலகினுக்கு அறிவுறுத்தும் பயனுடைமையானும் யான் அதனைப் பாராட்டுகின்றேன். இந்திய பத்திரிகைத் தொழிலாளர் "சந்திரன்" சஞ்சிகையில் வெளியாகும் பொருள் மொழிகளைத் தக்க ஆராய்ச்சியுடன் வெளிப்படுத்தி வருவார்களாயின், யாவருக்கும் சந்திர உலகத்தின் தத்துவ ஞானம் உதிக்குமென நம்புகிறேன். இது நிற்க.

(h) பத்திரிகை வருமானங்களின் ஏற்றத் தாழ்ச்சி

பெருஞ்செலவிலே வெளியிடப்படும் எத்துணைப் பெரிய மேனாட்டுப் பத்திரிகைகளும் எளிய விலைக்கே கிடைக்கின்றன. இங்கிலாந்திலே புகழ் பெருகிய சில தினசரியின் விலை ஒரு பென்னிக்கு அதிகமில்லையாம்; அத்தகைய அமெரிக்க பத்திரிகையின் விலை 3 முதல் 5 செண்டு வரைக்கும் ஆகுமாம். ஒரு பென்னியானது, இங்கிலீஷ் தொழிலாளியின் சராசரியான தின வரும்படியிலே 1/72 பகுதிக்குக் கிட்டத்தட்ட வரும். ஒரு அமெரிக்க சாதாரணத் தொழிலாளிக்கு 5 செண்டு என்பது ஒரு பொருளன்று. ஏனெனில், அவன்

ஒரு நாளில் அச்சிறு தொகையைக்காட்டிலும் 300 முதல் 500 மடங்குவரை மிகுதியாகச் சம்பாதிக்கிறான்.

ஆனால், இந்திய பத்திரிகையோ, இந்திய கூலிக்காரனுடைய சராசரியான நாள் வரும்படியில் சரி பாதியோ மூன்றிலொரு பாகமோ கொண்ட தொகைக்கு விற்கப் படுகிறது. மேனாட்டுப் பத்திரிகைகளின் அசலுக்குங் கூட அவற்றின் சந்தா போதியதோ அன்றோ என்று சொல்லக்கூடிய அவ்வளவு எளிய விலைக்கு அவை விற்கப் படுவதற்கும், இந்திய பத்திரிகைகளின் சந்தா விகிதம் மிகுந்திருந்தும், அவை அவ்வளவு மிக்க விலைக்கு விற்கப்படுவதற்கும் காரணங்கள் உள்ளன. மேனாட்டுப் பத்திரிகைகளுக்கு இலட்சக் கணக்கான சந்தாத் தொகையோடு விளம்பர மூலமாக மிகவும் ஏராளமான பொருள் நாளும் திரண்டு வருகின்றது. மேனாட்டுத் தொழிலாளர் வரும்படி ஏறியுளது. ஆண்டைய பொருளாதார நிலையும் ஏறியுளது. இந்திய பத்திரிகைகளுக்குச் சந்தாதாரரும் குறைந்த தொகையினர்; விளம்பரதாரரும் குறைந்த தொகையினர். இந்திய கூலியும் குறைந்தது. இந்திய பொருளாதார நிலையும் எளியது. ஆகையினாலேதான், இந்திய பத்திரிகைகளின் விலைக்கும் மேனாட்டுப் பத்திரிகைகளின் விலைக்கும் நெடிய வேற்றுமை காண்கிறது. மேனாட்டுப் பத்திரிகைகளில் இந்திய பத்திரிகைகளிற் காண்பதைவிட அதிக விளம்பரப் பக்கங்கள் காணலாம். பத்திரிகை செல்லும் பரப்பின் விரிவுக்கு, அல்லது சந்தாதாரர்கள் தொகையின் விரிவுக்குத் தக்கபடி விளம்பர விகிதமும் ஏறியும் இறங்கியும் உள்ளது. அமெரிக்காவின் "சாடர்டே யீவ்னிங் போஷ்டு" பத்திரிகையில் ஒரு முழுப் பக்கத்தின் விளம்பர விகிதம் ரூபா 15,000 என்று சொல்லப்படுகின்றது. அவ்வார வெளியீட்டின் பெரும்பகுதி விளம்பரத்துக்கென்றே விடப்

பட்டுளது. அமெரிக்கருக்கு வரும் பெருத்த வியாபார இலாபத்திற்கு அவ்விளம்பர விகிதம் ஒரு பொருளன்று. தற்சார்புள்ள மேனாட்டுப் பத்திரிகைகள், விளம்பரதாரரின் வெருட்டுக்கு அஞ்சாத செல்வாக்கும் பொருளாதார வளமும் உடைமையால், தம் தொழிலை, அஞ்சாமல் வெற்றியுடன் நடத்துகின்றன. மேனாடுகளின் எளிய சந்தா, ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பத்திரிகையை அவரவர் வீடு தேடிக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றது. இந்தியாவின் எளிய பாமர நிலைமையானது, பத்திரிகைத் துறையிலும் ஊடுருவிச் சென்றுளது. இதனால், இந்திய பத்திரிகைத் தொழில் இன்னும் பெரிதும் உறக்க நிலையிலுளது என்பதற்கு ஐயம் யாது?

(i) பத்திரிகைகளுக்குக் கட்சியோரம் கூடாது.

மேனாடுகளிலும் இந்தியாவிலும் அவ்வக்கட்சிக்குரிய சிற்சில பத்திரிகைகள் அவ்வக்கட்சிக் கொள்கைகளைப் பற்றிய பல வகைச் செய்திகளையும் நடுவு நிலை தப்பிய நிலையிலே வெளிப்படுத்தலால், அறிவு நுட்பமில்லா மாந்தர், மெய் பொய் அறியாத மயக்கக் குழியிலே விழுந்துவிடுகின்றனர். ஒவ்வொரு கட்சிப் பத்திரிகையும், எடுத்துக்கொண்ட எதிர்க் கட்சிப் பத்திரிகையையும் அக்கட்சிக் கொள்கையின் உண்மைகளையும் நடை முறைகளையும் உள்ளபடி சொல்லாமல், மறைத்தோ, இழித்தோ கூறி வருதல் மக்கட் கூட்டத்தைச் சோதிப்பதும் வாதிப்பதும் போன்றதாகும். அது பத்திரிகைத் தொழிலின் திருந்திய வளர்ச்சிக்கு மிகவும் ஊறு பயப்பதாகும். அத்தகைய பத்திரிகைகளால் நாட்டுக்கு ஒரு சிறிது நலனும் விளைவதில்லை. இன்னும் அப்பத்திரிகைகளிற் பல, கூட்டுறவு முறையிலும் வேலை செய்யத் தொடங்கி, மக்களுக்கு இடர் பல பயந்து வருகின்றன. அவை தனித்து விளைக்கும் தீங்கினைவிட ஒன்று சேர்ந்த நிலை

யிலே விளைக்கும் தீங்கு அறப் பெரிதே. அவ்வத் தேசத்திலுள்ள தொண்டர்கள் இதனை நன்குணர்ந்து நடுவு நிலை வழாத தேசீயப் பத்திரிகைகளின் வழியே கட்சியோரம் வளர்க்கும் பத்திரிகைகளின் கொடுந்தன்மைகளை அறிவு திருந்தாத மக்களுக்கு எடுத்துக்காட்டி, அவற்றால் மயங்கா திருக்கும்படி எச்சரித்து வருதல் நலம். இது பத்திரிகைத் தொழில் வழியே செய்யத்தகும் நல்ல தேசத் தொண்டுகளுள் ஒன்றும். கோடாமை என்ற சான்ற நிலையிலே கட்சிப் பத்தி ரிகைகள் நின்று அரசினுக்கும் குடி மக்களுக்கும் தேசத்திற் கும் சீரிய தொண்டாற்றுவனவாக.

(j) மேனாட்டுப் பத்திரிகைகளின் வன்மை

பிரிட்டிஷ் பத்திரிகைத் தொழிலைத் திருத்தியமைத்து வளர்க்கும் நெறியிலே, அறிஞர் ஸ்டெட்டு (Mr. Stead) நார்த்துக்கிளிப்புப் பிரபு (Lord Northcliffe), ரோதர் மியர் பிரபு (Lord Rothermere) என்னும் இவர்கள் அரும் பாடு பட்டிருத்தல் மிகவும் பாராட்டற்குரியது. அமெரிக்க பத்திரிகைத் துறையிலிறங்கி அறிஞர் வில்லியம் ரண்டால்ப் ஹார்ஸ்டு (Mr. William Rundolph Hearst) என்ப வர் தமது 20 தினசரிகளின் மூலம் நாடோறும் 50 இலட் சம் பேர்களுக்குச் செய்திகள் அனுப்பி வருகிறாராம். இவ ரைப்போலவே முற்குறித்த ஆங்கில பத்திரிகைத் தொழி லாளர் மூவரும் உச்ச நிலையிலே அமர்ந்து தொண்டாற்றின ராம். அம்மூவருள் ரோதர்மியர் பிரபு என்னும் தற்கால பிரிட்டிஷ் தொழிலாளர், தற்கால அமெரிக்க பத்திரிகைத் தொழிலாளருட் சிறந்தவராகிய வில்லியம் ரண்டால்ப் ஹார்ஸ்டு என்பவருக்கு நிகரானவர் என்று சொல்லப்படு கின்றது. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் எத்தனையோ இலட்சக்கணக்கான பேர்களுக்கு இவ்விருவரது பத்திரிகை

களும் நாணயத்தோடும் நடுவு நிலையோடும் கூடிய செய்தி களைத் தாங்கிப் பறந்து பறந்து வருவதால், இவர்களது நோக்கங்களுக்கிணங்க, அரசியல் நிபுணத் தலைவர்களும் நடந்துகொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். அவ்வாறன்றி, முரணாக நடந்துகொள்வார்களேயானால், இவ்விருவரது வெளியீடுகள், அம்முரணிய அரசியல் தலைவர்களுக்குக் கெடுதலான கிளர்ச்சிகளைக் கூடிய விரைவிலே உண்டுபண்ணி, அன்னவர்களை அரசியல் நிலையினின்றும் ஓரே அடியாகக் கீழே தள்ளினும் தள்ளிவிடுமாம்.

மேனாட்டுப் பத்திரிகைகளுக்கு அவ்வளவு வல்லமை இருப்பதாகக் காண்கிறோம். அவ்வல்லமைக்கு அளவே இல்லையாம். அவை, மக்கட் கூட்டத்தால் துணியப்பட்ட உண்மைகளை நேர் முறையிலே ஆராய்ச்சி செய்து வடிகட்டி முடிவு கட்டித் தேசிய முன்னேற்றத்தில் வரையறை உண்டு பண்ணுகின்றன. அப்படி உண்மைத் தேசத்தொண்டு செய்யும் மேனாட்டுப் பத்திரிகைகள் பலதிறப்பட்ட உலக மக்கட் சமுதாயத்தின் அமைதிக்கும், அவ்வமைதியின் வழி மக்கள் இகபர நெறிகள் தலைக்கூடுதற்கும் ஏற்ற பணி ஆற்றுவதில்லை. மேனாட்டுப் பத்திரிகைத் தொழிலின் வன்மை வேறு வழியிற் செல்லுகின்றது. அஃது, உலகியல் கட்சிச் சார்பிலே நட்புரிமை பூண்டு, சிறுக நலன்களை வளர்க்கின்றது. சர்வ தேச சங்கக் (The World's League) கொள்கைப் படி உலக அமைதியை நாடாமல் பண்பட்ட நீதி நெறியைக் கொண்ட பெருமிதத் தோற்றத்தினுள்ளே எல்லா உலகங்களையும் கவளம் கொள்ளும் பேராசையையும், பொறாமையையும் வளர்க்கின்றது. பறந்து செல்லும் மேனாட்டுப் பத்திரிகைத் தொழிலின் வன்மையோடு கூடிய விரைவிலே உலக மக்கட் சமுதாயமே இழுப்புண்டு சென்றுவிடுமோ என ஐயுற வேண்டி இருக்கிறது.

உரிமையை நெறி முறையிலே பயன்படுத்தத் தெரியாத பெருந்தொகையான குடிகளுக்கு வாக்குரிமை வழங்கப்படுகிறது. உலக அமைதி, விடாய் முதலிய மேலறிவுத் துறைகள் சிறிது சிறிதாகத் துறக்கப்பட்டு வரவரச் சிற்றிறவுத் துறைகள் மிகுந்த பகட்டோடு கூடிய போட்டியிலே விளக்கப்படுகின்றன. இக்காரணங்களால் மேனாட்டுப் பத்திரிகைத் தொழிலின் முன்னேற்றம், மேனிலையைக்காட்டினும் கீழ் நிலையைப் பற்றுக்கோடாகக் கொண்டு தலை கீழாக விரைந்து செல்கின்ற உண்மை அறியத் தகும். அவ்வாறு முன்னேறிச் செல்லும் செலவிலே வளமையிருப்பதுபோல அவ்வளவு உயர் நிலைக் கடைப்பிடியில்லை. பரப்பிருப்பது போல அவ்வளவு ஆழமில்லை. கருத்திருப்பதுபோல அவ்வளவு அறிவு விளக்கமில்லை. கடப்பாடு இருப்பதுபோல அவ்வளவு சான்றாண்மையில்லை. இன்னும் தெளியக்கூறின், பொருட் பற்றிருப்பதுபோல அவ்வளவு அருட்பற்றில்லை. மேனாட்டுப் பத்திரிகைத் தொழிலின் இப்பிணியானது, இந்திய பத்திரிகைத் தொழிலினும் தொற்றி வருகின்றது. இத்தொற்று நோயால், இந்திய பத்திரிகைத் தொழிலின் திருமேனி ஒரு வேளை, ஒரு சிறிது நுடங்கத் துவங்கினும், அதன் உயிரொளியாகிய பேரறிவொளி, எல்லாம் வல்ல கடவுளின் அருட்கோவையாக இந்தியர்க்கு வாய்ந்துளதால் அஃது ஒரு போழ்தும் மங்காதென்க.

2. இந்திய பத்திரிகைத் தொழில் வளர்ச்சித் தடைகளும் விடைகளும்

(a) தொழிற் பொறுப்பு

இந்திய பத்திரிகைத் தொழில் மேனாட்டுப் பத்திரிகைத் தொழிலைப்போலத் தடைகளின்றி நடப்பதில்லை. இந்திய பத்திரிகைத் தொழிலாளர்மீது தொழிற் பொறுப்பு முழு

தும் சுமத்தப்பெறுவதில்லை. இந்திய பத்திரிகை முதலாளிகளுக்குப் பத்திரிகைத் தொழிலாளர் ஒருவாறு அடிமை முறையில் தொழில் செய்ய வேண்டி இருக்கின்றது. தொழிலாளர்கள் தங்கள் போக்கை முதலாளிகளுக்கு நேர்முகத்தில் வெளிப்படையாகக் காட்ட இயலுவதில்லை; மறை முகமாகவோ, அடக்க முடியாமையாலோ, தப்பித் தவறியோ, தங்கள் உட்கோளைத் தங்கள் கட்டுரைகளில் வெளியிடுகிறார்கள். இந்தியருள், சொந்தப் பத்திரிகைத் தொழிலாளருங்கூட ஒரு சிலரை மகிழ்விக்க வேண்டி இருக்கிறது. அரசியற் கொள்கையினர், மக்கட் கூட்டக்கொள்கையினர், திருந்தாததும் திருந்தியதுமான சமயக் கொள்கையினர், பலப்பல வகுப்புக்கொள்கையினர் என்னும் பகுதிகளோடு கூடிய சந்தாதாரர்களுக்கும் இணங்கி நடந்து, அவர்களை மகிழ்விக்க வேண்டியிருக்கிறது. விளம்பரதாரர்களையும் ஒட்டி ஒழுக வேண்டியிருக்கிறது. இறுதியாக அரசினருக்கு அஞ்சிப் பணிந்தும், சில சமயங்களில் கெஞ்சிப் பணிந்துங்கூட அவர்தம் வரையறுக்கப்பட்டதும், இன்னதென்று தெரியாத அல்லது தெரிந்துகொள்ளக்கூடாத, எனவே வரையறுக்கப் படாததும் ஆன சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வர வேண்டியிருக்கிறது. இத்துணைப் பேர்க்கும் இணங்கிநடக்கும் முறையில் இயல்பாகவே சில சமயங்களில் மனச்சாட்சிக்கு நேர்மாறாகவும் இந்திய பத்திரிகைத் தொழிலாளர் செல்ல வேண்டி இருக்கிறது. நமது பத்திரிகைத் தொழில் மிக்க தூய்மைத்தாகலின், நாம் வரை கடந்து கடனுற்றல் தகாது. நமது பத்திரிகைகளின் கடமை, பிணக்கு விளைப்பதன்று; சிக்கறுப்பதும், வழி காட்டுவதும், மக்கள் கருத்தை எடுத்தியம்புவதும் ஆம். நிலை இவ்வாறுள்ளதால், பத்திரிகைகளின் சொந்தக்காரர்களான முதலாளிகள் பத்திராதிபர்கள் முதலிய பத்திரிகைத் தொழிலாளருக்குத் தொழின்முறை

யிலே எவ்விதத் தடையும் செய்யக் கூடாது; முழு உரிமையும் தருதல் வேண்டும். அம்முதலாளிகள், இன்ன கொள்கையைத்தான் பின்பற்ற வேண்டும் என்னும் பிடிவாதக்காரர்களாயின், அவர்கள், தங்கள் கொள்கைக்கு ஏற்றோரையே தேர்ந்தெடுத்துத் தொழிலில் அமர்த்திக்கொள்ளுதல்நன்மை தரும் என்று அவர்களுக்கு அறிவுறுத்துகின்றேன்.

பத்திரிகைத் தொழில் துறையிலே தலைமை பெற்று விளங்க வேண்டுமென்னும் அவா, நமக்கு இயற்கையாகவே தொழிலின் முறையிலே ஊன்றிப் பெருகி வரினும், நமக்குள்ள மேற்குறிப்பிட்ட தடைகளை நாம் உள்ளபடியே உணர்ந்தவர்களாய், அத்தடைகளினிடையே பொறுமையுடன் தொழில் புரிதல் வேண்டும். பொறுப்புள்ள செய்திகளை வெளியிடல் வேண்டும். ஆராய்ச்சி உரைகளும், மதிப்புரைகளும், கிடைக்கக் கூடிய எல்லாச் சான்றுகளையும் ஆய்ந்தோய்ந்து தெளிந்த பின்னரே வெளிப்படுத்தல் வேண்டும். தன்னையும் உலகத்தையும் வைத்துச் சீர் தூக்கிப் பார்த்து ஓரமற்ற நேர்மையுடன் பணி செய்பவருக்கே அத்தகையதொழிநிலை வாய்க்கும். பத்திரிகைத் தொழிலின் பகையுள் ஒரு கட்சிச் சார்பே மிகப் பெரிது. இக்கட்சிச் சார்பானது உட்பகையைப் போன்ற தீங்கிழைக்கும்; மற்றும், நேர்மைச் சார்புடைய நல்லோரையும் வழுக்கு நேர்மையினராகவோ, இழுக்கு நடையினராகவோ துணியும்படி ஒரு சில சமயங்களில் செய்துவிடுகிறது. ஆகலின், தொழிற் பொறுப்பை எண்ணித் துணிந்து கடனாற்றலே சால்பு.

(b) கல்விக் குறைவு

அரசியல் உரிமையும், பொருளாதார வளமையும், சமயப் பொதுமையும், சமூகப் பொதுமையும், உலக சமுதாய நன்மையில் வேரூன்றிய கருத்தும் நமது பத்திரிகைத் தொழில் முன்னேற்றத்துக்கும், வெற்றிக்கும் அடிப்படைக

ளென்பது மெய்ம்மையே. ஆயினும், இவ்வடிப்படைகள் எல்லாவற்றினுக்கும் அடிப்படைகளாயிருப்பன தேசமெங்கும் பரந்த கல்வியும் இலக்கியமுமே. இந்தியருள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் படிப்பில்லாதவர்களே. அரசியல் உரிமைப் பேற்று நிலையிலே, சமயம்போல் குறுகவும் நீளவும் கூடியதும், நாகரிகக் குறைவினதுமான சட்ட திட்ட வரம்பிலே நிறுத்தப்பட்டிருப்பது இந்தியாவே. சமூக சமயப் பிணக்குக்களினும் அமிழ்ந்துளது. அன்றியும், மிகவும் எளிய நிலையினும் உளது நமது நாடே. ஆகையினலேதான், எல்லாத் துறைகளினும் மேம்பாடடைந்துள்ள ஏனை நாடுகளைக் காட்டினும் இந்தியாவிலே மிகக் குறைந்த தொகையான பத்திரிகைகள் உள்ளன. இந்தியாவிலுள்ள மக்கள் தொகை முப்பத்தைந்து கோடியாயிருக்க, பத்திரிகைகளின் தொகை (1927-ஆம் ஆண்டின் கணக்குப்படி) 3,449 ஆகத் தெரிவிக்கப்படுகிறது. முன்னேற்றமுற்ற நாடுகளில் பத்திரிகைத் தொகையும் சந்தாதாரர் தொகையும் மிகவும் ஏறியிருக்கின்றன. * அந்நாடுகளில் ஒவ்வொரு புகழ் பெற்ற பத்திரிகைக்கும் சுமார் 10,00,000 பேர் சந்தாதாரர்களாயிருக்க, இந்திய

---

*"The Modern Review" for January 1928, page 94:—
The following table will give some idea of the position we occupy in the field of Journalism. The figures are taken from the Statesman's Year-Book for 1927:

Country	Population	Number of Journals.
India	318, 942, 480	3,449.
Canada	8, 788, 483	1,554.
United States of America	115, 378, 000	20,681.
Japan	61, 081, 954	4,592
Chile	3, 963, 462	627.

பத்திரிகைகளுள் ஒன்றுக்காவது 50,000 சந்தாதாரர்களும் கூட இல்லை போலும்! நமது பத்திரிகை ஒவ்வொன்றும் சில நூறுகளாகவும், சில பல ஆயிரங்களாகவுந்தான் செல வாகின்றன.

சுதேச மொழிகள் பற்பலவாகவும் அவற்றைப் பேசு வோர் தொகை கோடிக் கணக்காகவும், இலட்சக் கணக்கா கவும் இருந்தும், கல்வி பரவாமையே இந்திய பத்திரிகை களின் தொகைக் குறுக்கத்துக்குப் பெரிதும் காரணமாயிருக் கிறது. இதன் சார்பாகப் பின் வரும் புள்ளி விவரங்கள் கண்டு நோக்கற்பாலனவாம்:

1933-ஆம் ஆண்டில் இந்திய துரைத்தனத்தாரால் வெளியிடப்பட்ட 1931-ஆம் ஆண்டின் இந்திய ஜனத் தொகைக் கணக்குப்படி இந்திய ஜனத் தொகை 350,529, 557. அதில் ஆடவர் தொகை 180,620,612; பெண்டிர் தொகை 169,908,945; இந்திய சுதேச பாஷைகள் மாத் திரம் பேசுவோர் தொகை 349,887 527. அதில் ஆடவர் தொகை 180,214,643; பெண்டிர் தொகை 169,672,884. (See Census of India 1931; Vol I, Part II, Table XV, Page 471.) இனி இந்திய தாய் மொழிகள் பேசு வோர் தொகைகளைக் குறிப்பிடுவேனாக: தமிழ் தாய் மொழி யாகப் பேசுவோர் தொகை, 20,177,594; மலையாளம் தாய் மொழியாகப் பேசுவோர் தொகை 9,101,440; கன்னடம் தாய் மொழியாகப் பேசுவோர் தொகை 11,196,103; துளு தாய் மொழியாகப் பேசுவோர் தொகை 629,425; தெலுங்கு தாய் மொழியாகப் பேசுவோர் தொகை 26,176 411; வங் கம் தாய் மொழியாகப் பேசுவோர் தொகை 53,037,841; கிழக்கு இந்தி தாய் மொழியாகப் பேசுவோர் தொகை 41,363,439; மேற்கு இந்தி தாய் மொழியாகப் பேசுவோர் தொகை 63,627,043. இவ்வாறாக 53 பாஷைகளைத் தனித்

தனி தாய் மொழியாகப் பேசுவோர் தொகைகள் (See Census of India 1931; Vol I, Part II, Table XV, Pages 510 and 512) வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றுள் தமிழ் முதலிய எட்டுப் பாஷைகளைத் தாய் மொழிகளாகப் பேசுவோர் தொகைகளை மட்டும் இங்கேகாட்டியுள்ளேன். ஏனைய 45 பாஷைகளைத் தாய் மொழிகளாகப் பேசுவோர் தொகைகளை விரிவஞ்சி விடுத்தேன். விடப்பட்ட அவற்றுள்ளும் ஒரு சில மொழிகள் கோடிக் கணக்கான பேர்களாலும், பல மொழிகள் இலட்சக்கணக்கான பேர்களாலும், சிற்சில மொழிகள் ஆயிரக் கணக்கான பேர்களாலும் தாய் மொழிகளாகப் பேசப்பட்டு வருகின்றன. (See Census of India, 1931, Vol I, Part I Report, 150th paragraph, Page 350) இந்தியாவில் பேசப்படும் பாஷைகள் 225 எனக் குறிக்கப்பட்டிருக்கிறன.

இனி, படித்தவர் தொகை குறிக்கப்படுகிறது. இந்தியாவில் 5 வயதுடையவர்களும் 5க்கு மேற்பட்ட வயதுடையவர்களும் ஆக 296,301,570 பேரும், அவர்களுள் ஆடவர் 153, 778, 322 பேரும், மகளிர் 142,523,248 பேரும் ஆவர். அவர்களுள் கல்வி கற்றவர் 28,138,856 பேரும், அக்கற்றவருள் ஆடவர் 23,969,751 பேரும், மகளிர் 4,169,105 பேரும் ஆவர். அப்படிப் படித்தவர்களுள் ஆங்கிலம் மட்டும் பயின்றவர் 3,651, 350 பேரும், அக்கலைப் பயிற்சியினருள் ஆடவர் 3,253, 467 பேரும், மகளிர் 397,883 பேரும் ஆவர். (See Census of India, 1931; Vol I, Part II, Table XIII, Pages 424 and 425) இந்தியாவில் கல்விப் பொருளுடையவர் தொகையைக் கணித்துப் பார்த்தால் 100க்குக் கிட்டத்தட்ட 10 பேர் என்னலாம். எனவே, படியாதவர் 100க்கு 90 பேர் என்னலாம். இதிலிருந்து இந்திய பத்திரிகைகளின் தொகை குறுகியிருப்பதற்குள்ள

காரணங்களில் 100க்கு 90 இந்தியருக்குக் கல்வி பயிற்முமையும் ஒன்ருகும் என ஊகித்தற்கு இடனுளது. ஆகவே, கல்வி பயின்ற இந்தியர் தொகை உயர்ந்த மட்டும் இந்திய பத்திரிகைத் தொழில் வளர்ச்சியும் உயர்ந்து வரும் எனவும் ஊகிக்கலாம் அல்லவா? ஆகலின், நமது அருமைத் தாய் நாட்டிலே இலவசக் கட்டாயக் கல்வி ஏற்படுத்தும் அரும் பெருந்திருப்பணியினை அரசினரும் தாய் நாட்டினரும் ஒருங்கு சேர்ந்து மேற்கொள்வார்களாக.

(c) வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றின் குறைவு

பிரிட்டிஷ் முதலாளிகளாலோ, பிரிட்டிஷ் பத்திராதிபர்களாலோ, அல்லது ஆங்கில இந்திய முதலாளிகளாலோ, நடத்தப்படும் ஆங்கில இந்திய பத்திரிகைகள், சுதேச இந்திய முதலாளிகளாலும், சுதேச இந்திய பத்திராதிபர்களாலும் நடத்தப்படும் பத்திரிகைகளைவிட எல்லாவகையிலும் செழிப்புற்றிருக்கின்றன. ஏனெனில், முன்னிரு வகுப்பினரும் கல்வி செல்வம் இவற்றில் வளனுற்றிருப்பதால், அன்னருள் வயது வந்த ஒவ்வோர் ஆணும் பெண்ணும் பத்திரிகைகளை ஆவலுடன் வாங்கிப் படிக்கிருர்கள். அன்றியும், அரசினர் உதவியுடன் போக்கு வரவுச் சாதனங்களும், வியாபாரமும், கைத்தொழில்களும், ஏற்றுமதிக்குரியவைகளும் அன்னவர் கைக்குட் சிக்கியிருப்பதாலும் அவர்தம் பத்திரிகைகளுக்கே ஏராளமான விளம்பரங்கள் செல்கின்றன. கல்வி இந்தியா எங்கும் பரவும்வரை, நமது நாட்டின் வியாபாரமும், கைத்தொழில்களும், சரக்குக்களின் ஏற்றுமதியும் நம்மவர் கைக்கு வரும்வரை, நமது பத்திரிகைகள் வளனும் அடையா; தொகையினும் அவ்வளவு பெருகா.

(d) தபால் விகிதம்

இந்திய பத்திரிகைத் தொழில் வளர்ச்சிக் குறைவுக்கு இன்னுஞ் சில காரணங்களும் உள. இந்திய தபால் விகிதம்

ஜப்பான் தபால் விகிதத்தைக்காட்டினும் மிகுந்துளது. ஜப்பான் தபால் கார்டு (Post Card) ஒன்றுக்கு 4½ பைசா விலை. இந்தியத் தபால் கார்டு ஒன்றின் விலை 9 பைசா. தபால் கட்டணங்களைக் குறைக்க வேண்டுமென (3-4-1935) இந்தியா சட்ட சபையில் தீர்மானங்கள் நிறைவேறியுள்ளன. ஜப்பானில் பத்திரிகைக்கு மிகவும் குறைந்த தபால் விகிதம் ஓரே ஓர் அரைப் பைசாத்தான். இந்தியாவிலோ, 3 பைசா. இவ்விகிதத்தையும் அதிகப்படுத்த வேண்டுமென்ற திருத்தம் இந்திய சட்ட சபையில் தோல்வியுற்றது. இன்னும் மற்ற ஒவ்வொரு வகையினும் இந்திய தபால் விகிதம் ஜப்பான் விகிதத்தைக்காட்டினும் மிகுந்தேயுளது. இதனாலேதான், ஜப்பான் விரைவிலே பத்திரிகைத் தொழில் துறையிலும் வளர்ச்சியடைந்துகொண்டே வருகின்றது. எளிமை நிலையிலுள்ள இந்தியா, அத்துறையில் போதிய வளர்ச்சியடையாமலும் தளர்ச்சியடையாமலும் அந்தோ! ஒரு வகையான இடைப் பட்டத்தில் கடைப்பட்ட நிலையில் நிற்கிறதே!

(e) அச்சுப் பொறி முதலியன

எழுத்தடிக்கும் பொறிகளும் (Typewriting Machines) இந்திய பத்திரிகைத் தொழில் வளர்ச்சிக்கு அவ்வளவாக உதவுவதில்லை. அக்கருவிகள் ஆங்கிலத்திற்கு இருப்பதுபோல இந்திய சுதேச மொழிகளுக்கு அவ்வளவு நல்ல அமைப்பிலே இல்லாமையால், நல்ல விளக்கமான அச்சுப் போன்ற எழுத்துக்களிலே செய்திகள் உடனுக்குடன் பதிப்பிக்கப்படுவதிலே அவ்வளவாகப் பயன்படுவதில்லை. தமிழ் மொழி எழுத்தடிக்கும் பொறிகள் உள்ளன. இந்திய சுதேச மொழிகள் பலவற்றினுக்கும் அவை இன்னுஞ் செய்யப்படவில்லை. உள்ள சில சுதேச மொழி எழுத்தடிக்கும் பொறிகளும், எழுத்தடிப்பதில் இலகுவும் திருப்தியும்

பயவாமையால், பயன் முறையிலே அவ்வளவாக நன்மை தருவனவாக இல்லை. இந்திய சுதேச மொழிகளிலே (Shorthand in Indian Vernaculars) சுருக்கெழுத்து முறை இல்லாமையும் அம்மொழிகளின் பத்திரிகைகளின் வளர்ச்சிக்கு ஒரு சிறிது தடையாம்.

அன்றியும், இந்திய சுதேச மொழிகளுக்கு எழுத்து வார்ப்பிக்கும் பொறிகளும், அச்சடிக்கும் பொறிகளும் மலிவாக இல்லாமை, பத்திரிகைத் தொழில் வளர்ச்சிக்குப் பெருந்தடையாயிருக்கின்றது. நமது நாட்டு மொழிகளுக்கெல்லாம் அப்பொறிகள் வாய்க்காதிருக்கும் வரை, ஆங்கில தினசரிகளைப்போல மக்களுக்கு விரைவாகவும், புதிதாகவும், நிறைவாகவும், செய்திகளையும், செய்திக் குறிப்புக்களையும் இந்திய சுதேச மொழிப் பத்திரிகைகள் வழங்கமாட்டா. நம் நாட்டுப் பத்திரிகைகளுக்குக் கிடைக்கும் உள் நாட்டு வெளி நாட்டுத் தந்திச் செய்திகளெல்லாம் ஆங்கிலத்திலேயே இருப்பதால், அப்பத்திரிகைகளை அச்சுக்கனுப்பு முன்னே அச்செய்திகளை மொழி பெயர்த்தாக வேண்டியிருக்கிறது. மற்றும், சுதேச மொழிகளிலே நிருபங்கள் (Reporting) தெரிவிக்குமுறையும் ஆங்கிலத்திற்கு அமைந்ததுபோல அவ்வளவு விருத்தியடையவில்லை. இந்நிருபங்களையும் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்தே அச்சிட வேண்டியிருக்கிறது. இம்மொழி பெயர்ப்புக்கள், பத்திரிகை வெளியீட்டின் காலத்தைத் தாழ்த்துகின்றன. இக்காலத் தாழ்ச்சி, செய்திகளின் புதுமைக்குப் பதிலாகப் பழமையே ஆக்குகின்றது. எனவே, இந்திய சுதேச மொழிப் பத்திரிகைத் தொழிலுக்கு இவ்வகையிலும் சிறிது குறைபாடுள்ளது. ஆங்கிலத்தில் வெளியாகும் பத்திரிகைகள், ஜனத்தொகையில் அதிகப்படியான இந்தியர்க்குள்ள செய்தி விடாயையும், செய்திக்குறிப்புரை விடாயையும், அறிவு விளக்க விடாயையும் முற்றிலும்

தணிக்க முடியா. ஆங்கிலம் பயின்றோரைவிடச் சுதேச மொழிகள் பயின்றோரே பெருந்தொகையினரான நமது நாட்டினர்க்கு அம்மூன்று விடாய்களையும் தணிப்பன இந்திய தாய்மொழிகளிலுள்ள பத்திரிகைகளேயாம். இந்திய பத்திரிகைத் தொழிலின் உயரிய வளர்ச்சியை, இந்நாள் முதற்கொண்டு நமது தேச மொழிகளின் வழியே பெரிதும் முன்னேற்றல் வேண்டும்.

காகிதமும் மையும் மலிவாகக் கிடைத்தால் மட்டுமே பத்திரிகைத் தொழில் பெரிதும் விருத்தியடையும். "காகிதம் செய்யும் தொழிற்சாலை, 1590லேதான் முதன்முதலாக இங்கிலாந்தில் ரகண்டு மாகாணத்தில் டார்ட்டு போர்டு என்ற இடத்தில் ஏற்படுத்தினார்கள். அத்தொழிற்சாலை ஸ்தாபித்தவர் சர் ஜான்ஸ்மைல்மான் என்ற ஜர்மானியரேயாவர்." ("தமிழ்நாடு" வாரப்பதிப்பு 28-8-1931; பக்கம் 3) மேனாடுகளில் காகிதத் தொழில்பெருக்கமுற்றதால் காகிதமும் பத்திரிகையும் அன்னாருக்கு எளியவிலைக்குக்கிடைக்கின்றன. காகிதமும் மையும் உற்பத்தி செய்வதற்கு வேண்டும் பொருள்கள் வேண்டும் அளவுக்கு அதிகமாகவே இந்தியாவில் நிரம்பியுள்ளன. நமக்கு வேண்டும் அளவு காகிதத்தையும் மையையும் நாமே உற்பத்தி செய்துகொள்வோமானால், அதுவே பத்திரிகைத் தொழில் வளர்ச்சியில் ஒரு பெரிய முன்னேற்றமாகும். இந்தியாவில் வைக்கோலினின்றும் மை உற்பத்தி செய்து அம்மையினால் ஒரு பத்திரிகையும் அச்சிட்டு வெளியிடப்பட்டதாக ஒரு செய்தி (21–8–1929, 'நவ சக்தி', பக்கம் 7) கிடைத்துளது. மை, காகிதம் முதலியவற்றின் உறபத்தியிலே இந்தியர் இன்னும் முன்னேற்றமடைந்து அவற்றின் விலையை மலிவாக்கித் தற்போதைய காகித விலைப் பளுவையும் பத்திரிகை விலைப் பளுவையும் இயன்ற மட்டும்

குறைத்து, இந்திய பத்திரிகைத் தொழிலை மேலும் மேலும் வளர்ப்பாராக.

அச்சுப் பொறிகளின் உற்பத்திக்கு வேண்டிய உலோகப் பொருள்களும் இந்தியாவில் மலிந்து கிடப்பதால் அவற்றின் இந்திய உற்பத்தியும் பேருதவியாம். அல்லாமல், பெரிய பத்திரிகைத் தொழிலின் அமைப்புக்கு நிழலுருவப் படம் பிடிக்குங் கருவிகளும் (Photographic instruments), ஈயம், செம்பு முதலியவற்றாலான உருவம் பதிக்கும் கருவிகளும் (Blocks made of lead, copper etc) அனைத்தும் தேவையே. இவ்வகைகளிலே இந்தியா, எப்பொழுது எவ்வளவு தூரம் தனக்கு வேண்டியவற்றைத் தானே செய்தமைத்துத் தந்துகொண்டிருக்கக் கூடும் என்பது தேசிய நிபுணர்களே சொல்லத் தக்கது. ஆயினும், அந்நற்காலமும் கடவுளருளால் நம்மவர்க்கு விரைவில் வருவதாகுக என்று விழைவோமாக.

(f) செய்திச் சாலைச் சீர்திருத்தம்

இந்தியபத்திரிகைத் தொழில் வளர்ச்சிக்கு மற்றுமொரு தடையுளது. அது தந்திச் செய்திகள் அனுப்பும் பொறுப்பு முழுதும் உள்ளபடியே வெள்ளையர் கைகளிலே ஏறியிருப்பதாம். ராய்ட்டரால் (Reuter) கொடுக்கப்படும் செய்திகளும் ஆங்கிலேயர் அல்லது ஆங்கிலோ இந்தியரது பத்திரிகைகளுக்கு முதலாவதாகப் பயன்படுத்தப்படுவனவாயிருக்கின்றன. "பிரீ பிரெஸ் ஆப் இந்தியா" ("Free Press of India") செய்திச் சாலை, தூய தேசியக் கொள்கையுடன் சிறப்பாகத் தனது கடமையைச் செலுத்தி வந்துங்கூடப் பொருள் வருமானம் குறைந்துகொண்டே வந்தபடியால், தொழிலை நிறுத்தித் திரும்ப ஆரம்பிக்கலாயிற்று.

"ராய்ட்டர்" "அசோசியேடெட் பிரெஸ் ஆப் இந்தியா", "இந்தியன் நியூஸ் ஏஜென்சி" இவற்றின் சாதாரணத் தந்தி

களும் அவசரத் தந்திகளாகவும், "பிரீபிரெஸ் ஆப் இந்தியா" தந்திகள் அதிகக் காலத் தாழ்ச்சியாகவும் அனுப்பப்படுகின்றனவென்றும், "பிரீ பிரெஸ்" பற்றிய குறைகளும் முறைகளும் கேள்வியில்லாமலே விடப்படுகின்றனவென்றும் "பிரீ பிரெஸ்" நிர்வாக ஆசிரியராயிருந்த எஸ். சதானந்தரால் ('The Modern Review' for May 1929, page 634) சொல்லப்பட்டிருக்கின்றன. அன்றியும், சில ஆண்டுகளுக்குமுன் போலீசாரால் நூற்றுக் கணக்கான வீடு சோதனை போடப்பட்டபோது "பிரீ பிரெஸ் ஆப் இந்தியா" செய்திச் சாலையும் அச்சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. ஏனைச் செய்திச் சாலைக்கு அரசினர் காட்டி வந்த, வருகிற சலுகையைப் "பிரீ பிரெஸ் ஆப் இந்தியா"வுக்குக் காட்டாமல் விட்டதோடு போகாமல், போலீசாரால் சோதனை போடுவித்தல் முதலிய அறுதரவுகளும் காட்டப்பெற்றன. செய்திகள் கொடுக்கப்படும் காரியாலயத்திலேயே "பிரீ பிரெஸ்" போன்ற செய்திச் சாலை இவ்வாறு நெருக்கப்படுமேயானால், இந்திய பத்திரிகைகள் தமது தொழிலை நாகரிகமாக நடத்த இயலாது; கடமைகளை ஒழுங்காக நிறைவேற்ற முடியாது. இன்னோரன்ன காரணங்களால் "பிரீ பிரெஸ் ஆப் இந்தியா"வின் செய்திகள் விற்கும் தொழின்முறை சிறிது காலமாக நின்று போய்த் திரும்ப ஆரம்பிக்கப்பட்டது.

நெருக்கப்படாத அல்லது தடைப்படாத செய்திகளும், முரண்படாத செய்திகளும், அச்செய்திகளின்மேல் எழும் பத்திராசிரியர் குறிப்புரைகளும் வெளியிடப்படுவதிலேயே பத்திரிகைத் தொழிற் பயன் மிகுதியும் நிலைபெற்றுள்ளது. ஆகலின், அரசினரும் சர்வகலாசாலைகளும் கருணை பூண்டு, பத்திரிகைத் தொழிற் கல்வியைப் பாடங்களின் வாயிலாகவும், பயிற்சியின் (நடை முறை) வாயிலாகவும் ஏற்படுத்தி, ஏனை நாகரிக நாடுகள் மதிக்கும்படியான நலன் விளைப்பார்

களாக. ஆள்வோர், ஆளப்படுவோருக்குப் பொது வகையிலும், இந்திய பத்திரிகைத் தொழில் வளர்ச்சிக்குச் சிறப்பு வகையிலும், போதரவும் புகழும் பெருமையும் உண்டு பண்ணுவாராக.

3. பத்திரிகைத் தொழிலும் இந்திய வாலிபரும்

தொழில்களிலே, பத்திரிகைத் தொழில் உயர் நிலை உடைத்தென்றும், உலகத்தை நாகரிக வாழ்க்கையிற் பயிற்றும் நல்லாசிரியர் பொறுப்புக்களில் பத்திரிகைத் தொழிலாளியின் பொறுப்புக்களேமிகுந்தனவென்றும், இதுவரை செய்த ஆராய்ச்சியில் ஒருவாறு காணப்பட்டன. ஆகலின், பத்திரிகைத் தொழிலின் பலநிலைகளில் அமர்ந்து பணியாற்ற விரும்புநர், கல்வியாளரும் பயிற்சியாளரும் ஆனவராய் இருத்தல் வேண்டும். இந்திய பத்திரிகைத் தொழில் படிப்படியாக வளர்ச்சியும் முன்னேற்றமும் அடைந்துகொண்டு வருவதாக ஒருவாறு நம்பப்படுதலின், பத்திரிகைத் தொழிலில் பயிற்சி பெற்றோரது தேவையும் நாளும் அதிகரித்து வருகிறது. இது இயல்புதானே!

(a) பத்திரிகை நிலையங்களும் இந்திய வாலிபரும்

நமது நாட்டு வாலிபர், பத்திரிகைத் தொழிலின் வெளித் தோற்றங்களாகிய அதிகாரத்தையும் செல்வாக்கையும் மாத்திரம் கண்டு மயங்கி, அதனிடம் காதல் பூண்கின்றனர். அவ்வாலிபர், வெகு பொறுப்பும் இடையூறும் செறிந்த இத்தொழிலின் உட்புறத்தை அறியாதவர் என்பதே எனது கருத்து. இந்திய பத்திரிகைத் தொழில் துறையை உள்ளபடி பார்க்கையில், அது குறுக்கமுடையதென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனெனில், இந்தியாவிலே தினசரிப் பத்திரிகைகள் 2000 கூட இல்லையே! அவ்வளவு குறுகிய துறையிலே மிகப் பல வாலிபர்கள் இறங்கித் தொழில் புரிவ

தென்பது முடியாத காரியமே. இடங் கொண்ட மட்டும் நுழைந்துகொள்ள விரும்புவோர் அனைவரும் அத்தொழிலின் உயர்நிலையை அடைவது மிக அரிது. இவற்றால், பத்திரிகைத் தொழிலுக்குச் சிலரே வேண்டப்படுபவர் என்று வாலிபர் எண்ணற்க. பழைய 1927ன் கணக்கின்படி கண்ட இந்திய பத்திரிகைகளின் மொத்தம் 3,449 ஆம். தற்காலம் அவற்றின் தொகை வளர்ந்திருத்தல் கூடும். இத்துணைப் பத்திரிகை நிலையங்களினும் பல பிரிவுகளின் கீழும் இடங் கிடைத்தமட்டும் வாலிபர் நுழையலாம். அன்றியும், பத்திராதிபர், உதவிப் பத்திராதிபர், பிரசுரகர்த்தர், நிருபர், மதிப்புரையாளர், விளம்பரக் கலையாளர் என்பார் நிலைகளிலே வாலிபர் பலர் தொழிலாற்ற இடமுளது. இந்நிலைகளில் பத்திரிகைத் தொழிலாற்ற விழையும் வாலிபர் சீரிய தொழில் தேர்ச்சியுடையவராகவே இருத்தல் வேண்டும்.

(b) பத்திரிகைத் தொழிற் கல்வி

பத்திரிகைத் தொழிலில் அமர்ந்துழைக்க விரும்பும் வாலிபருக்குள் ஏற்கனவே பயிற்சியும் ஆய்வும் செய்ய வேண்டுவதில்லை என்னுமெண்ணம் சிறுபான்மை உண்டு. அது தவறான எண்ணமே. பத்திரிகைத் தொழில் நிலையத்துள் நுழையும் ஒரு வாலிபன், முந்திய பயிற்சியிலனாயின், அவன் அத்தொழிலுக்குச் சிறிதும் உதவமாட்டான். பி.ஏ., எம்.ஏ., முதலிய சர்வ கலாசாலைப்பட்டம் வெறும் ஏட்டுச் சுரைக்காய் தானே! பள்ளிக் கணக்குப் புள்ளிக்குதவுமா? சர்வ கலாசாலையில் அப்பட்டம் பெறாத ஒரு சில வாலிபரும் இத்தொழிலுக்கு ஏற்றவராயுளர். இருப்பினும், தொழில் நடை முறையிலே பாடு படுவாராயின், எத்தகையோரும் தொழில் திறனும், வெற்றியும் உறுவர். பி.ஏ., முதலிய உயர்தரக் கல்வியுடனே கூர்ந்த அறிவும் படைத்த ஒரு வாலிபனுக்கு அக்கல்வியறிவும், இயற்கையறிவும் பத்திரிகைத்

தொழில் என்னும் கட்டடத்துக்கு அடிவரிகளாம் என்பது ஒப்புக்கொள்ளத்தக்கதே. அக்கால இக்கால தேச சரித்திரக் கல்வியும், நமது நாட்டுக்கு ஏற்ற பொருளாதாரக் கல்வியும், தாய்மொழிக் கல்வியும் கூடியிருப்பின், அவ்வடிக்கட்டடம் மிகுந்த வலிமையுடைத்தாம். வாய்த்த அவ்வடிக்கட்டடத்துக்கு நடைமுறையிலுள்ள அரசியன்முறை, மக்கட்கூட்ட நிலைமை, பயிர்த் தொழில், கைத் தொழில் இவற்றைப்பற்றிய அறிவுடைமை, மேற்கட்டடமாகும். அம்மேற்கட்டடத்துக்கு ஒரு மேன்மாடி வேண்டுமல்லவா? அஃது எது? பேச்சுரிமை, அச்சுரிமை முதலியவற்றின் எல்லைகளைக் காட்டும் சட்டதிட்டங்களை ஒதியுணர்ந்திருப்பதே மேன்மாடியாம். அதன்மேல் இந்திய தேச சரித்திரம் படித்தறிதல் வேண்டும். அதிலே பிரிட்டிஷ் பகுதியிலே நுழைந்து பார்க்க வேண்டும். அப்பகுதியில் இந்தியாவைப்பற்றிப் பாராளும் மன்றத்தினல் (Parliament) செய்யப்பட்ட சட்டதிட்டங்களும், அரசியலமைப்பின் மாற்றங்களும், சீர்திருத்தங்களுமாகிய இவற்றைத் தற்காலம் வரை அறிந்திருத்தல் வேண்டும். அதுவும் போதாது. பிரிட்டிஷ் சரித்திரத்தில் முக்கியம் 19-ஆம் நூற்றுண்டு முதல் தற்காலம் வரை படித்திருத்தல் வேண்டும். சென்ற நூற்றுண்டின் இடையிலிருந்த ஐரோப்பா தேச சரித்திர அறிவும் வேண்டும். அமெரிக்கா தேச சரித்திரமும் கற்க வேண்டும். விரைவில் முன்னேறிய ஜப்பான் தேச சரித்திரப் பயிற்சியும் வேண்டும். இப்பல வகைக் கல்வியறிவே பத்திரிகைத் தொழிலாகிய மேன்மாடியில் கவிழ்க்கப் பெறும் பொற்கலசம் போன்றதாம்.

(c) தொழிற் பயிற்சி

இவற்றுட் பத்திரிகைத் தொழில் நடை முறையறிவு பெரிதும் திருந்தியமைதல் வேண்டும். அதற்கு முன்னர்

நல்ல நல்ல பத்திரிகைகளையும் இனிய எளிய அழகிய உரை நடை நூல்களையும் ஓதி, அவற்றின் உரை நடைக் கருத் தமைதிகளை உணர்ந்து, பின்னர் எழுதுவதில் நேர்மை, சீர்மை, கூர்மை, ஓர்மை என்னும் இப்படி முறைகளில் அழுத்தமும் மிக்க கவர்ச்சியும் வாய்ந்திடல் வேண்டும். இவ் வாய்ப்புளதேல், பல்கலை அறிவென்னும் பொன் மலர், தொழில் நடை முறையறிவென்னும், இனிய நாற்ற முடைத்தே. அந்நாற்றமுடைமையே பத்திரிகைத் தொழி லின் பருவ மணமாம். அப்போது, தன் பருவ மலராகிய அத்தகு பத்திரிகையின் மணத்துக்கு ஏராளமான சந்தா தாரர்களாம் வண்டுகள் தாமாகவே வந்து விழும். இன் னணம் கலை முறையினும், நடை முறையினும் மிக உயர்ந்த நிலையோடு கூடிய ஆற்றல் ஒருவனுக்கு இல்லையாயின், அவன் பொறுப்பு மிக்க பத்திரிகைத் தொழிலுக்குப் பொருத்த முற்றவன் அல்லன். ஆகலின், அவன் பத்திரிகைத் தொழி லில் அமர்தலும் கூடாது; அவனைப் பிறர் அதில் அமர்த் தலும் கூடாது. அவன் தனக்கொத்த வேறு தொழிலில் அமர்ந்துகொள்ளக் கடவனாக.

(d) இன்றியமையாத பேறுகள்

பத்திரிகைத் தொழிலில் அமர்ந்துள்ள வாலிபர்க்கும், இனி அமரப்போவார்க்கும் நடுவு நிலை வகித்தல் இன்றி அமையாக் கடனும். புதியராய்த் தொழிலுக்கு வந்துள்ள வாலிபர், சில அமயங்களிலே பிழை புரியினும் புரிவர். சிலர் பால் நயந்தவறி நடக்கினும் நடப்பர்; முறையல்லாக் கருத் துக்களை விரிக்கினும் விரிப்பர்: துணியக்கூடா முடிபுகளைத் துணியினும் துணிவர். 'ஆனைக்கும் அடி சருக்கும்,' என்ற படி எத்தொழிலாளர்க்கும் துவக்கத்தில் பிழைபாடு உறு தலுமுண்டு. ஆயினும், அழுக்காறு, இழிந்த நோக்கங்கள், ஒரு சார்புடைமை என்னும் சோதனைகளைத் தாண்டிய

நடையாளனுக்குச் சிறிய தவறுகள், செல்வாக்கை ஒரு போதும் கெடுக்கமாட்டா. ஆனால், நட்பை முன்னிட்டோ, பகைமையை முன்னிட்டோ அச்சோதனைகளுக்குக் கட்டுப் பட்டவனுக்கு, அவை செல்வாக்கையும், தொழிலையும் கெடுத்துவிடும். நல்வழிப்பட்ட உண்மையாளனுக்கே வாழ்க்கையின் எந்நிலையினும் பரிசுளது. நடுவு நிலையும் உண்மையும் கூட்டிக் கருத்துரை பெருக்கிய பத்திரிகைத் தொழிலாளி தன்னைப்பற்றியாவது தொழிலைப்பற்றியாவது எட்டுணையும் அஞ்சியதில்லை. ஏனெனில், உண்மை நிலை மறைக்கப்படுந் தகைத்தன்று. அந்நிலை, மக்கட் கூட்டத்தின் முன்னே 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல அல்லது மலை இலக்காக விளங்கி நிற்பதொன்றும். மக்கட் கூட்டத்தின் ஆதரவை விரும்பும் பத்திரிகைத் தொழிலாளி, அரசியல் தொண்டனைப்போலவும் சமூக ஊழியனைப்போலவும் அக் கூட்டத்தை மதித்தொழுகுதல் வேண்டும். மதியாதவன் ஆதரவை இழந்துவிடுவன் என்றஞ்சி அக்கூட்டத்தவர் மாட்டு அடிமைப் பான்மை காட்டுதலுங் கூடாது. ஏனென்றால் அப்பான்மையானது தொழின்மதிப்பையும் கெடுத்து, வெறுப்பையும் காட்டிவிடும். எனவே, உண்மையோடு கூடிய மட்டற்ற மரியாதையே தன்மையிடத்தும் முன்னிலையிடத்தும் நன்மை தரும் என்னும் மெய்ம்மையைப் பத்திரிகைத் தொழில் விருப்பம் பூண்ட வாலிபர் கருத்தில் ஊன்றக் கடவர். மேலும் நல்ல பண்பும், நன்மை தீமைகளைப் பகுத்தறியுந் திறனும், நன்மக்கள் தன்மையாய அன்பு நிறைவும், பொறுப்பில் வளருந் தறுகண்ணண்மையும், தன்னம்பிக்கையும், எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளிலே எஞ்ஞான்றும் ஊற்றெடுத்தோடும் மாசற்ற நம்பிக்கையும் ஆகிய இந்த ஆறும் பத்திரிகைத் தொழிலாளிக்கு வாய்க்க வேண்டிய இன்றியமையாத பேறுகளாம்.

(ஐ) சர்வ கலாசாலைகளும் பத்திரிகைத் தொழிற் கல்வியும்

இங்கிலாந்து அமெரிக்கா முதலிய மேனாடுகளில் பல பல்கலைக் கழகங்கள் (Universities) தங்கள் பாட புத்தகங்களின் பகுதியிலே பத்திரிகைத் தொழிற் கல்வியையும் ஏற்கனவே இணைத்துள்ளன. அந்நாடுகளில் பத்திரிகைத் தொழில் கலைகளுள் ஒன்றாக ஏற்பட்டுப் பல இடங்களில் அத்தொழிலின் தனிப் பயிற்சிக்கு வேண்டிய ஒழுங்கமைப்புக்களும் ஏற்படுத்தப்பட்டுள. அமெரிக்க பல்கலைக் கழகங்கள் மதிக்கத் தகுந்த பெருந்தொகை வாலிபரை ஏற்று வருகின்றன. அறிஞர் 'ஜோஸெப் புலிட்ஜெர்' (Mr. Joseph Pulitzer) பத்திரிகைத் தொழிற் கல்லூரியை ஏற்படுத்திக் கொடுத்ததுமன்றி அதன் நிலையான நடைபேற்றுக்கு வேண்டிய மூல தனத்தையும் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் நன்கொடையாகச் சேர்த்துள்ளார். இதுவன்றோ பத்திரிகைத் தொழிற்பற்று! ஆனால், இந்திய அரசினரும், மக்களும் பத்திரிகைத் தொழிற் பயிற்சிக்கு அத்தகைய நிலையான ஏற்பாடு ஒன்றேனும் செய்யாதிருப்பது, இந்திய பத்திரிகைத் தொழில் வளர்ச்சிக்கு ஒரு பெருங்குறையேயாகும். இந்திய பல்கலைக் கழகங்கள் ஆண்டுதோறும் படைத்துக்கொண்டு வரும் நூற்றுக் கணக்கான பட்டதாரிகளில், வயிற்றுப் பிழைப்பிற்கும், மக்கட் கூட்டத்திற்கும், தேசத்திற்கும், அரசியலுக்கும் உழைக்க எத்துணையோ பலர் விரும்புவது போலவே, இயல்பாகவே பத்திரிகைத் தொழில் துறையில் தொண்டாற்றும் விருப்பினரும் உளராவர். அரசாங்க ஊழியங்களின் ஒவ்வொரு பகுதிக்கும் பயிற்சி பெற்ற தக்க வாலிபரை விரும்பித் தேடிப் பொறுக்கி எடுத்து வரும் அரசினர், பத்திரிகைத் தொழில் விருப்பமுள்ள வாலிபர்க்கு அத்தொழிற் கல்வி பயிற்றாதிருப்பது அழகுதானோ? இந்திய மக்களாவது முயல்வார்களா?

பத்திரிகைத் தொழிற் பயிற்சியை ஒரு பாடமாக அமைக்கவேண்டுமென்று சீன தேசச் சர்க்காரார் ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளிலும், பத்திராதிபர் தொழிற் பயிற்சிக்கெனச் சர்வ கலாசாலைகளில் ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

"இந்தியாவைத் தவிர மற்ற நாகரிகமுள்ள நாடுகளிலெல்லாம் பத்திராதிபர் தொழில் போதிக்கப்பட்டு வருகின்றது. சீனதேசம் குடியாட்சி பெற்ற பிறகு பல்வேறு துறைகளில் தீவிரமாக முன்னேறி வருவதைப் போலவே பத்திரிகைகளை நடத்தும் விஷயத்திலும் சீன சர்க்கார் கவனஞ் செலுத்தி வருவது பாராட்டத் தக்கதாகும். ஆனால், இந்தியாவுக்குமட்டும் இந்த நல்ல பாக்கியம் உண்டாகவில்லை. பத்திரிகை நிர்வகித்து நடத்துவதும், பத்திராதிபராயிருப்பதும், இந்நாட்டிற்குப் புதியனவான தொழிலாகும். அத்துறையில் நல்ல பயிற்சி பெறுவதற்கான சாதனங்களுமில்லை; பத்திரிகைகள் முன்னேற்றத்திற்குச் சர்க்கார் போடும் முட்டுக்கட்டைகளை யாவரும் அறிவார். ஆகையால், பத்திரிகைத் தொழிலைப் பக்குவப்படுத்தவும், அதை அபிவிருத்தி செய்யவும், சர்க்காரார் துணை புரிவார்களென்று எதிர் பார்ப்பது வீண் வேலையாகும். உள்ள பத்திரிகைகளின் தலையில் கை வைக்காமல் சர்க்கார் இருத்தல் பெரும்பாக்கியமாகும்.

"ஆனால் இந்தியாவிலுள்ள சர்வ கலாசாலைகளும், மற்றோரும் பத்திரிகைத் தொழிற் பயிற்சியை மாணவர்களுக்குப் போதிக்க வசதிகள் அமைக்க வேண்டுவது அவசியமாகும். ஒரு தேசத்தின் சிறப்பும் பலமும் பத்திரிகைகளைப் பொறுத்தனவாயிருக்கின்றன. பத்திரிகைகளை வாசிப்பதனால் உண்டாகும் நன்மைகளை இக்காலத்தில் நாம் விளக்கிக் கூற வேண்டுவதில்லை. குறிப்பிட்ட ஒரு சர்க்காரையோ, ஜனசமூகத்தையோ, ஆக்கவும் அழிக்கவும் சக்தியுடையன பத்திரி

கைகளேயாகும். பத்திராதிபர் தொழில் வெகு பொறுப்பும் சங்கடமுமுள்ளதாகும். அதற்குத் தக்கவாறு பயிற்சியும் இல்லாமையால், பத்திரிகைகளுக்கும் பத்திராதிபர்களுக்கும் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களை யாவரும் அறிவர். ஐரோப்பாவிலுள்ளாரைப்போலச் சாஸ்திரீய முறையில் நல்ல பயிற்சிபெற்ற பத்திராதிபர்களே இந்தியாவில் இல்லையென்று கூறலாம். ஒரு சிலர் மட்டும் சிறந்த பத்திராதிபர்களாக இந் நாட்டில் இருந்தபோதிலும், அஃது அவர்களுடைய தனிப் பட்ட அரிய முயற்சியினாலே சித்தியாயிற்றேயன்றி, படித்துக் கற்றுக்கொண்டதனாலன்று. சுய அறிவும் ஆற்றலும் எல் லோருக்கும் அமைவதில்லை; ஒரு சிலருக்குத்தான் அந்தப் பாக்கியம் கிடைக்கின்றது. பயிற்சி முறை இல்லாததனால் மற்றவர்களை இத்தொழிலில் பழக்குவது கஷ்டமாயிருக்கின் றது. எண்ணும் எழுத்தும் தெரிந்தவரெல்லாம் பத்திராதிப ராகிவிட முடியாது; பாஷா பண்டிதர்களும், படித்துப் பட் டம் பெற்றவர்களும் பத்திராதிபர்களாகிவிட முடியாது. பகுத்தறிவும், படிப்பும், ஆண்மையும், ஆராயும் சக்தியும் கொண்டவர்களே நல்ல பத்திராதிபர்களாக முடியும். இவ் விதக் குணங்களைப் பெற்றவர்களுக்கு, பத்திராதிபர் தொழி லுக்கு அவசியமான சாஸ்திரீய முறையில் பயிற்சியும்கொடுக் கும் பக்ஷத்தில் இந்நாட்டின் பத்திரிகைத் தொழிலும், அதன் சிறப்பும் குன்றின்மேலிட்ட மின்சாரவிளக்குப்போல் பிரகாசிக்குமென்பதில் சந்தேகமில்லை. சீனத்துத் தேசீயத் தலை வர்களைப் பார்த்தாவது இந்திய தலைவர்கள் நடந்துகொள் வார்களென்று நம்புகிறோம்.'' ('தமிழ் நாடு' வாரப்பதிப்பு; 28-8-1931; பக்கம் 13)

இந்திய பத்திரிகைத் தொழில் நாளுக்கு நாள் இடை யூறுகளினிடையே வளர்ந்து வருவதால், இத்தொழிற் பயிற்சியின் இன்றியமையாமையும் நாளுக்குநாள் வளர்ந்து

வருகின்றது. பல இந்திய வாலிபர், ஏனைத்தொழிற் கல்வியைப்பார்க்கிலும் பத்திரிகைத் தொழிற் கல்வியைப் பெரிதும் விழைகின்றனர். அன்னார்க்குப் பத்திரிகைத் தொழிற் கல்வியும், அதிலே தேர்ச்சி பெற்றவர்க்குப் பட்டப் பெயர்களும் தருதல் வேண்டும். அவ்வாறு பட்டம் பெற்று வெளிவரும் வாலிபர்க்குப் பத்திரிகைத் தொழில் நிலையங்கள் நல்வரவு கூறி அவர்நமை மிகுந்த அன்புடன் ஏற்றுக் கொண்டு ஆதரித்து வரும். அதன் பயனாகப் பத்திரிகைத் தொழிற் கல்வித் தேர்ச்சி பெற்ற ஐரோப்பிய அமெரிக்க வாலிபர்களின் கட்டுரைகளைப்போல, இந்திய வாலிபர்களின் கட்டுரைகளும் பற்பல பத்திரிகைகளையும் அழகுபடுத்தி மதிப்பினுயரும். இதனால், இந்திய பத்திரிகை நிலையங்களில் பெரும்பாலனவும் தொழில் முறைத் தேர்விலரால் படும் துன்பம் நீங்கி இன்பமோங்கிவிடுவனவாம். பத்திரிகைத் தொழிலும் நாகரிக முறையிலே நடைபெற்றிலகும்; அதனால், இந்தியத் தாய்க்கும் பெருமை நீடும்.

(f) தொழிற் பயிற்சிக்குரிய பாடங்கள்

இந்திய பத்திரிகைத் தொழிற் கல்விச் சாலைகள் ஆங்காங்கு அமைக்கப் பெறுவிடினும் கலாசாலைப் பாடங்களுடன் பத்திரிகைத் தொழிற் கல்விப் பாடங்களும் ஆங்கிலத்திலும் சுதேச மொழிகளிலும் தெள்ளிய முறையிலே போதிக்கப் படல் வேண்டும். இந்தியா இங்கிலாந்துள்ளிட்ட ஐரோப்பா அமெரிக்கா ஜப்பான் முதலிய தேச சரித்திரங்களில் முற் காலப்பகுதிகள் பொது வகையிலும் பிற்காலப்பகுதிகள் சிறப்பு வகையிலும் உப பாடங்கள் ஆக்கப்படல் வேண்டும். அப்போதுதான், பற்பல அரசியல் சரித்திரங்கள், உரிமை பெற்ற அரசாங்கங்களின் வளர்ச்சி கிளர்ச்சி தளர்ச்சிகள், அரசியற்புரட்சிகள், சீர்திருத்தங்கள், மாறுதல்கள், எல்லா வகை முன்னேற்றங்களுக்கும் காரணமான மக்கட் கூட்டத்

தின் வழாத செல்வாக்கு, சட்ட திட்டங்கள், வரி விதிப்பு, வரிகொடா இயக்கத்தின் ஆக்கம் கேடுகள், ஒழுக்க நிலைகள், நிற வேற்றுமையால் வந்த தன்மை, அதுபற்றி வந்த போர்கள், முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் பிணக்குப் போர்கள், குடியேற்ற நாடுகளின் சரித்திரங்கள் இவையெல்லாம் உணரப்பெறும். இவற்றின் பயிற்சியோடு நில்லாமல், இந்தியாவின் பற்பல சமயங்கள் வகுப்புக்கள் பழக்கவழக்கங்களுக்கு ஏற்றபடி மக்கட்கூட்டத்திற்கு நலன் விளைக்கும் சட்ட திட்டங்களின் முக்கிய பாகங்களும், அவற்றின் நிலையான பகுதிகளும், சமூகவியல் நிலைகளும், பொருளாதார நிலைகளும், உடன்படிக்கைகளும், ஆட்சி முறைக்கேற்ற பல அமைப்புத் திட்டங்களைப் பயன்படுத்தலும், கூட்டுறவு முறைகளும் பயிற்றப் பெறுதல் வேண்டும். இவற்றையெல்லாம் அறிந்தாலொழியப் பத்திரிகைத் தொழிற்கல்வி அமையாது. அப்பாடங்களின் தேர்ச்சிக்கு நூற்றுக்கு முப்பத்தைந்து அமிசங்கள் (Marks) தேவையென வரையறுக்கப்படல் வேண்டும். இவையெல்லாவற்றையும்விட மிகச் சிறப்பாகப் பத்திரிகைத் தொழிலைப் பற்றிப் பல தனி நூல்கள் இயற்றுவிக்கப்பட்டுப் பாட புத்தகங்கள் ஆக்கப்படல் வேண்டும். இப்பாடங்களெல்லாம், பத்திரிகைத் தொழிற் கல்வியாளருக்குத் தாய் மொழிப் பாடங்களுடன் இணைக்கப் பெற்ற இஷ்ட பாடங்கள் (Optional) ஆக்கப் பெறுதலே மெத்த நலன் விளைக்கும். பத்திரிகைத் தொழிற் கல்வியின் இஷ்ட பாடங்களில் மட்டும் நூற்றுக்கு நாற்பது அமிசங்கள் பெற்றவர்களே தேர்ந்தவர்களெனக் கொள்ளல் வேண்டும். பத்திரிகைத் தொழிற் கல்விக்குத் தனி நூல்கள் இலவே எனின், தக்காரைக் கொண்டு அவற்றை எழுதுவித்தல் வேண்டும்.

(g) பட்டங்களும் நற்சாட்சிப் பத்திரங்களும்

பத்திரிகைத் தொழிலின் பயிற்சி பெற்ற வாலிபர் இல்லாமையால், அத்தொழில் நடை முறையின் பொருட்டு அத்துறையில் விருப்பினரும், கூடியமட்டும் தகுதியுடையாருமே பயிற்சியின் பொருட்டுச் சில நிபந்தனைகளுடன் தொழிலில் அமர்த்தப்பெறுதல் வேண்டும். இவ்வேற்பாட்டுடன், மேல் குறிப்பிட்ட பாடமுறைகளும், தேர்ச்சிபெற்றூர்க்குப் பட்டமளித்தலும், நற்சாட்சிப் பத்திரமளித்தலும் பத்திரிகைத் தொழிலுக்குப் போதிய ஆரம்ப நிர்வாக அமைப்புச் சாதனங்களாம். சாத்திய நிலை, பட்டதாரிகள் தொழிலிலிறங்கி உழைக்க வுழைக்கத் தானே கைகூடும். ஆகலின், இந்தியாவின் பொறுப்பை வருங்காலத்தில் வகிக்க வேண்டுபவரான வாலிபரது நலனையும், பெருமை பொருந்திய பத்திரிகைத் தொழில் முன்னேற்றத்தையும் கோரி, இந்திய வாலிபருக்குப் பத்திரிகைத் தொழிற் கல்விப் பயிற்சி, தற்கால முறைக்கு ஏற்றபடி ஊட்டப் பெறுதல் மிகவும் முக்கியமாகும். இதனை அரசினரும், சர்வ கலாசாலைகளுக்கு உரிய கல்வியதிகாரிகளும், சட்ட சபை உறுப்பினரும் நன்கு சிந்தித்துத் தெளிந்து, கூடிய விரைவிலே குறை தவிர்த்து உதவுவார்களாக.

(h) சில வழி வகைகள்

இந்திய பத்திரிகைத் தொழிற் கல்வியின் இன்றியமையாமையை நன்குணர்ந்து இந்திய தேசியத் தலைவர்கள், அரசினரை எதிர்பார்த்துக் காலங் கடத்தி வருந்தாமல் இந்தியாவின் பத்திரிகைத் தொழிற் கல்விச் சாலையொன்றை நிறுவி வாலிபரைப் பயிற்றுவார்களாக. அக்கல்விச் சாலைக்கு ஊட்டும் பொருளும் வளனுற அமைத்தல் வேண்டும். இன்றேல் அது நீடு நில்லாது. ஆகலின் மூலதனம் இன்றியமையாதது. தேசியத் தலைவர்கள் பெரும்பொருளை மூல தனமாகத்

திரட்டிக் குவித்து, அகில இந்திய பத்திரிகாசிரியர்கள் சங்கமும் பத்திரிகைத் தொழிற் கல்விச் சாலேயும், ஒவ்வொரு முக்கிய மாகாணத்திலும் நிறுவி, இவற்றுக்குக் கிளைகளும் வேண்டுமிடங்களிலே நிறுவுதல் பெரிதும் விரும்பத்தக்கதாம். இச்சங்கம் ஓர் ஆங்கில நாள் வெளியீடு ஏற்படுத்தல் வேண்டும். அதற்குப் புகழ் பெற்ற இந்திய தேசீயப் பத்திராசிரியர்களைக் கொண்ட இதழாசிரியர் கூட்டம் (Editorial Board) ஒன்றும் அமைத்தல்வேண்டும். அவ்வெளியீட்டின் முக்கியப் பொருண்மொழிகளைச் சுதேச மொழிப் பத்திரிகைகள் அவ்வம்மொழிகளில் மொழி பெயர்த்து வெளிப்படுத்தல் வேண்டும். இம்முறையால் பத்திரிகையின் நடைமுறைகளை வரையறுத்து அமைத்துக்கொண்டு தொழிலே நடத்தல் கூடும். பத்திரிகைத் தொழிற்குரிய சங்கமும், கல்விச்சாலேயும், பத்திரிகையும், இவற்றின் ஒழுங்கான நடைபேறும், நிலேயும், ஒற்றுமையும் இன்றி, ஒரு நாட்டினரின் உடன் பிறந்த உரிமையோடு கூடிய செல்வாக்கைப் பத்திரிகைத் தொழில் வளர்ச்சி போன்ற தேச முன்னேற்றத் துறையிலே செலுத்தி வெற்றி பெற முற்படுவது, விழலுக்கு முத்துலேயிட்டு இறைத்த நீராகும். அன்றியும், அப்பத்திரிகைத் தொழிற் சங்கம் கல்விச்சாலே இவற்றினுக்குப் புத்தக சாலே என்னும் நூல் நிலேயம் (Library) வேண்டுவதும் முக்கியம். அந்நூல் நிலேயத்தில் பத்திரிகைத் தொழிலுக்குத் தேவையான நூல்கள், அறிக்கைகள், சொற்பொழிவுகள், குறிப்புக்கள், முக்கியப் பத்திரிகைகளின் பழைய தொகுதிகள், முற்குறிப்பிட்ட பத்திரிகாசிரியர்களின் சங்க வெளியீட்டுத் தொகுதிகள் ஆகிய இவைகள் சேர்த்து வைக்கப்படல் வேண்டும்.

தொழில் தகுதி பூண்ட இந்திய வாலிபர்களே, உள் நாடுகளிலும் வெளி நாடுகளிலுமுள்ள முக்கியப் பட்டினங்க

ளிலே பத்திரிகை நிருபர்களாக அமர்த்தல் நமது பத்திரிகைத் தொழில் வளர்ச்சிக்குச் சிறப்படையாளமாகும். நமது நாட்டின் சில பத்திரிகைகளுக்கு லண்டன்மா நகரிலே நிருபர் உளர். இன்னும், வல்லரசும், முன்னேற்றமுமுற்ற வேறு வெளி நாடுகளின் தலைமைப் பட்டினங்களிலும் இந்தியாவின் பல மாகாணங்களிலுமுள்ள தினசரிகளுக்கு, நமது மற்ற மாகாணங்களில் உள்ளது போலவே, ஏற்கனவே நிருபர் உளர். இந்நிருபர்கள், அவ்வம்மாகாணங்களின் நாகரிகப் போக்குக்கள், நிகழ்ச்சிகள், தாய் மொழிப் பத்திரிகைகள் இவற்றைப் பற்றி மிகுந்த நோக்கம் வைத்துச் செய்திகளை அறிவிக்கிறார்கள். இவர்களைப் போலவே, கலாசாலைப் பட்டம் பெற்ற நமது வாலிபர்களும் நிருபர்களாகப் பயிற்றப் படுதல் வேண்டும். மற்றும், கூடியவரையில் செய்திகளைத் தேசீயமாக்கும் பொருட்டு, நல்ல செல்வாக்கும் செழிப்புமுள்ள நமது தினசரிகள், தத்தம் தாய் மொழிப் பத்திரிகைகளில் வெளியாகும் அரிய செய்திகளைக் கவனித்து உதவக் கூடிய பல வேறு மாகாணங்களிலுமுள்ள தகுதியான வாலிபர்களைத் தங்கள் உதவிப் பத்திராதிபர்களுக்குத் துணையாகச் சேர்த்துக்கொள்ளுதலும் மிக விரும்பத்தக்கதென்று உன்னுகிறேன். இம்முறை, வேறு வேறு தாய் மொழிகளை உடைய பல மாகாணங்களின் வாலிபர்களையும் தேசீயப் பற்றுடன் பத்திரிகைத் தொழிலில் பயிற்றுவிக்கும் பயனுடைத்து அல்லவோ? மேலும், நமது வாலிப பத்திரிகைத் தொழிலாளிகளை இந்தியாவின் பல உள்நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்யும்படி அனுப்பி, ஆங்காங்கு நிகழும் புதுமைகளையும், கவர்ச்சி தரும் உயரிய பல செய்திகளையும், பல அறிஞரைப் பேட்டி கண்டு பேசிய பேச்சுக்களையும், அவ்வந் நாடுகளின் பத்திரிகைத் தொழில் நிலைமைகளையும், பிறவற்றையும் ஆராய்ச்சியுடன் நமது பத்திரிகைகளுக்கு எழுதுவிக்கு

முறையிலே, அன்னவருக்குப் பத்திரிகைத் தொழிலறிவை வளம்படுத்தலும் விரும்பக்கூடியதே. நமது தினசரிகள், தங்களுக்கு ஓர் ஒற்றுமையான நடை முறையை ஏற்படுத்திக் கொண்டு, அவ்வேற்பாட்டின்படி அவ்வாலிபர்களைத் தமது பத்திரிகை நிலையங்களிலே குறிப்பிட்ட கெடுவுகளுக்கு வேலையில் அமர்த்திக்கொள்வனவாயின், அவர்களும் இணங்கி நடத்தற்கு யாதும் ஐயுறவிராது. இப்படிப்பட்ட அகில இந்திய அனுபவமானது, இந்தியா முழுவதிலுமே தேசப்பற்றை ஊற்றமுறச் செய்தலோடு, நமது வெளியறிவையும் விரிவுபடுத்தி, பின்னும் போற்றக்கூடிய அளவுக்கு நமது மாகாணத்தளவிலுள்ள ஒடுக்கத்தினின்றும் நம்மைக் கைதூக்கி எடுத்தலும் செய்யும்.

இனி, இந்திய பத்திரிகைத் தொழிலாளரின் தொழிலருமையறிந்து அன்னார்க்குப் பொருளுதவி செய்ய வேண்டிய முறையைக் கவனிப்போமாக. அராஜக முதலாகச் சொல்லப்படும் பொருளாழமுள்ள குற்றங்களுக்காகக் கைது செய்யப்படும் காலத்தில் தகுதியுற்ற எந்தப் பத்திரிகைத் தொழிலாளியும் வழி வகைகள் இல்லாமையை முன்னிட்டுக் கைவிடப்பெறுமல் காக்கப்பெறும் நிமித்தம், எல்லா மாகாணங்களிலும் பத்திரிகைத் தொழிலாளர் மீட்சி மூலதனம் ஏற்படுத்தல் மிகவும் முக்கியமானது. இன்னும் குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி, காலஞ் சென்ற பத்திரிகை ஊழியர்களின் குடும்பங்களுக்கு உதவும் பொருட்டுப் பத்திரிகைத் தொழிலாளர் காருண்ய மூல தனம் ஒன்றும் திரட்டி அமைக்கப் பெறல் வேண்டும். முதலாளிகளிற் பலர், தொழிலின் அருமைப்பாடறிந்து சம்பளம் கொடாமையினல், அநேக பத்திரிகாசிரியர்கள் துன்புறுகிறுர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு முன்னே உயர்ந்த சம்பளம் கொடுத்தல் வேண்டும்; பின்னே உபகாரச் சம்பளம் கொடுத்தல் வேண்

டும். இவ்வாறெல்லாம் செய்தால்தான், இந்திய பத்திரிகைத் தொழில் செழித்துக் கொழுத்துப் பண்பும் பயனும் தோய்ந்து முன்னேற்றமுறும். இதன் அவசியம் இந்தியாவில் உணரப்பட்டு வருவதற்குக் கீழ் வரும் பத்திரிகாசிரியர்கள் மகா நாட்டுத் தீர்மானங்களே சான்று பகரா நிற்பனவாம்.

"அகில இந்திய பத்திரிகாசிரியர்கள் மகா நாடு 2-1-30ல் லாகூரில் "பம்பாய்க் கிரானிகல்" பத்திரிகை ஆசிரியர் ஜனுப் அப்துல்லா பிரல்வி அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. தலைவர் தமது விரிவுரையில், பத்திரிகாசிரியர்கள் பெருங் கஷ்டங்களுடன் வேலை செய்தும், அவர்களுக்குப் பென்ஷன், பிராவிடெண்டு பண்டு முதலிய சௌகரியங்களை கிடையாவென்றும், இன்னும் இதைப்போன்ற பல குறைகளையும் குறிப்பிட்டார். பின்னர்ப் பத்திரிகைத் தொழிலின் எதிர்காலத்தைப் பொறுத்தும், பத்திரிகாசிரியர்களின் நன்மையைக் குறித்தும் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன." ("நவ சக்தி" 8-1-1930, பக்கம் 11)

பத்திரிகைத் தொழிலென்னும் விரைவுள்ள வண்டிக்கு அச்சாணி போன்றவர், பத்திரிகைகளுக்குக் கட்டுரை வரைவோரும் நிருபரும் ஆதலின், அன்னவர் தகுதிக்கு ஏற்றவாறு முன்னே குறிப்பிட்ட மூலதனத்தினின்றும் சமயமறிந்து பொருளுதவி செய்தல் வேண்டும். கட்டுரைகளும் நிருபங்களும் எழுதிப் பணம் சம்பாதித்தலையே தொழிலாக மேற்கொண்டுள்ள நெறிமுறை கெடாத வாலிபர்கள், அரசினரால் குற்றஞ் சாட்டப்பட்டுத் துயருழந்திடும் காலங்களில் அவர்தம்மைக் குற்றத்தினின்று மீட்கும் வகையிலும் அதுவரை அவரது குடும்பங்களை உண்டியுடை ஆதியவற்றால் காக்கும் வகையிலும் பொருளுதவி புரிந்து வரல் வேண்டும். பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதுவோர்க்குத் திரண்ட

பொருள் கொடுக்கும் வழக்கம் முதல் முதல் அமெரிக்கா விலே துவங்கப்பெற்றது. அதற்குச் சான்று வருமாறு:—

"பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் வரைவதற்குப் பெரும்பொருள் கொடுக்கும் வழக்கம் 1855-ஆம் வருஷத் திலேயே தொடங்கியது. "நியூயார்க் லெட்ஜர்" என்ற பத்திரி கையின் ஆசிரியரே இதற்குக்காரணர். சமீபத்தில் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் தலைவராயிருந்த ஸ்ரீமான் கூலிட்ஜ் என்பாருக்கு அவர் எழுதும் கட்டுரைகளுக்கு வார்த்தை ஒன்றுக்கு ஒரு டாலர் வீதம் கொடுக்கப்படுகிறது. ஸ்ரீமான் ஆல்பிரட்ஸ்மித்து என்பாருக்கு வார்த்தைக்கு இரண்டுடாலர் வீதம் அளிக்கப்படுகிறது. 1850-ஆம் வருடத்தில் ஆல்பிரட் டென்னிஸனுக்கு ஒரு கவிதைக்கு (£ 85,000) எண்பத் தையாயிரம் பவுன் பரிசாக அளிக்கப்பட்டது. ராபர்ட்டு பானர் என்பார் அமெரிக்காவில் ஒரு கதைப் பத்திரி கையை நடத்தி வந்தார். சிறந்த அறிஞர்களுக்கு அதிகப் பொருள் கொடுத்துக் கட்டுரைகள் எழுதுவித்து, அவை களைத் தமது பத்திரிகையில் வெளியிட்டு வந்ததால், அப் பத்திரிகைக்கு லட்சக் கணக்கான பேர் சந்தாதாரராயி னர். இவர், லாங் பெல்லோ என்ற கவிஞருக்கு மூவாயிரம் டாலர் கொடுத்தார். ஹென்றி வார்ட் பீச்சர் என்னும் அறி ஞர் எழுதிய நாவலுக்கு முப்பதாயிரம் டாலர் அளிக்கப் பட்டன." ("நவசக்தி" 21-8-1929, பக்கம் 7.)

இச்சான்றினின்றும் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதுவோர்க்கும், கவிகள் கட்டுவோர்க்கும், கதைகள் வரை வோர்க்கும், நாவல்கள் வகுப்போர்க்கும், நாடகங்கள் பகுப் போர்க்கும் சம்பளமாகவோ, நன்கொடையாகவோ, அல் லது இவ்விரண்டுமாகவோ, நிரம்பிய பொருள் கொடுத்தால் தான் பத்திரிகைத் தொழில் வளப்பமுடைத்தாம் என்பது தெரிய வருகிறதல்லவா ? இவ்வகையிலே, பல்லாண்டுகளாக

அமெரிக்கா காட்டி வரும் வழியை நமது இந்திய பத்திரிகைகளின் சொந்தக்காரரும் பொருட் செல்வரும் பின்பற்றக் கடவர். 'இந்தியா ஓர் எளிய நாடு; பொருளாதார நிலையில் இன்னும் முன்னேறவில்லை' என்னும் சாக்குப்போக்குக்களைக் காட்டிவிட்டு, அன்னவர் தமது கையைக் குறுக்குவாராஞல், பத்திரிகைத் தொழிலின் தற்காலச் சிறிய நீட்சியும் குறுகிவிடும். இயன்ற அளவிற் செய்யும் பொருளுதவியே சாலச் சிறந்ததாம். அதற்காகவே அகில இந்திய பத்திரிகைத் தொழிலாளர் காப்பு மூல தனத்தின் இன்றியமையாமை, இவ்வுட் பகுதியின் முதற்கண் மிகவும் வற்புறுத்தப்பெற்றது. இந்திய பத்திரிகைத் தொழிலின் நிலைபெற்ற மாண்பினுக்குரிய இந்த அரிய பெரிய பணியானது கூடிய விரைவில் நடைமுறையிலே நிறைவேறுவதாக.

(i) பத்திரிகைத் தொழிற் கல்வியின் முக்கியம்

உலகின்கண் வேலையில்லாத் திண்டாட்டம் நாடோறும் வளர்ந்துகொண்டே போகிறது. இந்தியாவிலும் அத்திண்டாட்டம் மும்முரமாயிருக்கிறது. இந்நிலை சமூக வளர்ச்சிக்குப் பெரிய தீங்கு தருவதாகும். இந்திய சர்வ கலா சாலைகள் முயன்ருல், பத்திரிகைத் தொழிற் பயிற்சியின் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தினை ஒரு சிறிது குறைத்தற்கு இயலும். அதன் பொருட்டுச் சர்வ கலாசாலைகள் இந்திய வாலிபருக்குப் பத்திரிகைத் தொழிற் பயிற்சியைப் பாடமாக்கி அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பட்டங்கள் (Degrees) அளித்தல் வேண்டும். 'வைத்தியம், இரசாயனம் முதலிய ஏனைய துறைகளில் பட்டதாரிகள் வேலையில்லாமல் திண்டாடுகிருர்களே! பத்திரிகைத் தொழில் துறையிலும் அந்நிலைமைதானே ஏற்படும்?' என ஐயுறவேண்டுவதில்லை. வைத்தியம், இரசாயனம் என்னும் தொழில்களில் அநுபவமில்லாத வைத்தியப் பட்டதாரிகளையும்,

இரசாயனப் பட்டதாரிகளையும் காணலாம். ஆனால், தொழி லனுபவமில்லாத பத்திரிகாசிரியர்களை மட்டும்காணமுடியாது. மேற்குலகினும் கிழக்குலகினும் பிற தொழில் துறைகளில் வேலையில்லாத் திண்டாட்டம் மிக மிக வளர்ந்துகொண்டும், பத்திரிகைத் தொழில் துறையில் அது மிக மிகக் குறைந்து கொண்டும் வருவதும், பற்பல வாலிபர் பத்திரிகைத்தொழிலை விரும்பியும் முயன்றும் வருவதும் பத்திரிகைத் தொழிற் பயிற்சியின் ஏற்பாட்டைக் கோருவதன் அடையாளங்க ளாம். அன்றியும், கல்கத்தாவிலுள்ள இந்திய பத்திரிகா சிரியர்கள் சங்கத்திற்குத் (The Indian Journalists' Association, Calcutta) தகுதி வாய்ந்த பல மனுதார் கள் பத்திரிகைத் தொழிலை விரும்பிச் சமீப காலத்தில் செய்துகொண்ட மனுக்களும் பத்திரிகைத் தொழிலின் முக் கியத்தையும் ஏற்பாட்டையும் வற்புறுத்துவனவாகும். அம் மனுதார்களில் பெரும்பான்மையினர் தொழிற் பயிற்சியே இல்லாதவர். ஆகலின், பல்கலைப் பயிற்சியுள்ள இந்திய வாலிபர்கள் புதிதான இத்தொழில் துறையிலே இறங்கி உழைத்தற்கு வேண்டிய வசதிகளை எல்லாம் நமது பல்கலைக் கழகங்கள் இன்னும் ஏற்படுத்தாமல் இருத்தல் அழகல்லவே! பத்திரிகைத் தொழிற் பயிற்சியைப் பாடமாக அமைத்துக் கற்பிக்கும் அரிய பெரிய தொண்டிலே நமது சர்வ கலாசாலைகள் முற்படுவனவாக. இவ்வகையில், ஒரு சில இந்திய சர்வ கலாசாலைகள் செய்து வரும் கிளர்ச்சிகள் நற் பயன் தருவனவாக.

(j) தொழிற் பயிற்சிக்கான வழி வகைகள்

பத்திரிகைத் தொழிற் பயிற்சியை முதன்முதல் பாடங் களின் வழியே கல்லூரிகளிலும், இரண்டாவது கல்லூரி களிற் பயிலுங்கால் பத்திரிகைகட்குக் கட்டுரை தலையங்கம் மதிப்புரை விளம்பரம் முதலான வரைதலிலும், மூன்றாவது

சர்வ கலாசாலைப் பட்டதாரிகளான பின்பு பத்திரிகை நிலையத்தில் அநுபவ வாயிலாகவும் அடைதலே மேன்மையாம். இந்நெறிகளிற் பெறும் பயிற்சியினாலேதான் பத்திரிகைத் தொழில், பலிதமும் விளக்கமும் உறும். சில்லாண்டுகளாக நமது பத்திரிகைத் தொழில், பிற கைத்தொழில்களைப் போலவே நாளுக்குநாள் வியாபார மயமாகி வருகிறது. உள்ள சிற்சில தொழிலநுபூதிமான்களும் பத்திரிகை நிலையங்களில் அமர்ந்து பணியாற்றுகின்றனர். ஏனையருள் எத்தனையோ பலர் தொழில் விருப்பினராயிருந்தும், தொழிற் பயிற்சி இன்றித் தியங்குகின்றனர். இத்தகைய பற்பலர்க்கும் சர்வ கலாசாலைகள், காலத்திற்கேற்ற பலவகைப்பட்ட பொருண் மொழிகளுடைய பாடங்களின் வாயிலாகவும், சர்வ கலா சாலைகள் தாந்தாம் சொந்தத் தினசரி அல்லது சஞ்சிகை ஏற்படுத்தி நடத்தி அவ்வப்பத்திரிகைக்குக் கட்டுரை எழுதுவிப்பதன் வாயிலாகவும் தொழில் ஊட்டி வளர்த்து வருதல் மிகவும் முக்கிய கடமையாம்.

பத்திரிகைத் தொழிற் பயிற்சியைப் பாடங்களின் மூலமாகத் தருதற்கு நாட்டிலுள்ள வறுமையும், போதகாசிரியர்களின்மையும் சரியான காரணங்கள் ஆகா. பன்னூல்களையும் என்ன விலையுங் கொடுத்து வாங்கிப் பல்கலைகளையும் பயிலல் சாத்தியமாகக் கண்ட மாணவர்கள் பத்திரிகைத் தொழிற் பயிற்சிக்குரிய நூல்களுக்குப் பொருள் செலவிடுதலும் அத் தொழிலில் பயிற்சி பெறுதலும் மட்டும் சாத்தியமாகக் காண்டல் இயலாத காரியமன்று. போதகாசிரியர்களாதற்குப் பல இந்திய பத்திரிகாசிரியர் மிக்க தகுதி வாய்ந்தவராக உளர். ஆகலின், இந்திய சர்வகலாசாலைகள் பத்திரிகைத் தொழிற் பயிற்சியை ஒரு பாடமாக அமைத்து அத் துறையிலே பட்டதாரிகளைப் பெற்றெடுத்து வளர்த்து, நமது பத்திரிகை நிலையங்களுக்கு அனுப்பி, இந்திய பத்திரிகைத்

தொழிலுக்கு அழகும் ஆண்மையும் நயனும் பயனும் பெய்து வருதல் அரும்பெருங்கடமை என்க. அக்கடனாற்றுதற்குப் பல்கலைக் கழகங்கள், முன்னர்க் கல்வி முறையில் சீர்திருத்தம் புகுத்தல் வேண்டும். மேனடுகளிற்போல இலக்கியப் படிப்பினை மட்டுப்படுத்தித் தொழிற் படிப்பைப் பெருக்கல் வேண்டும். பத்திரிகைத் தொழிற் பயிற்சி முதலிய பல திறப்பட்ட தொழிற் படிப்புக்களைப் படைத்து வளர்த்தற்குப் பல்கலைக் கழகங்கள் இன்னும் அசட்டையாக இருப்பின், இந்தியாவில் ஏற்கனவே ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தாழ்ச்சி, வியாபாரம் அல்லது கைத்தொழில் வீழ்ச்சி, வேலையில்லாத் திண்டாட்டம், தொழிற் பயிற்சி பெற்ற பட்டதாரிகளின்மையால் ஏற்பட்டுள்ளபத்திரிகைத் தொழில் துலக்கமின்மை ஆகிய இந்நிலைமைகள் பின்னும் வளர்ந்து வருமேயொழியச் சிறிதுங் குறையமாட்டா.

அமெரிக்காவிலுள்ள மிசெளரி சர்வ கலாசாலை (The Missouri Uuiversity in U. S. A.) 1878-ஆம் ஆண்டில் பத்திரிகைத் தொழிற் பயிற்சியைப் பாடமாக ஏற்படுத்தியது. அதனல், நாளடைவிலே பத்திரிகைத் தொழிற் பட்டதாரிகளும், போதகாசிரியர்களும் பெருக நேர்ந்தது. அதன் பயனக 1908-ஆம் ஆண்டில் அதே சர்வகலாசாலையானது, உலகில் ஒப்பற்ற பத்திரிகைத் தொழிற் கலாசாலையை ஏற்படுத்தியது. மேனட்டுச் சர்வ கலாசாலைகள் இத்துறையில் பெரிதும் முன்னேறிவிட்டன. நமது சர்வ கலாசாலைகள் மாத்திரம் இத்துறையில் வெற்றி பெருமூற் போய்விடுவனவோ! இல்லையில்லை. பல்கலைகள் போதித்தற்கும், பயிலற்கும் முறையே ஆசிரியர்களும் மாணவர்களும் துவக்கத்தில் காண்டற்கு அரியராயிருந்த உண்மை உணர்ந்த இந்திய சர்வ கலாசாலைகள், அத்துணைக் கலைகளுக்கும், தனித்தனி ஆசிரியர்களையும், மாணவர்களையும்

நாட் செல்லச் செல்ல எவ்வாறு அடைந்தனவோ, அவ்வாறே, இந்திய பத்திரிகைத் தொழிற் பயிற்சிக்குரிய ஆசிரியர்களையும், மாணவர்களையும், பத்திரிகைத்தொழிற் பயிற்சியைப் பாடமாக்கிய சில்லாண்டுகளில் அடைதற்கு இயலும். அங்ஙனம் அடைந்த பின்னர், இந்திய பத்திரிகைத் தொழில், தொழிற் கல்வியினாலும், தொழிற் பயிற்சியினாலும் முழு வெற்றியை அடைந்தே தீரும்.

(k) மேனாடுகளில் பத்திரிகைத் தொழிற் பயிற்சி முறைகள்

மேனாடுகளில் பத்திரிகைத் தொழிலானது, பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும், பத்திரிகாசிரியர்கள் கழகங்களிலும் பயிற்றப்பட்டு வருகின்றது. இவ்வகையிலே இந்தியா உறக்க நிலையில் உள்ளதென்னலாம். எனினும், "ஹிந்து" ("The Hindu") பத்திரிகை நிலையத்தில் தொழிற் பயிற்சி ஒருவாறு தரப்பட்டு வருகின்றது. மேற்புலங்களில் பத்திரிகைத் தொழிற் போதனை முறை அல்லது பயிற்சி முறை பலதிறப்பட்டதென்று சின்னாட்களுக்கு முன் கல்கத்தா சர்வகலாசாலையின் பொருட்டு நிகழ்ந்த ஓர் ஆங்கிலச் சொற்பொழிவினின்றும் அறிய நேர்ந்தது. [See (the second series of lectures on Journalism to the Calcutta University, by Mr. Mrinal K. Bose, President of the Indian Journalists' Association, Calcutta) the "Hindu" for 11th March 1935, Page 10] சர்வ கலாசாலைகளின் மாணவர்களுக்கும், பத்திராதிபர்களுக்கும் பயன்படுமாறு அவ்வாங்கிலச் சொற்பொழிவின் நடுப் பகுதியை மட்டும் கீழ் வருமாறு மொழிபெயர்த்துத் தருவேனாக:

"மேனாட்டுக் கலாநிலையங்களும் பத்திரிகாசிரியர்கள் கழகங்களும் பத்திரிகைத் தொழிலைப் படிப்பின் மூலமும், பயிற்சியின் மூலமும் ஊட்டுகின்றன. அவற்றுட் சில தொழிலறிவு

சிறிதும் இல்லாதவர்களுக்கு ஆரம்பப் பயிற்சியைத் தருகின்றன. ஏற்கனவே தொழிலில் அமர்ந்துள்ளவர்களுக்குப் பாட அநுபந்தங்கள் வகுக்கப்படுதலும் உண்டு. சில சமயங்களில் அம்முறைகள், ஜெர்மனியிலிருப்பது போலப் படிப்பளவிலேயும், அமெரிக்க பாடசாலைகளில் இருப்பதுபோலப் படிப்புப் பகுதியாகவும், அநுபவப் பகுதியாகவும் நடைபெற்று வருகின்றன. அவற்றுட் சில கவனிக்கத் தக்க முறைகள், சில நாடுகளையொட்டிக் கீழே குறிக்கப்படுகின்றன.

கிரேட் பிரிட்டன்

"லண்டன் சர்வ கலாசாலை, பத்திரிகைத் தொழிலுக்குப் பட்டங்கள் வழங்குகின்றது. மேலும், பாடங்களின் பயிற்சி நெறியிலே பொதுத் தேச சரித்திரமும் விஞ்ஞான சாத்திர முன்னேற்றம், அரசியல் அபிப்பிராயங்களின் வரலாற்று ஆராய்ச்சிக் கிரமங்கள், ஆங்கிலமொழி இலக்கியத்தின் வரன் முறையான முன்னேற்றம், அரசியல் சாத்திரம், பொருளாதார முறை, தேச சரித்திரம், தற்கால மொழிகளும் ஷேக்ஸ்பியரும்போன்ற பொருண்மொழிகள் சேர்க்கப்பட்டுள்ளன. படிப்பளவில் இவை போக, பத்திரிகைத் தொழிலனுட்டானம், கட்டுரை வரைதல், பத்திரிகைக்கு நிருபம் வரைதல் இவையுள்ளிட்ட ஆங்கில வியாசம் என்னும் இவற்றில் பரீட்சைகளும் நடைபெறுகின்றன. தொழில் நடை முறையைப்பற்றிய போதனையானது தொழிலிலமர்ந்துள்ள பத்திரிகாசிரியர்களால் வழங்கப்படுகின்றது.

"தொழிலின் உறுப்பினரைப் பயிற்றும் முறையிலே பத்திராதிபர் கழகங்களும் ஒரு பங்கெடுத்துக்கொள்ளுகின்றன. இவ்விதமாகக் கிரேட் பிரிட்டன் பத்திரிகாசிரியர்கள் தேசீய ஒற்றுமைக் கழகமானது (The National Union of Journalists of Great Britain) ஏற்கனவே தமது

தொழிற்பயிற்சியில் இறங்கி உழைத்து வரும் பத்திராசிரியர்களின் அநுபந்தக் கல்விப் பயிற்சிக்கேற்ற வகுப்புக்களை அமைத்துக் கொடுத்துளது. போதிக்கப்படும் பொருண்மொழிகளில் தேச சரித்திரம், பொருளாதார முறை, சமூக வாழ்க்கை நூல் இவையும் சேர்ந்துள. அவ்வொற்றுமைக் கழகத்தின் முக்கியஉறுப்பாகிய "பத்திரிகை" (The Organ of the Union "The Journalist") பத்திரிகைத் தொழிலில் உயர் தர நிருபம் எழுதும் போக்கினை அக்கழக உறுப்பினருக்கு எடுத்துக் காட்டுதற்கு ஏற்பாடுகள் செய்திருப்பதுடன் கல்விப் பயிற்சிக்குரிய ஒரு பகுதியையும் உண்டு பண்ணி உள்ளது.

ஜெர்மனி

"பத்திரிகைத் தொழிற் பயிற்சிக்குரிய பாடசாலைகள், பதினாறு சர்வ கலாசாலைகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சாத்திரார்த்த சம்பந்தமான பாடசாலைகள் இரண்டும் வியாபாரத்திற்குரிய பாடசாலைகள் ஐந்தும் (Two technical schools and five commercial schools) பத்திரிகைத் தொழிற் படிப்புக்குரிய பாடங்களை அமைத்துள்ளன. ஹீடெல்பெர்க்கு, நியூரெம்பெர்க்கு (Heidelberg and Nuremberg) என்னும் ஊர்களிலுள்ளவை போன்ற சில பாடசாலைகள் தொழிற் படிப்பினையும், அநுபவப் பயிற்சியினையும், ஓர் இனிமையான முறையில் இணைத்துள்ளன.

பெல்ஜியம்

"பத்திராதிபர்கள் கழகமான பெல்ஜியம் பத்திரிகைத் தொழிற் கழகம் (The Belgium Press Association which is an association of Journalists) பத்திரிகைத் தொழிற் பயிற்சிக்குரிய ஒரு பாடசாலையை நிறுவி உளது. அதில் தேச சரித்திரம், அரசியற் பொருளாதாரம்,

கலை, இலக்கியம், சங்கீதம் இவற்றின் ஆராய்ச்சி, சட்டம் ஆகிய இவற்றிலே பாடம் அமைக்கப்பட்டுளது.

இத்தாலி

"இத்தேசத்தில் பத்திரிகைத் தொழிலுக்குரிய பாடசாலைகள் வெகு காலம் இல்லாதிருந்தன. ஆனால், 1928-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களிலே தொழிற் சங்கங்கள் மூலமாக நடக்கும் அரசியல் திட்டம் கொண்ட (A Fascist Faculty of Political Science) பாடசாலையொன்று நிறுவப்பட்டது. அதன் ஒரு பகுதி அரசியலுக்கும், மற்றொரு பகுதி பத்திரிகைத் தொழிற் பயிற்சிக்குமாக ஒதுக்கப்பட்டுள்ளன.

ஸ்விட்ஜர்லாந்து

"ஜ்யூரிக்கு (Zurich) சர்வ கலாசாலை, பத்திரிகைத் தொழிற்பயிற்சிக்குரிய பாடங்களை அமைத்துளது.

ஆஸ்திரேலியா

"க்வீன்ஸ்லாந்து (Queensland) சர்வ கலாசாலை, பத்திரிகைத் தொழிற் பட்டங்கள் வழங்குகின்றது.

யுனைட்டெட்டு ஸ்டேட்ஸ்

"அமெரிக்க ஐக்கிய நாடுகளிலேதான் பத்திரிகைத் தொழிற் பாடசாலைகள், தொழிற்குரிய பாடசாலைகளின் இலக்கணத்தைத் தெளிவாக அடைந்துள்ளன. "நியூயார்க்கு ஹெரால்டு" பத்திரிகையைத் தோற்றுவித்த புகழ் பெற்ற ஜோஸெப் புலிட்ஜெர் (Joseph Pulitzer) என்னும் பத்திரிகை ஆசிரியர் கொலம்பியா சர்வ கலாசாலையில் பத்திரிகைத் தொழிற் பயிற்சிக்கென ஒரு பாடசாலையை முதன் முதலாக நிறுவியதுமன்றி, அதற்குப் பத்து லட்சம் டாலர்களை நன்கொடையாகவும் உதவியுள்ளார். அது முதற்

கொண்டு பத்திரிகைத் தொழிற் கல்வி பரப்பும் பாடசாலைகள் விரிவுடன் கூடிய பல திறப்பட்டனவாய் உள்ளன. அவற்றுட் சில, பழைய சர்வ கலாசாலைகளைச் சார்ந்தனவும், தொழிலின் அறிவுக்குரிய பகுதியில் (Intellectual side) மிகுந்த அக்கறை பூண்டனவும் ஆனவை. சிக்காகோவிலுள்ளது போன்ற வேறு பாடசாலைகள், வியாபாரத் தன்மைக்குரிய பாடங்களையே மிகுதியும் போதிக்கின்றன. மற்றுமுள்ளனவோ, உயர்தர விவசாயப் பாடசாலைகளுடன் சேர்க்கப் பட்டிருப்பதுடன், கிராமப் பத்திரிகைகள் நடத்தற்கு ஆட்களைப் பயிற்றுகின்றன.

"ஐரோப்பா கண்டமே கண்டிராதபடியான அவ்வளவு உச்ச நிலையோடு கூடிய நிபுணத் தன்மையை, அமெரிக்க பத்திரிகைத் தொழில் எட்டிவிட்டது. பத்திரிகைத் தொழில் பயிற்றி வரும் பாடசாலைகளின் பயிற்சி முறைகள், அநுபவ நிலைக்கே இழுத்துச் செல்வனவாய் உள்ளன. அப்பாடசாலைகளிற் பெரும்பாலன, ஒவ்வொரு பத்திரிகையை வெளி இடுகின்றன. மாணவர்கள் பகுதி பகுதியாகப் பிரிந்து கொண்டு, உண்மையான வெளியீடுகளைப் போலவே, முக்கியமாக விரைந்து மேற்செல்ல வல்ல கட்டுரைகளுடன் அவ்வப் பத்திரிகையை வெளியிடுகின்றனர். சர்வ கலாசாலைகளும் பாடசாலைகளும் பி. ஏ., எம். ஏ., பட்டங்களை அல்லது நற்சாட்சிப் பத்திரங்களைப் பத்திரிகைத் தொழில் தேர்ச்சியாளர்க்கு வழங்குகின்றன.

"பத்திரிகைத் தொழிற்குரிய பாடசாலைகள் தொழிலைச் சார்ந்த அங்கத்தினருக்குரிய அனுகூலத்தினை நுகர்கின்றன. அவற்றின் பட்டதாரிகளுக்கு எளிதில் தொழில் கிடைக்கின்றது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள பத்திரிகைத் தொழிற் பாடசாலைகளும், பத்திராசிரியர்கள் கழகங்களும் பத்திரிகைகளின் மேம்பாட்டினை வளனுறுத்தும் வகை

யிலே அரும்பாடு பட்டு வருகின்றன. அம்மேம்பாட்டினால், பத்திரிகைகளின் பரப்பு மிகுதியும், அப்பரப்பு மிகுதியால் பெருத்த ஊதியங்களும் வந்து கூடியுள்ளன. இது நிற்க.

(l) இந்தியாவுக்கும் பத்திரிகை உரிமை தேவை.

பத்திரிகை வாய்ப்பூட்டுச் சட்டங்களால் இந்திய பத்திரிகைத் தொழில் பெரிதும் பாதிக்கப்படுதல் வருங்காலத்திலும் உண்மையாயின், அத்தொழில் பெட்டிப் பாம்புபோல அடங்கியொடுங்கிக்கொண்டே இருக்க நேரும். ஐரோப்பா அமெரிக்கா தேசங்களிலும், ஜப்பான் தேசத்திலும் பத்திரிகைகளுக்குப் போதிய உரிமையும், பத்திரிகைத் தொழிலுக்கும், பத்திரிகை ஆசிரியர்களுக்கும் அளவுக்கு மீறிய மதிப்பும் வாய்த்துள. அப்படியே இந்திய பத்திரிகைகளுக்கும், பத்திரிகைத் தொழிலுக்கும், பத்திரிகை ஆசிரியர்களுக்கும் உரிமைகளும் பெருமைகளும் தாராளமாக வழங்கப்படல் வேண்டும். அப்போதுதான், தொழில் பல வகையினும் வளனும் பயனும் பூண்டிலங்கும்; அரசியலிலும், உலகியலிலும் உள்ளபடி கடமைகள் ஆற்றற்கியலும்.

(m) எதிர் கால இந்திய பத்திரிகைத் தொழில்

அளவற்ற இடையூறுகளினிடையே இந்திய பத்திரிகைகள் கைத்தொழில் வளர்ச்சிக்குச் சிறிது சிறிதாக உதவியுள்ளன ; உதவி வருகின்றன ; உதவுவனவுமாம். பத்திரிகைத் தொழில் துறையிலே பணியாற்றும் வாஞ்சையுள்ள இந்திய வாலிபர் பலர்க்கும் பத்திரிகைத் தொழிற் பயிற்சியைப் பாடமாக ஏற்படுத்தும் உயர்தரத் தொண்டு, இந்தியரால் புரியப் பெறுதல் வேண்டும். அதற்காக அரசினரை எதிர் பார்த்திருத்தல் வீண் வேலையாகும். அத்தொண்டினை, இந்திய சர்வகலாசாலைகள், சற்று மேலே குறித்துள்ள மேனாட்டுப் பத்திரிகைத் தொழிலின் படிப்பு முறைகளையும் பயிற்சி முறைகளையும் கலந்து அநுட்டித்துக்கொள்ளும் வகையிலே

மேற்கொண்டால், எதிர் காலத்தில் அளப்பிலா நன்மைகள் வாய்க்கும். அன்றியும், நூதன அச்சியந்திரப் பரப்பு முதலி யனவும், சுதேச மொழிகளிலும் ஆங்கிலத்திலும் வாய்க்கும் படியான கல்விப் பரப்பும், பத்திரிகை படிக்கும் வாஞ்சை யும் தாகமும், ஏற்பட்டுள்ள எல்லாத் தடைகளையும் காலக் கிரமத்தில் தாண்டித் தாண்டி மேற்செல்ல உதவலால், இந் திய பத்திரிகைத் தொழிலானது, வருங்காலத்தில் வளமை யும், செழுமையும், ஆழமும், நீளமும் கொண்டு மிளிர்தல் உறுதி. இவ்வுறுதியை முழுதும் அடைதற்கு எதிர் கால இந்திய பத்திரிகைத் தொழிலாளிகட்குப் பல்கலைக் கழகங் கள் தகுந்த கல்விப் பயிற்சியும், தொழிற் பயிற்சியும் முறையே ஊட்டி வளர்த்து வருதல் இன்றியமையாத கட னென்க. அவ்விருவகைப் பயிற்சியும் அடைவுடனே ஊட்டி வளர்க்கப் பெறுவிடில், இந்திய பத்திரிகைத் தொழிலானது மேனாட்டுப் பத்திரிகைத் தொழிலுடன் வெற்றியுடன் போட்டி போடல் இயலாதென்க.

இரண்டாம் பகுதி முற்றிற்று.

மூன்றும் பகுதி

சிறப்பியல் - பத்திரிகைத் தொழில் முறை

1. பத்திரிகை உருவாக்கல்

க. போது முறை

சாதாரணமான சில தொழிலாளரை வைத்துக்கொண்டு, எப்படியோ தொழில் நடந்தால் போதுமென்று, தான் அதிலே பராமுகமாக இருக்கும் ஓர் எளியவனுக்குப் பத்திரிகைத் தொழில் சேர்படாது. பத்திரிகைத் தொழிலின் தேர்ந்த படி நிலைகளையெல்லாம் செவ்விதின் மிளிர்விக்குந் திறன் பத்திரிகை உருவாக்கல் என்னும் கலைத் தெளிவிலே அடங்கிக் கிடக்கின்றது. இவ்வருங்கலையை நடப்பிப்போன் பல்கலையறிவும் பூண்டவனுய்த் தொழில் நடை முறையின் ஒவ்வொரு பகுதியின் அமைப்பையும் காரணங்களுடன் தெரிந்துகொண்டு மேற்செல்பவனுயும், ஏதேனும் நட்டம் வரினும் தாங்கக்கூடிய செல்வனுயும் இருத்தல் வேண்டும். அல்லாதவனுக்குப் பத்திரிகைத் தொழில் பயன் தராது. ஏனெனில், போட்டியும் பரபரப்புங் கலந்த தற்காலப் பத்திரிகைத் தொழில், ஏனை எந்தத் தொழிலுக்கும் வேண்டியிருக்கும் பல்வேறு திறன்களோடு கூடிய தேர்ச்சி பெற்ற பல தொழிலாளரைக்கொண்டு நடைபெற வேண்டியிருக்கிறது. ஆனபடியால், இத்தொழில் நடை முறைக்கு முதலாக அமைக்கப்படும் ஆயிரக் கணக்காகவோ, இலட்சக் கணக்காகவோ உள்ள ரூபாய்களை, பத்திரிகையின் ஒவ்வொரு தனிப் பிரதியில் ஒவ்வோர் அணுவாக எடுத்துத் தொழிற் சிப்பந்திகளுக்கெல்லாம் செல்லானது போக, மீந்த தொகையிலே முதலாளி ஊதியம் கண்டுபிடிக்க வேண்டியவனுயிருக்கிறுன். இவ்வாறிருப்பதால், பத்திரிகைத் தொழிலுக்கு, நல்ல நிர்

வாகத் திறமையும், ஏராளமாக முதல் போட்டுத் தாராள மாக முதலும் பயனும் எடுக்கும் மூளையும் உள்ளவனே தகுதி உடையவன் என்க. இப்படியுள்ள பத்திரிகைத் தொழிலை ஒரு விளையாட்டுத் தொழிலாக எண்ணிப் பேசியும் நடத்தியும் வரும் நம்மவருட் பலரை உன்னுந்தோறும் உன்னுந்தோறும் உள்ளே கவற்சியும், வெளியே நகைப்பும் வளர்கின்றன. பத்திரிகைத் தொழிலின் முழு வன்மையே, உருப்படுத்தப்பட்ட பத்திரிகையாம். அவ்வாறமைந்த பத்திரிகையின் சொல் ஆட்சியாலும், பொருளழுத்தத்தாலும் வரும் பயனை யாவரும் உறுதியாக முன்னரே சொல்லவொண்ணாது. எனினும், நடுவு நிலையுடன் எண்ணித் துணிந்து அமைக்கும் சொல்லும் பொருளும் உலகினுக்கு இனிமையும் உறு பயனும் ஊட்டித் தனக்குச் சீரும், சிறப்பும், பேரும், பெரு வாழ்வும் அளிக்கும் என்பது திண்ணமே. அல்லாத் துணிவும் பயனும், பொல்லாத் துணிவும் பயனும் ஆமென்பதும் திண்ணமே. சுருங்கச் சொல்லின், பத்திரிகையை உருப்படுத்தும் பத்திரிகாசிரியர், போர்க்களத்தில் முன்னணியிலே அறப்போர் புரிந்து வரும் தனி வீரரைப்போல நடுவு நிலை பெயராமல் துணிவுடனே தமது கடனாற்றக்கடவர்.

பத்திரிகையை உருவாக்குவோர் அறிய வேண்டுவன இன்னுஞ் சிலவுள. அவை எழுத்தடுக்கல் (Composing) முதல் வெளியிடல் (Publishing) ஈறாக உள்ளவை. ஆங்கிலப் புலமை, தாய்மொழிப் புலமை, சுருக்கியமைக்கும் வன்மை, கருத்து விளக்கம், முன்பின் முரணாமை, மேற்கோளாட்சி, அரசியற் பிணக்கின்மை, வகுப்புப் பிணக்கின்மை, கட்சிப் பிணக்கின்மை, சமயப்பிணக்கின்மைமுதலியன உடைமையும், இவையெலாம் மிளிரும் பொருண்மொழிகளைக் கொள்ளுதலும், முரண்பாடான கருத்துக்களைத் தள்ளுதலும், பத்திரிகைஉருவாக்குவோர் போற்றுவனவாம். இவையும்போதா.

அத்தொழிலாளர்க்குப் பண்பும், ஆற்றலும், நேர்மை கண்டு பிடிக்கும் கூர்மையும், அன்பு கலந்த கண்டனமும், அஞ்சா நெஞ்சும், தெளிந்தன கடைப்பிடித்தலும், பேருழைப்பும், சோதனைகளுக்கு இளையாமையும் இன்றியமையாதனவாம்.

பத்திரிகையை நன்கமைத்து வெளியிடுதல், ஒரு கைத் தொழிலும் கலைப்படிப்புமாம். துவக்கத்திலே முதலாளி களின் சொந்த வரும்படியால் பத்திரிகை நடந்தாலன்றிப் பத்திரிகைத் தொழில் தற்சார்புடைத்தாகாது. சந்தா, விளம்பர வருமானம் என்னும் புறச்சார்புகளிலேயே உயிர் வைத்திருக்கும் பத்திரிகைகள், சந்தாதாரர், விளம்பரதாரர் இவர்களின் விருப்பங்களுக்கு இணங்கி நடக்கும் முறை யிலே, நடுவுநிலை தப்பாமல் இருக்கவே முடியாது. நடுவுநிலை வகித்தால் புறச்சார்பில் நிற்கும் பத்திரிகைகள் அன்னால் ஆதரிக்கப்படா. அவ்வாறு ஆதரிக்கப்படாத நிலைக்கு அஞ்சி அப்பத்திரிகைகள் ஓரம் விளைத்தல் இயல்பேயாயின், அவ் வெளியீடுகளால் அடையத் தக்க பயன்தான் உளதாமோ? இலையென்க.எனவே புறச்சார்பு என்னும்பற்றுக்கோடு ஒன்றி னல் மட்டும் இயங்கும்பத்திரிகைகள் உலகினுக்கு ஒருவாறு இடர் பயப்பனவே ஆகலின், பத்திரிகை அமைப்பு, தற்சார் புடைமை என்னும் அடிக்கட்டடத்தின்மேல் விளங்குதலே நாட்டிற்கு நலன் செய்யும். பத்திரிகைகளின் பல பகுதிகளி லும் நற்பொருளமைத்தலே, பத்திரிகைத் தொழிலுக்கு உள் ளபடி நிலைமையும் படிப்போர்க்குப் பயனுந் தரும். அப் பேர்ப்பட்ட வெளியீடுகள் அமைத்துத் தரும் பத்திராதி பரும், பிரசுரகர்த்தரும், கொடுங்கோலுக்கஞ்சார்; கொடுங் குடிகட்கு அஞ்சார்; தருக்குடை வெறுக்கையாளர்க்கு அஞ் சார்; தேளனையார்க்கும் பாம்பனையார்க்கும் அஞ்சமாட்டார்; இன்னவர் இகழ்ச்சிகளையும் புகழ்ச்சிகளையும்பொருட்படுத்த மாட்டார்; புரட்சியாளரின் இகழ்ச்சிகளையும் பொருட்படுத்த

மாட்டார். இப்பண்புகளும் நடையும் பூண்ட பத்திராதி பர்களே முதல்தரப் பத்திரிகைகளை உருப்படுத்த வல்லவர்கள்; நல்லவர்கள். அவ்வல்லவராய நல்லவரால் அமைக்கப்பட்ட பத்திரிகைகளே சந்தாதாரரும், விளம்பரதாரரும், அரசின ரும் கொண்டாடத்தக்கவை. மேலும் அவை கோல் நெறி, குடி நெறி, கோயில் நெறி இவற்றை வகுக்கும். உலகமே எதிர்ப் பினும் மக்கட் கூட்டத்திற்குக் கெடுதலாக மறை முகமாக நடைபெறும் நடவடிக்கைகளை எண்ணெய்த் துணியை நாய் பிய்த்திடுதல்போலச் சின்னபின்னமாக்கி எறிந்துவிடும். சில தேசத்துரோகிகளால், அவ்வுயர்நெறிப் பத்திரிகைகளின் பேரில் பழிப்பும் இழிப்பும் தூற்றப்பட்ட காலத்தும், அவை தமது சான்ற பொருண்மொழிகளோடு முன்னின்றும் உண் மைக் கடன்களை உளுற்றுதிரா. தேசம், மொழி, சமயம், கோல், குடி இவற்றுக்கு உட்பகையாலும் புறப்பகையாலும் சூழப்படும் கேடுகளைக் கண்டதுண்டம் செய்து இவற்றைக் காக்கும் ஆற்றலோடுகூடிய கட்டுரைகளால் அழகுபடுத்தலும் பத்திரிகை உருவாக்கலாம். இன்ன உருவின் சீர்த்த அமைப் பிலே வெளிப்போந்துலாவும் பத்திரிகைகளே உலக மக்கட்கு என்றும் மாறா இறைவன் திருவருளையொத்த ஓவாக் காப் பாம். ஏனை நெறிகளிலே உருவாக்கப்படும் பத்திரிகைகள், காவாக் காப்பாம்.

இத்தன்மையான பத்திரிகை உருவமைப்பிலே பின் னுஞ் சில, கவனிப்புக்குரியன: பத்திராதிபர் ஐயுறவு பொய் யுறவிருக்கும் எப்பொருண்மொழிகளையும் ஏற்றுக்கொள் கை ஆகவேயாகாது. செய்திகளின் எப்பகுதிக்கும் யாவருக் கும் பயன் விளைக்கும் பொருண்மொழிகளைத் தள்ளுபடி செய்கையும் கூடவே கூடாது. இன்னணமுள்ள எப்பொருள் களும் உதவுவோர், "எக்குடிப் பிறந்தோர் யாவரே ஆயினும், அக்குடியிற் கற்றோரை மேல் வருக" என்று ஏற்றுக்கொண்டு

அவற்றைப் பத்திரிகைகளிலே அமைத்திடல் வேண்டும். பத்திராதிபர் குறிப்புரை தேவையான இடங்களில், செவ்விய ஆராய்ச்சியுடன் அவற்றைப் பெய்திடல் வேண்டும். உயர் பொருள்களைப் பிற பத்திரிகைகளினின்றும் எடுத்தாள்வதும் நலனே. நீண்ட பொருண்மொழிகளாயின், சுருக்கும் வகையிலே சுருக்கப்படுவனவாக. இதுதான் பத்திரிகை உருவாக்கும் கலைத்தேர்ச்சியின் செம்பாகமாகும்.

இக்கலைப் பயிற்சியிலே செய்திகள், எண்ணங்கள் (News and Views) என்பனவும் அமைதல் வேண்டும். செய்தித்தாகம் உடையோர்க்குச் செய்திப் பகுதியும், செய்திகள் நோக்கங்களில் தாகமுடையோர்க்கு அந்நோக்கப் பகுதியும், அல்லது இரண்டுங் கலந்த அழகுமிழ் கட்டுரைகளும் இடம்பெறுவனவாக. ஆனால், அவை நல்லனவும், நம்பத் தகுவனவும், ஓதற்கெளியனவும் ஆக அமைத்தலே சால்புடைத்தாம். ஆகலின், பத்திராசிரியர், வந்து குவியும் செய்திக்குவியல்களில் பயனுள்ளவற்றையும் பதர்களையும் பகுத்தறிய வல்லராய் இருத்தலே மெச்சத் தகுவதாகும். எவற்றைத் தொடுப்பது, எவற்றை விடுப்பது என மனம் ஊசலாடும். அந்நிலையிலே, தொழின்முறைக்குரிய செய்திகளையும் விடக்கூடாது. பயன்முறைக்குரிய செய்திகளையும் விடக்கூடாது. மேனாடுகளில் பொது மக்கட்கு விழைவு பெருக்கும் பொருள்களின் விளம்பரங்கட்கே பெரும்பகுதி ஒதுக்கப்படுகின்றது. செய்திப் பகுதிக்குச் சில சமயங்களில் அவ்வளவு இடம் வாய்ப்பதில்லை. நமது இந்தியாவில், இவ்வகையிலே, தலைமாற்றமான அமைப்பே காணலாம். தேசத்தின் எளிய நிலையே விளம்பரப் பகுதியின் குறைவுக்குப் பெருங்காரணமாகாது. கைத்தொழில்களின் வீழ்ச்சி பொருளாதாரத்தின் தாழ்ச்சி முதலிய காரணங்களும் உளவாம்.

இந்தியர் வெறும் இகசுகத்தில் மட்டும் ஆத்திரமுடையவர் அல்லர்; பரசுகத்திலும் பற்றுள்ளத்தினராவர். "இகபரம் இரண்டினும் உயிரினுக்குயிராகி எங்கும் நிறைகின்ற பொருளே" என்று தமிழ் மறை வீறி முழக்கும் இந்தியர்க்கு இருமை நெறிகளும் நடை முறைகளும் செய்திகள் வாயிலாக அமைத்துக் காட்டும் ஆற்றலினரே பத்திரிகை உருவாக்கும் கலைத்தேர்ச்சியின் முடிபுகண்டவராவர். செய்திகளை ஆய்ந்தாய்ந்தமைக்கும் அன்ன ஆன்ற நடை முறை நெறிகளில் அடி வைத்திடும்போதும் அடி பெயர்த்து மேற்செல்லும்போதும், முடிபு தரும்போதும் கற்றுத்தெளிந்த கலையறிவும், தன்னறிவும், உலகாநுபவமும் பேனு முனையில் தாமாகவே வந்து உதவிக்கொண்டிருத்தலை உணரலாகும். அவ்வுணர்ச்சி முதிரமுதிர இன்புபெருகும். அச்சேறிய பின்னும், வெளிப்போந்துலவிய பின்னும், உலகத்தவர் கருத்து எவ்வாறெழுமோ என்னும் ஐயமும் மனமெனும் மனைதனிற் குடி ஏறும். இவ்வையப்பாட்டை ஆய்வும், நடுவுநிலையும், இறை அன்பும் இல்லாத பத்திராதிபர் உளந்தோறும் குடியோட்டி விட்டு, பத்திரிகை உருவாக்கற் கலைவல்ல புலவனானவன், நேர்மையுடன் தனது கடமை முடித்த இன்பத் துறையிலாழ்ந்து நனி சிறக்கக் கடவனாக; அவ்வாறு இன்புற்றுறங்கித் துயிலுணர்ந்து எழுந்தவனாகி உலக வாழ்க்கையை நிலைக்களனாகக் கொண்டு நடைபெறும் செய்திகளை ஆராய்ந்து தெளிந்த முடிபுகளுடனே தனது நித்தியத் தொண்டாகிய பத்திரிகை உருவாக்கல் செய்துகொண்டே வந்து, அழியாப் புகழுடம்பிலே விளங்குவான் ஆக.

உ. சிறப்பு முறை

இனிப் பத்திரிகையின் சிறப்பு முறையைப் பத்திரிகாசிரியர் இலக்கணங் கூறுமுகத்தானே ஆராய்ந்துரைக்குமாறு:

காண்க. அவ்விலக்கணம், பத்திரிகாசிரியர் தன்மை, வன்மை, கலையறிவு, கடனாற்றல் எனப் பிரிவுறும்.

(a) நிலைத்த நன்னோக்கம்

பத்திரிகாசிரியர் நிலைத்த நன்னோக்கம் உடையராயிருப்பின், அவரால் உருப்படுத்தப்படும் பத்திரிகையிலும் அந்நோக்கம் அமைந்து கிடக்கும். மக்கள் தொண்டே குறிக்கோளாகக் கொண்டு ஒழுகுநர், உயர்தரத் தன்மை வாய்ந்த பத்திரிகைத் தொழில் வல்லுநராதல் கண் கண்ட காட்சி. ஆனால் கீழ்த்தரத் தன்மையும் நோக்கமும் பூண்டொழுகும் பத்திரிகைத் தொழிலாளரால் வரும் பயனோ, மக்களினத்திற்கு இன்னல் பயப்பதாம். வல்லமையும் தன்னரசுரிமையும் தோய்ந்த தேசங்களில் மிகுந்து பரவும் பத்திரிகைகளுக்குள்ள தீமை பயக்கும் வன்மை பெரிது. இந்தியாவைப் போன்ற தன்னரசாட்சி உரிமையற்ற நாட்டிலுள்ள பத்திரிகைகளின் பரப்பும் செல்வாக்கும் எத்துணைப் பெரியனவாயினும், அவை உலக அமைதிக்கு ஒரு போதும் தீங்கு பயவா. வெள்ளையரால் நடத்தப்படும் சிற்சில இந்திய பத்திரிகைகள், இந்திய அரசியல், கைத்தொழில், பொருளாதாரம், கல்வி, சமூகம் ஆகிய துறைகளின் முன்னேற்றத்திற்குத் தீங்கு விளைவித்தல் கூடும். அப்படி அவற்றைப் படிக்கும் ஒருவன், மக்கள் நீதி, அல்லது மரியாதையைச் சிறிதேனும் உணர்ந்தவனாயின், அவனுக்கு என்றுமில்லா வெறுப்பும் சீற்றமும் உண்டாவதில் தடையிராது. வெள்ளையரல்லாத இந்திய முதலாளிகளுக்கு உரியனவும், வெள்ளையரல்லாத இந்திய பத்திராசிரியர்களால் நடத்தப்படுவனவுமாகிய ஒரு சில பத்திரிகைகள் போர், உரிமைக்குறைவு இவற்றை உண்டுபண்ணுதனவாயினும், சில வெள்ளைப் பத்திரிகைகள் போன்று உள் நாட்டின் பல வகுப்புக்களுக்குள்ளே பகைமையும் பொறாமையும் உண்டு பண்ணித் தேச முன்னேற்றத்

திற்குத் தடை விளைக்கக் கூடியனவேதாம். ஆகையினால், சுயமான இந்திய பத்திராசிரியர்களைப் பொறுத்த நிலைத்த நன்னோக்கம், தமது நாட்டுக்கும், உலகுக்கும் நன்மை புரியும் செய்திகளை மட்டும் கொள்வதிலே செலுத்தப்படல் வேண்டும். அந்நன்மை விளைக்கும் வன்மை, அவர்களது தன்மை, பேறுகள், ஆற்றல், ஆய்வுகளைப் பொறுத்ததாய் இருக்கிறது. இவற்றைத் துணைக்கொண்டு செய்யத் தக்க நன்மை அளப்பில. செல்வரும், கைத்தொழில் முதலாளிகளும் சிற்சில போதுகளில் மாத்திரம் மக்களுக்குச் செய்யக் கூடிய நன்மைகளையும், அரசியல் புலமையாளரும், கல்வியாளரும், சமய குரவர்களும், சமூகச் சீர்திருத்தக்காரர்களும் செய்யக்கூடிய தொண்டினையும், நற்பொருட் கட்டுரைகளைத் தவறாமல் தாங்கிவரும் பத்திரிகையின் மூலம், ஆசிரியர், தம் நாட்டினர்க்கும் மற்றெந்நாட்டினர்க்கும் செய்தல் கூடும். உச்ச நிலையிலுள்ள பத்திரிகைத் தொழிலின் நோக்கமும், தன்மை வன்மைகளும் இவையாம். பத்திரிகைத் தொழிலுக்குரிய அரிய பெரிய உயர் நிலையும், ஏனைத் தொழில்களுக் குரிய உயர் நிலைகளைப் போலவே, முழுதும் வரையறுக்கப் படாததாயினும், பத்திரிகை உருவாக்கும் ஆசிரியர்கள், அந் நிலையடைதற்குத் தம்மாலியன்ற விடாமுயற்சிகள் செய்து கொண்டே இருப்பார்களாக.

பொருளீட்டும் பொருட்டு உழைக்கும் இந்திய வாலிபப் பத்திரிகைத் தொழிலாளருள், உயர்ந்த நோக்கத்துடன் தொழில் புரிவாருமுளர். அத்தகையார்க்குத் தொழிலாற்றுதற்கு வேண்டிய அறிவும் ஆற்றலும் சுறுசுறுப்பும் அமையினும், நிலைபேறுடைய நன்னீர்மை இல்லாராயின், அவர் மக்கட் கூட்டத்திற்கு அவ்வளவாகத் தொண்டாற்றும் பயனுடையர் ஆகமாட்டார். அவர் முறையுடனும் ஒழுங்குடனும் வருந்தி உழைக்கத் தக்கவராய் இருத்தல் வேண்டும்.

பத்திராதிபர் நிபுணராயிருத்தல் நலமே; அந்நிபுணத்துவத்துடனே பேருழைப்புங் கூடிய வாழ்க்கையைத் துவக்கத்திலே விரும்பி நடத்தலுக்குப் பின் வாங்காதவராகவும் இருத்தல் வேண்டும். அவர் தமக்கு ஆயத்தமும், மறவாமையும், அழுத்தமும் வேண்டற்பாலன. ஆங்காங்குக் கற்பனவற்றும், கேட்பனவற்றும், பார்ப்பனவற்றும் ஏற்றவற்றையெல்லாம் குறித்து வைத்துக்கொள்ள இயலாது. ஆகையால், அவற்றுள் முக்கிய நன்மை தருவனவற்றை மட்டும், மனக் குறிப்பாகவோ, கைக் குறிப்பாகவோ வைத்துக் கொண்டு அவற்றைப் பத்திரிகையில் உருவாக்கி வெளியிடல் வேண்டும்.

பகை, பழி முதலியன இல்லார் மிக அரியர். எனினும், பத்திராசிரியர், தீக்குணங்கள் தம்மை அணுகாமல் தற்காப்புடையராதல் வேண்டும். அதற்குச் சிறிது முயற்சியும் வேண்டும். மேலும் அன்னார், கட்சிச் சார்பின்மையும், சீற்றமின்மையும், இயன்ற மட்டும் தன்னலமின்மையும் உடைமையாகப் போற்றி வரல் வேண்டும். பத்திராதிபர் தன்மையும் நடையும் பத்திரிகை உருவமைப்பில் காணப்படுமாகலின் அவ்விரண்டும் நடுவு நிலைக்கே பற்றிச் செல்வனவாய் இருத்தல் வேண்டும். அந்நிலையில் நிற்கக் கூடிய பத்திராதிபர் ஒரு பொருளைப் பல திறத்தினும் ஆய்பவராகவும், ஓரமில்லா நீதியும், அமைதியும், தெளிந்த தீர்ப்பும் தமது பேனா முனையிலே தீட்டுபவராகவும் தம்மைத் தாமே பயிற்றக் கடவர். அப்பயிற்சியில் தேர்ந்தவரே நடுவுநிலை வகுத்துப் பத்திரிகைத் தொழில் முறையிலே தறுகணாளராய்க் கடனாற்றும் சூரராவர்.

(b) பல்வகை உரை நடைகள்

தொழில் முறைகளைப் பத்திரிகை உருவில் அணிபெறுவிப்பது சிறந்த உரை நடைத்திறனும். பலதிறப்பட்ட பக்குவ

முடையார்க்கும் பயன்படும் நடையழகு பயின்றறிதல் வேண்டும். எந்தக் கருத்தையும் எடுத்துக் காட்டவல்லது அமைந்த உரை நடையேயாம். ஆகலின், ஏன்ற உரை நடை அமைப்போரே சான்ற பத்திரிகை உருவமைப்போர் என்க. அவ்வுரை நடை, தேங்காயைப் போல வன்பாகமாய் இருத்தலொண்ணாது. வாழைக்கனி அல்லது திராட்சைப் பழம் போலச் செம்பாகமாய் அமைக்கப்பட்டால் மாத்திரம் எவரும் எளிதிலுணரவியலும். எனவே, உரை நடையில் திருத்தமும், எளிமையும், இனிமையும், கவர்ச்சியும், பொருள் தெளிவும் வாய்ந்திருந்தல் இன்றியமையாமையாம். செய்யுள் நடைக்கு, விழுமிய பொருளும், கெழுமிய ஓசையும் அமைதல்வேண்டும். சொன்னயமும்,பொருணயமும், ஓசைத் தொடை நயமும் இலவேல், செய்யுள் நடை பொலிவிழந்துவிடும். வெறும் பண்டிதத்தன்மையும், பாவலத் தன்மையும், நாவலத்தன்மையும் செறிந்த நடையமைப்பு, பத்திரிகைத் தொழிலைக் கவிழ்த்துவிடும். சிறிது கல்வியேயுடைய பெரும்பாலோர், கல்விப் பெரியரின் கட்டுரைப் பொருட் பொதிவை அறிவரோ !

அன்றியும், உரை நடையின் பல வகையும் பொருண் மொழிக்கும் சுவைக்கும் தகுந்தபடி காட்டப்படும் முறையே சாலச் சிறந்தது. உரை நடை, தார்க்கிக (Polemical) நடை, வர்ணனை (Descriptive) நடை, பகுத்துக்கூறும் (Analytical) நடை, இலக்கிய (Literary) நடை, ஏச்சு அல்லது வசை (Satirical) நடை, வெளிப்பாட்டு (Expository) நடை, ஆராய்ச்சி (Critical) நடை, வரலாற்று (Narrative) நடை, நியாய விவரண (Argumentative) நடை என ஒன்பான் வகைத்தாம். இவற்றுடன் பத்தாவதாக, ஜம்ப (Pedantic) நடையையும், பதினொன்றாவதாக மணிப்பிரவாள (கலப்பு) நடையையும் சேர்த்துக்கொள்ளலாம்.

ஆனால், ஜம்ப நடையும், மணிப்பிரவாள நடையும் பத்திரிகைத் தொழிலுக்குச் சிறிதும் ஒவ்வா. இவற்றினுக்கெல்லாம் மேலாகவும் பன்னிரண்டாவதாகவும் சொற்பொழிவாற்றல் (Oratorical) அல்லது வாய்சாலக நடை ஒன்றுளது. சொற்பொழிவாற்றல் அல்லது விரிவுரையாற்றல் நடையில், சொற்கள் செல்லும் செலவும் கருத்துக்கள் அமைந்து கிடக்கும் கிடையும் பாஷாபண்டிதர்கள் வியந்து போற்றும்படியாக மிக மிக உயர்ந்து விளங்கும் அமைப்புடைமையால், அந்நடை சாதாரணப் பத்திரிகைகளுக்கு ஏற்றதன்று. மற்று, அந்நடை "சொற்பொழிவு ஆற்றல்" அல்லது "விரிவுரையாற்றல்" (Oratory, or Eloquence) என்னும் பத்திரிகைகளுக்கே ஏற்றதாம். நமது நாட்டில் அத்தகைய பத்திரிகை ஒன்றேனும் இருப்பதாகத் தெரியவில்லை. ஜப்பானில் மட்டும் 'ஸ்யூபென் எலெக்வென்ஸ்" (Xuben - Eloquence) என்னும் பேரால் ஒரு வெளியீடு நடைபெற்று வருகின்றதாக முன்னர்க் குறிப்பிடப்பட்டதல்லவா? சொற்பொழிவு ஆற்றல் அல்லது விரிவுரையாற்றல், கடன்மடை திறந்தாலெனத் தங்குதடையின்றிப் பெருக்கெடுத்தோடும் பெற்றித்தாம். அவ்விழுமெனும் ஓசை கெழுமிய உரை நடையைத் தவளைப் பாய்ச்சலைப்போல நிறுத்தி நிறுத்திப் படிக்கும் பொருட்டுச் சிறு சிறு வாக்கியங்களாக மாற்றிக்கொண்டு பத்திரிகையில் அமைத்தல் வேண்டுமேயன்றி அப்படியே அமைத்திட்டால், அதன் சொற்பொருள் வாக்கியங்களின் ஆட்சி மாட்சி நீட்சிகளைப் பத்திரிகை படிப்போர் எளிதிலே அறிதலியலாது. விரிவுரையாற்றல் நடையை அப்படியே அமைத்தல், பத்திரிகைத் தொழிலின் அருமையறியாமையின்பாற்படும். அவ்விரிவுரையாற்றல் மிக நீண்டதொன்றாயின், அதன் பொருள்கள் விடுபடா வகையினும் கெடுபடா வகையினும், அதனைச் "சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்" என்ற

அழகுபட அமைத்தலே பத்திராதிபர் கடனும். இலக்கண இலக்கியப் பெருமித அமைதிகள், நிறை பொருட் பொதிவு, வட சொல்லும் தென் சொல்லும் கூடி வரும் கலப்பு நடையாகிய மணிப்பிரவாள நடை, தருக்கு நடையாகிய ஜம்ப நடை இவை இலக்கியப் பத்திரிகைக்கு ஏற்றவையாம். மணிப் பிரவாள நடையைத் தனித் தமிழ் நடையினும், தனித்தமிழ் நடையை மணிப்பிரவாளநடையினும், கதை நடையைத்தார்க் கிக நடையினும், தார்க்கிக நடையைக் கதை நடையினும், வர்ணனை நடையை ஆராய்ச்சி நடையினும், ஆராச்சி நடையை வர்ணனை நடையினும் வரைதலாகாது. மற்றவற்றையும் ஆய்ந் து தெளிந்துகொள்க. எவ்வாறு எழுதினும், பத்திரிகைத் தொழிலாளிகளை இலக்கண இலக்கிய அமைதிகளுடன் கூடிய உயரிய உரைநடை வல்லார்பலர் இறுமாப்புடன் இகழ் தலுமுண்டு. அன்னூர் கூச்சல் போட்டுக்கொண்டுதான் இருப் பர். பத்திரிகாசிரியர், விளக்கமாவும், திருத்தமாகவும், அழுத் தமாகவும் எழுதுவாரானல், தொழிலின் நோக்கத்தை நிறைவேற்றியவர் ஆவர். உரை நடையின் எல்லா அழகும் அமைதியும் காட்ட வேண்டுமென்பது பத்திரிகைத் தொழி லுக்கு இன்றியமையாததன்று. எல்லோருக்கும் கருத்து விளக்கும் உரை நடையை விட்டு, வெறும் பெருமிதத் தன்மை யும் விம்மிதத் தன்மையும் காட்டும் கடின நடை பத்திரி கைத் தொழிலுக்கு அடுக்காது; ஆகலின் விடுக்க.

அன்றியும், சுவை ஒன்பதுக்கும் நடை ஒன்பதாகக் கூறினும் அமையும். சுவை வீரம், அருவருப்பு, பெருநகை, அச்சம், கோரம், கருணை, சாந்தம், அற்புதம், சிங்காரம்என் னும் ஒன்பது வகையாக விரியும். அவ்வச்சுவைகளை எழுப்ப வல்ல சொற்களையும் சொற்றொடர்களையும் எடுத்தாளல் வேண்டும். போர் முனையில் நின்று பொருது வெல்ல வேண் டிய வீரத்தை வீரச் சுவைபட எழுதி, வீரத்தை மூட்டல்

வேண்டும். மக்கள் தன்மைகளைக் கெடுக்கும் கொலை புலைகளை அருவருப்பு, கோரம், அச்சம்என்னும் சுவைகள்படஎழுதி, அக்கொலை புலைகளைத் துடைத்தல் வேண்டும். வெள்ளைப் பெரும்போரை (The Great White War 1914—1918) அச்சச்சுவையுங் கருணைச் சுவையும் படக் காட்டலாகாது. பஞ்சாப்புப் படுகொலையைச்சாந்தச் சுவைபடவும், மாப் பிள்ளைமார் அட்டூழியத்தைச் சிங்காரச் சுவைபடவும் எழுதல் முறையாகுமா? சமய சமூக வேற்றுமைகளால் கான்பூரில் நிகழ்ந்த சம்பவங்களைக் கருணைச் சுவைபட வரைதல் நெறியாமா? உயிர்க்கொலை புலைகளைக் கோரச் சுவை தோன்றவும் அருவருப்புச் சுவை தோன்றவும் எழுதாமல், வீரச்சுவை தோன்ற எழுதுவது அழகாமா? இன்னுயிர்க் காதலனைக் காலனுக்குப் பறி கொடுத்திட்டுக் கதறும் இளங்காதலியின் துன்ப நிலையை நகைச் சுவையிலும் சிங்காரச் சுவையிலும் எழுதலாமா? விகடன் பேச்சையும் நடிப்பையும் நகைச் சுவையிற் சேர்த்துவதா, சாந்தச் சுவையிற் சேர்த்துவதா? தூக்குத் தண்டனையால், 'கொலையிற் கொடியாரை வேந் தொறுத்தல்,' கோரமாயினும், கோரச் சுவையிற் சேர்த்த லாமா? பத்தாவது சுவையொன்று இல்லாவிடினும், நீதிச் சுவையென்று ஒன்றை விரைவிலே படைத்தாவது, கொலை யொறுக்கும் நீதியைச் சுவையொறுக்கா நீதியிலன்றோ சேர்த் தல் வேண்டும்? வெள்ளத்தழிவுற்ற ஊரினர் நிலையை, அல் லது சமீபத்தில் நிகழ்ந்த பீகார் மாகாண பூகம்ப கஷ்ட நஷ் டங்களை அற்புதச் சுவை பிறக்க வரைதல் நெறியாமா? அனு தரவால் வாடித்தவிக்கும் அன்னவர்க்கு உண்டியுடை யுதவல் பொருளாதரவு, தொழிலாதரவு முதலிய பிழைக்கும் வழி களைக் காட்டிக் கருணைச்சுவை நனி பெருகப் பெருக வரை தலே நெறியாம். கருப்பையில் வளர்ந்து பிறக்கும் இயல்பினை உடைய பிள்ளைக் கருவை, கருப்பையுட்புகுமுன் வெளிப்ப

டுத்தி, ஒருபளிங்குக் கருவியிலடைத்து வளர்த்து உரியகாலத் திலே மக்கட் குழவியாக்கிய மருத்துவன் செயலை அற்புதம் என்று புகழ்வதா, பெருநகைப்பென்று இகழ்வதா? மூண்டு வளர்ந்த தீயிடைப் பாய்ந்து அதனுட் சிக்குண்டலறும் பச் சிளமகவினை உயிர் மீட்டுக் கொடுத்த இளைஞனது அருஞ் செயல், வீரச் சுவையும் கருணைச் சுவையும் பயப்பதன்றிக் கோரச்சுவை பயப்பதாமோ? இவ்வினுக்களே ஏற்ற விடை கள் பகர்வனவாம். எடுத்துக்கொண்ட பொருண்மொழிக் கும், அமயத்திற்கும், சுவைக்கும் ஏற்ற எழில் சிறந்த நடை முறையிலே எழுதுவதே பத்திரிகை உருவாக்கும் ஆசிரியரது சிறந்த தொழில் நடை முறை என்க.

(c) பல்கலை அறிவு

பத்திரிகைக்கு உருவத்தைக் கொடுக்கும் பத்திராதிபர், பல்கலை அறிவுத் துறைபோனவராய் இருத்தல் சிறப்பு. இக் கலை அறிவுதான் முற்றிலும் பயனற்றதென எக்கலை அறிவை யும் தள்ளவொண்ணுதே! எல்லாக் கலைகளுமுணர் அறிஞன் முழுமுதல் இறைவன் ஒருவன் தான். கடவுள் கடவுள்தான். மனிதன் மனிதன்தான். கடவுளுக்குக் கடவுளறிவும், மக்க ளுக்கு மக்களறிவும் வாய்த்திருத்தல் இயல்பே. ஆயினும், பத்திரிகை உருவாக்கலிற் பயிலும் ஆசிரியர், எவ்வளவுக் கெவ்வளவு வகை வகையான கலையறிவுடையாரோ அவ் வளவுக்கவ்வளவு தமதுதொழிலுக்கு மிகைமிகையான தகுதி உடையராவர்.

நமது பத்திரிகைகளில் பேசப்படுவதும் தர்க்கிக்கப்படு வதுமான முக்கியப் பொருண்மொழி அரசியலாகும். அவ் வரசியற் பொருள்கள், பலதேச சரித்திரங்களிலும், சட்டங் களிலும், அத்தேசங்களின் அரசியலமைப்புக்களிலும் அர சாட்சியிலும் எப்படியெப்படி உருப்படுத்தப் பட்டுளவோ, அப்படி அப்படியே பத்திரிகைத் தொழிலாளர்களால் மிக்க

நுணுக்கத்துடன் ஆய்வுறப் பெறல் வேண்டும். எமக்கு இந்தியா முக்கியமானதால், மேனாட்டு அரசியல் நுணுக்கங்களை மட்டும், முற்கால முதல் தற்காலம் வரை அறிவது போதாது. இந்திய பத்திரிகைத் தொழிலாளர் முக்கியம் அறியத் தக்க இலக்கியங்கள் உள்ளன. அவற்றுள், பல்லாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட முதல் பழைமையுடைய தொல்காப்பியப் பொருளியலின் அரசியல் நெறிகளும், பிற்பட்ட பழைமையுடைய திருக்குறட் பொருட்பாலின் அரசியல் நெறிகளும், நாலடியார் அரசியல் நெறிகளும், சுக்கிரநீதி முதலிய மிகப் பழைய அரசியல் நூல்களும், காப்பியக் காலத்தனவாய மகாபாரத சாந்தி பர்வமும், பகவத் கீதையும் ஊடாடிப் பார்க்கத் தகுந்தன.

தற்காலப் பத்திரிகைத் தொழிலாளர் உலகில் ஒருசிலர் விரும்பும் புதுமையாகிய ரஷிய சோவியத்து ஆட்சிமுறையில் உள்ள சிறப்பியல்புகளையும் தெரிந்திருத்தலே சால்பு. உலக சரித்திரத்திலே ஆட்சி முறையில் புதிது புதிதாகத் தோன்றி வளர்ந்து வரும் ஐரோப்பிய எதேச்சாதிகாரத்தின் நன்மை தீமைகளைப்பற்றி இந்திய பத்திராதிபர்கள் அறிந்திருத்தல் நலம். தோற்றத்தினும் கொள்கையினும் ஒன்றுக்கொன்று மிக்க வேறுபாடுள்ள எதேச்சாதிகாரம் ரஷியா, ஜெர்மனி, இத்தாலி மூன்றினும் இருந்து வருகிறது. ரஷியாவின் ஸ்டாலினுடைய எதேச்சாதிகாரம் முதலாளி ஆட்சிக்கு விரோதமாகவும், ஜெர்மனியின் ஹிட்லருடைய எதேச்சாதிகாரம் அல்லது நாஜி எதேச்சாதிகாரம், வெர்சேல்ஸ் உடன்படிக்கைக்கு விரோதமாகவும், இத்தாலியில் முசோலினியினுடைய எதேச்சாதிகாரம் பொதுவுடைமைக்கு விரோதமாகவும் தோன்றின. இவற்றில், ரஷிய அல்லது சோவியத்து எதேச்சாதிகாரத்திற்குத்தான் சிறிதளவு நேரான காரணமுண்டு. முதலாளி தொழிலாளி என்ற வேற்றுமையை நீக்கி,

சம தர்மத்தைப்-பொதுஉடைமையை-ஏற்படுத்துவது இதன் தெளிந்த நோக்கமாதலால், இச்சம தர்ம ஆராய்ச்சியில் உலக முழுவதற்கும் முயற்சியுளது. ஐரோப்பாவில் வேறு சர்வாதிகாரிகளும் இருக்கிறார்கள். அவர்களுள் போலந்து சர்வாதிகாரியும் ஒருவராவர். போலந்தின் சர்வாதிகாரம் முதலாளி தொழிலாளி என்ற இருவர்க்கும் பொதுவானது. ஆஸ்திரியாவில் டால்பஸ் என்பவரது சர்வாதிகாரம் நடை பெறுகின்றது. இங்கிலாந்திலும் சர்வாதிகாரப் பிரசாரம் நடக்கிறது. அங்கே வேண்டத்தகும் சர்வாதிகாரம், பாஸி ஸ்டு ஆட்சி முறையினதுதான் என்று ஆஸ்வால்டு மாஸ்லி கூறுகிறார். ஸ்டாபோர் கிரிப்ஸ் என்பவரோ, அபேத வாதக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டதோர் ஏதேச் சாதிகாரம் நிலை நாட்டல் வேண்டும் என்கிறார்.

இவற்றால் அறியத்தக்கது யாது? தற்காலமுள்ள பார்லி மெண்டு என்னும் பாராளும் மன்றத்தின் ஆட்சி முறை திற மையான அரசியலுக்கு ஏற்றதாக இருக்கவில்லை என்றறியக் கிடக்கின்றது. ஆதலின், "சட்டத்தின் மூலம் ஆட்சி நடக்க வேண்டுவதில்லை. அவ்வப்போது நிர்வாகிகள் வெளியிடும் உத் தரவுகளுக்கும் ஏற்படுத்தும் விதிகளுக்கும் சட்டத்தின் சக்தி இருக்கவேண்டும்" என்ற கொள்கை மேனாட்டில் சிறிது சிறி தாகப் பரவி வருகின்றது. எனவே, தனி மனித சுதந்தரம், ஜன நாயக ஆட்சி இவ்விரண்டும் பொருளற்ற வெறும்பேச் சாக எண்ணப்படுகின்றன. ஆனால், பிறருக்குத் தீங்கு தராத எவ்வாட்சி முறையும் கொள்ளத் தக்கது என்பது எனது எண்ணம். ஐரோப்பிய ஏதேச்சாதிகாரிகள் இட்டது சட்டம். இவ்வகையில் எல்லா ஏதேச்சாதிகாரங்களும் ஒன்று போல்வன. இந்தியாவில் பிரிட்டனுக்கு இருந்து வரும் ஏதேச்சாதிகாரத்தில் எதையும் தீர விசாரித்துத் தீர்ப் புச் சொல்லும் நீதியுண்டு அல்லவா? ஐரோப்பிய ஏதேச்

சாதிகாரக் கொள்கைக்கும், இந்தியாவில் பிரிட்டானிய ஏதேச்சாதிகார (சுயேச்சை)க் கொள்கைக்கும், இந்திய தேசிய மகா சங்கக் கொள்கைக்கும் (The Indian National Congress) உள்ள ஏற்றத் தாழ்வுகளை அல்லது ஒற்றுமை வேற்றுமைகளைப் பத்திரிகை உருப்படுத்தும் ஆசிரிய அறிஞர்கள் ஆய்ந்தோய்ந்து பார்ப்பார்களாக.

நமது தேச சரித்திர ஆராய்ச்சியில் இந்திய பத்திராதிபர் வல்லவராதல் மெத்தவும் நல்லதாம். அவ்வாராய்ச்சியால் நாம் நமது வீழ்ச்சிக்குக் காரணத்தை அறிந்துகொள்ள இயலும். முக்கியமாக முன்னே நாகரிகத்தில் முன்னேறிப் பின்னே பின்னிட்டு நிற்கும் இந்திய தேசப் பத்திராசிரியர்களால், சென்ற நூற்றாண்டின் கடைப்பகுதியிலிருந்து இந்நூற்றாண்டின் முதற் பகுதிக்குள் உலக வல்லரசுகளில் ஒன்றாய் அவற்றுடன் கலந்து முன்னணியில் நின்று வரும் ஜப்பான் தேச சரித்திரம் மிக்க பயனுடன் ஓதித் தெளியத் தகுவதாம். நமது இந்திய தேச சரித்திரத்தில் தனித்த ஆராய்ச்சி உடையராய் இருந்தால், பன்னூறு நூற்றாண்டுகளாய்த் தொடர்ச்சியாய் நிலை பெற்று வந்துள்ள நமது உலக முதல் நாகரிக முன்னேற்றத்தையும், பின் ஒரு சில நூற்றாண்டுகளாய் அடைந்துள்ள பின்னீட்டையும், அப்படுகுழியிலிருந்து மேனோக்கி முன்னேறாமல் உரிமையற்றுத் தத்தளித்துத் தடுமாறிக்கொண்டிருக்கும் தற்காலத் துன்ப நிலையையும், காரணங்களுடன் உணர்ந்து, உயர்ச்சியடைய முயலுதற்கு ஏதுவாயிருக்கும். ஆதலால், இந்திய தேச சரித்திர ஆராய்ச்சி, இந்திய பத்திரிகைத் தொழிலாளர்க்கு இன்றியமையாத் தேவையினதாம். காந்தியடிகளைப் போன்ற உண்மையான தேசப் பற்றுடையவர் எவரும், உலக சரித்திரத்திலேயே மிக்க புதுமையான அறப்போரையன்றி, இரத்தஞ் சிந்துவிக்கும் புரட்சிகளாலாய

மறப்போரை விழைவதில்லை. தேச சரித்திரங்கள், இரத்தஞ் சிந்துவிக்கும் கொடுநெறிப் புரட்சிகளையும் அவற்றின் காரண காரியங்களையும் நீளச் சொல்லிச் செல்லுகின்றன. தேச சரித்திரத்தில் தேர்ச்சியுற்ற ஒரு பத்திராதிபர், இரண களத்துய்க்கும் படுபுரட்சிகளையும் தடுக்கும் வழிகளை உய்த்துச் சொல்லவும் வல்லவராவர்; மேலும் காந்தி-இர்வின் ஒப்பந்தத்தைப் பிறப்பித்து, அதன் முன்னும் பின்னும் நடை பெறலான சட்ட மறுப்பியக்கம் போன்ற அமைதிப் புரட்சியினால் மிக விரைவான ஒழுங்கு பூண்ட தேசீய முன்னேற்றம் அடையக்கூடிய வழியை வகுத்திடவும் வல்லவராவர். தேச சரித்திரத் தேர்ச்சியின் பயன் சிற்றளவினதோ ?

கடந்த ஐரோப்பிய அல்லது வெள்ளைப் பெரும் போரும் (The Great White War, 1914—1918) அதன் பயன்களும் நாகரிக நாடுகளிலுள்ள முன் யோசனை உள்ள அறிஞருக்கு, எல்லா மக்களின் தலை விதியும் எல்லாத் தேசங்களின் தலைவிதியும் பிரிக்கப்படாமல் ஒன்றோடொன்று பின்னப்பட்டிருக்கிறதென்னும் நம்பிக்கையை ஊட்டி விட்டன. அதற்கறிகுறியாகச் சர்வதேச (அமைதிச்) சங்கம் (The World League) நிறுவப் பெற்றுளதல்லவோ? மேனாட்டு வல்லரசுகள் பெரும்போட்டியுடன் யுத்தக் கருவிகளையெல்லாம் பெருக்கிக்கொண்டு வருவதைக் கண்டும், அச்சங்கம் உலக முழுமைக்கும் உரிமையும் அமைதியும் நிலை நாட்டும் தனது கடமையைச் செய்யாமல் இன்னுங் காலம் போக்கி வருமேயானால், அதன் பேர் சர்வ தேச யுத்த சங்கமென்றோ, இரத்த சங்கமென்றோ மாற்றப்படும் காலமும் நெடுந்தொலைவில் இராதென்பதே எனது கருத்து. இவற்றையெல்லாம் நோக்கும்போது, எல்லா அரசியல் அதிகாரிகளுக்கும், பத்திரிகைத் தொழிலாளர்களுக்கும் உலக சரித்திர உணர்ச்சியும் உலக அரசியல் நடை முறை

களின் உணர்ச்சியும் பழக்கத்தில் இருக்க வேண்டுவது அவசியமென்பது ஏற்படுகின்றதன்றோ? இந்திய தினசரிகளும் சஞ்சிகைகளும், பொதுவாகவே வெளிநாட்டு அரசியல் முறைகளை ஆய்வதில் கூச்சம் மிக்கனவாயுள. அக்கூச்சமுடைமை, சிறுபான்மை அறியாமையாலும், பெரும்பான்மை பிற்காலத்தில் வந்து குடி புகுந்துள்ள நமது சொந்த வன்மை இன்மையாலும், அல்லது அவ்வன்மையைத் தொழிற்படுத்தப் பழக்கப்படாமையாலும், வேறு குறைபாடுகளாலும், துன்பங்களாலும் ஏற்பட்டதாம் என்க. தேசியங்களின் உட்சம்பந்தமான அரசியல் முறைகளிலே விருப்பினராதலே நமக்கு மிக்க நலன். இந்தியாவுக்குத் தன்னியல்பாகவோ, அதிகார வர்க்க வழியாகவோ, வெளி நாடுகளுடன் அரசியல் முறைக்குரிய சார்புகளை வைத்துக்கொள்வதற்கு அதிகாரமில்லையென்பது மெய்ம்மையே. ஆனால், அறிக்கை மூலமாகவும், அதிகார வர்க்கமல்லாத வழியாகவும், நாம் வெளிநாடுகளின் சார்பையடைதற்கு அந்நாடுகளைத் தூண்டுதலும், அவற்றால் தூண்டுவிக்கப்பெறுதலும் செய்துகொள்ளுதல் கூடும். தேசங்கள், அரசியல் முறைகளைவிட, வியாபாரம், கைத்தொழில், வரவு செலவு முதலிய துறைகளில் ஒன்றோடொன்று அதிகமான உட்சார்புடைமையைப் பேதையான ஒருவனும், சிறிதெண்ணிப் பார்ப்பானாயின், கண்டுகொள்வான். ஆகலின், பத்திரிகை உருவாக்கும் ஆசிரியர் அனைவரும், பொருளாதார நிலைமைகளிலும், அவற்றைச் சார்ந்தனவற்றிலும், சார்விக்கப்பட்டனவற்றிலும், கலந்து கலந்து நிலையாக நின்று, தங்கள் தொழிலாற்றக் கடவர் ஆகுக.

(d) சீர்திருத்தங்கள்

மற்றைச் சீர்திருத்தங்களைப் போலவே, மக்கட் கூட்டமும் காலத்திற்கேற்ற கோலத்துடனே சீர்திருத்தப் பெற

வேண்டுவதே. பழையனவற்றில் இக்காலத்திற்கு ஒவ்வாதனவற்றை அப்புறப்படுத்தலும், புதியனவற்றில் ஒவ்வுவனவற்றைச் சேர்த்துக்கொள்ளுதலும் அறிஞர் கடமை. அவ்வாருகும் சீர்திருத்தத்திலே, ஒரு சமூக நிலையின் உயிர்நாடியாயிருப்பதை எக்காலும் விலக்கவொண்ணுது. அடிப்படையான மக்கட் கூட்டக் கொள்கை அசைக்கப்படாத சீர்திருத்தமே சீர்திருத்தமாம். வீடுகள், வண்டிகள், தட்டு முட்டுச் சாமான்கள் திருத்தப்படுதல் போல மக்கட் கூட்டத்தின் குறைபாடுகளை மாத்திரம் போக்கி, அதன் நலன்களை நிறைவுகளாக்கல் வேண்டும். எனவே, சீர்திருத்தமாவது புதுக்குதலென்க. மக்கட் கூட்டச் சீர்திருத்தம் செய்வோர், மக்களின் மனோ தத்துவத்திலும், நீதி அறிவிலும், சமூக நெறி முறைகளிலும் புலமை அடைந்தவராவர்; ஏனையோரால் அஃது இயலாது. தகுதியற்றவர் செய்யினும் அச்சீர்திருத்தம் மக்கள் நலத்தினுக்காகாது. மக்கள் வகுப்பின் இயற்கை வரலாறும், (Anthropology) பாரம்பரியமான நல்ல கொள்கைகளும், மரபு விளக்கத்திற்குரிய அருங்கலையறிவும், நுண்ணூலறிவும் சமூக அமைப்பின் சார்பாக நோக்கற்பாலனவாம். கல்வியறிவில்லாத எம் மக்களுக்கும், சீர்திருத்த முன்னேற்றமென்பது, மலடி வயிற்று மகப்பேரும். கல்வியில் தேர்ச்சியும் நுணுக்கமும், கல்வியில் அரசுக்குள்ள தொடர்பும், அருங்கலையும், இலக்கியமும், நுண்ணூலும், சமயமும், தேசீயத் தன்மையில் செய்யும் வேலையும், இவையெல்லாம் அதனதன் முறையிலே தேசீயத் தன்மையால் தொழிற்படுத்தப்பட்டு வருதலும் ஆகிய இப்பொருண்மொழிகளெல்லாம், தங்கள் மக்களினத்திற்குப் பத்திரிகைகளின் வழியாக உண்மையாகவே ஊழியஞ் செய்ய விரும்புவோரால் நன்கு ஊன்றிப் பார்க்கப்பெற வேண்டுவனவேயாம். குழந்தை மனோ தத்துவத்தை

அறியாமையின் காரணமாகவே,குழந்தைகள் மாத்திரமன்றி, எல்லா மக்களினமும் துன்புற்றுள்ளன என்பதற்கு எட்டுணையும் ஐயமின்று.பெண்மணிகளின் அறிவாற்றல்களை அறியாமையாலும், அம்மெல்லியலாரைப்பற்றிப் பிற்காலத்திற் கொள்ளப்பட்டு வரும் ஒடுக்கமான கருத்துக்களாலும் நமக்கு ஏற்பட்டுள்ள நட்டம் இவ்வளவவ்வளவல்லவே! ஆடவரைக்காட்டிலும் சில பல வகைகளிலே, மகளிர் நிறையும் பொறையும் அறிவும் ஆற்றலும் மிகுதியும் வாய்ந்தவர் ஆவர். பால் வேற்றுமை தவிர்த்து, உயிர் வேற்றுமை உளதோ ? ஆதலின், பெண்டிர்க்கும், வேண்டிய படி நிலைகளிலே வேண்டும் அளவான உரிமைகள் வழங்கப்படுவனவாக. மூலை முடுக்குக்களிலே முக்காடிட்டுப் பதுங்குவித்தும், அடுப்பூதும் தொண்டிற்கும் பிள்ளைப் பேற்றிற்கும் அடிமைப்படுத்தியும் வருவதை விட்டு, திருந்திய கல்வியறிவொழுக்கங்களிலே ஆடவருடன் ஒத்த உரிமைகளுடன் கலந்து உறவாடி வரும்படி வழி காட்டுவதில், மடவார்க்குப் பத்திரிகை உருவாக்கும் ஆசிரியர்கள் தக்க வழிகாட்டிகளாகி நன்மை புரிவார்களாக. பத்திராசிரியர்கள், ஏனைப் பகுதிகளோடு மகளிர்பகுதி ஒன்றை உருவாக்கி, அதன் வழியாக நங்கையர் மாட்டு முழு நீதியும் செலுத்துதற்கேற்ற புதுமையோடுகூடிய திருந்திய அறிவு படைத்தவர்களாய் இருத்தல் வேண்டும்.

(e) சட்ட திட்டங்களும் நாடு நகர்களும்

குற்றங்கள், குற்றஞ் சாட்டுதல், விசாரணைகள், தீர்ப்புக்கள், தண்டனைகள், சிறைச்சாலைகள், சிறைச் சீர்திருத்தம் என்பனவற்றைப்பற்றிய செய்திகள்,பத்திரிகைகளின் பொருளடக்கங்களிலே கொள்ளப்படுவனவாம்; தள்ளப்படுவன அல்ல. எனவே, பத்திரிகைக்கு உருவந் தீட்டும் ஆசிரியர், வழக்கு முறை, தண்ட நெறி, நீதி நடை இவற்றில் அறிவு படைத்தவர் ஆதல் வேண்டும். நாட்டுப்புர நகரச் சீர்திருத்த

அமைப்புக்களும், நாட்டுப்புர நகர வாழ்க்கைகளாலும் நாட்டுப்புர நகரச் சுகாதார நிலைகளாலும் முறையே அடையும் நன்மைகளும், நன்மைக் குறைவுகளும், பிறவும் பத்திராசிரியர்கள் சீர் தூக்கிப் பார்த்து முடிவு கட்டுதற்குரிய பொருண்மொழிகளாம். ஆதலின், கொள்ளை, வைசூரி, மலேரியா முதலிய நோய்களின் வரலாற்றையும் அவற்றின் தோற்றக் காரணங்களேயும், சுகாதாரத்தையும், நகர அமைப்பு நாட்டுப்புர அமைப்புக்களேயும் அறிந்திருப்பதே, பத்திரிகை உருவாக்கும் தொழிலுக்குச் சீர்த்தியாம்.

(f) பல தொழில் நுட்பம்

பயிர்த்தொழில் முதலாகச் சொல்லப்படும் கைத்தொழில்களும், இன்னும் பல்வேறு வேலைகளும் மக்கட்கூட்டத்தின் பெருக்கத்திற்கும் முன்னேற்றத்திற்கும் நிலைபேற்றிற்கும் வேண்டப்படுவனவே. எல்லா விதமான உற்பத்தித் தொழின்முறைகளும் ஒரு பிரதிகூலத்திற்கு இல்லாவிடினும் இன்னொரு பிரதிகூலத்திற்கு உட்பட்டு வருகின்றன. இவற்றின் குறைவறுக்கும் முறைகளேக் காட்டவும், அவற்றைப்பற்றி வாதிக்கவும், பத்திராதிபர் வல்லவராய் இருத்தல் வேண்டும். அதற்கு அத்தொழில்களேப்பற்றிப்போதிய அறிவு வேண்டுமல்லவோ? சுரங்க (Mine) விதிகளும், காட்டிலாகா விதிகளும், ஏரி குளம் ஆறுகளின் நீர்ப்பாசன விதிகளும், துறைமுக வியாபார விதிகளும், பருத்தி நூல், துணிகள், பஞ்சு, வெல்லம், சர்க்கரை, கற்கண்டு முதலியன உற்பத்தி செய்யும் ஆலைகளின் விதிகளும், இன்ன பிறவும், ஒரு தேசத்தவரின் நலன்களேக் காத்து வளர்த்து வரத் தக்கனவாய் இருத்தல் வேண்டுமென்பதையும், பத்திரிகை உருவாக்குவோர், சமயம் நேர்ந்தபொழுதெல்லாம் குறிப்பிடல் வேண்டும். அந்நலன்களேக் காப்பாற்றுவதற்காகப் பத்திரிகாசிரியர்கள், அக்கைத்தொழில்களின் விதி விலக்குக்களே அறிந்

திருத்தல் நன்றே. முக்கியமாகச் சுரங்கச் சட்டங்களின் பாதுகாப்பு, முன்னேற்ற உரிமைகளுடன் ஆளப்படும் நாடுகளுக்குப் பெரிதும் வேண்டப்படுவதே. பூமி சாஸ்திர (Geology) ஆராய்ச்சியும் விலக்கத் தகுவதன்று.

பூமியிலும், ஆலைகளிலும் முறையே செய்யப்படும் பயிர்த்தொழில் நெசவு முதலிய கூலி வேலைகளையும், தோட்டம் தோப்பு (Plantation) முதலியவற்றைப்பற்றிய ரிவின்யூ சட்டதிட்டங்களையும் பற்றிப் பத்திரிகை உருவாக்குவோர் நன்கு தெரிந்திருத்தல் வேண்டும். ஜினிவாவிலுள்ள சர்வ தேச தொழிற் காரிய நிலையத்தின் (The International Labour Office at Geneva) வெளியீடுகள் அவ்வகை அறிவாராய்ச்சிக்கு வேண்டிய வழிகாட்டிகளாய் இருப்பனவாகத் தெரிவிக்கப்படுகின்றன. இருப்புப் பாதை, துறைமுகம், நிலன், நீர், விண் (ஆகாய விமானம்) வழிகளின் வியாபாரப் போக்கு வரவு விகிதம், தந்தி, தபால், தொலைவிலுணர் கருவி இவற்றின் கட்டணம், இன்ன பிறவற்றின் சுங்கம் வரிகள் இவற்றின் அமைப்பாட்சிகளைப் பற்றிச் சிக்கறுக்க வேண்டிய பொருள் மொழிகளெல்லாம் பயிர்த்தொழிலையும் வேறு கைத்தொழில்களையும் பற்றி ஊடுருவி நிற்பனவாம். இவ்வருமையை நன்குணர்ந்ததன் அறிகுறியாக மேனாடுகளிலும் ஜப்பானிலும் இவற்றைப்பற்றிக் கையாள்வனவாகிய நடை முறைகளில் எவ்வளவோ பெரிய விருத்திகள் செய்யப்பட்டுள்ளன. மிக்க முன்னேற்றம் உற்று வரும் அவ்வயல் நாடுகளில் கையாளப்பட்டு வரும் அம்முறைகளைப்பற்றிப் பத்திராதிபர் அறிந்திருத்தல் வேண்டும். அவற்றின் ஆராய்ச்சிக்கு அடிப்படையாக வியாபாரப் போக்கு வரவுக்குரிய பூகோள நூலறிவு நுட்பம் பெரும்பயனுடைத்து. அரசியல் துறையிலும், கைத்தொழில் துறைகளிலும், தீவாந்தரப் போக்குத் துறையிலும் பெரும்பெருந்

திரள்களான மாந்தர் நாளுக்கு நாள் நுழைந்துகொண்டும் வருகிறார்கள். ஆதலின், கலப்புக் கூட்டத்தினர் மனப் பான்மை அதாவது, மகாஜனங்களின் மனோபாவ (Crowd Psychology)ப் பயிற்சியும் பத்திரிகைக் கருவுயிர்க்கும் தாய்மார்களுக்கு வேண்டற்பாலதென்க. தேசத்தை நாடோறும் ஊட்டியுடுத்திப் பொருளாதார நிலையைப் பெருக்கிவரக் கூடிய பலதொழிற் காப்புக்காக நம் பத்திராதிபர்கள் ஏற்ற நூல்களையும், வெளியீடுகளையும் இயன்ற மட்டும் சோதித்தும் வாதித்தும் வருவார்களாக.

(g) கடமைகள்

1. பொதுக் கடமைகள்

பத்திரிகை உருப்படுத்துவோர் பொதுக்கடமைகள் பல. கவனிக்கத்தக்க அல்லது குறிப்பிடத்தக்க ஒவ்வொன்றையும் காண்பதும் கேட்பதும் மாத்திரம் அவர்கள் கடமையாகா; மற்று, அவற்றை வீடுதோறும் தெரிவிப்பதும்,குடும்ப ஒற்றுமையையும் பற்றையும் மீட்டுக்கொடுப்பதும், ஒரு நாட்டின் செய்திகளையும் நிலைமையையும் வரக்கூடிய நலன்களையும் பிறிதொன்றுக்குத் தெரிவிக்கும் வகையிலே பண்டுகளையும் அறிமுகப் படுத்துவதும் கடமைகளாம். மேலும், அந்நாட்டவர், ஒருவருக்கொருவர் சகோதரப் பற்று மிக்கவராகவும், பிரிவிலா நட்பாளராகவும், உறவு கலப்பதில் வளமையுடையராகவும் செய்விக்கும் செய்திகளை அமைத்துப் பத்திரிகை உருவாக்கல் கடனே. உலக அமைதியினை நாடிக்கொண்டிருக்கும் காந்தியடிகளைப் போன்ற பேரறிஞரும், ரவீந்திரநாத தாகூரைப் போன்ற கவிவாணரும், முறையே, முன்னே கண்டு முன்னே சொல்லி வைத்துள்ள அடிமை விலங்கைத் தறித்தெறிவித்து மெய்யான இன்பத்தைக் கொடுக்கும்படியான எல்லார்க்கும் பொதுவான பிறப்புரிமை நுகர்ச்சிக் காலத்தின் வருகையை ஒரு சிறிது மெதுவாகவும் மிக்க

உறுதியாகவும் கூட்டுவித்தல் பெருங்கடன் என்க. இவை, பொதுக் கடமைகளாம்.

2. சிறப்புக் கடமைகள்

நன்மை நாட்டலும் தீமை வீட்டலும் பத்திராதிபர் சிறப்புக் கடமைகளாம். தற்போதுள்ள நிலைமையில், நல்லனவெல்லாம் காப்பதும், கூடிய மட்டும் கழிந்து போன பழையனவற்றில் நன்மையானவெல்லாம் மீட்பதும், நல்லன நீடும் வகையிலே அவையிருக்கும் இடத்துள்ள தீயனவற்றைச் சீர்திருத்துவதும், பொது நலப் பெருக்கத்திற்கான புதுநெறி முறைகளைக் கொண்டமைப்பதிலே யோசனை சொல்வதும் உதவுவதும் பத்திரிகை உருப்படுத்துவோர் சிறப்புக்கடமைகளாம். வாழ்க்கையின் ஏனை முன்னேற்றத் துறைகளெல்லாம் தூர்ந்து கிடக்கும்போது குறிப்பிட்ட ஒரு துறையில் முன்னேற்றமடைதல் இயலாது. முன்னேற்றத் துறைகள் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. எனவே, ஒரு வழியின் விருத்தியிலே முன் யோசனையும் உண்மையுமுள்ள பத்திராதிபர், மற்றை வழிகளின் விருத்தியிலே அன்பும் ஆதரவும் காட்டாதிருக்க முடியாது. எந்நெறியினும் எதிர்காலச் சீர்த்தியில் பிறக்கும் நம்பிக்கையானது தன்னை அறியாமல் பிறந்ததாயிருப்பினும் நன்மை விளைக்கும் தன்மைத்தாயின், அது மக்கள் வாழ்க்கை விளக்கத்திலே உறுதி உள்ள நம்பிக்கையேயாம். அவ்வுயரிய நம்பிக்கை, இவ்வுலகம் மக்களுக்கு நலன்களைத் தன் நினைப்பு மாத்திரையானே ஊட்ட வல்ல தன்னை ஒப்பாரும் மிக்காருமில்லாத ஓர் உயர் தனிப்பெருங்கடவுளின் திருவருளாலே ஆளப்பட்டு வருகிறதென்னும் நம்பிக்கையிலே பிறந்திடின், மிக்க மாண்புடைத்தாம். ஆனல், நல்வாழ்க்கை முன்னேற்றங்கள் சொந்தப் பொருளையே பொருளாக எண்ணி அதனைப் பெருக்கும் கட்சிப் பிளவுள்ள பத்திரிகைகளாலும், ஐம்புல

நுகர்ச்சி இன்பங்களிலேயே ஊக்கமூட்டும் வெளியீடுகளாலும், அறிவு விளக்கமின்றி இருளிலே பிறந்து இருளிலே வளரும் புதினத்தாள்களாலும் உண்டு பண்ண முடியாதனவாம். தளராத மேலான நடை முறையுள்ள அரசியல் நிபுணத்துவமும், உயரிய நோக்கங்களும், மிக்க ஆற்றலும், பழுத்த ஆராய்ச்சி அறிவும் பூண்டமையோடு, கடவுள் திருவருள் வலத்தால் பொங்கி வழியும் நம்பிக்கையால் ஆவேசமூட்டப்பெற்று, உலகத்தையெல்லாம் விளக்கும் அறிவுவிளக்கத்தால் நடத்தப் பெறுபவரான நல்லாசிரியர்களாலே நடத்தப்படும் பத்திரிகைகளாலேதான், மக்களது திருந்திய இருமையின்ப வாழ்க்கை நலன்களெல்லாம் உண்டுபண்ணப் பெற்றனவாம்; பெறுகின்றனவாம்; பெறுவனவாம். ஆகலின், இகபர வாழ்க்கை நலன்களைத் தரக்கூடிய செய்திகளால் பத்திரிகை உருவாக்கலே ஆசிரியரது சிறப்புக் கடமையாம்.

எல்லாம் தெரிந்த பத்திராசிரியரும் இலர்; ஒன்றுந் தெரியாத பத்திராசிரியரும் இலர். ஒரு பத்திராசிரியர், அபிதான விளக்கம் (Encyclopædia) ஆக முடியாது. நம்மவருட் சில பத்திராசிரியர், சில பொருண்மொழிகளிலே தனிப்புலமை பெறுதல் வேண்டும். மற்றுமுள்ள பத்திராதிபர்கள், வேறு சில பல பொருண்மொழிகளிலே தனிப் புலமையுறுதல் வேண்டும். பத்திராதிபர் நிபுணத்துவம்வாய்ந்திருத்தல் கூடாதென்பதன்று. அது வாய்ப்பின் மெத்த நலமே. மிகு கீர்த்தி பெற்ற சில நிபுணரும் பத்திரிகைத் தொழிலில் உழைத்துளர். தற்காலத்தில் உயிரோடுள்ள பிரிட்டிஷ் பத்திரிகைத் தொழிலாளருக்குள் லார்டு ரோதர்மியரும் (Lord Rothermere) அமெரிக்க பத்திரிகைத் தலைவருள் அறிஞர் வில்லியம் ரண்டால்ப் ஹார்ஸ்டு (Mr. William Rundolf Hearst) என்பவரும் பேர் போனவர்கள். நமது இந்திய பத்திரிகாசிரியர்க்குள்ளே, லாலா லஜபதிராய் (Lala Lajpat Rai)

என்ற அறிஞரும், கவி ரவீந்திரநாத தாகூர் (The poet Rabindranath Tagore) என்ற அறிஞரும், "யங் இந்தியா" ஆசிரியர் காந்தியடிகளும், திரு. கே. சி. ராய் (K. C. Rai) அவர்களும் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவர்களாவார்கள். இவர்களுள் முதல் மூவரும், கிழக்குலகமும் மேற்குலகமும் கொண்டாடும் பேரறிவும் பெருந்தொழிலும் உடையவர் என்பதும் அறியத் தக்கது. திரு. கே. சி. ராய் அவர்களோ, பத்திரிகைத் தொழிற் புலமையில் ஒப்புயர்வற்றவர். பத்திரிகைத் தொழிலுக்கு மிக்க உயர்தர நிபுணரே வேண்டுமென்பதில்லை. சற்று மேலே குறிப்பிட்ட தன்மைகளும் வன்மைகளும் மட்டும் போதியன. பெரிய வெற்றியுள்ள ஒரு பத்திராசிரியரைக் கடவுளினத்தில் வைத்தெண்ண வேண்டுவதும் இல்லை. நாம் அப்படி ஒருவரை எண்ணினும், அஃது உறுதி விளக்கமுடைய கொள்கையாகாது. ஏனெனில், சில சமயங்களில், மிக்க பேர் வாய்ந்த கவிஞருக்கும், அறிவறிந்த சான்றோருக்கும், கலைப்புலவோருக்கும், நுண்ணூல் அறிஞருக்கும் கூடப் பத்திரிகை உருவாக்கும் ஆசிரியர், தீர்ப்புச் சொல்லும்படி அமர வேண்டியிருக்கும். அது நமது பத்திரிகைத் தொழிலாட்சிக்கு அடுத்ததாயிருப்பினும், அந்தச் சமயங்களிலே தமது தீர்ப்புக்களால் (தலையங்கங்களால்) கண்டிக்கப்படும் அப்பெரியாருக்குத் தாம் ஒப்பானவரென்றும், சில சமயங்களிலே அவரைக்காட்டினும் மேலானவரென்றும், தம்மைத் தாமே மூளையும் களைக்கும்படி எண்ணியெண்ணி இறுமாந்திடல் ஆகாது. தம்மால் தாக்கப்படும் அப்பெரியார் சேவகனே தமக்குத் தீர்ப்புச் சொல்லும் நிலைமைஏற்படினும் ஏற்படலாம் என்று எண்ணி, பத்திரிகை உருவாக்கும் ஆசிரியர், தமது கடமைகளில் இறைப்போதும் தவறுமல், நடுவு நிலையுடன் தொழில் புரிவாராக.

(a) செய்தி விளக்கம்

பத்திரிகை வடிவந் தீட்டுவோர் சகல கலா வல்லவராயினும், தொழிலுக்கேற்ற அளவுக்குக் குறைவுபடாத கலையறிஞராயினும், சிறிது படிக்கத் தெரிந்தவர்க்கும் விளங்கும்படி மிக்க வன்பொருள்களையும், சிக்கலான பொருண்மொழிகளையும், திராட்சா பாகமாக்கித் தருதல் அவர்க்குச் சிறப்புக் கடனும். அது சிலர்க்கு மிகவும் கடினமான வேலையாயினும், பத்திரிகைத் தொழிலாளர்க்கு அப்பயிற்சி மிகவும் முக்கியம். செய்திகளை எளிய உரை நடையில் அமைக்கத் தவறுநர், மக்கட் கூட்டப் போதனு முறைத் தொழிலில் வழுக்குவர். அவர் கடன், நிகழ்ச்சியிலிருக்கும் பெரிய அரசியற்பொருண் மொழிகளைப் பற்றியது மட்டுமன்று; மக்களின் நல் வாழ்வுக்கு வேண்டுவனவெல்லாம் தெள்ளிய கட்டுரைகளால் விளக்குதலுமாம். ஆகலின், எல்லா அறிவும், அழகும், எல்லா முன்னேற்றுவிக்கும் பொருள்களும், பின்னும் ஆக்கத்திற்கு உரியன எல்லாமே, ஒவ்வொருவருடைய வீட்டுக் கதவுகளிலும், ஒவ்வொரு கழகத்திலும், ஒவ்வொரு புத்தக சாலையிலும், ஒவ்வொரு வாசக சாலையிலும், ஒவ்வொரு பாடசாலையிலும், ஒவ்வோர் உயர்தரக் கலாசாலையிலும், ஒவ்வொரு கல்லூரியிலும், ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் பத்திரிகை என்னும் வடிவிலே நுழையும்படி அமைத்துக் காட்டப்படுதல் வேண்டும். அவையெல்லாம் எவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய எளிய நல்ல நடையிலும் வகையிலும் அமைத்தலே இனிது! இழிந்த உணர்ச்சிகளுக்கே ஊக்க மூட்டக்கூடிய வகையில் அமைத்தல் கொடிது! கொடிது!!

(b) செய்திகளில் சீர்திருத்தம்

நிகழும் நிகழ்ச்சிகளை எழுதுவதும் வெளிப்படுத்துவதும் நமது முக்கிய கடமை. அந்நிகழ்ச்சிகள் பல் வகையின: சில நல்லன; சில தீயன; சில இரண்டுங் கலந்தன;

சில இரண்டுங் கெட்டன; சில புலன்களைக் கீழான உணர்ச்சிகளில் கிளர்ச்சி செய்வன. நல்ல நிகழ்ச்சிகளைவிடத் தீய நிகழ்ச்சிகளே அதிகமாக வெளியிடப்படுகின்றன. எத்தனையோ வழிகளில் உலகெங்கும் நடந்து வரும் நல்ல நல்ல செய்திகளைப் பார்க்கினும், நாநா விதமான கொடுங்குற்றங்களைப்பற்றிய செய்திகளும் மிக்க மகிழ்வுடன் பாராட்டப் பட்டு வருகின்றன.

செய்தி வகை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று திட்டமாகச் சொல்ல இயலாது. ஆனால், ஒன்று சொல் வேன்: அஃது, அன்புக்குரிய சிறு சிறு நடைகளையும், மிக்க எழிலும் மனக் கவர்ச்சியும் பெருகும் வகையிலே எடுத்தியம்புதல் கூடாததன்று என்பதே. மானம் மரியாதை அன்பு அருள் இவற்றை ஒதுக்கும் பத்திரிகைகள், வெறும் சிற்றின்பங்களை மட்டும் தாங்குவதால், போலிகள் என்று ஆன்றோரால் ஒதுக்கப்படும். ஆகையால், தெளிந்த சிற்றின் பங்களும், பேரின்ப நெறிகளும் பத்திரிகைகளால் விரும்பற் பாலன. இழிந்த சிற்றின்ப நெறிகளும் செயல்களும்,உயர்ந்த சிற்றின்ப நெறிகளையும் செயல்களையும், பேரின்ப நெறிகளையும் செயல்களையும் அரண் செய்யும் வகையிலே எடுத்துக் காட்டப்படுதல் வேண்டும். அதாவது இழிநெறிகளும் செயல் களும், உயர் நெறிகளுக்கும் செயல்களுக்கும் தடைகளாய் இருப்பதன் உண்மையை உதாரணங்களானும் திருஷ்டாந் தங்களானும் உலகச் செய்திகள் வழியே அமயம் வாய்ப்புழி விளக்கல் வேண்டும்.

மிகுதியும், தெளிந்த சிற்றின்பங்களையும், இயன்றவரை பேரின்பங்களையும் செய்திகளின் வாயிலாக ஊட்டி வருப வரே, உயர்தரப் பத்திரிகாசிரியர் ஆவர். அவ்வகைச் செய் திகளால் உலகினுக்குப் பயன்படும் பத்திரிகைகள் சிறுபான் மையனவே. ஒருத்தியை மற்றொருத்தி சாணித் தண்ணீ

ரால் அபிடேகஞ் செய்ததையும் விளக்குமாறு என்னும் சாமரத்தால் வீசியதையும், ஒருவனை வேறொருவன் காலால் உதைத்துச் சாக்கடைக் குழியிலே தள்ளியதையும், செருப்பால் அடித்ததையும், அன்னவர் நீதிபதி முன்னே நிறுத்தப் பட்டிருந்ததையும், பலர் வெகு திறமையுடன் பொய், கொலை, கள், களவு, கள்ளக் காதல் இவற்றில் ஈடுபட்டதையும் ஆவலுடன் விரைந்து பற்றி நமது பத்திரிகைகளில் எழுதி வருகிறோம் அல்லவா? எத்தனையோ செல்வர்கள் முகமெடுத்துப் பார்த்தும் பார்த்தும் தள்ளாடி நடக்கும் ஒரு கிழக் குருடனுக்கோ, சிறிதும் நடக்கவியலா ஒரு முடவனுக்கோ, ஒற்றைப் பைசாவேனும் கொடாது போய்க் கொண்டிருக்க, எலும்புந் தோலுமாக இளைத்து வாடிய வறுமைப் பிணியுடைச் சிறுவனொருவன், அவ்விரவலர் இருவோருக்கும் இரண்டணாவுக்குச் சிற்றுண்டி வாங்கிக்கொடுத்து, தான் வெறுங்கையுடன் பசிப்பிணியால் வாடித் தளர்ந்து கிடந்ததைக் குறிப்புரையாகவேனும் எழுதி வருகிறோமா? என் போன்றவர், தமது நெஞ்சைத் தொட்டுக் கொண்டு 'ஆம்' என்பதற்கு இயலாதவரென்றே எண்ணுகிறேன். மற்றும், ஒரு குளத்திலே நீராடச் சென்ற தன் தலைவனை, அக்குளத்திலுள்ள முதலைக்கு இரையாகாமல் காக்கும் பொருட்டு ஒரு நாய் அவனைக் குளக்கரையிலே கால் வைக்கவொட்டாமல் தடுத்துத் தடுத்துப் பார்த்தும், நாயின் குறிப்பையுணராமல் அதனையடித்து விலக்கிவிட்டு, தலைவன் நீரில் இறங்கக் கண்டு, நாய் குளத்தில் பாய்ந்து, முதலைக்குத் தன்னை இரையாக்கிய முறையிலே, தன் தலைவனுயிரைக் காத்த கைம்மாறு காணாப் பெருநன்றியை என் போன்றவர் எத்துணைப்பேர் பத்திரிகையிலே வெளிப்படுத்துவரோ அறியேன். நாட்டின் கட்டாயக் கல்வி, பொருளாதார விருத்தி முதலியவற்றுக்கான நலன்கள் புரிய

ஒட்டாமல், அரசப் பிரதிநிதியால் வெறும் அரசியற் பொம்மையாக ஆட்டப்படும் ஒரு மந்திரியைப் பொது நலம் பேணுதவர்களான பல செல்வர்கள், தேவஸ்தானத் தலைமை, ஜில்லா சங்கத் தலைமை, சட்ட சபை முதலியவற்றிலே நியமனம் பெறுதற்காகவும், பெருமையான பட்டங்களைப் பெறுதற்காகவும் நோக்கங் கொண்டு, ஆங்காங்கு அவை கூடி வரவேற்று விருந்திட்டதும், பேட்டி கண்டதும், பேசியதுமான செய்திகளை எந்தப் பத்திரிகையாவது வெளிப்படுத்தாமல் விடுமா? தன்னுயிர் போக்கித் தலைவனுயிர் காத்த நாய்ச் செயலினும், தன்னலக் கர்மமே கண்ணுயினுர், அரசப் பிரதிநிதி, அல்லது அரசியல் மந்திரியுடன் அளவளாவிய செயல் பெரிதோ? எவ்வகையிலாவது எட்டுணையேனும் அந்நாய்ச் செயலுக்கும் அம்மனிதச் செயலுக்கும் ஒப்புமையுளதோ? இல்லையில்லை.

அன்பும், ஆதரவும், மக்கள் தன்மையும் பெருக்கத் தக்க செயல்களையும்; துன்பும், தன்னலமும், விலங்குத் தன்மையும் பெருக்கத்தக்க செயல்களையும் பகுத்தறிந்து, அவற்றை, அவற்றின் பயன் காட்டும் பத்திராதிபர் குறிப்புரைகளுடன் வெளியிடுதல், பத்திரிகை உருப்படுத்துவோரது பெருங்கடனும். பல அறச் செயல்களுக்குப் பன்னூறுகளாகவும், பல்லாயிரங்களாகவும் மிகவும் அடக்கத்துடன் பொருளுதவி செய்த செல்வரின் பெயரும் தொகையும் சில சமயங்களிலே குறிப்பிடப் பெறுமலே போகின்றன. நமது பத்திரிகைகள் நன்மை புரியும் நோக்கத்தோடு ஏற்படுத்தப் பட்ட மருத்துவ விடுதிகள் (Hospitals) முதலான பல எல்லா அரசினரின் அற நிலையங்கள், கல்விக் கழகங்கள் முதலானவற்றின் முறையோடமைந்த நடவடிக்கைகளையும் நிகழ்ச்சிகளையும் வெளிப்படுத்தி வருஞ் செயல்கள் மிகவும் மகிழத் தக்கனவே. நாடுகளுக்கும், மக்களுக்கும், தேசங்

களுக்கும், அரசாங்கங்களுக்கும் ஏற்படக் கூடிய ஒவ்வா உறவுப்பான்மைகளையும், அருவருப்புக் குறிப்புக்களையும், ஐயுறவுகளையும், மன வருத்தங்களாலாகிய வடுக்களையும் விரைந்து விரைந்து, பரந்துபரந்து வெளியிட்டு வருதலைப் பார்க்கிறோம்; ஆனால், மக்களுக்குள் ஒற்றுமையையும் தேசங்களுக்குள் நட்புப்பிணிப்பையும் உண்டு பண்ணத்தக்க பொருள்களையும், உலக அமைதிக்கான பொருள்களையும், இவை பற்றிய முயற்சிகளையும் பற்றி அவ்வளவாக முறை தவறாமல் வெளிப்படுத்துகிறதில்லை. சில சமயங்களில் எக் காரணம் பற்றியோ வெளிப்படுத்தாமல் அடியோடு நிறுத்துவதுமுண்டு. இதனால், உலகத்தவர் ஒருவர் கழுத்தை ஒருவர் இறுக்கும் நிலையிலுளர் என்று முழுதும் தப்பாக எண்ணவும் கூடுமே! பத்திரிகாசிரியர்கள், இந்திய மக்கட் கூட்டத்திற்குள்ளுங்கூட, நட்புரிமையை மேலுமேலும் பெருக்காமல் ஒருவாறு அசட்டையாகவோ, ஏமாந்தோ இருப்பதால், உலகின் எம்மக்கட் கூட்டங்களுக்கும் ஒற்றுமை பற்றுமைகளை வளர்க்கும் கடமையிலும் தவறி வருகிறார்களென்று எனக்குப் பல காலும் எண்ணம் வருவதுண்டு என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். ஏனெனில், இந்தியாவின் முன்னேற்றம் உலக முன்னேற்றமென்றும், இந்தியாவின் பின்னீடு உலகப் பின்னீடென்றும், இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய மேனாடுகளும், ஜப்பான், சீனம் முதலிய கீழ்நாடுகளும் இந்தியாவுடன் வைத்துக்கொண்டிருக்கும் வியாபார சம்பந்தங்களாலும், இந்தியா ஏனைநாடுகளுக்குதவும் தத்துவ சாத்திர இலக்கியம், ஆன்ம ஒளி முதலான அறச் செயல்களாலும் இந்தியாவின் இன்ப துன்பங்களும் பிற தேசங்களின் இன்ப துன்பங்களும் வேறுவேறு அல்ல; ஒன்றென்றே அறியக் கிடக்கின்றன அல்லவா? பத்திரிகைத்

தலைவர்கள் பல்வேறு நாட்டார் இலக்கியங்களுக்கும், அருங் கலைகளுக்கும், அறநெறி கடவுள் நெறிகளுக்கும் அதிக நேரத்தையும் இடத்தையும் பயன் படுத்தி வந்திருப்பார்களே ஆனால், உலக மக்கள் ஒருவருக்கொருவர் அன்பும் மரியாதையும் இப்போழ்து காட்டி வருவதைக்காட்டினும் மிகுதியாகவே காட்டி வந்திருப்பார்கள். அத்தரப்பட்ட தொண்டினை வல்லரசு நாட்டுப் பத்திரிகைகள் அரசியலுரிமை இழந்த நாட்டுப் பத்திரிகைகளைவிடச் சிறப்பாகச் செய்ய இயலும். ஆனால், அவை அப்படிச் செய்வதில்லையே! அப்பத்திரிகைகள், உலகினுக்கு உண்மையான அமைதியூட்டும் விருப்பினவாயின், அத்தரப்பட்ட தொண்டாற்றும் கடப்பாடு உடையன ஆகுக.

செய்திப் பதர்களைக் களையும் பத்திராசிரியர் கடமைகளில், பத்திரிகைகளுக்கு, அல்லது செய்திகளுக்கு உயிரொளி கொடுத்தலும் ஒன்று. பல பத்திரிகைகள் கோரமான கொலை புலைகளைத் தடித்த தலைப்புக்களுடன் காட்டுகின்றன. ஒப்பற்ற இறைவனது திருவருள் போலும் உறக்கத்தால் ஆற்றல் பெற்றெழுந்த காலை வேளையில், மிக்க கோரமான கொலை புலை, வெட்டு குத்து, அடிதடி, கலகம் கட்சி இவைபற்றிய செய்திகளாகிய முதற் கோணல்களோடு அன்றை வேலை தொடங்கப்படுமாயின், அந்நாள் முற்றிலும் கோணல்களாகவே முடியும் எனப்படுகின்றது. இதில் எனக்கு நம்பிக்கையில்லை. உறக்கமென்னும் கடவுளின் அருளினைப்பாற்றல் தூய்மை அடையும் மக்களறிவைப் பத்திரிகைகள் கோரச் செய்திகளால் கறைப்படுத்துகின்றன. பத்திரிகைகள் சிறிய உலகறிவொன்றினாலே அமிழ்த்தப் பட்ட பெருந்திரளான மக்கள் தொண்டரால் கொண்டாடப்படும் கடவுளர் போன்றவையாகலின், அவை அவர்களின் மனத்தைக் கொடுந்துன்பச் செய்திகளால் மாசுபடுத்

தும் வழக்கத்தைவிட்டால், தங்களை வழிபடும் அத்தொண்டர்களுக்கு நலன் விளைப்பனவாம். விட்டால் என்றதனால், கோரச் செய்திகளை அடியோடு களைந்திட வேண்டுமென்று கொள்ளற்க. கோரச் செய்திகளுக்கு நாகரிக உருவம் தீட்ட வேண்டும். மாசு படுத்தும் வழக்கத்தை விடுத்து, அக்கோரச் செய்திகளை நன்னயம் பயக்கும் இன்னுரைகளால் தூய்மைப் படுத்தும் வழக்கத்தை மேற்கொள்வன ஆகுக.

மற்றும், சில பத்திரிகைகள், தங்கள் உரிமைக்குடி குடித்து வெறிவெறித்து, அவ்வெறியால் அவ்வுரிமைகளையும் கொடு நெறிகளிலே செலுத்துகின்றன. அவைகளுக்குச் செய்தித் துறைகளை அவ்வத்துறைக்கேற்ற முறையில் விளக்கும் பயிற்சியில்லாமையாலோ, மற்றெதனாலோ, பத்திரிகை உரிமைகளைப் பாழ்படுத்துகின்றன. உரிமைப் பித்துத் தலைக்கேறப்பெற்ற அப்பத்திரிகைகள், தற்காப்பிழந்தனவாய்க் காட்டாறுபோல முரட்டு வேகத்துடன் மிக்க கலங்கல் நீராகிய அழுக்குச் செய்திகளை மக்களின் மூளைப் புரைகளிலே கொண்டுபோய் நிரப்பி வருகின்றன. அதனாலே, மக்கள் மனக்கோது நிறைந்து அறிவு கலங்கி நன்னிலை தவறிவிடுகின்றார்கள். நச்சுத் தன்மையுள்ள செய்திகளால் அறிவழித்து வரும் பத்திரிகைகளும் உள. அவற்றால், மக்கள் மனமாகிய குளத்திலே நச்சுச் செய்தியாகிய நீர் நிரம்புகின்றது. செய்தித் தாகமுள்ள, பகுத்தறிவு குறைந்த பெருந்தொகை மக்கள் அச்செய்திகளைப் படிக்கின்றார்கள். அந்த நச்சுச் செய்திகள் அறிவுத் திட்பத்தையும் நுட்பத்தையும் ஒட்பத்தையும் கெடுக்கின்றன. சில சமயங்களிலே சந்தா நேயர்கள் அறிவுக் கலக்கத்தால் தகாதனவும் செய்துவிடுகின்றார்கள். ஆகலின், பத்திரிகை ஆசிரியர்கள், கோரமான செயல்களைப்பச்சைப்பச்சையாகவும் நச்சுத்தன்மையோடும்வெளிப் படுத்தாமல், அச்செய்திகளைத் தூய்மையாக்கி வெளியிடும்

வகையிலே பத்திரிகையுரிமைகளைச் சீர்திருத்தம் செய்வார்களாக. ஏனெனில், உண்மை நெறி கடைப்பிடிப்பாளர்களாகிய பத்திராசிரியர்களுக்கு, சொன்னதை நம்பும் குழந்தையறிவினர்களாகிய பெருந்தொகை மக்களைக் கோரம் முதலிய மனக் கறைகளினின்று விலக்கி, அறிவுத் தூய்மையைப் பெருக்கும் செய்திகளை அவர்களுக்கேற்ற இனிமையான உருவிலும் வகையிலும் அமைத்துக் கொடுக்கும் நாகரிகச் செய்திச் சீர்திருத்தத்தைத் தங்களுக்குத் தாங்களே செய்துகொள்ளுதல் அரும்பெருங்கடனென்க.

(c) அகப்பொருட் செய்தி

புறவுலகினும், அகவுலகினும் நடைபெறுவனவற்றைத் தெரிவித்தலே பத்திராசிரியர் கடமையென்பதைத் தெளிந்தோர் ஒப்புக்கொள்வர். அதன்படி, நுண்ணூலறிவாற் கண்டு பிடிக்கப்பட்ட புதுமைகளையும் புதுப் புதுக் கருவிகளையும் தெரிவித்தல் அழகு. அன்றியும், புதுக் கருத்துக்களையும், எண்ணங்களையும், உணர்ச்சிகளையும், அறிவுக் குறிப்புக்களையும், அழகொழுகத் தீட்டிய உருவங்களையும், பன்னாடுகளிலும், அக்காலத்தினரான அறிஞர், அறிவறிந்தோர், அருங்கலை வல்லார் ஆகிய இப்பெரியோர் செய்து வைத்துள்ள வேலைத் திறங்களிலே எவ்வாறு மிளிர்வுறக் காணலாகும் என்பதனையும் குறிப்பிடல் சால்பாம். அசாதாரணமான தெள்ளிமை ஒள்ளிமைகளோடு கூடிய கூரிய அறிவாற்றலின் துணையினால் ஆராய்ந்து குறிப்பிடுதலாகிய அவ்வகவறிவுத் தொண்டு சாதாரணமான உலகச் செய்திகளைத் தெரிவிக்கும் புறவறிவுத்தொண்டினைப்பார்க்கினும்மிகப் பளுவுடைத்தாம். ஆயினும், புறப் பொருட் காட்சிகளும் நிகழ்ச்சிகளும் சிறுகச் சிறுக அகப்பொருட் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் தம் வசமாக்கிவிட்டன என்பதையுணர்ந்து,

இனி, அவ்வகப்பொருள் நிகழ்ச்சிகளைப் புறக்கணித்துப் புறப்பொருள் நிகழ்ச்சிகளுக்கே பத்திரிகையின் முழு இடத்தையும் கொடுக்கப்படாது. மேலும், அகப்பொருள் தமிழிலக்கணத்திற்கே உரியதென்றும், அகப்பொருள் துறைகளில் ஒன்றான 'நாணிக்கண் புதைத்தல்' என்னும் ஒரு துறைக்கே நானூறு பாக்கள் வரை பாடி வந்த ஒண்டமிழ்ப் புலவரைப் படைத்தது நந்தம் செந்தமிழ் நாடு என்றும் கூறுகின்ற வெறும் வாய்த்தருக்கோடு நில்லாமல், தமிழ்ப்பத்திரிகாசிரியர்கள் அகப்பொருள் நிகழ்ச்சிகளை அறவே தள்ளிவிடாமல், அவற்றின் நுட்பங்களையும் அவ்வப்போது பத்திரிகைகளிற் பெய்து, தமிழ் மொழிப் பற்றினையும், பண்டைத் தமிழ்ப் பெருமக்களின் நாகரிக வாழ்க்கையின் மேம்பாட்டினையும் எடுத்துக் காட்டுவார்களாக. அகப்பொருள் நுட்பங்களைச் செய்தி வடிவில் சமயம் வாய்த்தபோது எல்லாப் பத்திரிகைகளிலும் அமைத்துக் காட்டினும், காட்டலாம். முக்கியமாக இலக்கியப் பத்திரிகைகள் அகப்பொருள் துறைகளை அத்துறைகளின் நுணுக்கங்களுடன் சிறிது சிறிதாகவேனும் அமைத்துக் காட்டக் கடவனவாக.

(d) தேச சரித்திரக் குறிப்புக்கள்

நாடு, மரபு, குறி, நெறி, மொழி என்னுந் தடைகளை எல்லாம் தாண்டி மேற்சென்றுகொண்டிருக்கும் இயக்கங்களும் கழகங்களும் நமது கவனத்தைக் கவரத் துவங்கியுள்ளன. இவையெல்லாம் நன்மைக்கே. வமிசங்களின் தோற்ற ஒடுக்கங்களையும், வமிசத்தார்க்குள் விளைந்த பேராசை மிகுதியால் மூண்டு நிகழ்ந்த வமிசப் பூசல்களையும், தேசங்களுக்குள் நேர்ந்த சண்டைகளையும், அரசர்களுக்குள் நடந்த போர்களையும், இன்ன பிறவற்றையும் பற்றிய செய்திகளே தான் தேச சரித்திரம் என்பதற்குப் பொருள் என்று எண்ணப்பட்டு வந்த காலம் பறந்து போய்விட்டது. சிறிது

காலத்திற்கு முன்னரே தேச சரித்திரக்காரனுடைய வேலை பின்னும் விரிவும் தெளிவும் திட்டமும் உடையதென ஏற்பட்டுவிட்டது. மாந்தர், அவர்தம் தேர்ச்சி, நாகரிகம், சமூக அமைப்பு மாற்றம், இலக்கியம், அருங்கலை, வியாபாரம், கைத்தொழில் இவற்றையும், இன்ன பிறவற்றையும், இவற்றின் பயன்களையும் பற்றிய வரலாறுகளெல்லாம் தற்கால தேச சரித்திர இலக்கணங்களை நெருங்கி நெருங்கி வந்துள்ளன. எவ்விதமான அரசியல் வெற்றியும், பொருளாதார வெற்றியும், தலைமையாட்சியும் ஒரு வேளை குறிப்பிடாமல் போயினும், எத்தனையோ பல விதமான நாகரிகப் பரப்பும் ஆற்றலும், ஐரோப்பிய (ரஷ்ய, ஜெர்மானிய, இத்தாலிய, ஆஸ்திரிய) ஏதேச்சாதிகாரமும், இந்திய சுயராஜ்யப் போராட்டமும் எவ்வாறிருந்து வருகின்றன என்பதையும், இனிமேல் அவை எவ்வாறிருந்து வரக்கூடும் என்பதையும் தேச சரித்திரம் வல்லுநன் குறிப்பிடுகின்றான். கிரேட் பிரிட்டனில் ரோமன் அல்லது நார்மன் தலைமையின் எல்லா அடையாளங்களும் மறைந்து நெடுங்காலம் ஆனபின், இங்கிலாந்திலே இத்தாலியர் ஆதிக்கமும் பிரெஞ்சு ஆதிக்கமும் உச்ச நிலையில் இருந்தன. இந்தியா, தான் ஒருக்காலும் வென்றறியாத பன்னாடுகளையும் தனது நாகரிக ஆற்றலாற் கட்டுப்படுத்தியது. தற்போழ்து, தன்னரசுரிமை இழந்த நாடாயிருந்துங்கூட, "இந்திய நாடு" சுவாமி விவேகாநந்தர், டாக்டர் சி. வி. ராமன், அறிஞர் பி. சி. ரே, அறிஞர் ஜே. சி. போஸ், மகாத்துமா காந்தி, கவி ரவீந்திர நாத தாகூர் போன்ற மைந்தர் வழியே, தனது தத்துவ ஞானம், சமயம், நுண்ணூல், அறநெறியானியன்ற அரசியல் தெளிவு, இலக்கியம், அருங்கலைகள் இவற்றால் உலகெங்குமுள்ள மக்கட் பரப்பை ஆண்டு வருகிறது. ஆங்கில மொழியின் செல்வாக்கு இங்கிலாந்து ஒரு போதும் வென்றறியாத நாடுகளிலெல்லாம்

பரவி வருகிறது. இவ்வுண்மைக்குச் சான்றுள. ஜப்பானுக்கும் ரஷ்யாவுக்கும் நடந்த உடன்படிக்கை, முதலில் ஆங்கிலத்தில் வரையப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின், ஜப்பானிய மொழியிலும் ரஷ்ய மொழியிலும் பெயர்க்கப்பட்டது. மற்றொன்று சில்லாண்டுக்கு முன் நிகழ்ந்த இத்தாலிய ஆல்பானிய உடன்படிக்கையும் ஆங்கிலத்திலேயே முதலில் எழுதப்பட்டது. மேற் குறித்தபடி தேச சரித்திர உணர்ச்சியிலே ஏற்பட்ட மாறுதல்களைப் பத்திராதிபர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று நான் அவாவுகிறேன். ஏனெனில், பத்திரிகைகள், நமக்குரிய வாழ்க்கையின் தினசரி வரலாற்றுப் பகுதிகளாம்.

(e) தலைமைக் கடமை

ஆள்வோருக்கு ஆளப்படுவோரின் எண்ணங்களையும், துணிந்த முடிபுகளையும் எடுத்து இனிதின் இயம்பி, நாட்டின் நல்லாட்சிக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் அவரைத் தூண்டுதலே பத்திரிகைகளின் தலைமையான கடமை. உலகத்தின் தேசீய அரசியல் முறைப் பொறுப்பின் ஒரு பகுதி வெளிநாட்டு மந்திரிகளிடத்தும் தூதர்களிடத்தும், மற்றொரு பகுதி பத்திரிகைகளிடத்தும் பத்திரிகைகள் நிருபர்களிடத்தும் அமைந்துள. இவ்விரு பகுதியினரும் ஒன்று சேர்ந்து உலக நலத்தின் பொருட்டுத் தங்கள் செல்வாக்கைச் செலுத்துவார்களானால், எங்கும் நல்லெண்ணமும் அமைதியும் பரவி, தேசங்களினிடையே ஏற்பட்டுள்ள கெட்ட எண்ணங்களில் பெரும்பகுதியும் அமிழ்ந்தழிந்து ஒழிந்து போகும். நன்கு உருவாக்கப்பட்ட ஒரு பத்திரிகை, வாழ்க்கை நலன்களுக்குரிய எல்லா நெறிகளையும் வகுத்துக் கொடுக்கும் ஒரு நல்லாசிரியனது கடமைகளையெல்லாம் செய்கிறது; இகம், பரம், வீடு என்னும் மும்மைப் பெரும் பேற்றினுக்குமுள்ள எல்லா நெறிகளைப் பற்றியும் எளிதில் அறிதற்கு உதவு

கிறது. மக்களது எண்ணங்களிலும் நடக்கைகளிலும் பத்திரி கைகள் அளப்பிலா நன்மைகள் விளைக்கும்வன்மையுடையன; ஆட்சி முறைகளை நாகரிக முறையில் மாற்றி அமைக்கவும் ஆற்றலுடையன. ஆனால், பத்திரிகைகள் தங்கள் உரிமைகளை ஆய்ந்தோய்ந்து பார்த்துத் தெளிவுடன் கூடிய கருத்துக்களை உருவாக்கும் வகையிலே பயன் படுதல் வேண்டுமே அல் லாமல், தொழிலுக்கே கேடு தேடும் வகையிலும், கோலுங் குடியும், சுதேசமும் விதேசமும் முட்டிக்கொள்ளும் வகை யிலும் பயன்படுதல் கூடாது. எனவே, நிலைத்த சமரச நன்னோக்கமும், தேசீய நடை முறையும் செய்திகளில் ஊடு ருவும்படி செய்தலே பத்திரிகை உருவாக்கும் ஆசிரியர்கள் தலைமைக் கடமை என்க.

"பத்திரிகைகள் கடமை" என்ற தலையங்கம் "தமிழ் நாடு" வாரப்பதிப்பு 10-4-1931, பக்கம் 12ல் வெளி வந் துளது. அதனைப் பத்திரிகைத் தொழிலில் ஈடுபடும் இந்தி யர் ஒவ்வொருவரும் ஓதின், தொழில் நடை முறையில் நற் பயனை மக்கட்கு ஊட்டுபவராவர். அது வருமாறு:-

"இந்திய பத்திரிகைகள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளைக் குறித்து, கல்கத்தா பத்திராதிபர்கள் வெளியிட் டுள்ள அறிக்கையைத் தமிழ்ப் பத்திராதிபர்கள் கவனிக்கக் கோருகிறோம். பத்திரிகைகளின் அபாரமான சக்திகளைப் பற்றி விவரிக்க வேண்டிய அவசியமில்லை. விரிக்கின், புராண மாகப் பெருகும். ஒரு வல்லரசின் சக்திகளைவிட ஒரு நல்ல பத்திரிகையின் செல்வாக்குப் பதின்மடங்கு அதிக சக்தி களை உடையதாகும். உயர்ந்த முறையில் சிறந்த லட்சியத்து டன் ஆண்மையையே அணிகலமாகக் கொண்ட ஒரு பத்திரி கையை நடத்தி அநுபவம் பெற்றவர்களுக்கே, உயர்ந்த பத் திரிகைகளின் ஒப்புயர்வற்ற சக்திகள் விளங்குமென்று நினைக்கிறோம். சுருக்கமாகச் சொல்லவேண்டின், ஒரு தேசத்

தாரை ஆக்கவும் அழிக்கவும் பத்திரிகைகளுக்குச் சக்தியுண்டென்றே கூறலாம். அவ்வளவு சக்திகளையுடைய பத்திராதிபர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறை மிகவும் ஜாக்கிரதையுள்ளதாகவே இருக்க வேண்டும். பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையும் காட்டி உயிர் வாழும் பத்திரிகைகளையோ, அல்லது குறிப்பிட்ட ஒரு ஜாதியின் ஆதிக்கத்தைக் காப்பதில் கருத்தாயிருக்கும் பத்திராதிபர்களையோ குறித்து இச் சமயம் ஒன்றும் சொல்ல நாம் விரும்பவில்லை. சமதர்ம திருஷ்டியுடன் தேசிய லட்சியத்திற்காக உழைப்பதாகச் சொல்லும் பத்திரிகைகளின் நடை முறை எப்படியிருக்க வேண்டுமென்பதே இப்போது கவனிக்கப்பட வேண்டும் விஷயமாகும். கல்கத்தா பத்திராதிபர்கள் அறிக்கையைக் குறிப்பாகக் கவனிக்க வேண்டுவது அவசியம். பத்திராதிபர்கள் பொறுப்பு வெகு கஷ்டமானது. பத்திராதிபர்களுக்கு அளவற்ற ஆண்மை வேண்டும்; அதற்குத் தக்க அடக்கமும் வேண்டும். உண்மையைச் சொல்லவும் வேண்டும். உற்றார் உறவினர் தாட்சண்யங்களைப் பொருட்படுத்தலாகாது. ஜனங்களின் தவறுகளை ஆணித்தரமாக எடுத்துக் காட்டவேண்டும். அவர்களுடைய ஆத்திரத்தைக்கண்டு அஞ்சலாகாது. ஈசுவர சேவையைவிடத் தேச சேவை உயர்ந்ததென்பதே நமது அபிப்பிராயம். ஆகையால் ஜாதி மதம், ஏழை பணக்காரன், கற்றவன் கல்லாதவன், அரசன் ஆண்டி என்ற பேத புத்தியில்லாமல் பத்திரிகை நடத்துவதே சிறந்த தேசியமாகும். நெஞ்சில் பேதபுத்தியும், கையில் தேசியக் கொடியும் பிடித்த பத்திராதிபர்களின் சேவை, கட்கத்தில் கன்னக்கோலும் கையில் ஜப மாலையும் வைத்தவர் செய்யும் பத்தியைப் போன்றதாகும். இவ்வளவு யோக்கியதையும் ஒருவருக்கிருந்தால்தான் பத்திரிகை நடத்தும் பொறுப்பான தொழிலில் இறங்க வேண்டும். பத்திரிரிகைத் தொழிலுக்கு இதுவே முதல் படியாகும். நிதான

புத்தியும் விஷயத்தை ஆராயும் சத்தியும் வேண்டுவது இரண்டாவதாகும். பல்வேறு விதிகளும், பாஷைகளும், அடிமைப் புத்தியும் தாண்டவமாடும் இத்தேசத்தில், சமதிருஷ்டியுடன் எழுதுவதும் பேசுவதும் வெகு கஷ்டமான வேலைகளென்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். பத்திராதிபர்கள் உள்ளத்தில் தேசியத் தூய்மையும், சமத்துவ குணமும் உண்டாயிருந்தால், யாரையும் அல்லது எதையும் கண்டித்து எழுதினாலும் சமதர்மம் ஓங்கி வளருமேயன்றி, துவேஷ புத்தி ஒரு நாளும் தலை காட்டாது. அப்படிக்குள்ள பத்திராதிபர் வெகு சிலரே இருக்கின்றனர். யோக்கியரான பத்திராதிபர் எல்லோரும் நல்லவராக இருக்க முடியாது. எனினும், நாளாவட்டத்தில் அவர்களுடைய சிறந்த லட்சியம் ஈடேறும் என்பதில் சந்தேகமில்லை; ஆகையால், அவசரமோ ஆத்திரமோ பட்டு, எல்லோருக்கும் நல்லவராக இருக்க வேண்டுமென்றோ அல்லது கீர்த்தி வேண்டுமென்றோ ஆசைப்பட்டு, ஜனங்களைத் திருப்தி பண்ணும் முறையில் எந்தப் பத்திராதிபரும் எழுதலாகாதென்பதே நமது கருத்து. இன்று இந்தியாவில் தோன்றியுள்ள நன்மைக்கும் தீமைக்கும் காரணம், பத்திரிகைகளின் போக்கேயாம். தேசிய தர்மத்தை வளர்க்கத் தேசீய முறையில் ஆண்மையுடன் பிரசாரம் செய்து வரும் ஒரு சில நல்ல பத்திரிகைகளின் அரிய சேவையினாலேயே தேசமெங்கும் தேசீய முற்போக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், சமய சமூக வேற்றுமைகளைத் தூண்டிவிட்டு, சச்சரவுகளைக் கிளப்பும் நோக்கத்துடன் நடைபெற்று வரும் ஒரு சில பத்திரிகைகளின் விஷமப் பிரசாரத்தினால், ஜாதிச் சண்டைகளும், கொலைகளும், கொடுந்துன்பங்களும் பற்பல இடங்களில் உண்டாகி வருகின்றன. இதனால், நிரபராதிகளான குடிமக்கள் அடியுண்டு சாவதுந் தவிர, அரசியல் சுதந்திரம் உதயமாவதும் தடைப்பட்டிருக்கின்றது. தேசீய

ஒற்றுமையுணர்ச்சியை வலுப்படுத்தி இந்திய சமுதாயத்தை உருவாக்கும் உத்தம நோக்கத்துடன், சமய சமூக அரசியல் விஷயங்களைக் குறித்து எழுதலாமேயன்றி, ஜாதி வேற்றுமைகளையும், துவேஷ புத்தியையும் வளர்க்கும் கள்ளக் கருத்துடன் ஜாதி மதங்களைத் தாக்கி எழுதுவது பெரும்பாவமாகும். கான்பூரில் நடந்த கொலைகளையும், கலகத்தையும் மனத்தில் நன்றாகப் பதிய வைத்து, இனிமேலாவது சமய சமூகச் சண்டைகளைக் கிளப்புமுறையில் எந்தப் பத்திராதிபரும் எழுதாமலிருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். கல்கத்தா பத்திராதிபர் வெளியிட்டுள்ள அறிக்கையை மனப் பூர்வமாக நாம் ஆதரிக்கிறோம்.''

2. தொழிலாளரும் தொழில் முறையும்

(a) பத்திராசிரியர்

பத்திராசிரியரின் பேனுமுனை, ஈட்டி வாள் வேல் இவற்றின் முனைகளைவிடக் கூரியதென்று மதிக்கப்பட்டு வருகின்றது. அதற்குக் காரணர் பத்திரிகைத் தொழிலாளராவர். பத்திராசிரியர், கூட்டுப் பத்திராசிரியர், நிர்வாகப் பத்திராசிரியர், செய்திகளின் ஆசிரியர், புத்தக சாலை ஆசிரியர், தேசாப் பியாச ஆசிரியர், உதவிப் பத்திராசிரியர், நிருபர், தந்திச் செய்திகள் அனுப்புவோர் (செய்திச் சாலையாளர்) இவர்களே குறிப்பிட்ட தொழிலாளர். ஏற்புடை நிருபரும், மதிப்புரையாளரும், விளம்பரக் கலையினரும், ஏனைய காரிய நிர்வாகிகளும் தொழிலாளருட் சேர்ந்தவரென்க. இவர்தம்முள் பத்திராசிரியரே தலைவர். இத்தலைமையினுல், அவர் பத்திரிகை ஆசிரியர் எனப்படுகிறுர்.

பத்திராசிரியர், ஒரு சேனைக்குத் தளகர்த்தரைப் போன்றவர். அவர் பத்திரிகைத் தொழிலின் இலக்கியப் பகுதிக்குத் தலைவராவர். பத்திராசிரியரின் வேலை மிக்க பொறுப்பு

வாய்ந்தது; ஆதலின், பெருங்கவலைக்கு அல்லது ஆராய்ச்சிக்கு இடமானது. முழுத் தெளிவுடன் கூடிய ஆராய்ச்சியின் பின் செய்திகளைப் பதிப்பிக்காத ஆசிரியனது தொழில், ஆக்கத்திற்குப் பதிலாகக் கேடு தரும் என்க. செய்திகளை அச்சிடுவித்து வெளியிடுவித்து வரும் தொழில் முறையிலே ஒவ்வொரு மொழியையும் பொருளையும் கூர்ந்து பார்த்து வருதல் நாளும் ஒருவர்க்கு முழுதும் இயலாதாயினும், வெளியிடப்படும் ஒவ்வொரு சொல்லுக்கும் பத்திராசிரியரே உத்தரவாதி என்று அரசினராலும் மக்கட் கூட்டத்தாலும் கொள்ளப்பட்டு வருகின்றார். அரசியல் சட்டமும், நீதியும், அல்லது அச்சுச் சட்டமும் பத்திராசிரியரையும், பிரசுரகர்த்தரையும், அச்சிடுவோரையும் பத்திரிகையில் வரும் ஒவ்வொரு தனி வார்த்தைக்கும் பொறுப்பாளராக்கியுளது என்னலாம். எனவே, பத்திராசிரியரின் வேலை கவலையும் பொறுப்பும் உடையது. அவ்வளவு கவலையோடு தொழில் நடைபெறினும், பெரிய பெரிய தினசரிப் பத்திரிகைகளில் அச்சுப் பிழை எப்படியாவது ஒன்றிரண்டு வந்துவிடுகின்றன. கூடியவரையில் பத்திரிகை பிழையின்றியே அச்சிடப்படல் வேண்டும். இந்திய பத்திரிகைகள் இதில் இயன்றவரை கருத்துள்ளனவாயினும், தமிழ்ப் பத்திரிகைகளிற் பல கவலையிலவாகி இருத்தல் வருந்தத் தக்கதே. பிழை பார்ப்பவர்கள் (Proof Reader) இதில் நன்கு கருத்துச் செலுத்தும்படி பத்திராசிரியர் அவர்களைத் திட்டம் செய்வாராக.

பத்திராசிரியர், காலத்தின் அருமையறிந்து கடனாற்றுதல் வேண்டும். ஒரு நாள் வேலையானது நாள் வெளியீடு நடத்தும் ஆசிரியர்க்கு ஒரு சில மணி நேரமேயாகும். அக்குறுகிய காலத்தில் பெருகிய வேலையைச் சீர்பெற அச்சிட்டு வெளியிடும் முயற்சி மிகவும் பளுவானதே. பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஓர் ஆசிரியர்க்கு ஒவ்வொரு

நொடியும் அரியதாம். இந்த நொடியில் ஒரு தந்தி வரும். அடுத்த நொடியில் வேறொரு தந்தி வரும். பின் நொடியில் மிக்க அவசரமான மற்றொரு தந்தி வரும். ஆனால், இந்த விதமான தந்தியென்று ஒன்றையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. அச்சுச் சட்டத்தைப்பற்றிய அல்லது அரசியலைப் பற்றிய மிக முக்கியமான தந்தியாக இருப்பினுமிருக்கும்; அரசாங்க வரவு செலவுக் கணக்கு விவாதமாக இருப்பினுமிருக்கும்; ஓர் இந்திய கப்பற்படை மசோதாவைப் போன்ற அரிய மசோதாவைப் பற்றிய தந்தியாகவும் இருக்கலாம். இவை போன்ற செய்திகள் எட்டியவுடனே, பத்திராதிபர் அவற்றைத் தமது ஆராய்ச்சியோடு விளக்கி வெளியிட வேண்டுவது அவசியம். ஆசிரியர், தமது ஆராய்ச்சியுரையை வெளிப்படுத்தற்கு மிகக் குறுகிய காலம் இருக்கும்படியும் நேரும். அப்போது அவர் தமது ஆராய்ச்சியைத் திட்டப் படுத்திக்கொண்டு, வெள்ளைக் காகிதத்தைக் கருங்காகிதம் ஆக்கவேண்டுபவராயிருப்பர். தமது கருத்தை எண்ணித் துணிந்து வெளிப்படுத்திய பின் எக்காரணத்தைக் கொண்டும் அதனை மாற்றக் கூடாது. ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொருகொள்கையை அடிப்படையாகக்கொண்டுளது. தேசியக் கொள்கையை ஒற்றுமைப்படுத்தி இந்திய சமுதாயத்தை வளர்க்கும் கட்டுரை அல்லது தலையங்கம் எழுதுவதே ஓர் உயர்தரப் பத்திராசிரியரின் நோக்கமாக இருத்தல் வேண்டும். சில பச்சோந்திப் பத்திரிகைகள் அடிக்கடி கொள்கையைமாற்றிக்கொள்வதுமுண்டு. அம்மாற்றம் பத்திரிகைகளின் செல்வாக்கிற்கு ஏமாற்றமாம். ஆதலின், பத்திராதிபர், 'எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின் எண்ணுவமென்பது இழுக்கு" என்னும் உறுதியுடன் ஒருபடித்தான நடையினர் ஆகுக.

செய்திகளையும், பல பொருண்மொழிகளையும் பற்றித் துணிந்த முடிபாகிய தீர்ப்பெழுதுவதில் வீண் பொழுது

போக்கிக்கொண்டிருத்தலாகாது. விரைந்த தெளிந்த தீர்ப் பெழுதுதல் ஒரு நல்ல பத்திராசிரியருடைய உயர்ந்த வன் மையாம். அத்தகைய தீர்ப்புக்கு அவர் தம்மையும் கடவுளை யும் நம்பி இருத்தல் வேண்டும். அசைக்க முடியாத அந்நம் பிக்கையானது தெளிந்த கருத்தையும், அறிவையும், ஆண் மையையும், தீர்ப்பையும், பத்திரிகைத் தொழில் மாண்பை யும் உதிப்பிக்கும். அவ்வுதிப்பால், ஆசிரியர் தடைப்படாமல் விரைவாக எழுதுதல் கூடும். எழுத எழுத அச்சேறிக்கொண் டிருக்கும். அனைத்தும் பிழை பார்த்தானவுடன் முடிவாக அச்சிட்டு வெளியிடப்படும். பின் வெளியீடு வெகு தொலைவி லும் பரவுகின்றது. வேலை முடிந்தும் கவலை முடியாதிருக்க லாம். "மக்கள் மனத்தில் அத்தீர்ப்பு என்ன செய்யுமோ! அச் சொற்றொடர் இவ்வாறிருந்தால் இன்னும் நன்றாயிருக்கும்! இச்சொற்றொடர் அவ்வாறிருந்தால்பின்னும்விரும்பப்படும்" என்றிவ்வாறெல்லாம் இளம்பக்குவமுள்ள பத்திராசிரியர் எண்ணமிடுதலுமுண்டு. ஆய்ந்து செய்த வேலையில் பெருங் கவலை கொண்டு மூளையைப் பளுவாக்கப்படாது. பளு வாக்கின், அது மறு நாள் வேலைக்கு இயலாது போம். பத்தி ரிகைத் தொழில் வாழ்க்கையில்பத்திராசிரியருக்கே அவ்விதக் கவலையுள்ளது. பல செய்திக் கூட்டங்களைப் பாகுபடுத்தல், தலையங்கக் கருத்துக்களை வகுத்தும் தொகுத்தும் வடித்தும் பிடித்தும் அமைப்பித்தல் முதலிய முறைகளில் தினசரிக் குழைக்கும் மூளையுமுடலும் களைப்பினுங் களைக்கும். ஆக லின், உடலைப் பாங்குடன் வைத்துக்கொண்டு பத்திரிகை என்னும் ஓவியந் தீட்டுதல் வேண்டும். உடல் நலங் கெடா உழைப்பே கொள்ளற்பாற்றும். ஆகவே, மனக் கவற்சிக்கு இடங் கொடாது பணியாற்றல் வேண்டும்.

பத்திராசிரியராய் வெற்றியடைதலுக்குரிய உடைமைப் பொருள்கள் உள. அவற்றுட் சிறந்தன சில கூறப்படுகின்

றன. அவை அறிவு, ஆற்றல், நடுவு நிலை, ஆராய்ச்சி, முயற்சி என்பனவாம். பத்திராசிரியருக்கு விரிந்த அரசியலறிவும், உடற் பயிற்சிகள், அருங்கலைகள், இலக்கியம்,நாடகம் இவற்றில் பொது அறிவும் வேண்டும். இவற்றுடன் கருத்தை அள்ளிக் கொள்ளை கொள்ளும் அழகிய எளிய இனிய உரை நடை வளம் வேண்டும். படிப்போர் உள்ளத்தில் கருத்துக்கள் ஊடுருவிப் பாயும்படி பொருணயங்களைப் பொலிவிக்கும் ஆற்றல்வேண்டும். இலக்கியப் பத்திரிகைக்கென்றால் பொருள் பொதிந்த உயரிய கட்டுரைகள் எழுதல் வேண்டும். காலமும் பொருளும் கண்டு அவற்றினுக்கேற்பப் பொது மக்கள் விரும்பும்படி தலையங்கங்களும் பத்திராசிரியர் குறிப்புரைகளும் வரைதல் வேண்டும். தற்காலப்பத்திராதிபர் நித்திய நிகழ்ச்சிகளை மட்டும் வகுப்போர் அல்லர்; அரசியல், சமூகம், தேசீயம் இவற்றின் வாழ்க்கைகளைப்பற்றிய செய்திகளை ஆராய்ச்சியுடன் தெரிவிப்போர் மாத்திரம் அல்லர். அன்னார் கால நிலைக்குத் தக்கபடி உதவும் அலங்காரம்பெற்ற அரசியல் ஆசிரியரும் சமூக ஆசிரியரும் ஆவர்; பெருத்த நெருக்கடியான சமயங்களிலும் நல்லவழி காட்டி ஆவர்; நாள்தோறும், வாரந்தோறும், பட்சந்தோறும், திங்கள் தோறும் வெளி வரும் பத்திரிகைகளில் அவ்வக்கால நிகழ்ச்சிகளையும் சீர்திருத்தங்களையும், முன்னேற்றத்தையும் இடம் பொருள்களுக்கேற்பச் சுட்டியும் விரித்தும் வருவோர் ஆவர்; தமது அறிவையும்செல்வாக்கையும் நன்னெறியிலும் உண்மைக்கடைப்பிடியிலும் செலுத்துதலோடு மக்கட் கூட்டத்திற்கு மனப் பயிற்சி, இலக்கியப் பயிற்சி, அருங்கலைப் பயிற்சி, நுண்ணூற் பயிற்சி, தத்துவஞானப் பயிற்சி இவற்றில் நற்றுணை செய்பவரும் ஆவர். தமது கடமையைப் பெரிதும் செய்து காட்டுபவரும், தமது தொழிலை உள்ளபடியே நன்மையாகப் பெரிதும் முடித்துக் காட்டுபவரும் ஆகிய பத்திராசிரியர், மிகப்பெருந்

தொகையினர்களான மக்களுக்கு மிகப்பெருநலன்களை உள்ள படி புரிந்துவருதலையே தமதுநோக்கமாகக்கொண்டவர்ஆவர். அன்னார் ஏழையெளியவர்க்கும் துன்புற்றவர்க்கும் நண்பர்; மக்கட் கூட்டச் சீர்திருத்தத்தையும் சுகாதாரச் சீர்திருத்தத்தையும் பெருக்குபவர்; இல்லற நன்மைகளை உயர்த்தி அவற்றை ஆதரிப்பவர்; உண்மைக்கும் உரிமைக்கும் உயிரனையர்; ஒரு தேசத்தை—ஏன்?—உலகத்தையே உயர் நிலைக்கேற்ற வல்ல நீதி நெறி முறைகளை நிலை நாட்டும் வழக்கறிஞர். மேலும், பத்திராசிரியர் எவ்வளவு தம்மைத் தற்சார்புடையராகவும், புறஞ்சார்ந்தொழுகுதல் இலராகவும், பொது மக்கள் பலனுக்கு முழு மனத்துடன் உழைப்பவராகவும் நடைமுறையிலே காட்டிக்கொள்ளுகிறாரோ, அவ்வளவு செல்வாக்கிற்கு உரியவராவர். முடிவாகக் கூறின், அத்தகைய பத்திராசிரியரே தமது எக்காலுங் கோடாத பேனாவென்னும் செங்கோலால் மக்களுலகத்தை இனிதின் ஆண்டு வரும் அழகிய அரசராவர்.

பல வகைப்பட்ட செய்திகளையும் ஆய்வு செய்தல், தொகுத்தல், அமைத்தல் என்னும் இவை எளியவான வேலைகளெனவும், பத்திராசிரியருக்குக் கீழிருக்கும் தொழிலாளரைச் சேர்ந்தவையெனவும், தலையங்கங்களும், சில குறிப்பிட்ட கட்டுரைகளும் எழுதுதலே பத்திராதிபருக்கு என்ஞான்றும் ஏற்பட்ட வேலையெனவும் பல பல பத்திரிகைத் தொழில் நிலையங்களிலே எண்ணப்பட்டும் நடைபெற்றும் வருகின்றன. உண்மை வேறு: செய்திகள் ஆய்தல், தொகுத்தல், அமைத்தல் என்னும் மூன்றும், மிக அரியபெரிய தலையங்கங்களும் தனிக் கட்டுரைகளும் எழுதுதற்கு வேண்டிய அறிவாற்றல்களாலேயே நடைபெறுவனவாம். இவற்றுள் முன் மூன்றும் வல்ல பத்திராசிரியரே பின்னிரண்டையும் உலகம் மெச்ச ஆற்றும் ஆற்றலுடையவராவர். தற்காலப் பத்திரி

கைத்தொழில், தலையங்கத்தைச் சொன்னயம் பொருணயம் பொருந்த மனக்கவர்ச்சியுண்டாகச் சுருக்கி விளக்கி அமைத்தல் ஆகும்; பெருகியதொரு காப்பியமாக்கல் அன்று என்பது அழுத்தமாகக் கொள்ளத்தக்கதென்க. "தங்களுடைய மனத்தில் அற்பத் துவேஷங்களைக் காட்டாமல் பயன் தரக்கூடிய விஷயங்களை எழுதும் பத்திரிகாசிரியர்கள் தேவை'' என்னும் லாலா லஜபதிராயின் பொன் மொழிகள் போற்றத் தருவன. பத்திராசிரியர், தாம் செய்திகளின் ஆசிரியர் என்பதை நடைமுறையிலே காட்டின், தொழிலில் வெற்றி அடைவர். அஃதாவது அவர் பல வகைச் செய்திகளையும் ஆய்ந்தறிந்து பயன்படுத்துவோர் ஆதல் வேண்டும்.

(b) உதவிப் பத்திராசிரியர்

பத்திராசிரியருக்கு உதவியாகத் தொழில் புரிபவரே உதவிப் பத்திராசிரியராவர். பத்திராசிரியரது வேலையைப் போலவே உதவிப் பத்திராசிரியரது வேலையும் மிக்க பொறுப்புடையது. சில வகைகளிற் பார்க்கும்போது பத்திராசிரியரைக்காட்டிலும் உதவிப் பத்திராசிரியருக்கு வேலை மிகுதி என்னலாம். செய்திகளும், தந்திகளும், மதிப்புரைகளும், பொதுக் கூட்டங்கள் சட்டசபை நீதி மன்றங்கள் இவற்றின் நடவடிக்கைகளும் ஆராய்ந்து பார்த்துப் பதிப்பித்து வெளி இட வேண்டிய பெரும்பொறுப்பு, உதவிப் பத்திராசிரியருடையதாம். வேறு பத்திரிகைகளிலுள்ள அரும்பொருளும் பயனும் பொதிந்த செய்திகளையும் கட்டுரைகளையும் எடுத்தாள வேண்டுவதும் அவரது வேலையாம். அதற்காக அவர் புகழ் பெற்ற உள் நாட்டு வெளி நாட்டுப் பத்திரிகைகள் சிலவற்றைப் படித்துச் செய்திகள் பொறுக்கியெடுத்து, அவற்றைத் தமது பத்திரிகைகளில் சேர்க்க வேண்டும். அதன் பொருட்டு அவர் கத்தரிக்கோலும் பசையும் கையாள வேண்

டிய சமயங்களும் உண்டு. பல பத்திரிகைகளிலிருந்தோ நிருபர்களிடமிருந்தோ கிடைக்கும் சில முக்கிய நிகழ்ச்சிகளையும், எத்தனையோ பல செய்திப் பகுதிகளையும் குறுகிய அளவிலே சுருக்கியும், திரும்ப எழுதியும் வரும் முறையிலே அவற்றைப் படிப்போர்க்கு ஆவலுண்டாக்கத் தக்கவாறு அமைக்க வல்ல உதவிப் பத்திராதிபரே தொழில் நடைமுறைக் கலைத்தேர்ச்சி மிக்கவராவர். குறிப்புரைகளும், சிறிய சிறிய விளக்கவுரைப் பத்திகளும் எழுதுவதும் அவரது கடமையாம்.

உதவிப் பத்திராசிரியர் வேலையில் தேர்ச்சி பெற்றோர், பத்திராசிரியராகவும் வரலாம். உதவிப் பத்திராசிரியர் தலை அங்கங்களும், தனிக்கட்டுரைகளும், குறிப்புரைகளும் சமயம் வாய்த்தபோது எழுதிவரின், பத்திராசிரியர் திருத்தியமைத்துக் காட்டும் நுட்ப வழி வகைகளில் தாம் பயிற்சி மிக்கவராகி, நாளடைவிலே பத்திராசிரியர் நிலைக்கும் உயர்த்தப் பெறுவர். பத்திராசிரியராக அமரும் விருப்பமுடையவர், முக்கியமான பொருண்மொழிகளையும், நாட்டின் நெருக்கடியான நிலைமைகளையும் ஆராய்ந்து தெளிவுபடுத்தி, உள்ளங் கவரும் ஒள்ளிய உரை நடையிலே தலையங்கம் எழுதி வருதல் நலம். தலை அங்கமும் தனிக் கட்டுரையும் எழுதுவதில் உதவிப் பத்திராதிபர் வல்லவர் என்பதைப் பயிற்சி முறையிலே காட்டி வருவாரானால், பயிற்சியின்போதிய அளவறிந்த பின் பத்திராசிரியர் நிலைக்கு அவரை உயர்த்துவது இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் முக்கியமாகக் கவனிக்கப்பட்டு வரும் வழக்கமாம். இம்முறை, இந்திய பத்திரிகைத் தொழிலாளர் பின் பற்றத் தக்கதே. இம்முறையால் உதவிப் பத்திராதிபர் எவ்வளவோ நல்ல பயிற்சி அடைவர். அப்பயிற்சியால் முதலாவதாக அவர் மிகவும் ஆழ்ந்து நோக்க வேண்டுவது ஒன்றுளது. அது நுண்ணறிவின் ஆற்றலால் தெளிவாகத்

தக்க அவ்வக்கால அரசியல் முறைகளை நன்கு ஊடாடிப் படித்தறிவதாம். அவர் சட்ட முரண், நாகரிக முரண், ஆன்றோர் துணிந்து கொண்ட சமய முடிபுகளில் முரண் இவற்றை விளைக்கத் தக்கவற்றை வெளிப்படுத்தல் கூடாது. அப்படிப்பட்டவை வேறு பத்திரிகைகளில் வெளி வரினும், அவற்றை ஆராய்ச்சியுடனும் மேற்கோள்களுடனும் கூடிய தமது நியாய நிலை நாட்டுதல் என்னும் தீயால் சுட்டெரித்துச் சாம்பராக்கிவிடுதல் மக்களுக்குச் செய்யும் பேருதவியாம். முரண்பட்ட செய்திகளையோ, கட்டுரைகளையோ எவ்வாற்றானும் ஏற்றுக்கொள்ளல்கூடாது. அச்சுக் கோக்கு முன்னே ஐயந்திரிபுகளை விளைக்கும் பொருள்களை ஆராய்ந்து பார்த்துச் சரிப்படின், பதிப்பிக்கலாம். செய்திகளையும், அவற்றில் சிலவற்றினுக்குக் குறிப்புரைகளையும், நூல்களுக்கு மதிப்புரைகளையும் வெளியிடும் வகையிலே, கடுமையாக ஏற்பட்டுள்ள அச்சுச் சட்ட வரம்பினுல் உதவிப் பத்திராதிபர் தமது கடமைகளை நிறைவேற்றும் தொழிற்பொறுப்பின் தன்மையையும் நிலைமையையும் செவ்விதின் உணர்ந்துகொள்ளலாம். தமது கருத்துக்களையும் ஆதரவுகளையும் வெளியிடுவதில் உதவிப் பத்திராசிரியருக்குத் தாராளமான உரிமையுண்டு என்பது மறக்கத் தக்கதன்று. அவ்வுரிமையைச் சட்ட வரம்பறிந்து உண்மை நிலையோடு மக்கட் கூட்டத்தின் நலத்தின் பொருட்டுப் பயன்படுத்த வேண்டுமென்பதே இங்குக் குறிப்பிடுவதாம். பொது மக்களுக்குப் பயன் தராச் செய்திகளை உதவியாசிரியர் விலக்கலே கடன். நல்ல பொருளிற் கொள்ளப்படத் தகாத மொழிகளையும், செய்திப் பகுதிகளையும் நீக்கி, நல்ல பகுதிகளை மட்டும் கொண்டு வெளியிட, ஆசிரியருக்கும் உதவியாசிரியருக்கும் முழு உரிமையுண்டு. அந்நீக்கக் குறிக்காகச் சிவப்பு எழுதுகோலை (Red pencil) கையாளக் கடவர்.

உதவிப் பத்திராசிரியரது தொழில் முறைகளும், கடமைகளும் அத்தகைய பொறுப்பினவாகலின், முன்னமே பத்திரிகை நிலையத்தில் தக்க ஆசிரியர் கீழ்ப் பயிற்சியடைந்து வருதல் விரும்பத் தக்கது. நிருபர்களின் அரிய நீண்ட அறிக்கைகளைச் சுருக்கி வெளியிட வேண்டும் சமயம் அடிக்கடி நேர்வதுண்டு. அச்சமயங்களிலே கூர்ந்த அறிவும், ஆற்றலும், நல்ல இலக்கியப் பயிற்சியும் இல்லையானால், பயன் எத்தன்மையதாம் என்று தெரியாமல், தொழில் முறையில் இழுக்கியும் வழுக்கியும் போக வேண்டி நேரும். ஆகலின், பத்திரிகைத் தொழில் முறையில் முன்னைய பயிற்சியுடைமையே பெரிதும் வேண்டற்பாலது. முன்னைப் பயிற்சி, முதலில் உதவிப் பத்திராசிரியர் பீடத்தில் நற்பணியாற்றவும், பின்பு பத்திராசிரியர் பீடத்தில் ஏறவும் உதவியாமென்பது நினைவிலிருக்க வேண்டுவது. பயிற்சி பெற்ற உதவிப் பத்திராசிரியர் விரும்பி அவர்க்கு மேன்மேலும் வழி காட்டுவர். பெரிய தினசரிப் பத்திரிகை நிலையங்களிலே ஒரு சில உதவிப் பத்திராசிரியர் உளர். அவ்வாசிரியர் கட்டுரைகள் எழுதுவர். அக்கட்டுரைகளின் நடையும், போக்கும், கொள்கையும் தம்முடைய நடை முதலியவற்றுடன் ஒன்றுபட்டிருக்குமாறு பத்திராதிபர் திருத்தியமைப்பர். இவ்வாறு, ஒற்றுமைப் பயிற்சியில் வல்லவரான பின், உதவிப் பத்திராசிரியர் ஒரு தரமான நிலையில் நின்று கடனாற்றித் தொழிலுக்கு நற்பேர் தேடித் தேடித் தருகின்றனர். இங்கிலையில் நிற்கும் உதவிப் பத்திராதிபர் குழுவானது, பத்திரிகாசிரிய பீடத்தமர்தலுக்கென்று காக்கப்பட்டு வருதலே தொழில் முறைக்கு மிக்க ஏற்றந் தருவதாகும். பத்திராசிரியர் பீடம் காலியாகுங் காலத்தில் அக்குழுவிலே உயர்ச்சி பெற்ற ஒருவர் அப்பீடத்தில் அமர்கின்றனர்; அமர்ந்து, பண்டு போலவே கொள்கை முதலியவற்றில் தவறுமல் ஒன்றுபட்ட முறை

யில் பணியாற்றுகின்றனர். பத்திராசிரியரது பேர் வேற்றுமையேயன்றிப் பத்திரிகை நடை முறையில் வேற்றுமை காண இயலாது. "லண்டன் டைம்ஸ்" பத்திரிகாசிரியரின் தொடர்பு காத்து வரும் இம்முறையைக் கடைப்பிடித்து வருவது போற்றத் தக்கது. இந்திய பத்திரிகைத் தொழிலாளர் நிலையாக அவ்வழிப்படுவாராக. இத்தொடர்ச்சிமுறை காக்கப்படுவதற்கு, பத்திராதிபருக்கும் உதவிப் பத்திராதிபருக்கும் தொழிற்பயிற்சியும், கூர்ந்த அறிவும், அன்புக் கலப்பும் இன்றியமையாதன. உதவியாசிரியர் பத்திரிகைத் தொழிலுக்கு முதுகெலும்பு போன்றவர். பத்திரிகையின் வெற்றி, பெரிதும் அன்னாரைப் பொறுத்ததாய் நிலவுகிறது. உதவிப் பத்திராதிபர் இவ்வுண்மையைப் பின்பற்றி ஒழுகுவாராக.

(c) தலையங்கம் எழுதும் முறை

தலையங்கமே எந்தப் பத்திரிகைகளிலும் முன்பு ஓதப்படுகின்றது. அவ்வத் தலையங்கம் பத்திரிகையின் அவ்வப் பதிப்பின் முக்கியப் பொருண்மொழியைப் பற்றியதாம். ஆகலின், தலையங்கம் படித்தால் அன்றைய வெளியீட்டின் தலைமையான செய்தியை உணரலாகும். எனவே, தலையங்கம் என்னும் பேரும் அதற்குத் தகுமென்க. இப்பெற்றியினதாய தலையங்கம் எழுதுவோர் பத்திரிகைத் தொழிலாளருள் பெருமையான நிலைபெற்று வருகின்றனர். இக்காரணத்தால் தலையங்கமெழுதும் ஆசிரியர் இயல்பாகவே பொது மக்களை நடத்துவோராவர்.

தலையங்கம் பத்திராதிபரும், உப தலையங்கம் உப பத்திராதிபருந்தான் எழுத வேண்டும் என்னும் பொறுப்புப் போய் வெகுகாலம் ஆய்விட்டது. ஆனாலும், பல பத்திரிகைகள் அவ்வழக்கத்தை இன்னும் விடவில்லை. பல பெருமை வாய்ந்த பத்திரிகைகளுக்குத் தலையங்கம் எழுதுவோர் வேறாக நியமிக்கப்பட்டுள்ளார். அவ்வக்கால நிகழ்ச்சிகளில்

முக்கியமாகப் பயன்படத் தக்கவற்றைப் பற்றியே தலையங்கம் வரைதல் அன்னார் கடன். பெரிய பெரிய பத்திரிகைகளுக்கு அவ்வப்பொருண்மொழிகளில் தேர்ச்சி பெற்றோரைத் தலையங்கம் வரைவதற்கு அமைத்திருக்கிறார்கள். அவர்கள் மிக நுணுக்கமான பொருண்மொழிகளைப்பற்றி விளக்கமான அரிய கட்டுரைகள் வரைந்து வருகிறார்கள். அத்தகு தலையங்கமெழுதும் ஆசிரியர், எப்பொருள் மொழியைப்பற்றியும் அருமையாகவும் எளிதாகவும் எழுத வல்லவர். ஆகலின், அவர் பிரீ லான்ஸ் ஜர்னலிஸ்டு (Free lance journalist) எனப்படுவார். தலையங்கம் வரைவோர் ஒப்பற்ற திறனும் தொழிற்பயிற்சி வளனும் வாய்ந்திருப்பினன்றி தமது நிலையை வகிக்கத் தக்கவர் ஆகார். தகுதியற்றவர் தலையங்கம் எழுதின், அறிஞர் அதனைத் தலையங்கம் என்னார். அதனை உலகத்தார் இடையங்கம், தொடையங்கம், காலங்கம் என்று எள்ளி நகையாடுவர். தலையங்கம் எழுதும் வெற்றி, ஒரு சில சொற்களில் அல்லது சொற்றொடர்களில் கருத்தை அழுத்தமாக விளக்கும் வன்மையைப் பொறுத்திருக்கின்றது. சிறிது நேரத்திலே பெரிய பொருண்மொழிக்குத் துணிந்த முடிபு கட்டலும் வேண்டும். இவ்வன்மையில்லார், தொழில் முறையில் வெற்றியில்லார். மேலும், விரைந்து செல்லும் செலவும், அழகிய உரை நடை எளிமையும், அரிதினமைந்த கவர்ச்சியும் தலையங்கத்தின் அணிகளாக்கவேண்டும்; வெளிப்படையும் உறுதியும் மொழிகளில் மிளிர்வித்தல் வேண்டும்; சொற்பொழிவுத் தோரணைகாட்டிப் பெருந்தொகை மக்களுக்குப் பயனில ஆக்கல் ஒண்ணாது.

தலையங்கமே பத்திரிகையின்கண் மக்களுக்குப் பெரிதும் வழி காட்டுவது. அதுவே ஓர் உயரிய தினசரியைப் படிப்போர்க்குப் பெருவிருந்தாகி வருவது. இனிமையும் விளக்கமும் புணர்த்திக் கட்டுரைகளை எழுதின், பத்

திரிகை படிப்போர் படிக்கப் படிக்கப் பொருள் கண்டு கொண்டே போவர். அரும்பதங்களை அமைக்கின், நற் பொருள் பற்றியதாயினும், அக்கட்டுரையை மக்கள் அரு வருப்பார்கள். மிகப் பெரிய பொருண்மொழிகளைப்பற்றிய தலையங்கங்களும் எளிய மொழிகளால் விளக்கப்பட்டால் தான், பொது மக்களால் கொண்டாடப்பட்டு, அவர்களுக் குப் பயனூட்டும் வகையிலே தொழில் நலன் வளரும். பிற பத்திரிகைகளையோ, கட்சிகளையோ, அவற்றின் தலைவர் களையோ, அகாரணமாகவும், நல்லெண்ணமின்றியும், சொல் நயமின்றியும் தாக்கியெழுதுதல் பத்திரிகைத் தொழி லுக்குப் பெருந்தடையாம். பெரும்பயன் தரும் பொதுப் பெரும்பொருண்மொழிகளை வெளிப்படையாக வாதிக்க வும், சோதிக்கவும் பத்திரிகைகளுக்கு உரிமையுளது. இருப் பினும், சொல்லும் பொருளும் தேளின் கொடுக்கையும் பாம்பின் பல்லையும் போன்று இருத்தலாகாது. 'கீழோராயி யினும் தாழவுரை,' என்ற வாசகத்திற்கு வாச்சியமான தலை அங்கங்களே பயனுடையனவும் விரும்பப்படுவனவும் ஆம். கொடுமையாகத் தாக்குதலைச் சிலர் தாங்கினும், அல்லது பொருட்படுத்தாவிட்டாலும், பலப்பலர் பழி தூற்றி அவ மதிப்பர் என்பது நினைவிலிருத்தத் தக்கது. எனவே, தலையங் கம் வகுப்போர் இனிமை கலந்த திறனுடைய கட்டுரைகள் எழுதி நன்மதிப்புறக் கடவர். அவர் செல்வாக்கடைய விழை யின், முதலில் தம்மையும் தம் முறைகளையும் நெறியிலிட்டுச் செல்வாராக. தமது உள்ளக் கிடக்கையை ஒவ்வொரு வாக் கியத்திலும் தெள்ளிக் காட்டுதலே தலை அங்கத்தின் அழ காம். வலிந்து பொருள் கொள்ளத்தகுந்த மொழிகளை அடிக் கடி தலையங்கங்களில் இடைச் செருகலாக்கிப் படிப்போர்க்கு வெறுப்பூட்டலாகாது. வலிந்து பொருள் கொள்ளத்தகுந்த மொழியாட்சியைக் கையாள்வது இலக்கியப் பயிற்சிக் குறை

வுடையான் என்று விளம்பரப்படுத்தல் போலாம். அவ்வாறு ஆசிரியர் தம்மைத்தாம் காட்டிக்கொடுத்துவிடின், தம் மதிப்பும் தொழில் மதிப்பும் அற்றவராவர்; எந்தப் பொருளேயும் இயல்பாக எழுதி விளக்கும் திறனும் அற்றுப்போம். அரசியற் பொருண்மொழித் தலேயங்க ஆசிரியர் வலிந்து பொருள் கொள்ளும் மொழியாட்சியால், அதாவது, இலக்கிய உரை நடை வறுமையாளராயின், அவர்தம் தொழில் விழுப்பம் துவக்கத்திலேயே மங்கிவிடும். தாமாக உணராத எதையும் அவர் எழுதக் கூடாது. வலிந்தெழுதின், உரை நடையின் அழகு தளரும்; கருத்தும் மெலிந்து தோன்றும். ஆகலின், தலேயங்கம் எழுதுவோர், தெளிந்த கருத்தை இனிய மொழிகளில் அமைத்துப் பத்திரிகைக்குப் பெருமை உண்டு பண்ணுவாராக.

தலேயங்க ஆசிரியர், வாதப்போர் வந்துறுங் காலத்தில் தம் கருத்துக்களை ஒரே முறையில் கொட்டிவிடக் கூடாது; பொருள் நுட்பங்களை இருப்பில் வைத்துக்கொண்டு, சக்கைகளை மட்டிலும் வெளிப்படுத்தலும் கூடாது; மீண்டு வரும் தலேயங்கத்திலே, மறுப்புக்கு மறுப்பாகத் தரும் விடைக்குத் தக்க பொருளை எப்போதும் சிறிதாவது இருப்பில் வைத்துக்கொள்ளக் கடவர். ஒரு பெருத்த பொருண்மொழியைப் பற்றி வாதம் அல்லது தர்க்க முறையில் பன்முறையும் தொடர்ந்து வரைந்துகொண்டே போக வேண்டி வரினும் வரும். அப்போது தலேயங்கம் அமைப்போர் இருப்பிலுள்ள சரக்குக்களில் வேண்டும்வரையினும் சமயத்திற்கேற்ப எடுத்தாளலாம். அப்படியல்லாமல் துவக்கத்திலேயே எல்லாச் சரக்குக்களையும் உதறி எறிந்துவிட்டு, அந்நீண்ட வாதப் போர் நடைமுறையின் இடையினும் கடையினும் சுவையற்ற பயனில் பொருள்களை ஆண்டு கருத்தமைதியிற் பிற்போக்குற்றவரின், அது, வேட்டை நாயின் விரைந்த முற்போக்கை

யும், அது களைப்புற்றுத் துவண்டு நிற்கும் பிற்போக்கையும் ஒக்குமல்லவா? எண்ணிப் பார்மின். இவ்வாறுரைப்பதால், தலையங்கங்களெல்லாம் கருத்துக்களை ஏகதேசமே காட்டிப் பிற்போக்கடைதல் கூடாது. நீண்ட வாதப்போரைத் தந்த தலையங்கத்திற்கு இம்முறை வகுக்கப் பெற்றது. ஏனைத் தலையங்கங்களெல்லாம் கருத்துக்களை வழக்கம்போல அவ்வப் பதிப்பில் வேண்டுமட்டும் பெய்யலாம். வாதப்போரை உண்டு பண்ணிய தலையங்கத்தை ஒட்டிய உப தலையங்கங்களெல்லாம் கருத்தைச் சுருங்கிய மொழிகளிலே வேண்டிய அளவு பெய்து வரின், எத்துணைப் பெரிய வாதத்தையும் இறுதி வரையில் வாசகர் வெறுப்பின்றிக் கொள்ளும் வகையிலே அழகிய பொருளமைதியுடன் எழுதிச் செல்லலாம். தலையங்கங்கள் படிப்போர் விரைந்து விரைந்து பொருளின்பத்தை உண்டுண்டு மேலே செல்லும்படி எழுதப்படல் வேண்டும். மிக்க சுருக்கமும் கடினமும் மிக்க விரிவும் தருக்கச் செறிவுமின்றி விளக்கமாகவும், விரைந்து சென்று பொருட்பயன் விளைப்பதாகவும் கூடிய உரைநடையில் தலையங்கம் அமைத்தல் வேண்டும். தலையங்கம் எழுதுந் திறன் அத்தொழிலிற் பயிலப் பயிலத் தானே அமையும். தலையங்கம் எழுதுவோர் வெளிப்பாட்டு (Expository) நடையையும், ஆராய்ச்சி (Critical) நடையையும் பெரும்பான்மையும் மேற்கொள்ளக்கடவர். மற்றும், தன்னுழைப்பும் தெள்ளிமையும் ஆண்மையும் நற்பயிற்சியுமே தலையங்கம் எழுதுவோர்க்கு நல்லாசிரியரன்றி வேறுகா. 'யங் இந்தியா'வின் தலையங்கங்களையும், ஆசிரியர் காந்தியடிகளின் குறிப்புரைகளையும் விளக்க உரைகளையும், "நவசக்தி"யின் தலையங்கங்களையும், ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் குறிப்புரைகளையும் விளக்க வுரைகளையும், முறையே ஆங்கிலத்திலும் தமிழிலும் தேசிய மணங் கலந்த தலையங்கம்

முதலியன எழுதுவோர் தெளிந்துபின்பற்றின் மிகுதியும்பய னுறுவர்; பயன்தருவர். தினசரிகளுக்கு ஒப்பற்ற தரத்துடன் கூடிய ஆராய்ச்சித் தலையங்கம் எழுத விரும்புவோர், "தின மணி","தமிழ் நாடு" இவற்றின் தலையங்கங்களைப் படித்திடுக. இலக்கியப் பத்திரிகைகளுக்குத் தலையங்கம் வரைவோர் "லோகோபகாரி", "செந்தமிழ்ச் செல்வி", "கலைமகள்" இவற்றின் தலையங்கங்களைப் பொறுமையுடன் படித்துத் தெளியக் கடவர். இணையற்ற ஆராய்ச்சித் தனித் தமிழில் தலை அங்கமும், கட்டுரைகளும், பல்வகை உரை நடை நூல்களும் எழுதும் அவாவினரும், பல்கலை அறிவு பெறும் விருப்பின ரும் ஆசிரியர் மறைமலையடிகளது "ஞான சாகரம்" என்னும் பத்திரிகையை ஓதிப் பயனடைக.

(d) நிருபர் தொழில் முறை

பத்திரிகைத் தொழிலின் முன்னணியில் விளங்குவோர் நிருபராவர். அவரைப் பத்திரிகைத் தொழிலின் ஒற்றர் என் னலாம். நிருபர், எமது நிருபர், எமது சொந்த நிருபர், எமது பிரத்தியேக நிருபர், ஏற்புடை நிருபர் எனப்படுவர். ஒவ்வொரு பத்திரிகைக்கும் சொந்த நிருபர் உளர். அவர், பத்திரிகைகளின் கொள்கைக்கேற்ற செய்திகளையும் பொதுப் படையான செய்திகளையும் ஆங்காங்குச் சென்று அறி வர்; பொதுவும் சிறப்புமான பல வகைக் கூட்டங்கள், நீதி மன்றங்கள், சட்ட சபை, மற்றும் சமூக நடவடிக்கைகள் இவற்றை நேரிலறிந்து ஆராய்ந்து அவ்வப்போது பத்திரி கைகளுக்கு அறிவிப்பர். வேந்தரது ஒற்றர் மறைவிலிருந்தறிப வர். ஆனல், பத்திரிகை வேந்தரது ஒற்றரோ, வெளிப்படை யாக ஒவ்வொரு நடிவடிக்கையினும் கலந்திருந்து அறிபவ ராவர். பொது மக்களுக்கு விருப்பமும் பயனும் ஊட்டத் தக்க பல வகை நிகழ்ச்சிகளையும் நல்ல ஆய்வுடன் அழகாக எழுதுபவர், பத்திரிகை ஒற்றராகிய நிருபரேயாவர். பத்

திரிகை நிருபர் நிலையிலே பன்னாள் உழைப்பவர், அரசியல் முதலான அரிய பல பொருள்களைப் பற்றியும் செவ்விய நீண்ட பயிற்சி பெற்றவராகலின், பிற்காலத்திலே அவர் உதவிப் பத்திராதிபர், பத்திராதிபர் என்னும் இவ்விரு நிலைகளையும் முறையே அடைவதற்கு அருகராவர். நிருபம் எழுதுந் தொண்டு பத்திரிகைக்கு இடையங்கம் போன்றது. இடை இன்றி அடியும் முடியும் இயங்காமைபோல, நிருபர் அறிக்கைகளையின்றித் தற்காலம் பத்திரிகைகளின் தலையங்கங்களும், காலங்கங்களும், பிறவங்கங்களும் இயங்கா; இயங்கினும், கொண்டாடப்படா.

நிருபருக்குச் சுருக்கெழுத்துப் (Short-hand) பயிற்சி இக்காலத்தில் இன்றியமையாதது. அப்பயிற்சியினால் அவர், எத்தகைய நீண்ட பேச்சையும் சுருக்கி எழுதிப் பின் பெருக்கி எழுதிப் பத்திரிகைக்கு அனுப்ப இயலும். சுருக்கெழுத்தில் எவ்வளவுக்கெவ்வளவு விரைந்த பயிற்சி உடையரோ, அவ்வளவுக்கவ்வளவு நிருபர் வேகமாகச் செல்லும் விரிவுரையாற்றலையும் தொடர்ந்து சென்று, விடாமல் எழுத வல்லவராவர். பல கூட்டங்களில் நடைபெறும் பேச்சுக்களையும், தர்க்கங்களையும், விரிவுரைகளையும், தீர்மானங்களையும் அழகு பெற அமைத்தற்குத் தொடர்ச்சியான அழுத்தமான பயிற்சி தேவை. தேர்ச்சியடைந்த நிருபர் அந்நடவடிக்கைகளைக் குறிப்புக்களாக எழுதிப் பின் விவரித்துக் காட்டுவர்.

சுருக்கெழுத்துப் பயிற்சி மட்டும் நிருபர்க்குப் போதாது. அவர் அவ்வக்காலங்களில் ஆள்வோரையும் ஆளப்படுவோரையும் பற்றி இழுத்துச் செல்லும் அரும்பெரும்பொருள்களில் ஊடாடியும் வரல் வேண்டும். அதற்காக நிருபர், மதிப்புள்ள நல்ல பத்திரிகைகளில் அரசினரும் குடிகளும் போற்றி வரும் சில வெளியீடுகளைப் படித்து வரும் வழக்

கத்தை எக்காலும் விடக்கூடாது. சுருக்கெழுத்துப் (Short-hand) பயிற்சியும், எழுத்தடிக்கும் (Type-writing) பயிற்சியும், சுருக்கியெழுதும் (Abridging) வன்மையும், திரும்ப எழுதும் (Re-writing) பயிற்சியும், கருத்தை விளக்கும் தன்மையும், பொருளுக்கேற்ற உரை நடையும் நிருபர் பயின்றறிந்திருத்தல் நனி பயன் தரும். விரித்துரைத்துப் பொருணலம் விளக்கலும், கதைப் போக்கு அல்லது வரலாற்று (Narrative) நடையும் கதைப் பத்திரிகைகளுக்கே ஏற்றனவாம். கதைப் பத்திரிகை நிருபர் அப்பயிற்சி பெறக்கடவர். அவ்வாறு பெற்றுவிடினும், திருந்த அமைக்கும்படியான மொழி நலன் உடையராதல் வேண்டும். அம் மொழி நலன் உடைமைக்கு, ஏற்ற இலக்கிய இலக்கணப் பயிற்சி உதவியாம். உரை நடையின் தன்மை, படிப்போர்க்கு நுதலிய பொருளை விளக்கமாக எடுத்துக் காட்டக் கூடியதாய் இருத்தல் வேண்டும்; கூறியது கூறல், மற்றொன்று விரித்தல், மயங்க வைத்தல் முதலிய குற்றங்களுக்கு இடனாகக் கூடாது. அக்குற்றங்களால், படிப்போர் விருப்பம் உடைந்துபோம். பெரிய பெரிய பொருண்மொழிகளும் பயனில் மொழிகள் கலவாமல், படித்தலில் இயல்பிலே ஆர்வம் பெருகத் தக்கபடி எழுதப்படல் வேண்டும். அரசியற் பொருள் மொழிகளை வெகு அழகும் மிகு தெளிவும்பட எழுதுதல் வேண்டும்.

பத்திரிகைத் தொழிலில், புதியன புகுதல் என்றபடி, பேட்டி காண்கையும் ஒன்றும். அது காண்கை, கேட்கை, தெளிகை, வரைகை என விரியும். காண்கையாவது குறிப்பிட்ட அறிவிற் பெரிய மனிதரைக் காண்பதாம். அது பேட்டி காணல் எனப்படும். கேட்கையாவது, பேட்டி கொடுப்பவரிடம் சில அரும்பெரும்பொருள்களைப் பற்றிப் பேசி அவர் கருத்துக்களை விடை வடிவிலே கேட்டறிதலாம்.

தெளிகையாவது, அங்ஙனங் கேட்டறிந்தனவற்றைச் சிந்தித்துப் பார்த்து நுட்பந் தெளிந்துகொள்ளலாம். வரைகையாவது, சிந்தித்துத் தெளிந்தவற்றை உலகம் உணரும் உயிர நடையிலே எழுதுவதாம். பேட்டி கொடுக்கும் பெரியாரிடம் முன்னரே உத்தரவு பெற்றிருத்தல் வேண்டும்; அல்லது பேட்டி காண்போர், பேட்டி கொடுப்போரைக் குறிப்பிட்ட காலத்திலும், இடத்திலும் எதிர்பார்த்திருக்கும்படி செய்து கொள்ளல் வேண்டும். நிருபர், முன்னரே எண்ணித் துணியாத பெரிய பொருள்களைப் பற்றிப் பேசவே கூடாது. தாம் பேட்டி காணப்போகும் அறிஞருக்கு ஏற்ற பொருள்மொழிகளையே நிருபர் ஆய்ந்து தெளிந்து வைத்திருத்தல் வேண்டும். இம்முறை, அவ்வறிஞர் உள்ளக் கருத்தை உள்ளபடி அறிதற்கு உதவிபுரியும். தாம் கேட்கப் போகும் பொருளைப் பற்றிப் பல வினாக்களைத் தயாரித்து வைத்திருத்தலும் வேண்டும். சில சமயங்களில் நிருபர், தாம் எண்ணாத வினாக்களை எழுப்ப நேரும்; அல்லது பேட்டி தருவோர் வினவினும் வினவுவர். இந்நிலையில் இரு திறத்தாரும் கூர்ந்த அறிவினராய் இருந்தாலன்றி, இருவரும் தெளிவான விடைகளால் ஒருவரையொருவர் இன்புறுத்த இய்லாது. இந்நிலையிலே தக்க விடையளிக்க வல்லாரே போட்டிப் பணியில் என்ஞான்றும் வெற்றி பெற இயலும். இத்திறனும் ஒரு கலையறிவென்னலாம். இஃது எல்லா நிருபர்க்கும் எளியதன்று. எதிர் பாராத இந்நிலையிலே நிருபர்க்குச் சுருக்கெழுத்துப் பயிற்சி மிக்க உதவியாம். ஒரு சில நிருபர் பேட்டியில் நிகழும் பேச்சுக்களை ஒன்று விடாமல் நினைவிலிருந்து எடுத்தெழுதவும் வல்லவராகச் சொல்லப்படுகின்றனர். அத்தகையோர் அரியரில் அரியர். எப்படியிருப்பினும், எத்தகைய நிருபராயினும், சுருக்கெழுத்தில் எழுதிப் பின் பெருக்கெழுத்தில் வெளிப்படுத்தலானது, கூடுதல் குறைதல்

என்னும் இழுக்கினின்று காக்கும் என்பது உறுதி. இம்முறை ஒரு சுமாரான கூர்ந்த நினைவினருக்கும் விழுப்பயன் பயப்பதாம். பேட்டி தருவோரைக் குதூகலித்திருக்கும் அமயத்திற் கண்டு பேசும் பேச்சினால் அரும்பெரும்பொருள்கள் இயல்பாகவே பேட்டி தருவோர் வாயினின்றும் வெளியாகும். இடமும், சமயமும் பேட்டிக்குப் பெரிதும் உதவுவனவாம். இதன் உண்மையை நிருபர், நடை முறையிலேதான் கண்டுகொள்ளக் கூடும். நிருபராக வெற்றி பெற விழைகுநர் பேட்டியில் உடனுக்குடன் தெளிந்த விடை பகரும் அறிவு வளம் உடையராயிருத்தல் வேண்டும். அது சாதாரண ஆற்றலுடையார்க்கு வாய்க்காது. பேட்டி நிகழ்ச்சிகளைக் குறித்துக்கொண்டும் ஊன்றி நோக்கிக்கொண்டும் போக வேண்டும். அப்போதைய சுற்றுப்புறக் காட்சிகளையும், பேட்டி தருவோர் அடைந்திருந்த தன்மையையும் பற்றி அழகாக எழுதுவதற்கு நிருபர் செழித்த இலக்கிய வளனுடையராதல் வேண்டும். அப்பேர்ப்பட்ட இலக்கிய வளனே பேட்டி நிகழ்ச்சிகளின் ஒவ்வொரு நிலையையும் ஓவியம் போல எடுத்துக் காட்ட வல்லது.

ஆரம்ப நிருபர் அவைக்களத்தின் நிகழ்ச்சிகளை அப்படி அப்படியே எழுதுவதைக்காட்டினும் சுருக்கியமைத்தல் மிகக் கஷ்டமானது. சுருக்கி அமைக்குங் கலையில் தேர்வோர், கூர்ந்த நினைவும் ஆற்றலும் பூண்டவராயும், நடை முறைகளைத் தெளிந்து வரைபவராயும் இருத்தல் வேண்டும். அன்றியும், அன்னார், அவையினர் எந்தக் குண நிலையிலிருந்து சொற்பொழிவுகளைச் செவிமடுத்துக்கொண்டிருந்தனர் என்பதைச் சித்திரித்துக் காட்டுதற்கு முதலில் பயிற்சியடையக் கடவர். பரிபாஷா ஞானமில்லாதவரின் நிருபங்கள் சில சமயங்களில் பயன்படா. ஆகலின், விரிவுரைகளிலுள்ள பரிபாஷைப் பொருள் நுட்பங்களைக் காந்தம் ஊசியை இழுப்பதுபோல இழுத்துக்கொள்ளவல்ல பொது அறிவு நிருபர்க்கு

வேண்டுவதே. பரிபாஷை அறிவு (Technical Knowledge) அடையாத நிருபர் மேல் நாடுகளிலும் கீழ் நாடுகளிலும் மிக்குளர். அவர் திருந்துவாராக; தமது மனப்போக்கின் படியும், பொறாமை வேக்காட்டினாலும் வரைதற்குச் சிறிதும் உரிமையிலர் என்பதை அறிந்து ஒழுகக் கடவர். நடுவு நிலையும், நல்ல தன்மையும், சோம்பலின்மையும், உண்மையிற் பற்றும் ஓர் உயர்தரப் பத்திரிகை நிருபருக்கு இல்லாமல் முடியாத இலக்கணங்களாம். நிருபருக்குள்ள ஆற்றலுடன் நடுவு நிலைமையும் உண்மை கடைப்பிடியும் வாய்ப்பின் தொழில் முறைக்கு முழுதும் பொருத்தமாம். "உண்மையான விஷயங்களை விடுத்து, இப்படித்தான் நடந்திருக்க வேண்டுமென்ற தங்களுடைய அபிப்பிராயத்தைப் புகுத்தாத பத்திரிகா நிருபர்கள் தேவை" என்ற காலஞ் சென்ற லாலா லஜபதிராய் அவர்கள் நோக்கம் இங்கே நிருபர்களால் சிந்தித்து உணரத் தக்கது. இம்முறைகளைப் பின்பற்றி நடக்கும் பத்திரிகை நிருபரே பத்திரிகைத் தொழிலின் முன்னணியில் இடத்தைப் பெறும் பெருமையுடையார் ஆவரென்க.

(e) ஏற்புடை நிருபர்

ஏற்புடை நிருபர் என்று பத்திரிகை நிருபருள் ஒரு பிரிவினர் உளர். இவருடைய ஊழியம் பத்திரிகை ஆசிரியர்களாலும் முதலாளிகளாலும் வேலை மிகுதியானசமயங்களில் பெரிதும் விரும்பப்படும். பத்திரிகைத்தொழிலாளருள் நிலை பெற்ற நியமனமில்லாமல் தேவையானபோது இவர் தொழிலுக்கு ஏற்படுத்தப்படுகிறபடியால், இந்நிருபர் ஏற்புடை நிருபர் எனப்படுவர். இந்நிருபர் எந்தப் பத்திரிகையையும் சேராதவராய்த் தேவையானபோது நியமிக்கப்படுபவர் ஆயினும், இன்னார் தம்மை நியமித்த பத்திராசிரியரது மனம் இன்பூறித் தழைக்கும்படி தமது தொழில் திறத்தைக் காட்டுகின்ற

னர். இவ்வேற்புடை நிருபர் வேறு தொழிலால் வரும் பொருளுடன் இவ்வகையினும் தொழிலாற்றித் தக்க பொருள் ஈட்டுகின்றனர். இவர் சுவை மிக்க கட்டுரை எழுதும் வன்மையால் பத்திரிகைகளால் மிகவும் விரும்பப்படுகின்றனர். அத்தகு கட்டுரைகள், பல பத்திரிகைகளுக்கும் அனுப்பப்பட்டு வெளியாகின்றன. இந்நிருபர் பல பொருண்மொழிகளையும் தெளிந்தவராதலால், இவர்தம் உரை நடைகள், பல பத்திரிகைகளாலும் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இவர்பால் நம்பிக்கையுடைமையும் இவர்தமைப் பத்திரிகைகள் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளுதற்கு ஏதுவாகும். காலந் தப்பிக் கட்டுரை அனுப்பல், அல்லது கட்டுரை அனுப்பத் தவறுதல் முதலிய கடமைத் தவறுகள் இவராலுண்டானால், பத்திராதிபர்கள் இவரை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகலின், இவர் விழிப்புடன் கடனாற்றுவார் ஆக.

ஏற்புடை நிருபரின் நோக்கம், தமது கட்டுரைகள் பல பத்திரிகைகளிலும் வெளியாக வேண்டுமென்பதாம். இந்நிருபருள் போட்டியும் ஏற்படுதலுண்டு. போட்டி ஏற்பட்ட காலத்தே இவர் தெரிவிக்கும் செய்திகள் பலபடப் புனைந்துரைக்கப்படுகின்றமையால், மக்கள் திரளுக்கு அவை பயன்படாமற் போதலுமுண்டு. ஆகலின், உதவிப் பத்திராதிபர் இவர் அனுப்பும் செய்திகளைப்பற்றி ஆராய்ந்தறிந்து வருகின்றனர். பத்திரிகைகள், தமக்குள்ள ஏற்புடை நிருபரில் உயர்தரத்தினரைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு அவரைத் தங்கள் தொழின்முறையிலே இயக்கி வருவனவாம். பத்திராசிரியருக்கு இந்நிருபர் பிடித்தமானவரென்று காணப்பட்டால், இவர்தம் ஊழியத்தை அவ்வாசிரியர் பெரிதும் ஏற்பர். ஏற்புடை நிருபர், பத்திராசிரியர் தம்மை ஏற்றுக்கொள்ளும்படி செய்தற்குஅவ்வாசிரியரது கொள்கையையும்

நோக்கத்தையும், அவரது பத்திரிகைகளின் வழியே தெரிந்து கொண்டு, அவரது சம்மதம் பெற்று, அவர் நோக்கினுக்கு இணங்க நடந்துகொள்ளல் வேண்டும். இவ்வேற்புடை நிருபர், வெளியூர்களினும் வேலைசெய்யும்படி அனுப்பப்படுகிறார். பத்திராசிரியர்கள் இவருக்கு இலவசமாகத் தந்திப் புத்தகங்களும் தந்திச் செலவுகளும் தருகிறார்கள். பத்திரிகைகளின் தேவைகளுக்கும் திட்டங்களுக்கும் ஏற்ப அனுப்பப்படும் செய்திகளுக்கும் கட்டுரைகளுக்கும் வழக்கப்படி விகிதம் கொடுக்கப்படுகிறது. அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இவ்விகிதம் மிகுதியினும் மிகுதியானது. இந்தியாவின் நிலைக்கேற்ப இங்குத் தரப்பட்டாலும், நிருபர்க்கு இந்திய பத்திரிகைகள் கொடுக்கும் விகிதமோ சம்பளமோ சிறிது குறைவானது. நிருபரின் தகுதிக்கும் பத்திரிகைகளின் வருமானத்திற்கும் தகுந்தபடி பொருளுதவி செய்யப்பட்டால், இந்திய பத்திரிகைத் தொழில் இன்னும் உரனுடன் வளர்ச்சியுறும்.

பத்திரிகைகளின் ஏற்புடை நிருபராய்க் கீர்த்தி பெறும் விருப்பினர், கவனிக்க வேண்டியவற்றைச் சிறிது காட்டுவேனுக. இந்நிருபர், நிகழ்ச்சிகளின் காட்சிப் பிரமாணத்தில் தெளிவுறல் வேண்டும்; படிப்போர் உள்ளத்தைக் கவரும் வகையிலே நேர்மையுடன் எழுதுதல் வேண்டும்; ஓர் அரிய பெரிய விரிவுரையின் சாரத்தை வாங்கிக்கொள்ளும் மனவன்மை பெற வேண்டும்; முக்கியமான செய்திகளின் தகுதிக்கேற்ற உரை நடை அமைத்தல் வேண்டும்; நல்ல கல்விப் பயிற்சியும், உலகானுபவமும், இயன்றவரையில் பல பொருண்மொழிகளில் ஆராய்ச்சி அறிவும் பெற வேண்டும்; வாழ்க்கை நடை முறை அறிவுடன் தறுகணண்மையும், நடுவு நிலையும், பெரிய உழைப்பும், கடப்பாடுடைமையும் இவரால் நனி விரும்பிப் பயிலத் தகுவனவே. பத்திரிகைகளின் ஏற்புடை

நிருபர், இக்குறிப்பிட்ட தொழில் முறைகளின் வழிச் சார்ந் தொழுகின் நலனும்.

(f) நிருபர்க்கு அறிவுறுத்தல்

பத்திரிகைத் தொழிலின் நிருபத் துறையிலே இறங்கித் தொண்டாற்றும் விருப்பினர் அறியத்தக்க தொழின்முறைக் குறிப்புக்கள் பல இங்கெடுத்துக் காட்டப்படுகின்றன. இக் குறிப்புக்கள் நிருபருள் ஆரம்பிகளின் பொருட்டாம்: நல்ல காகிதத்தில் நல்ல மையில் ஒரு பக்கம் மட்டுமே பக்கந்தோறும் இலக்கமிட்டுத் தெளிவாக எழுதுக. எப்போதும் பத்திராசிரியர் திருத்தத்திற்காகக் காகிதத்தின் இடப்பக்கமும் ஒவ்வொருபக்கத்தின் நுனியினும் அடியிலும் வரிக்கு வரி போதுமான இடம் விடுக. எழுதிய செய்தியை அல்லது கட்டுரையைச் சுருட்டற்க. நீளத்தில் சரிபாதியாக மடித்து உறையுள் (Cover) இட்டு அனுப்புக. அனுப்பிய கட்டுரை பத்திராசிரியருக்குப் பிடித்தமில்லையெனத் தெரிந்தால், அதனைத் திருப்பி உமக்கே அனுப்பும்படி தபாற்றலை (Postal stamp)யும் கடிதமும் அனுப்புக. நீண்ட கடிதம் எழுதிப் பத்திரிகாசிரியர் காலத்தை வீணாக்காமல் சுருக்கியெழுதுக. வரையும் கடிதத்துடன் உமது கல்வித் தேர்ச்சி, தொழில் தேர்ச்சி இவற்றின் சான்றுகளை அனுப்புக. பத்திராசிரியருக்கு உடன்பாடாயின், உம்மிடமிருந்து கட்டுரை எதிர்பார்க்கும் கடிதம் அனுப்புவர். அவருக்கு எழுதும்போது எத்தன்மையான கட்டுரைகள் அல்லது செய்திகள் தேவையென்பதனையும் வினவுக. விடை வாராதிருப்பினும், சின்னாள் பொறுத்திருந்து, பின்பு இரண்டாங் கடிதம் அன்பார்ந்த முறையுடன் வரைக. இடைக் காலத்தில் விடைக்காகப் பத்திரிகாசிரியரைத் தொந்தரை செய்யற்க. அவருடன் எப்போதும் நட்புரிமை பூண்டு தொழிலில் வெற்றி பெறுக.

எழுதும் பொருண்மொழிகளைப் பற்றிப் பலபடியானும் ஆய்ந்து தெளிந்துளதாகக் கட்டுரையின் ஒவ்வொரு பத்தியினும் காட்டுக. (The theme of the essay should ever be clearly presented in each and every paragraph). வாசிப்போர்க்கு நயனும் பயனும் தருமுறையில் வரைக. கொண்ட பொருண்மொழியை எப்பகுதியினும் மயங்க வைத்தல், குன்றக் கூறல் முதலிய குற்றங்களுக்கு உட்படுத்தல் கூடாதென்பதை நன்கு அறிக. சொற்றொடர்களும் வாக்கியங்களும் வெறுப்பு விளையாதனவாய்ச் சுவையும் உற்சாகமும் ஆவேசமும் விளைப்பனவாய், ஓதற்கு எளியனவாய் அமைத்திடுக. நிருபராகப் புகழ் பெற வேண்டுநர் பழஞ்செய்திகளை அனுப்பொணாது. மக்கட்கு விருப்பூட்டும் முக்கியமான புதிய செய்திகளைக் குறிப்பிட்ட காலத்தில் அனுப்புக. முன்னே சிந்தித்துப் பின்னே வரைக. இயன்ற மட்டும் சின்னஞ்சிறிய வாக்கியங்களே உருவாக்குக. பென்னம்பெரிய வாக்கியங்கள் பத்திரிகைத் தொழிலுக்கு அவ்வளவு ஏற்றனவல்ல. வலிந்து பொருள்கொள்ளும் முறையும் விடுக்கத் தக்கது. ஆகலின், சொற்களை வலித்தும் நலித்தும் பற்றியிழுத்துப் பொருத்தற்க. அவை, தாமே வந்து வந்து அமையும்படி பயின்றிடுக. நிருபம் அழகும், சொல் அமைதியும், பொருளமைதியும் விரவி வர உருப்படுத்துக. அவ்வாறு செய்யின், அதுவே நிருபருக்குத் தொழில் வெற்றியை நிலைநிறுத்தும். உண்மையான செய்திகளையே அனுப்பி வருக. எதனையும் இப்படித்தான் நிகழ்ந்திருத்தல் கூடும் என்னும் தன்னெண்ணத்தின் சார்பால் வரையற்க. மக்கள் விருப்பு வெறுப்புக்களையும், அரசினர் நோக்குப் போக்குக்களையும் அவ்விரு திறத்தினருடன் கலந்து கண்டு பிடித்துக் கொண்டு, இருபாலும் நன்மை பயப்பனவற்றைப் பொருளாற்றலுடன் சொற் சோர்வுபடாமல் இனிய உரை நடை

யிலே வரைக. கண் மூடித்தனமாக இருந்த இடத்திலிருந்து கொண்டு மனக் கோட்டையில் கட்டப்பட்ட உதவாச் செய்திகளையும் பல புனைந்துரைகளுடன் கூடிய செய்திகளையும் ஒரு காலும் அனுப்பற்க. நிகழாதனவற்றைச் செய்தி என்னும் பேரால் எழுதி அனுப்பிக்கொண்டு சோம்பியிருக்கும் நிருபர் தமக்கும் பத்திரிகைத் தொழிலுக்கும் இழுக்கந்தேடுவர். அல்லாமல், பத்திரிகை படிக்கும் மக்கட்பெருந் தொகைக்கு நற்றொண்டு செய்யத் தவறும் வகையிலே பெருத்த ஏமாற்றத்தைச் செய்யத் தவறுதவர் ஆவர் என்பது, கன்மேலெழுத்துப் போலும் பசு மரத்தாணிபோலும் நிருபர் தமது நெஞ்சத்திற் பதிக்கக் கடவர்.

பத்திரிகைக்கு ஏற்ற உரை நடையிலே வல்ல நிருபரே தொழில் நடையிலே வல்லவராவர். ஆங்கில பத்திரிகை நிருபர் "நியூ இந்தியா", "யங் இந்தியா" ஆசிரியர்கள் உரை நடைகளையும்,இலக்கியப் பத்திரிகை நிருபர் பைபிள் (Bible) என்னும் சத்திய வேதத்தின் உரை நடையையும், டாக்டர் ஜான்சன் (Dr. Johnson) உரை நடையையும், பேகன் (Bacon) உரை நடையையும் பின் பற்றுக. பயன் தரும் சொற்களைப் பயனூட்டும் வகையில் அமைத்தலும் கவனிக்கற்பாற்று. பொருண்மொழிக்கேற்ற நல்ல சொற்களையும் அடை மொழிகளையும் ஆள்க. சொற் சோர்வும் பொருட் சோர்வும் தொடைச் சோர்வும் நடைச் சோர்வும் பட எழுதும் நிருபர் பத்திரிகைத் தொழிலுக்குத் தக்கோரல்லர். அருஞ்சொற்களையும் சொற்றொடர்களையும் கொண்டு புகுத்தி வாசகர்களை மலைப்பித்தல் ஆகாது. கொம்பிற் பழுத்து விழும் பழம்போல இயற்கையாக வரும் வாக்கியங்களைச் சுவை பெற அமைத்திடுக. எளிய நடையிலே சில சொற்களால் பொருளை விளக்குக. ஒரு பொருள் மொழியைப் பல பாகுபாடுகளாக்கி, ஒவ்வொரு பாகுபாட்டிற்

கும் சில பல பத்திகளாக்கி, அப்பொருள் மொழியின் நடுநோக்குச் சோராத வகையிலே செய்திகளையும் கட்டுரைகளையும் அமைத்து, முன்னுரையில் துவங்கிப் பின்னுரையில் முடித்திடுக. பத்திரிகைகளில் உவமையணியைத் தவிர ஏனைப் பலவகை அணிகளையும் அடிக்கடி நுழைக்கப்படாது. இலக்கியப் பத்திரிகைகளிலே அத்தகு திறன்கள் காட்டுக. ஏனைப் பத்திரிகைகளில் நுண் பொருள்களையும் பருவுருவில் வைத்து, விளக்குக. நுண் பொருள்களை நுண்ணுருவில் வைத்து ஓதுவோர்க்கு மலைப்பூட்டற்க. மக்கட் கூட்ட முன்னேற்றத்தைத் தகையுங் குற்றங்களை மனப் புண்ணுக்காமல் நன்னய எளிய மொழிகளால் திருத்தும் நோக்குடன் ஆண்மையுடன் துண்டித்தெறிக. ஒட்டிப் பேசுவன ஒட்டியும், வெட்டிப் பேசுவன வெட்டியும் பேசப்படல் வேண்டும்.

அக்காலத்தில் பத்திரிகைகள் மேகாலே பிரபுவின் (Lord Macaulay) நடையைப்போன்ற இலக்கியப் பெருமித நடையையும், எத்தனையோ பல சொற்றொடர்களமைந்த பெரிய பெரிய வாக்கியங்களையும் விரும்பின. இக்காலத்திலோ, அத்தகைய நடையும் கட்டுரைகளும் கொண்ட செய்திகளைப் பத்திரிகைகளில் முக்கியமாகத் தினசரிகள் சிறிதும் விரும்புவதில்லை. ஜம்ப (Pedantic) நடை எட்டுணையுங் கூடாது. தற்காலப் பத்திரிகைத்தொழிலில் "சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் நவின்றோர்க்கினிமை" முதலிய அழகுகள் பொதிந்த நடைகளே புகழ் பெற்று வருகின்றன. வளைந்தும், நெளிந்தும், சுழிந்தும் செல்லாமல், நேராக, சீராக, ஏராக, கூராகச் சென்று படிப்போர் உள்ளத்தைக் கவர்ந்துகொண்டே மேற்செல்ல வல்ல நல்ல உரை நடைகளே பத்திராசிரியருக்கு நிருபர் அனுப்பத்தக்கன. அல்லாத நடைகள், வெல்லாத நடைகள்; செல்லாத நடைகள்; நில்லாத நடைகள். எனவே, பத்திரிகைத் தொழில் கல்லாத

நடைகள் என விடுக்க. இக்காலத் தினசரிகளில் வரும் செய்திகளில் மிளிரும் சுருக்கி விளக்கும் முறை பத்திரிகை நிருபர்களால் நோக்கற்குரியன. அவை எவ்வளவு விரைவாகப் படிப்போர்க்கும் பொருள்கள் அழுத்தமாக விளங்கும்படியான தெள்ளிய உரை நடையில் இலங்குகின்றன. நிருபர் இத்தகைய உரை நடையில் தேறிவிடுவாராயின், பத்திராதிபருக்குப் பயன்படுவர்.

தமிழ்ப் பத்திரிகை நிருபர்க்குச் சில ஆசிரியர்களின் நடை வகையும், சில உயர்தரப் பத்திரிகைகளின் நடை நோக்கும் போக்கும் பிடிபடல் வேண்டும். செய்யுள் நடை எழுத விரும்பும் இலக்கியப் பத்திரிகை நிருபர்க்கு வடலூர் இராமலிங்க சுவாமிகள் "திருவருட்பா" நடை நல்ல வழி காட்டியாம். அந்நடை நோக்கும் தொடை நோக்கும் பத்திரிகை படிப்போர்க்கு வற்றாத இன்பம் விளைத்துக்கொண்டே இருக்கும். உயர்தரத் தினசரிகளுக்கும் இலக்கிய வெளியீடுகளுக்கும் உரைநடை எழுதுவோர், யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் எழுதிய பால பாடங்களின் நடைப் போக்கைப் பின்பற்றுக. மொழி பெயர்ப்பாளர் அந்நாவலர் இயற்றிய சத்திய வேதத்தின் தமிழ் நடையினைப் போல வரைக. அவரது உரை நடையெல்லாம் நேரே சென்று பொருளைத் துலக்கும் இலக்கியச் செல்வத்தினதாம். இலக்கியப் பத்திரிகை நிருபர் அவரது பொருநுணுக்கைப் பெரிதும் தழுவுக. வேடிக்கை விநயங்களினும் ஆற்றொழுக்குப் போன்றிலங்கும் நடைப்போக்கினும் வேதநாயகம் பிள்ளை அவர்கள் இயற்றிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' ஒரு நல்ல வழி காட்டியாகும். அரிய பெரிய ஆராய்ச்சி முடிபுகட்கும், கலப்பற்ற ஒப்பற்ற தனித்தமிழ் நடைக்கும் பல்லாவரம் மறைத்திருவாளர் மறைமலையடிகள் நடத்திவரும் "ஞான சாகரம்" பத்திரிகையும், "மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்" என்னும் அருந்

தமிழ் ஆராய்ச்சிப் பெருநூலும் இரு கண்கள் போன்றவை. நடுவு நிலையோடு கூடிய அரசியல் சீர்திருத்தமும் தேசியத் தனி மணமும் பொருந்திய இனிய உரை நடைக்கும் அருமையான பத்திரிகைத் தமிழ் நடைக்கும் நவசக்தியின் தலை அங்கங்கள் விழுத்துணையாம். சமய நடைக்கும், மெய்ந்நூல் நுண்ணூல் ஆராய்ச்சி நடைக்கும், மாருத அழகுசான்ற செந்தமிழ் நடைக்கும் "செந்தமிழ்ச் செல்வி" "சித்தாந்தம்" என்னும் புதினத் தாள்கள் இரண்டும் பேர்போனவை. இக்கூறிய நல்லாசிரியரது தமிழ் நூல் நடைகளையும், பத்திரிகைகளின் பல வகை அழகிய உரை நடை முறைகளையும் பத்திரிகைத் தொழிலில் மேன்மையுற விரும்புவோரும், புகழுடம்பு பெற விழைவோருமாகிய நிருபர்கள் ஓதி அறிந்து பயன் பெறுவார்களாக.

(g) செய்திச் சாலைகள்

பத்திரிகைகளுக்குத் தந்திச் செய்திகள் விற்கும் தொழிலை மேற்கொண்ட நிலையங்களுக்கு இப்பேர் ஆகும். இத்தந்திச் செய்திச் சாலைகள் நியூஸ் ஏஜென்சீஸ் (The News Agencies) என்று ஆங்கில முறையிலும், செய்திச் சாலைகள் என்று தமிழ் முறையிலும் சொல்லப்படும். இப் பொருள்பற்றிச் சொற்பொழிவொன்று ரூட்டர் தந்தி நிலைய மேற் பார்வையாளர் டைசன் (G. W. Tyson) என்பவரால் கல்கத்தா பத்திராதிபர் சங்கத்தின் கூட்டத்தில் நிகழ்த்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அச்சொற்பொழிவின் சாரத்தை மனத்துட்கொண்டு சில பொருள்களை முன்னிட்டு எனது சொந்தச் சரக்குக்களைப் பின்னிடுவேனாக.

உலகில் எல்லாத் தேசங்களிலுமுள்ள பத்திரிகைகளும், உள் நாட்டு வெளி நாட்டுச் செய்திகளைத் திரட்டி அனுப்புவதற்கென்று அமைக்கப்பட்ட செய்திச் சாலைகளுடன் தக்க ஏற்பாடுகள் செய்துகொள்ளும் அவசியத்தைக் கண்டு பிடித்

துள்ளன. செய்திச் சாலைகள் பல வகையின. சில பொதுக் கூட்டத்தாராலும், தனிப்பட்ட கூட்டத்தாராலும் அமைக்கப்பட்ட சாதாரணமான தொழில் முறையுடையனவாம். வேறு சில முதலாளிகளும் வாடிக்கைக்காரர்களும் என்னும் இம்முறையிலே பத்திரிகைகளோடு ஐக்கியப்பட்ட தொழில் முறையுடையனவாம். கிரேட் பிரிட்டனில் உள் நாட்டுச் செய்திப் பொறுப்புக்கு "பிரெஸ் அசோசியேஷன்" ("The Press Association") என்ற செய்திச் சாலை ஏற்பட்டுள்ளது. வெளி நாட்டுச் செய்திகளின் பொறுப்புக்கு 'ரூடர்ஸ் வித் தி செண்டிரல் நியூஸ் அண்டு தி எக்ஸ்சேஞ்சு டெலிகிராப் கம்பெனி" என்னும் செய்திச் சாலைகள் (Reuter's with the Central News and the Exchange Telegraph Company) ஏற்பட்டுள்ளன. பிற்கூறப்பட்ட செய்திச் சாலைகள் தனிப் பொறுப்பில் நடத்தப்படுவன. லிமிட்டெட்டு என்னும் வரம்பில் அமைந்துள்ள பிரான்ஸ் தேசத்திலுள்ள "ஹவாஸ்" ("Havas") என்னும் செய்திச் சாலை மேற்கூறப்பட்ட பொது அமைப்பிலும் சேராமல் தனி அமைப்பிலும் சேராமல் இடைப்பட்ட நிலையிலே மிகக் குறைந்த விகிதத்திற்கே பணி செய்து வருகிறது. அமெரிக்காவில் "அசோசியேட்டெட் பிரெஸ் ஆப் அமெரிக்கா" ("The Associated Press of America") என்னும் செய்திச் சாலை அமெரிக்க பத்திரிகைகளுக்கு உள் நாட்டு வெளி நாட்டுச் செய்திகளைத் திரட்டித் தருகின்றது. இந்தச் செய்திச் சாலையே அமெரிக்க செய்திச் சாலைகளில் முதன்மையான கடனாற்றி வருகின்றது. அதுவுங்கூட ஐக்கிய நிலையிலே நடைபெறுகின்றது. ஜப்பான் தேசத்திலே, "(ட்)ஷூஷின்ஸ்கா கோகுஸாய்" ("Tsushinska Kokusai") என்ற செய்திச் சாலை தொழில் செய்கிறது. அது பிறப்பட்ட தோற்றமும் தனிப்பட்ட அமைப்புமுடையது. இது வரையில்

குறிக்கப்பட்ட செய்திச் சாலைகளின் அமைப்பு, பழம்படிகளையெல்லாம் தாண்டி முன்னேறி நடக்கும் பத்திரிகைத் தொழிலுடைய நாட்டுக்கு மிக்க பொறுப்புடைமையை விளக்கும் ஓர் எடுத்துக்காட்டு என்க.

இச்செய்திச் சாலைகளின் அமைப்பு, பத்திரிகைகளுக்கு மிக்க சிக்கனமும் நேர்த்தியுமான வழிகளிலே செய்திகள் தெரிவிப்பதுந் தவிர, அப்பத்திரிகைகளின் மூலம் மிகக் குறைந்த சந்தாவிலே எவ்வளவோ சிறந்த பயனைப் பொது மக்களுக்குப் பெருக்கியளித்துக்கொண்டும் வருகிறது. இவ்வுண்மையை விளக்குவேனாக: மிக உயர்ந்த நிலையிலே பத்திரிகைத் தொழில் நடந்து வரும் கிரேட் பிரிட்டனிலுள்ள உயர்தரப் பத்திரிகைகளுக்குள்ள செய்திச் சாலைகளின் சார்பை நீக்கிப் பார்த்தால், நிலைமை வெகு மோசமானதாம். "பிரெஸ் அசோசியேஷன்" ஒன்றன் சார்பற்று விடுவதனாலேயே உள்நாட்டுச் செய்திகளில் மட்டும் நிருபர் மூலமாக ஐந்திலொரு பங்குதான் உதவுகிறதாம். அச்சிறிய பங்கும் அவ்வளவு தெளிவாகவும் புதிதாகவும் கிடையாதாம். கிரேட் பிரிட்டனிலுள்ள பத்திரிகைச் சங்கம் (The Press Association) மிக்க உரனுடன் நடத்தப்படுவதும், பத்திரிகைத் தொழில் நடைமுறைக்கே ஏற்படுத்தப்பட்டதும், நீடித்து நடைபெறும் அமைப்பிலே உள்ளதுமாம். பத்திரிகைகளுக்கு அதில் பங்குகள் உள்ளன. பங்கெடுத்துக்கொள்ளாத எந்தப் பத்திரிகைகளுக்கும் அச்சங்கத்தால் வரக்கூடிய ஊதியத்திலும் பங்கில்லையாம். அச்சங்கத்தால் பல பத்திரிகைகள் செய்திச் சாலைகளின் வழியே பத்திரிகைத் தொழிலை மேம்பாடுறுத்தற்கும் வழியேற்படுகிறது போலும்!

செய்திச் சாலைகளெல்லாம் பொதுவான நல்ல கடமைகள் ஆற்றுதல் வேண்டும். அவையனுப்பும் தந்திச் செய்திகள், பத்திரிகைகளின் அவ்வக்கட்சிக் கொள்கைகளுக்கு

ஏற்ற உருவில் அமைக்கப்படாமல் ஒரு தன்மையனவாய் எப்பத்திரிகைக்கும் பொதுமையான நலன் அளிக்கத் தகுந்தனவாய் இருத்தல் வேண்டும். மற்றும் அவை, உண்மைகளை மட்டும் குறித்து நிற்கும் பெற்றியினவாய், உலகத்திலே நடக்கும் சிறிய பெரிய பலவகை நிகழ்ச்சிகளையும் அவசரத்திற்கேற்ற திட்டத்தோடு விளக்குவனவாய், நன்கு செப்பம் செய்யப்பட்ட அமைப்போடு கூடி மிளிர்தல் வேண்டும்.

பிரிட்டனிலுள்ள ரூட்டர் (ராய்ட்டர்) செய்திச் சாலை மிகப் பழமையானது. 1851ல் அறிஞர் ஜூலியஸ் டி ரூட்டர் (Mr. Julius de Reuter) என்பவரால் அந்தச் செய்திச் சாலை ஏற்படுத்தப்பட்டது. அஃது, அவர் பேராலேயே விளங்குகிறது. தற்போது அது பிரிட்டிஷ் ராஜ்யங்களிலும் உலகின் பல பகுதிகளிலும் விரிந்து நிலவுகின்றது. முக்கியமான செய்திகளிற் பெரும்பகுதியும் ராய்ட்டரால் பரப்பப்பட்டு வரும் உண்மையை அறியாதார் ஒரு சிலரே என்னலாம். இவ்வகையிலே அறிஞர் ரூட்டர் விக்டோரியா பேராசியார் காலத்திலே ஒப்பற்ற மணிபோல விளங்கினர். பத்திரிகைத் தொழிலை வளர்த்துப் பெருக்கி உலகெங்கும் விளக்கி வரும் செய்திச் சாலை முறையிலே அறிஞர் ரூட்டரே மிக நீண்ட புகழாளர் என்பது ஒப்புக்கொள்ளப்படும் உண்மையாம். செய்திச் சாலைகள் சார்பான இவ்வேழாம் பிரிவிற் குறிப்பிட்டபடி அறிஞர் G. W. டைசன் சொற்பொழிவு இம்மட்டிலே பின்பற்றப்பட்டு நிற்கிறது.

நமது இந்திய பத்திரிகைத் தொழிலுக்கும் செய்திச் சாலைக்குமுள்ள தொழின்முறையின் மிக ஒடுக்கமான நிலை 1929-ஆம் ஆண்டு மே மாதம் "மாடர்ன் ரிவ்யூ" பத்திரிகை 634-ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுளது. இந்திய பத்திரிகைத் தொழில் பிற்பட்ட பிறப்பினது. பத்திரிகைத் தொழிலாளர் பண்புகள் பலதிறப்பட்டனவாம். இந்திய பொருளா

தார நிலையும் அரசியல் முறையும் உள் நாட்டு வெளி நாட்டுச் செய்திகளை உரிய காலத்தில் உரிய வகையில் ஒரு தன்மைத் தான விகிதத்தில் செய்திச் சாலைகளின் வழியாகப் பத்திரி கைகளுக்குச் செய்திகள் அனுப்புவதில் தடையாக உள்ளன வாம்.

நமது பத்திரிகைகள் சிலவற்றிலே செய்தியறிவு பெரும் பாலும் வெளிக்காட்டப்படுவதில்லையென்றும் சொல்லப்படு கின்றது. வெளி நாட்டுச் செய்திகளைக்காட்டினும் அரசியல் முதலிய உள்நாட்டுச் செய்திகள் மிக்கு வரினும், சில சமயங் களில் முக்கியமான பொருண்மொழிகள் பின்னே தள்ளப் பட்டும், சாதாரணமான செய்திகள் முன்னே விள்ளப்பட்டும் வருகின்றன. சில்லாண்டின் முன் நிகழ்ந்த சிந்து நதியின் வெள்ளப் பெருக்கால் கால் நடைகளுக்கும், வீடுகளுக்கும், விளைநிலங்களுக்கும், மக்களுக்கும் வந்துற்ற கட்ட நட்டம் சிறியபொருளாக்கப்பட்டு, ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கிரா மாதிகாரிக்குப் பேட்டி கொடுத்தது பெரிய பொருளாக்கப்படு மானல், அது செய்தி அமைக்கும் அறிவுடைமையாகாது. இம்மாறுதலான செய்தியறிவு இந்தியாவில் மட்டுமென்று சொல்வது அவ்வளவு உண்மையன்று. வேற்று நாடுகளிலே உயிர்க்குறுதி தரும் பொருள்களைத் தொலைவிலே தள்ளி வரு தல் போன்று, நம் பத்திரிகைகள் உலக வாழ்க்கைக்குரிய பொருள்களைச் சேய்மையில் தள்ளி வந்த காலமும் உண்டு. இக்காலத்தில் நல்ல மாறுதல்கள் இந்திய பத்திரிகைகளில் காணலாகும். இருப்பினும், அவை இன்னும் செய்தியறி விலே திருந்துவனவாக. இந்தியாவின் பெருத்த நகர்கள், சிம்லா நீலகிரி முதலிய அரசினர் கோடை கால விடுதி இடங் கள், வியாபாரத் துறைகள் இவை தவிர, வேறிடங்களிலே உண்மையான செய்திகள் கிடைத்தல் அருமையாகின்றது. இந்திய செய்திச் சாலைகளின் நேர்மையான தொழில்

முறைக்கு ஏற்ற வசதிகளும், நம்பத் தக்க செய்திகளும் எட்டும் வகையிலும், செய்திகள் எட்டுவிப்போர் நற்பயிற்சி பெறும் வகையிலும் இன்னும் சரியான நிலைமை ஏற்படும்படி ஏற்பாடு செய்யப்படவில்லை. சைமன் குழுவிற்காக லண்டனிலிருந்து தந்திச் செய்திகள் விரைவாக அனுப்பப்படுவதன் பொருட்டு இந்தியாவில் அமைக்கப்பட்ட 'பிரீ பிரெஸ் ஆப் இந்தியா' ("The Free Press of India") என்னும் செய்திச் சாலை நற்றொண்டு ஆற்றி வந்துளது. அங்ஙனமே, அஃது இந்தியாவில் நிலைபெற்றுத் தொண்டு புரியும்படி தக்க ஏற்பாடுகளைச் சர்க்கார் செய்யவில்லை. யுனைட்டெட் பிரெஸ் ஆப் இந்தியா (United Press of India) என்னும் செய்திச் சாலையும் இங்கே குறிப்பிடத் தக்கது.

இனி, "அசோசியேட்டெட் பிரெஸ் ஆப் இந்தியா" ("The Associated Press of India") என்னும் செய்திச்சாலைத் தலைவரைப்பற்றிய சில குறிப்புக்கள் விளக்கப்படுகின்றன. இந்திய பத்திரிகைத் தொழிலுக்கு அரிய பெரிய உறுப்புக்களாக விளங்கும் செய்திச் சாலைகள் "ரூட்டெர்ஸ் ஏஜென்ஸி அண்டு தி ஈஸ்டர்ன் நியூஸ் ஏஜென்ஸி லிமிட்டெட்" (Reuter's Agency and the Eastern News Agency Ltd.,) "அசோசியேட்டெட் பிரெஸ் ஆப் இந்தியா", "இந்தியன் நியூஸ் ஏஜென்ஸி" என்பனவாம். இங்கு "அசோசியேட்டெட் பிரெஸ் ஆப் இந்தியா" செய்திச் சாலையின் மாஜி தலைமை ஆசிரியரைப்பற்றிச் சிறிது குறிப்பிடலாம்:

இந்திய பத்திரிகைத் தொழில் வளர்ச்சிக்கு இன்றி அமையாத் துணைக்கருவியான "அசோசியேட்டெட் பிரெஸ் ஆப் இந்தியா" என்னும் செய்திச் சாலையை ஏற்படுத்தியவர் திரு. K. C. ராய் என்பவராவர். இவர் இந்தியருட் பெரும் புகழ் பெற்ற பத்திரிகாசிரியர். இவரைப் பற்றிய சில செய்

திக் குறிப்புக்கள் இந்திய பத்திரிகைத் தொழிலாளர் கண்டு போற்றத் தக்கன. ஆகலின் சிறிதுரைக்கின்றேன்: திரு. கே. சி. ராய் என்பவர் வாழ்க்கைத் தொடக்கத்தில் மிக்க வறுமை உற்றிருந்தனர். அங்கிலையிலேயே இவர் பத்திரிகை நிருபர் ஒருவருக்கு உதவி புரிந்து சிறிது பொருள் வரும்படி பெற்று வந்தனர். பின்னர், (ஈடன் ஹாஸ்டல் சூபரின்டெண்டெண்டு) சாப்பாட்டு விடுதி மேற்பார்வையாளராய், சாப்பாடு விடுதி முதலியவற்றுடன் திங்களொன்றுக்கு ரூபா 25 பெற்றுக் காலங் கழித்து வந்தார். 1895-ஆம் ஆண்டில் இவர் வைசூரி நோயின் வாயினின்றும் அரிதின் உயிர் தப்பிப் பிழைத்தார். உடல் நலம் செவ்வியுற்றபின், பத்திரிகைகளுக்குச் செய்திகள் திரட்டும் வேலையில் ஈடுபட்டு வந்தார். ஏழாண்டுகள் ராஜாங்க சபையிலும் இந்தியா சட்ட சபையிலும் நிரந்தர உறுப்பினராய் இருந்து வந்தார். இவர் சர்க்கார் நியமனம் பெற்ற உறுப்பினராய் விளங்கியும், தேசீய உரிமைக்குப் பழுது வராத முறையில் தொண்டு புரிந்து வந்த தோடு இந்திய பத்திரிகைத் தொழிலில் வேறு இந்தியர் எவரும் அடையாத உயரிய நிலையையும் அடைந்தார். அங்கிலை தான் "அசோசியேட்டெட் பிரெஸ் ஆப் இந்தியா"வின் தலைமை.

இனி "அசோசியேட்டெட் பிரெஸ்" அருமை பெருமைகளுக்கும் திரு. கே. சி. ராய் என்பவருக்குமுள்ள நெருங்கிய தொடர்பைச் சிறிது குறிப்பேனுக: திரு. கே. சி. ராய் தாம் செய்திச் சாலை வழியே பத்திரிகைத் தொழிலில் நீண்ட காலம் பழுத்த பயிற்சி பெற்ற முதல் இந்தியராவர். அன்றியும், இந்திய பத்திரிகைத் தொழிலுக்கு மிகமிகச் சிறந்த உறுப்பான அந்தச் செய்திச் சாலையை அமைத்து, அதற்குத் தலைமை பூண்டும், அத்தொழில் வாழ்க்கையே வாழ்க்கையாக வாழ்ந்தும் வந்தார். மற்றும், அறத்தாழ்ந்திருந்த தமது

உடனலத்தையும் பொருட்படுத்தாமல் இந்திய சட்ட சபையிலே 7-9-1931 ல் பத்திரிகை உரிமைக்கு நேர்ந்த முட்டுக் கட்டையாகிய "புதிய பத்திரிகை மசோதா"வை முனைந்தெதிர்க்கும் நோக்கத்துடன் வீற்றிருந்தபடியே மயங்கி வீழ்ந்தனர்; பக்க வாதத்தால் அம்மாலையிலே 4-30 மணிக்கு ரிப்பன் ஆஸ்பத்திரியில் உயிர் துறந்தார். இவ்விதமாகப் பத்திரிகைத் தொழில் வாழ்க்கைக்கே தமதுயிரைக் காணிக்கையாக வைத்துப்போன முதல் இந்தியப் பெரியாரும் இவரே.

இப்பெரிய வீர மகனார் பல்லாண்டுகளுக்கு முன்பு சர் எட்வர்டு பக்குடன் சேர்ந்து, "அசோசியேட்டெட் பிரெஸ் ஆப் இந்தியா"வை நிறுவினர். தற்போது "அசோசியேட்டெட் பிரெஸ்" அடைந்துள்ள உயர் நிலைக்குக் காரணர் திரு. கே. சி. ராய் ஆவர். இவர் பத்திரிகைத் தொழிலில் அரிதிற் கனிந்த திறன் வாய்ந்தவர். செய்திகள் திரட்டுவதில் இவருக்கிருந்த திறமை வேறெவருக்கும் வாய்த்திலது. மற்றும் இவருக்கு மறதியென்பதே இல்லை. மிக்க நினைப்பாற்றல் பூண்டிருந்தமை பத்திரிகைத் தொழில் துறையிலே இவருக்குப் பெரிதும் உரன் செய்து வந்தது. அசோசியேட்டெட் பிரெஸின் தலைமைப் பொறுப்பை வெகு திறம்படத் தாங்கி நடத்தி வந்தனர். இச்செய்திச் சாலைத் தலைமை வகிப்புக்கு இவரைப் போன்ற ஒரு தக்காரைக் காண்டல் அரிதினும் அரிது. மகாத்துமா காந்தி இவரது பிரிவாற்றாது பெரிதும் கவன்றார்.

"ராஜபுதனா" என்ற கப்பலில் இருந்த ராய்ட்டர் நிருபர், ஸ்ரீ கே. சி. ராய் மரணமடைந்ததைப்பற்றித் தெரிவித்த போது, காந்திஜி சொன்னதாவது: "ஸ்ரீராயின் மரணம் எனக்குத் துக்கத்தை உண்டுபண்ணியதோடு, என்னைத் திடுக்கிடவும் செய்தது. அவரது மரணத்தால் இந்திய பத்திரிகை

உலகத்திற்குப் பெரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஸ்ரீ ராயின் சீரிய குணத்தையும், மகிழ்ச்சியை உண்டு பண்ணத்தக்க நடத்தைகளையும் நான் என்றும் மறவேன்.''

திரு கே. சி. ராய் அவர்களைப் பற்றிய மேற்காட்டிய குறிப்புக்களிலிருந்து பத்திரிகைத் தொழிலாளர் பின்பற்றத் தக்கது யாது? அது வருவாறு: தமது பூதவுடம்பை மறைத்துப் புகழுடம்பை இங்கு நிறுவிப் போன திருவாளர் கே. சி. ராய் அவர்களது பத்திரிகைத் தொழிலின் ஒப்புயர் வற்ற வீர வாழ்க்கை, இந்திய பத்திரிகைத் தொழிலுக்கே மிக அரிதினும் அரிதாக வாய்ந்த அழியாத ஒரு பெருஞ் செல்வமென்க. இவரது உயரிய இவ்வீர வாழ்க்கையினை நமது பத்திரிகைத் தொழிலாளர் பரம்பரையாகப் பின்பற்றிப் பயன் அடைவாராக; பயன் அடைவிப்பாராக.

(h) மதிப்புரை எழுதுதல்

பத்திரிகைத் தொழிலாளருள் மதிப்புரை எழுதுவோரும் ஒரு பிரிவினர். இம்மதிப்புரையாளர், பல்கலைத் துறைகளினும், பல தொழில் நுட்பத்தினும், பல பொருட் பொது அறிவினும் வல்லவராயிருப்பினன்றி இத்தொழிலுக்குப் பயன்படார். அவ்வம்மொழிக்கு (Language) அவ்வம் மொழியில் வல்ல மதிப்புரையாளர் "மாடர்ன் ரிவ்யூ" பத்திரிகையால் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். "இந்து" ("The Hindu") முதலிய பத்திரிகைகள், தம் மதிப்புரைகளைத் தம் இலக்கிய அனுபந்தங்களின் (Literary Supplements) வழியே அவ்வப்போது வெளியிட்டு வருகின்றன. ஒவ்வொரு மொழியினும் பல வகைப் பத்திரிகைகள், பல வகை நூல்கள் தற்காலத்தில் புற்றீசல்போல வந்து குவிந்து கொண்டே இருக்கின்றன. அவற்றுள் 'தலையாயின இவை; இடையாயின இவை; கடையாயின இவை' என்று பகுத்துணரும் ஆராய்ச்சி அறிவினரே தக்க மதிப்புரையாளர்

ஆவர்; அல்லாதவர் அவமதிப்புரையாளரே ஆவர். இந்திய பத்திரிகைகள் இத்துறையில் தக்காரைத் தேடி அமைப்பதில் பெரிதும் பிற்போக்குள்ளவை. இந்திய பத்திரிகைகளின் ஆசிரியர்களே பெரும்பாலும் அத்தொண்டு புரிகின்றார்கள். தினசரி ஆசிரியருக்குச் சமயம் வாய்ப்பது மிகவும் கடினம். இருப்பினும், பத்திராதிபர்கள் தங்கட்கு வரும் பத்திரிகைகளுக்கு மதிப்புரை தாமாகவே எழுதுதல் கடமை. நூல்களை மதிப்புரையாளருக்கே விட்டுவிடலாம். ஆகவே, மதிப்புரையாளர், அதற்கென்றே தனி நியமனம் பெற்றவராயிருத்தல் நலம். மதிப்புரைக்கென்றே தனி நியமனம் பெற்றார்க்குத் தகுந்த அளவு அப்பணியில்லை என்பார், ஏற்புடை மதிப்புரையாளரை நியமித்துக்கொள்ளலாம். அவ்வகை நியமனத்தால், மதிப்புரைக்கும் பணி வந்தபோது அவரால் அதனைச் செய்விக்கலாம். இம்முறை, பத்திரிகைத் தொழிலில் நட்டம் பயவாத செட்டாக்கும்.

இனி, மதிப்புரை எழுதும் முறையைப் பல படியானும் எடுத்துரைப்பேனாக. ஒரு மதிப்புரையாளர், வாழ்க்கை, இலக்கியம், நுண்ணூல், அருங்கலை, நாகரிகம், அரசியல் தெளிவு, உரைநடை முதலியவற்றில் நற்பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். அத்தகு பயிற்சியாளரென்றே வைத்துக் கொள்வோம். கொள்ளினும், அவர் அப்பயிற்சி அறிவைத் தமக்கு வரும் நூல்களைச் சீர்தூக்கி மதிப்புரை எழுதும் வகையிலே காட்டலாம். அவர் தமது மன நிலைக்குத் தக்கபடியோ, அறிவின் தூண்டுதலுக்கு ஏற்றபடியோ, காரமாகவோ, இனிப்பாகவோ, விதிப்படியோ, வழிகாட்டுவதிலோ, மறை முகமாகவோ, நேர் முகமாகவோ, ஆராய்ச்சி முறையிலோ, பொது முறையிலோ, மற்றெவ்விதத்திலோ தமது கலைப் பயிற்சி அறிவை மதிப்புரையில் தெரிவித்தல் கூடும். மதிப்புரை எழுதும்முறையை ஆராயின், அது அன்பும் அறி

வுங் கலந்து தொழிற்படல் வேண்டும். அன்பின்றி அறிவும், அறிவின்றி அன்பும் மதிப்புரைக்கு அவ்வளவாகத் துணை செய்யா. இரண்டுங் கலந்த ஆய்வினெழும் மதிப்புரையே தக்கதாம். அன்பில்லாரும் இலர்; அறிவில்லாரும் இலர்; இரண்டும் நிரம்பியவரும் இலர். ஆனபோதினும், மதிப்புரைக்கு அன்பையும் அறிவையும் இயன்ற மட்டுந் தொழிற்படுத்தியே ஆக வேண்டும். மதிப்புரைக்கு அறிவே பெருந் துணையாயினும், அன்பில் வழி அறிவு நிலை பெயரினும் பெயரும். வெறும் அறிதல், நுகரல், பகுத்தல் ஆகிய இவ்வெல்லாவற்றினும் முடிவு கட்டல் மேன்மைத்தே. இம்முறைகளில் பலவேனும் சிலவேனும் பற்றாதவர் பயனிலர். அன்னவர் நூலுக்கும் நூலாசிரியருக்கும், பத்திரிகைக்கும் பத்திரிகாசிரியருக்கும் பத்திரிகைத் தொழிலுக்கும் நேரிய கடனாற்ற இயலாதவர் என்க. அன்பும் அறிவுங் கூடப் போதா. தெளிவில் வழி, அவ்விரண்டும் வீணே. தெளிவுடன் உண்மையுள் வழியோ, அவை நனி பயன் கனிவனவே. எனவே, அன்பும், அறிவும், தெளிவும், உண்மையும் பூண்டோரே, பிறர் நூலுக்கும் பத்திரிகைக்கும் மதிப்புரை என்னும் துணிந்த முடிவு கட்டுந் தகுதியினர் என்க. நூல்கள் இலக்கியங்களாகலின், இலக்கியப் பத்திராசிரியர்களுக்கு அனுப்பப்படுதல் நலம். பத்திரிகைகளை உயர் தரப் பத்திரிகாசிரியர்களுக்கு அனுப்புதல் மேன்மை. அப்படிச் செய்தால், அவ்வவ்வினம் அவ்வவ்வெளியீடுகளின் தரங் கண்டு ஏற்றபடி மதிப்புரை தரும்.

இங்கிலாந்திலே, மதிப்புரையாளர்க்கு இந்தியாவில் இருப்பதைவிட மதிப்பதிகம். பத்திரிகைத் தொழிலின் மதிப்புரைப் பகுதியில் அவர் கருத்துக்கு ஏற்றமுண்டு. எத்தகை நூலாசிரியராகிலும் மதிப்புரையாளரைப் பெரும்பாலும் ஒட்டியே ஒழுகுபவராவர். மதிப்புரையாளர் அவர்

தம் நூல்களைத் தமது உண்மையோடு கூடிய தெளிந்த அறிவென்னும் தராசில் இட்டு எடை பார்த்த பின்னரே மதிப்புரை எழுதுவர். ஒரு நூலாசிரியரும் அவரது நூலும் நன்மதிப்பும் துன்மதிப்பும் உறுதற்கு அன்னார் மதிப்புரையே காரணமாகும். எப்பருவத்திலே (Age or Era) எத்தகைய நூல்கள் எந்நடையை மேற்கொள்ளவேண்டுமென்பதுங்கூட மதிப்புரையினின்று மக்களறிந்து அவ்வுரையின் போக்கைப் பின்பற்றி இங்கிலாந்து முதலிய மேனாடுகளில் நடப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தற்காலத்தில் தங்கள் நூல்களைச்செல வாக்கும் நோக்கத்துடன் இருக்கும் நூலாசிரியர் மதிப்புரையாளரை மயக்க முடியாது. மிக உயரிய ஆங்கில கவிஞர், 'வோர்ட்ஸ்வொர்த்' (Poet Wordsworth) என்பவருங் கூடத் தமது காலத்திலே தம் நூல்களை மதிப்புரையாளர் மாட்டு அனுப்புவதற்கு அஞ்சியிருந்ததாகத் தெரிகிறது. அக்கவிஞர் கருத்தின்படி மதிப்புரையாளர் எவ்வளவு நல்லவரா யிருப்பினும், நூல்களை மதிப்பிட்டுரைப்பதிலே தம் விருப்பின்படி போகின்றவர் ஆதலால், உயரிய நூல் தாழ்த்தப் படினும் படலாம்; தாழ்ந்த நூல் உயர்த்தப்படினும் படலாம். இக்காரணத்தால் மதிப்புரையாளர்க்கு நூலனுப்புதல்வெறுக்கத் தக்கது என்பது அவரது எண்ணமாம். அப்புலவரது இக்கருத்துக்கு வேறு ஏதேனும் காரணம் இருத்தலுங்கூடும். அது 1842-ஆம் ஆண்டின் நிகழ்ச்சியாகக் கூறப்படுகின்றது. ஆனால், அஞ்சி நின்ற அந்நிலை தற்காலம் மாறிவிட்டது. இக்காலத்தில் எத்தகைய கொடிய நஞ்சு போன்ற மதிப்புரையாளருங்கூட நூலாசிரியரைக் கெடுக்க முடியாது. நிகழ்கால மேனாட்டு மதிப்புரையாளர், தாக்க விரும்பினும், நூலாசிரியரைத் தாக்குவதில்லையாம்; நூலை மட்டும் தாக்குவதற்குக் காரணமிருந்தால் நாகரிக முறையிலே நல்ல நோக்குடனே தாக்கி வருகிறதாகக் கேள்வி.

இந்தியாவிலும் நூல்களையும் பத்திரிகைகளையும் மதித்துரைப்பதில் நாகரிக முறை கையாளப்பட்டு வருதல் வேண்டும். இலக்கண வரம்பினைச் சிறிது கடந்த நூல்களும் பத்திரிகைகளும் நம் நாட்டிலே பற்பல வெளியாகின்றன. இலக்கியத்தில் புதுமையும், பயன்வகையில் உயிர்க்குறுதியும் பயப்பனவாயின், அவ்வெளியீடுகளை ஏற்றுக்கொள்ளலாம். ஒரு சிறிது இலக்கண வரம்பு கடந்த பத்திரிகைகளை ஒரு வேளைவழுவமைதியின்பால் வைத்து ஏற்றுக்கொண்டாலும், அவ்வரம்பு கடந்த நூல்களை மட்டும் பத்திராசிரியரும் ஏனை நூலாசிரியரும் மதிப்புரையாளரும் ஏற்றுக்கொள்ளவே கூடாது. இலக்கண வரம்பு கடந்த நூல்கள் நாளாவட்டத்தில் இலக்கியச் சுவையைக் குறைத்துவிடும். ஆதலின், அத்தகைய வெளியீடுகள் மற்றைய நலத்தினவாயின், அவை இலக்கண வரம்பு கடந்தவாற்றைச் சுட்டியும் இனிமேல் அவ்வரம்பு கடவாவாறு வழி காட்டியும் மதிப்புரை தீட்டுதல் வேண்டும். மதிப்புரையின் பொருட்டுப் பிரபந்தங்கள் முதலிய செய்யுள் நூல்களும் சில சமயம் வருதலுண்டு. அவற்றினுக்கு மதிப்புரை வகுக்கும் பத்திராசிரியரும் மதிப்புரையாளரும் செய்யுள் நூற்பயிற்சியும், யாப்பிலக்கணப் (Prosody) பயிற்சியும் உடையராதல் சீரியது.

மதிப்புரை வேண்டுவோர், முதலில் ஆசிரியருடைய நல் விருப்புடன், இயற்றப்பட்ட நூற்பிரதி ஒன்று பத்திராசிரியர்க்கும் வேறொன்று மதிப்புரையாளர்க்கும் அனுப்புதல் வேண்டும். அந்நூலாசிரியர், நூலுக்கு மதிப்புரையாளரது நல்லெண்ணத்தை (Opinion) வெளியிடும்படி அன்னாரை அன்புடன் வேண்டுதல் வேண்டும். பின்புதான், மதிப்புரை எதிர்பார்க்கப்படல் வேண்டும். இந்திய பத்திரிகைத்

தொழில் துறையிலே இலக்கிய நூல் மதிப்புரையாளரைத் தனி நியமனத்தில் காண்டல் அரிது. பெரும்பாலும் அந்நற் றெண்டினைப் பத்திராதிபரே செய்து முடிக்கின்றனர். சிற்சில ஆசிரியர்க்குத் தக்க இலக்கியப்பயிற்சி இன்மையாலோ, இருப் பினும் நேரம் வாய்க்காமையாலோ, அன்னார் திருந்திய மதிப் புரை தீட்டுதல் அரிதே. அன்றியும், நூல்களும் பத்திரிகை களும் சரிவர ஓதி ஆயப்படாமலே பெரும்பாலும் முடிவு கட்டப்பட்டு, மதிப்புரை என்னும் பேரால் வெளி வருவதும் உண்டு. நோக்கம் என்னையெனின், முன்னதாகத் தமது மதிப் புரையை வெளியிடுதலேபெருமையென்றுகருதப்படுகிறதாம். எக்காரணத்தை முன்னிட்டும் தமக்கு வரும் வெளியீடுகளைப் படிக்காமலும் அரை குறையாகப் படித்தும் மதிப்புரை வரை யும் வழக்கம் கொடிது! கொடிது!! நூலருமையையும், நூலா சிரியர் பெருமையையும், பத்திரிகைகளின் அருமை பெருமை களையும் அறிந்த எவர்தாம் இங்ஙனம் செய்வர்? ஆத்திரத் தால் அவ்வாறு எழுதப்படும் மதிப்புரை நல்லவெளியீட்டின் மதிப்பைக் கெடுத்து, ஆசிரியர் பெருமைக்கும் இழுக்கைத் தேடிக் கொடுத்திடுமே! இங்கிலேயில் அந்தோ! மதிப் புரையை மதித்தறிதற்கென்றே வேறு நன்மதிப்புரை யாளர் தேவை போலும்! இனியாகிலும் இந்திய மதிப் புரையாளர், வெளியீடுகளை முற்றிலும் ஆய்ந்தோய்ந்து பார்த்து, உள்ளபடியான மதிப்புரை எழுதிப் பத்திரிகை களுக்கும், நூல்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஆக்கம் தேடி வருவார்களாக. தகுதியற்ற வெளியீடுகளைப் புகழ்ந்தெழுதி வருதலும் வழக்கமாயிருக்கிறது. இவ்வாற்றால் பயனற்ற நூல்கள் எண்ணிக்கையில்லாமல் வெளி வருவதற்கு இட னுண்டு. நூலெழுதும் பருவம் அல்லது பக்குவம் வாராதவர் நூலெழுதக்கூடாது. சிறுவர் சிறுமியருங்கூட ஆவலுடன் நாவல் என்னும் புதுமைக் கதைகள் எழுதி வருகின்றனரே!

தகுதியற்ற நூல்களுக்கு மதிப்புரை வழங்குதல் சரியன்று. ஆய்விலாது புகழும் மதிப்புரைகளை நம்பிப் பொது மக்கள் பலர், தளர்ந்த நடையும் பொருளும் வாய்ந்த நூல்களை வாங்கி ஏமாறுகின்றனர். அத்தகைய நூல்களைப் படிப்பதனால் மொழிகளின் நடையும், மக்களின் நடையும் தளர்தற்கு ஏதுவாகின்றது. ஆகலின், மதிப்புரையாளர், காய்தலும் உவத்தலுமின்றித் தங்கள் மனமொழி மெய்களின் தூய்மையுடன் மதிப்புரைகள் எழுதி, பத்திரிகை உலகத்திற்கும், இலக்கிய உலகத்திற்கும், ஆசிரிய உலகத்திற்கும், நன்மை புரிவார்களாக.

(i) விளம்பரம்

விளம்பர அறிவு புதியதென்று பலராலும் எண்ணப் பட்டு வருகிறது. ஆனால், அது மக்களைப்போன்ற பழைமை உடைத்தாம்: இன்னும் சரியாகச் சொல்லின், மக்கள் கைத் தொழில் வளர்ச்சியைப்போன்றபழைமையினது என்னலாம். குயவன் தனது வீட்டை நல்ல ஓடுகளால்வேய்ந்தும் நீடிக்கத் தக்க பாண்டங்களை உபயோகித்தும் காட்டுகிறான். பொன் வேலைக்காரன் குடும்பத்தினர் புதிய மாதிரி நகைகளைத் தாமணிந்து பிறர்க்கு அவற்றின் வேலைப்பாட்டினைக் காட்டுகின்றனர். நெசவு வேலைக்காரன் நெய்துடுத்தும் ஆடைகளால் தனது நெசவுத் திறத்தினைக் காட்டுகிறான். இப்படியே தச்சன், கொத்தன், கொல்லன், கன்னான், தையல் பின்னல் வேலைக்காரர் முதலிய தொழிலாளிகள் தம் வீடுகள், சாமான்கள், சட்டை முதலிய உடைகள் முதலியவற்றால் தத்தம் தொழிலின் மேம்பாட்டினைக் காட்டுகிறார்கள். அவற்றைக் காணும் மாந்தர் அவை போன்ற பொருள்களைத் தாமும் வாங்கியும் செய்வித்தும் பயன்படுத்தி மகிழ்கின்றனர். இவ்வாறிருப்பதனால், மக்களுள்ள போதே விளம்பரமும் உள்ளதென

ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். இது விளம்பரத்தின் பண்டைய முதற் சிறு படியாம்.

ஜனத்தொகை குறுகியும், தேவையான பண்டங்கள் அவ்வவ்வெல்லைகளிலேயே உதவப்பட்டும் வந்த காலத்திலேதான் மேற்குறித்தபடி விளம்பர அறிவு முளையிலிருந்தது. சிறிது காலம் சென்றபின், பல பொருள் வியாபாரிகள் ஊரூராய்த் திரிந்து சரக்குக்களை நேரிற்காட்டி விற்பனை செய்து வந்தனர். பின்னும் காலஞ்செல்லச்செல்ல வியாபாரிகள் தங்கள் தொழிலைப் பெருக்கிச் சந்தைகளில் விற்றார்கள்; பின் போட்டி போட்டு விற்கத் தொடங்கினார்கள். இப்போட்டி வியாபார காலமே மெல்ல மெல்லத் தற்கால விளம்பர முறையைக் கொண்டு வந்து விட்டுவிட்டது. நாகரிகமும், வியாபாரப் போட்டியை விருத்தி பண்ணினது. போட்டி நாகரிக வியாபாரத்தை வளர்த்தது. போட்டியோடு கூடிய நாகரிக வியாபாரம் அச்சுத் தொழிலாலும், அச்சுத் தொழில் பத்திரிகைத் தொழிலாலும் உயர்ந்து வந்தன. இறுதியில் பத்திரிகைத் தொழில் விளம்பரத்தை வளர்த்து வருகின்றது. விளம்பரத்தின் அருமை கண்ட உலகம், "வியாபாரத்துக்கு அழகு விளம்பரம் செய்தல்" என்னும் பழமொழியையும் கண்டது. இப்போது விளம்பரம் ஓர் அருங்கலை மாத்திரமன்று; பன்னாட்டு மக்களது வாழ்க்கை நிலைகளையும், பயன்படும் பன்னாட்டுப் பல சரக்குக்களின் நிலவரங்களையும் அவரவர் தாம் தாம் இருக்குமிடங்களிலேயே அறிந்துகொள்ளச் செய்யவும், தேவையான சரக்குக்களை ஒரு தபாற் கடிதத்தால் தம்மைத் தேடி வந்து அடையச் செய்யவும் வல்லமை உடையதாம்.

1. விளம்பர முறைகள்

விளம்பரம் செய்வோர் முன்னரே கவனிக்கத் தகுந்த முறைகள் உள: தாங்கள் விளம்பரம் செய்ய விரும்பும்

பத்திரிகையின் புகழைப்பற்றியும், அதன் சந்தாதாரர் தமது சரக்குக்களை வாங்கக்கூடியவர்கள்தானா; அவற்றை விரும்புவோர்கள்தானா; அப்பத்திரிகையின் சில பகுதிகளுக்காக அது வாங்கப்படுகின்றதா; அல்லது எல்லாப் பகுதிகளுக்குமாக வாங்கப்படுகின்றதா; ஒரு குறிப்பிட்ட காலத்தில் அப்பத்திரிகை செலவான கணக்கு எவ்வளவு இறங்கியுளது; அல்லது ஏறியுளது என்பவற்றின் விவரங்களைப்பற்றியும் ஊடாடிப் பார்த்துத் தெளிந்தபின் விளம்பரம் செய்தால், தக்க பயனுண்டு. மற்றும் விளம்பரம் செய்வோர், தாம் ஆண்டொன்றுக்கு விளம்பர விகித வகையில் எவ்வளவு செலவு செய்யக்கூடும்; விளம்பரம் இடத்தைப் பொறுத்தமட்டில் பெரிதா, சிறிதா; விளம்பரம் எத்துணைத் தூரம் செய்ய வேண்டுவது; விளம்பர வாசகம் எப்படி இருத்தல் நலம்; படத்தோடு கூடிய விளம்பரமா, சாதாரண விளம்பரமா என்ற விவரங்களும் ஆய்ந்தோய்ந்து பார்த்துத் துணிந்தபின் விளம்பரம் செய்தல் வேண்டும். இவ்விளம்பரம் இப்படித் தான் இருக்க வேண்டும் என்ற திட்டமில்லை. அது விளம்பரம் செய்வோர் கூர்மையைப் பொறுத்தது. ஒரு விளம்பரத்தைப் பார்த்து மற்றொரு விளம்பரம் முழுப்போலியாகக் கப்படாது. விளம்பரம், மக்களின் கண்ணையும் கருத்தையும் கவரத் தக்கதாய் இருத்தலே பயன். எடுத்துக்காட்டாக, ஓர் உயர்தர ஆராய்ச்சிப் பத்திரிகைக்காரர், தமது பத்திரிகைக்குத் "தமிழ் மாடர்ன் ரிவ்யூ" என்று காரணப்பேர் சூட்டி விளம்பரம் செய்வாராஞல், தமது பத்திரிகையின் உயர்வை மட்டுமல்லாமல், ஆங்கில "மாடர்ன் ரிவ்யூ" பத்திரிகையைப் போன்ற ஆராய்ச்சிக் கீர்த்தியினது தங்கள் பத்திரிகை என்பதனை அழுத்திக் காட்டும் விளம்பரம் செய்தோரும் ஆவர். மக்கட் கூட்டத்தின் மனம் அவ்விளம்பரத்தின் வழிச் செல்லாதிருக்குமோ ?

முதன்முதல் விளம்பரம் செய்வோர், கூடிய மட்டும் பெரிய விளம்பரமாகச் செய்தால்தான் பல சந்தாதாரர்களுடைய அவசரமான கண்ணுக்கும் நன்கு தென்படும். அப்படிச் செய்தால், நாள் போகப் போகச் சரக்கும் செலவாகிக்கொண்டே போகும். சரக்குக்கு நல்ல பேர் நிலைத்துவிட்டால் விளம்பர அங்குல அளவைச் சுருக்கிவிடலாம். பின், அச்சுருக்க விளம்பரம், பத்திரிகை படிப்போர் மனத்தில் நினைப்பூட்டிச் சரக்கைச் செலவாக்குதற்கு ஓர் அடையாளம் மாத்திரம் ஆகிவரும். இந்தியருக்குப் பிடித்த சரக்கு வெள்ளையருக்குப் பிடிக்காமலும், வெள்ளையருக்குப் பிடித்த சரக்கு இந்தியருக்குப் பிடிக்காமலும் இருக்கும். எந்தச் சரக்கை எந்தப் பத்திரிகையில் எப்படி விளம்பரம் செய்தால் ஒரு சரக்கின் மதிப்பை எடுத்துக் காட்டுமோ அந்தச் சரக்கை அந்தப் பத்திரிகையில் அப்படி விளம்பரம் செய்க. விளம்பர வாக்குக்களை அனுவசியமாகக் கூறியது கூறல் என்னும் குற்றத்தால் வெறுக்கும்படி செய்துவிடல் ஆகாது. விளம்பர வாசகத்தின் முக்கியப் பகுதிகளை அப்படியே வைத்துக்கொண்டு, வாசகர் கண்ணையும் கருத்தையும் தம்பால் இழுக்கக் கூடிய சிறு மாறுதல்களை மாத்திரம் விளம்பரத்தைச் சுருக்க விழைவோர் செய்தல் நலம். கண்டதும் விருப்பூட்டத் தக்க படக் காட்சிகளை உடையதும், ஓதியதும் உவகை விளைக்கத்தக்க வாசகங்களை உடையதுமான விளம்பரத்தினால் வியாபாரம் பெருகுமேயல்லாமல், குறுகவே குறுகாது. போலிச் சரக்குக்களையும் காசு பெறாத சாமான்களையும்பற்றிய விளம்பரங்களால் வியாபாரம் அழிந்துபோம். ஒருவேளை நடைபெற்றாலும் அவ்வியாபாரம் அவியப்போகும் தீபத்தின் சுடர் விருத்தி போன்றதாம். விளம்பர மோசத்தால் மக்களை ஏமாற்றுவோர் மக்களாகார்; மாக்களும் ஆகார்; விலங்கினத்திற் கடையரே ஆவர். நல்லசரக்குக்

களைப்பற்றிய விளம்பரத்தால் அடையாத நன்மைகள் இல வாம். அத்தகைய விளம்பரத்தால்தான் வியாபாரத் துறை நானா விதமாக விரிந்து வருகிறது. ஆகையால், விளம்பரமே வியாபாரத்தைப் பெருக்கும்; விளம்பரமே ஊதியம் வளர்க் கும்; விளம்பரமே நாகரிகம் விளக்கும்; விளம்பரமே பல தேச மக்களையும் அறிமுகப்படுத்தும்; விளம்பரமே ஒருவர் சரக்குக்களை மற்றொருவர் நாடும் வகையிலே பன்னாட்டு மக்க ளின் வேற்றுமையைக் குறைத்து, ஒற்றுமைக்கு வழி காட்டி யும் ஆகும் என்க.

வியாபாரம் பெருகப் பெருக, விளம்பரமும் பெரு கும். விளம்பரம் பெருகப் பெருக வியாபாரம் முன்னி லும் பன்மடங்கு அதிகம் பெருகும். பல வகைச் சரக்குக் களும் ஏராளமாகப் பெருகப் பெற்றும் என்ன? விளம் பரத்தின் வாயிலாக மக்களுக்கு அறிமுகப்படுத்தப்படா விடின், சரக்குக்கள் செலவாகமாட்டா. விளம்பரத்தினலேயே சரக்குக்கள் கிழக்கு உலகத்திலும் மேற்கு உலகத்திலும் பரந்து நிறைகின்றன. சரக்குக்கள் நிரம்பப்பெற்று விளம்பரத் தினல் பலவிடங்களிலும் பரப்பப்படுமானல், அவற்றின் விலை சிறிது இறங்குமே தவிர, ஏருது. விலை சிறிது இறங்கி னும், விளம்பரத்தினல் மிகுதியான சரக்குக்கள் செலவாவ தனல், ஊதியம் மிகும்; ஆகலின், விளம்பரமே வியாபாரப் பரப்பிற்கு அல்லது வளர்ச்சிக்குச் செவிலித்தாய்; அத்தாயின் பேரப்பிள்ளை பெருத்த ஊதியமே. ஆனல், விளம்பரதாரர்கள் தங்கள் சரக்கை மக்கள் விருப்பத்திற்கு இசைந்த முறை யிலே செய்தல் வேண்டும். நல்ல புகழ் படைத்த பத்திரிகை யிலே அல்லது பத்திரிகைகளிலே தொடர்ச்சியாக நாகரிக மாக விளம்பரப்படுத்திக்கொண்டே வருகை முறை. விடா மல் செய்யும் விளம்பரம், விளம்பரப் பொருளைப் பெருந் தொகை மக்கள் வாங்கும்படி செய்யும். மேலும், விளம்

பரம், சரக்குக்களை ஏராளமாக உற்பத்தியும் விற்பனையும் செய்வித்து, சரக்கு வாங்குவோர்க்கும் விளம்பரதாரர்க்கும் முறையே குறைந்த விலையிலும் நிறைந்த ஊதியத்திலும் செவ்விய வாழ்க்கை நலன்களையும் வளர்த்து வருகிறது.

2. விளம்பரப் பயன்

விளம்பரத்தின் பயன் மிகப் பெரிதே. அது மக்களறிவைக் கூர்மைப்படுத்துகிறது. சரக்குக்களின் நன்மை தீமை, உயர்வு தாழ்வு, விலை நிலை (நிலவரம்), விலை ஏறிய காலம், இறங்கிய காலம், என்னென்ன வாங்க வேண்டும் எப்படித் தான் வாங்கவேண்டும் என்பது, எப்படித்தான் விற்கவேண்டும் என்பது, எவையெவை எங்கெங்கு விலை நயத்தில் கிடைக்கும் என்பது ஆகிய இவ்வகை ஆராய்ச்சிகளிலே விளம்பரம் மக்களறிவைத் தெளிவுபடுத்தி வியாபாரத்தின் எல்லா நிலவரங்களையும், பயன்களையும் தருகின்றது. மக்கள் உண்ணத் தகுவனவும், உடுக்கத் தகுவனவும், கொள்ளத் தகுவனவும், கொடுக்கத் தகுவனவும் இன்னின்னவைஎன்று அறிவுறுத்துவதும், வீடு முதலிய கட்டடங்கள் அமைக்கும் முறையும், உலகில் நடக்கும் இகபர நலனுக்குரிய நிகழ்ச்சிகளும், இன்ன பிறவும் விளம்பரத்தினால் எய்தும் பயன்களாம். சென்ற நூற்றாண்டு வாழ்க்கையைவிட மக்கள் சமூக நிலையிலும், உலக சமுதாய நிலையிலும் எவ்வளவோ மேம்பாடுகள் அடைவதற்கு விளம்பரமே கருவியாகும். மக்கள் கொடுக்கும் பணத்துக்குத் தக்க விளம்பரப்பொருளே விற்போர் வாங்குவோர் என்னும் இரு திறத்தார்க்கும் நல்ல நாகரிக வாழ்க்கைப் பயனைத் தரும் என்க.

3. விளம்பரத்தின் இன்றியமையாமை

ஒரு நாட்டை விளக்கும் நாகரிக முறைகளிலே விளம்பரமும் ஒன்றே. விளம்பர முறை, பத்திரிகையைப்போலவே

ஒரு சமுகத்தை மற்றொரு சமுகத்தோடு பின்னி ஒன்றை ஒன்று சார்ந்தொழுகச் செய்யும் வல்லமையுடைத்தாம். அவ்வவ்வகுப்பினர் அவ்வவ்வகுப்பிலேயே வளர்க்கப்பட்டும், அவ்வகுப்பினர் வரலாறும் அவ்வவர் விருப்பு வெறுப்புக்களும் பழக்க வழக்கங்களும் அறிவாற்றல்களும் பிறவும் ஒருவருக்கு ஒருவரால் வெறும் வாய் வார்த்தையின் வழியே சமயம் நேர்ந்தபோது அறிவிக்கப்பட்டும் வந்த பழங்காலம் பறந்து போய்விட்டது. அப்பழைய மந்தமான எளிய காலத்திற்குப் பதிலாக இப்புதிய பரபரப்பான இடம்பமான காலம் வந்துவிட்டது. இப்புது நாகரிக வாழ்க்கை நலத்தைப் பல்லோரும் கலந்து நுகர்கின்றனர். ஓர் இடத்திலே நிலையாக வாழ்வதற்குரிய பழக்க வழக்கங்களின் தெளிவான அறிவுடனே ஒவ்வொருவரும் தத்தம் சமுக நிலைகளையும், வாழ்க்கை இடங்களையும் மாற்றியும், வேண்டியபடி சீர்திருத்தியும் அமைத்துக்கொள்ளுகின்றனர். இருபான்மக்களும் பழைய நிலவரத்தைக்காட்டிலும் புதிய நிலவரத்தின்படியே பெரும்பாலும் எப்படியிருக்கிறார்கள், எவ்வுரிமையை நாடுகிறார்கள் என்று ஆராய்ந்து அறியப்பட வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். வெளித் தோற்றங்கள் உண்மைக்கு மாறாகக் கொள்ளப்படுகின்றன. எந்தத் தனிப் பேர்வழியும் தன்னளவிலே உள்ளபடி அறியப்படுவது போய், தன் முன்னேற்றத்தைத் தடுக்கும் முறைகளைக் கூடியவரையில் மறைத்தும், தனது அறிவாற்றல்களைக் கூடியவரையில் மிகைப்படுத்தியும் காட்டுவதிலே பயிற்றப்பட்டு வருதலே தற்கால நாகரிகம் ஆய்விட்டது. இதனால், ஒரு குழுவிலுள்ள ஒருவன் அல்லது ஒருத்தியின் உண்மை மறைபடுவதும் அன்றி, அன்னவர் நலமும் தீதும் ஒருங்கே மறைபடுதற்கும் ஏதுவாகிறது. ஆயினும், ஒருவரது நலம், முன்னேற்றங் கருதி விளம்பரப்படுத்தவேண்டுவது ஆய்விட்டது. விளம்பரம் இன்றி ஒருவரது

அல்லது ஒன்றின் தரம் தெரிதற்கு அரிதாகிவிட்டபடியால், விளம்பரத்தின் இன்றியமையாமையும் ஏற்பட்டுவிட்டதன்றோ?

வியாபார முறைக்கு விளம்பரம் மிக முக்கியமானதே. பற்பல போட்டியாளருக்கு, முன்னரே மிகு தொலைவிலுள்ள சரக்குக்களை அல்லது வியாபாரிகளை ஒப்பந்தத்தின் வழிக் கட்டுப்படுத்தவும், பொது மக்கள் கண் முன்பாகச் சரக்குக்களைத் துலக்கிக் காட்டவும், வாடிக்கையை உறுதிப்படுத்தவும், வளர்க்கவும், ஒருநாட்டார்க்கு வேண்டுவனவற்றை ஒரு நாட்டார் உதவவும் விளம்பரங்கள் தேவை ஆனவையே. வாழ்க்கையின் சுறுசுறுப்பிலும் மிக்க விரைவிலும் மக்கள் தங்கள் தேவைக்கு உரியனவற்றைத் தேடிக் கண்டுகொள்ளல் எளிதில் இயலாதிருக்கிறது. நமது கீழ் நாட்டிலே ஒரு சிறிய நகரிலே விரும்பிய ஒன்றை அடைவதற்கு அயர்ச்சி தரும் காலத் தாழ்ச்சி வேண்டியிருக்கிறது. இதிலிருந்து விளம்பரத்தின் அவசியம் அறியப்படலாம். விளம்பரம் இன்றி ஒரு குடிக்கூலி வீட்டைக்கண்டுபிடிப்பது எளிதன்று. அப்படி ஒரு வீடு கிடைத்திடினும், அதற்குரியவரைக் கண்டுபிடித்தற்குப் பின்னும் மிகுந்த காலம் பிடிக்கினும் பிடிக்கும். ஆனால், மேல் நாட்டிலுள்ள ஒரு சிறு நகரில் வாடகை வீடு வேண்டியிருப்பின், அந்நகர்ப் பத்திரிகைகளின் விளம்பரப் பகுதியைப் பார்க்கவேண்டுவதுதான் தாழ்ச்சி. அந்நகரின் இன்ன பகுதியில், இன்ன தெருவில், இன்ன இலக்கமிட்ட வீடு, இன்ன அளவினது, இன்ன வாடகைக்குக் கிடைக்கும் என்பன முதலிய விவரங்களை விளக்கமாகக் காணலாம். கண்டதும் கடிதத்தாலாவது (தபால் கார்டு), தொலைவிற் பேசுங் கருவியாலாவது (Telephone), அவ்வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொள்ளலாம். விளம்பரத்தின் தேவை இதனால் உணரக் கிடக்கிறது அல்லவோ?

4. மேனாட்டு மின்சார விளம்பர முறை

மேனாட்டு மின்சார விளம்பர முறையைப் பற்றி ஒரு சிறிது இயம்புவேனாக: ஐரோப்பா, அமெரிக்கா முதலிய மேனாடுகளிலே விளம்பரங்களே பல வகைப் பத்திரிகைகளின் பெரும்பகுதிகளைக் கவர்ந்துகொள்ளுகின்றன. அந்நாடுகளில் மின்னொளியின் பயனாகப் பல தந்திர முறைகளாலும் விளம்பரங்கள் செய்யப்படுகின்றனவாம். ஒரு நகரினுள் நுழைந்தவுடன் அவ்விளம்பரக் காட்சிகள்தான் முதல் முதல் மகிழ்வூட்டுவனவாம். நகர்களின் பல பாகங்களிலும் மின்சாரச் சக்தியால் இயங்கும் விளம்பரங்கள் சரக்குகளுக்கு ஏற்றபடி பல நிறங்களிலும் கவர்ச்சி விளைவிக்கின்றனவாம். உண்பனவும், உடுப்பனவும், ஊர்வனவும், பன்னிறங்களானும், எழுத்துக்களானும், எண்களானும் கண்ணையும் கருத்தையும் கவர்வனவாம். மின்னொளியின் இயக்கத்தால் விளம்பரக் காட்சி வடிவங்கள் தோன்றுவனபோல மறைவதும் பின் தோன்றுவதும் கண்களை மிக வேடிக்கையாக இமைப்பதும் விழிப்பதும் கவர்ச்சி செய்வனவாம். நாடகம், இயக்க விளக்கப் படக்காட்சிச் சாலை (Drama, Bioscope) இவற்றிலும் விளம்பரங்கள் இடையிடையே தொழிற்படுகின்றனவாம். அவ்விளம்பரக் காட்சி வடிவங்கள் ஒரு கதையின் சுவை தரும் நல்ல சமயத்தில் கதையைத் தடுத்து ஆர்ப்பரித்தல், தர்க்கித்தல், உறுதி கூறல், தெளிவுறுத்தல், முடிவு கட்டல் முதலியனவும் செய்கின்றனவாம். நகர்க்கு வெளிப்புறத்திலும் பெரிய பெரிய பலகைகளில் அழகும் அழுத்தமுமான முறையில் சாயவேலை தீர்ந்த விளம்பரங்கள் கண்களைக் கவர்வனவாம்.

5. இந்திய விளம்பர முறை

இனி, இந்திய விளம்பர முறை சிறிது காட்டப்படும்: விளம்பர முறை இந்தியா முதலிய கீழ் நாடுகளில் தற்

காலத்திலேதான் சீர்திருந்தி வருகின்றது. மேனுடுகளிற் போல நமது நாட்டில் மின்சார முறை விளம்பரங்கள் அவ்வளவாக விருத்தி செய்யப்படவில்லை. நம் நாட்டிலே பல நிறச் சாயங்களும், படங்களும் விளம்பரங்களை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. விளம்பரத்தை அழுத்திக் காட்டத்தக்கபடி நிறங்கள் அமைக்கப்படுகின்றன. திறம்பட்ட நிறக் கலப்பைத் தவிர்த்து யந்திர பந்தம் அல்லது பொறி நுணுக்க இயக்கத்தைக் (Mechanism) கொண்டும், நிழலுருவப் படக் கலைத் தேர்ச்சியாலும், கண்டோரால் விரும்பப்படும் தன்மையான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. தேள் கடி, தலைவலி, வயிற்றுவலி முதலியவற்றின் வன்மையையும் நோயாளிகட்கு மருந்து போடப்படுவதையும் அன்னுர் துன்பம் நீங்கி இன்பம் பூத்திருத்தலையும் உருவப் படங்களோடு கூடிய வேடிக்கை வியாபார விளம்பரங்களினுல் விளக்கமாகக்காட்டுகிருர்கள். இந்நிலைகளை அப்படியப்படியே அழகிய பல நிறங்களால் எடுத்துக் காட்டும் விளம்பரங்கள் அவ்வப்பிணி தீர்க்கும் மருந்தை வாங்கும்படி தூண்டுகின்றன. மற்றும், சில பெயர்க் குறிப்புக்களாலும், பொருள் பொதிந்த ஒரு சில மொழிகளாலும், வியாபாரக் குறிகளாலும் விளம்பரங்கள் பயன் விளைவிக்கின்றன. 'கோபால கிருஷ்ணன் வேய்ங்குழல் வாங்குக; நாரத முனிவர் வீணையைப் பாருங்கள்,' என்பன போன்ற அரிய கருத்துக்களை அடக்கி மிளிரும் கருத்துடை அடைகொண்ட விளம்பரங்கள், நமது பத்திரிகைகளில் கண்கவர் படங்களுடன் எவ்வளவோ காணலாம். விளம்பரதாரர் தத்தம் வியாபாரக் குறியிட்ட உருவம் பதிக்கும் கருவிகளைப் (Blocks) பத்திராசிரியருக்கு அனுப்புவர். அவை அவ்வப்பத்திரிகையில் வெளியாம். இவ்விளம்பர முறையால் அவ்வப்பொருள்கள் விலையாகின்றன.

விளம்பரங்களினால் விளையும் பயன்களை உலகங் கண்டு போற்றி வருகின்றது. பல தொழிலாளரும் அருமையான விளம்பரங்கள் செய்து ஊதியம் திரட்டி வருகின்றனர். கட்டடத் தொழிலாளரும், வியாபாரிகளும், உண்டிச் சாலையாளரும், நகர பரிபாலன சங்கத்தாரும், மருத்துவரும், உழவரும், நெசவரும், குயவரும், தச்சரும், கொல்லரும், கன்னாரும், கொத்தரும், தட்டாரும், வண்ணாரும், நாவிதரும், பிற தொழிலாளரும் ஒன்று கூடித் தங்களுக்குள் ஒரு கூட்டுறவு ஏற்படுத்திக்கொண்டு அதன்படி ஒழுகுவார்களானால், அவ்வந்நகர்கள் ஓவியத் துறையை விளக்கும் விளம்பரக்கலையை வளர்த்து, அவ்வத்தொழிலாளருக்கு அவ்வத்தொழில் துறையிலே விளம்பரமென்னுங் கண்ணாடியால் மக்கள் வியாபாரம் கண்டு வியாபாரம் செய்யும் முறையிலே தக்க ஊதியமும் வாய்க்கப்பெறுவார்கள். நகர்களும் விளம்பர வியாபாரத்தால் அழகு பெறும். பல திசைகளினின்று பலரும் வந்து தங்கித் தொழிற் பயனை நுகர்வர். பல தொழிலாளருக்கும் அவ்வத்துறையில் ஊக்கம் வளரும். தொழில்களும் வளம்படும். ஆகையினால், நுண்ணறிவின் விளம்பர முறைப்படி இருப்புப் பாதைத்தொழிலாளரும், மின்சாரத்தமியங்கிக் (Tram Car) காரரும், தமியங்கியாளரும் (Motor Car, Bus etc.,) நீராவிக் கப்பற்காரரும் தங்கள் தொழில் திறத்தினை மனத்தைக் கவரும் சித்திரப் படங்களுடன் விளம்பரப்படுத்திவருகிறார்கள். அதனால், அவர்களுக்குப் பிரயாணிகள் ஏராளமாக வருவதால் செல்வமும் பெருகுகின்றது.

6. விளம்பரக் கலை

அமெரிக்கர் விளம்பரத்தை ஒரு கலையாகக் கொண்டு பயின்று தேர்கின்றனர். உலகத்தில் அமெரிக்காவைத் தவிர வேறெங்குமே விளம்பர முறை அவ்வளவு அழுத்தமாகவும் கலைப்படிப்பாகவும் பயிலப்பட்டும் நடை முறையிற் கொண

ரப்பட்டும் வருவதில்லை. பொருளாதார நூல் வல்லுநர், மனோதத்துவ நூல் வல்லுநர், நுண்ணூல் வல்லுநர் இவர் தம் அருந்துணைகொண்டு தற்போதைய அமெரிக்க பத்திரிகைகளும், விளம்பரங்களும் நடை முறையில் ஒழுங்காக வெளியிடப்படுகின்றன. அமெரிக்காவில் நல்ல நிலைமையில் தொழில் செய்யும் பல்கலைக்கழகங்களில் பத்திரிகைத்தொழிலையும் விளம்பர முறையையும் மாணவர்க்குப் பயிற்றுவிக்காத பல்கலைக் கழகங்களைக் காண்டல் அரிதே. அப்பயிற்சியில் தேர்ச்சியுற்று வெளியேறும் மாணவ மாணவியர் ஏனைத் தொழிலின் தனிப்பட்ட வரும்படியைக்காட்டினும் மிகுந்த வரும்படி அடைகின்றார்களாம்.

அமெரிக்க தொழிலாளர் தம் உற்பத்திப் பொருள்களைச் செலவாக்கும் வகையில் செய்துவரும் முழு வன்மையோடு கூடிய பெருமுயற்சியானது, விளம்பர முறையை நுண்ணூல் (Science) தரத்திற்குக் கொண்டுவந்துவிட்டதுமன்றி, அருங்கலைத் (Fine art) தரத்திற்கும் கொண்டுவந்துவிட்டது. இவ்வருங்கலைத்திறத்தின் பெற்றியால் அமெரிக்க நாடு நகரங்களின் பல பகுதிகளும் மின்சார விளம்பர முறைகளின் சித்திரக் காட்சிகளால் அழகு பெற்று மிளிர்கின்றன. அன்றியும், விளம்பர அருங்கலைத் தரத்தால் அமெரிக்க பத்திரிகைகளின் விளம்பரப் பகுதிகளும் எழில் சிறந்து விளங்குகின்றன. அம்மின்சார விளம்பர முறையாலும், பத்திரிகைகளின் அரும்பெரு விளம்பர முறையாலும், வெளியீடுகளின் அரும்பெரு விளம்பரத் துறைகளாலும், பொது மக்களுக்குப் பல பொருள்களையும் அறிமுகப்படுத்தவும், மக்கள் விருப்பை ஒரு வரம்பில் நிறுத்தவும், பொதுவாக விளம்பரக் கலை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நுண்ணூல் முறைப்படியாக்கும் விளம்பரத்தின் வழியே மக்களின் அத்தகைய விருப்ப வரம்பு, உற்பத்திப் பொருள்

களின் விலையில் நம்பிக்கையான நிலவரத்தையும், அவற்றின் உற்பத்தி மிகுதியையும் விளைவிக்கின்றது.

விளம்பரத்தினால் வரும் நன்மைக்கு அளவில்லை. பண்டங்கள் அல்லது பொருள்கள் செய்வோர்க்கும் வாங்குவோர்க்கும் இருதலையான நன்மை விளைகின்றன. விடாமல் விளம்பரம் செய்து வருவோர்க்குப் படிப்படியாக ஊதியம் வளரும். "மெஸர்ஸ் லியன்ஸ் அண்டு கம்பெனியின் தலைவர் சமீபத்தில் வான்ஸ்வொர்த்திலுள்ள ரோட்டரி கிளப்பில் நிகழ்த்திய சொற்பொழிவொன்றில் பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதால் கிடைக்கும் பெருத்த லாபத்தைக் குறித்துப் பாராட்டிப் பேசியிருப்பதாகத் தெரிகிறது. தற்பொழுது 8,500,000 பவுன்களை மூல தனமாகக் கொண்டிருக்கும் அவரது கம்பெனி ஆரம்பத்தில் 2 பென்சு விலை உள்ள தேயிலைப் பொட்டணங்களையே விற்று வந்ததாகவும், வெகு நாட்களாகப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்து வரும் கொள்கையாலேதான் அவ்விதம் மேன்மை அடைந்ததாகவும், விளம்பரத்தால் ஏற்படும் பயன் முதலில் குறைவாக இருந்தபோதிலும் நாள் செல்லச் செல்ல வியாபாரம் அதிகமாகி அதிக லாபம் கிடைக்குமென்பது திண்ணமென்றும் கூறினதாகச் சொல்லப்படுகிறது." ("நவசக்தி" 9-10-1929; பக்கம் 6.) இவ்வெடுத்துக்காட்டால் நீடித்த விளம்பரத்தினால் நிலைப்பட்ட நன்மை வந்து கூடும் உறுதிப்பாடு உணரக்கிடக்கின்றதென்னும் உண்மையைப் புகழுடன் பரந்து வரும் தினசரிப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் விளம்பரம் செய்யும் இந்திய வியாபாரிகள் எண்ணித் தெளியக் கடவர்கள்.

விளம்பரத்திற்குத் தினசரிப் பத்திரிகையே மிகு பயன் உடைத்தாம். செல்வ வளம் பொருந்திய வியாபாரிகள் தினசரிகளில் விளம்பரம் செய்யலாம். ஏனையோர் தங்கள் நிலைக்

கேற்ற பத்திரிகைகளில் விளம்பரம் செய்வார்களாக. 1914-ஆம் ஆண்டிலே அமெரிக்க ஐக்கிய நாடுகளிலே விளம்பரத்திற்காகச் செலவிடப்பட்ட மொத்தப் பணத்திலே, பெரிய பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் சேர்ந்து சரி பாதியைக் கவளங் கொண்டனவாம்; அப்பத்திரிகைகள் மட்டும் 100க்கு 40 விழுக்காட்டுக்கு அதிகமான தொகையை விழுங்கிவிட்டனவாம். இப்புள்ளி விவரம், உலகில் அமெரிக்க நாடு ஒன்றேதான் பத்திரிகை விளம்பரத்தைக் கலை முறையிலே பயின்று பயனுற்று வருகிறதென்பதற்குச் சான்றாம். "4 லட்சம் டாலர்கள் விளம்பரத்திற்கு மட்டும் ஒரு வருஷத்தில் செலவு செய்ய நியூ யார்க்கிலுள்ள செருப்புக் கம்பெனியொன்று திட்டம் போட்டுளதாம்." ("நவ சக்தி" 31-12-1930 பக்கம் 10) "ஆகாய விமானங்களில் விளம்பரஞ் செய்வதற்கு ஒரு மணி நேரத்துக்கு 100 பொன்னுகிறது." ("தமிழ் நாடு" வாரப்பதிப்பு; 23-1-1931, பக்கம் 3.) இவற்றையும் ஆய்க. பொருளாதாரத் தாழ்ச்சியாலும் கைத்தொழில் வீழ்ச்சியாலும் இந்திய பத்திரிகை வருமானமும் விளம்பர விகிதமும் பத்திரிகைத் தொழிலாளர்க்கு ஆற்றும் உதவியும் ஏற்றமுறவில்லை.

7. வேடிக்கை விளம்பர முறை

முதலாவது, நாடகத்தில் வேடிக்கை முறை மக்களால் விரும்பப்படுவது உணரப்பட்டு வந்தது. இரண்டாவது, நாவல் என்னும் புதினத்திலும், மூன்றாவது சினிமா என்னும் இயக்க விளக்கப் படக்காட்சியிலும், அவ்விநோதம் பாராட்டப்படுவது அறியப்பட்டது. நான்காவது, பத்திரிகையிலே அவ்வேடிக்கை முறை கட்டுரைகளிற் புகுத்தப்பட்டு, மக்களால்மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஐந்தாவது, அம்முறை, பத்திரிகைகளில் வேடிக்கை உருவங்களை அமைத்துக் காட்டப்படுவதில் புகுந்து மதிக்கப்பட்டு

வருகிறது. ஆறுவதாக, அம்முறை, பேசும் படங்களிலும் (Talkies) நுழைந்துவிட்டது. இவ்வேடிக்கை முறை, விளம்பரப் பகுதியினும் ஏனைப்பகுதியினும் புகுந்துவிட்டது. வேடிக்கை·விளம்பர முறைகள் அமைக்கப்பட்ட பத்திரிகைகள் மிகவும் மகிழ்ச்சியுடன் மேனாடுகளிலும் கீழ் நாடுகளிலும் வரவேற்கப்பட்டும் ஆதரிக்கப்பட்டும் வருகின்றன. வேடிக்கை விளம்பர முறை என்பது, வேடிக்கையான உருவத்தை விளம்பரப்படுத்தி, அதன் வழியே விநயமான கருத்துக்களை எடுத்துக் காட்டும் வேடிக்கை விநய விளம்பர முறை என்றும், வேடிக்கையான உருவங்களின் வழியே வியாபாரத்திற்காக மக்கள் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க வேடிக்கை வியாபார விளம்பர முறை என்றும் இரு வகைப்படும். வேடிக்கை விநோதங்களுக்கென்றே தனிப் பத்திரிகைகள் உள. அமெரிக்காவிலே "லைப்" ("The Life") "பக்" ("The Puck") என்பனவும், இங்கிலாந்திலே "பஞ்ச்" ("The Punch") என்பதும் வேடிக்கை விநோத (விளம்பர)ப் பத்திரிகைகளாம். இந்தியாவில் அவ்வகைப் பத்திரிகைகளுக்கு உதாரணமாக "ஆனந்த விகடன்" "குமார விகடன்" "விசித்திரன்" "விநோதன்" முதலியவற்றைக் கூறலாம். நமது தேசத்தில் அத்தகு விகடப் பத்திரிகைகள் மிகுதியாகி வருகின்றன. சில உயரிய தினசரிப் பத்திரிகைகளுக்கும் கூடச் சாதாரணமான விகடப் பத்திரிகைகளுக்கு வாய்க்கும் அவ்வளவு ஆதரவு வாய்ப்பதில்லை. சிறிது காலத்திலே, விநயங் கலவாத வெறும் சுயநல விகடப் பத்திரிகைகள் சீர்திருந்த நேரும். ரொக்கப் பரிசுப் போட்டி விளம்பரங்களால் அவ்வெளியீடுகள் தன்னலம் வளர்த்துப் பொதுமக்களைப் பெரும்பாலும் ஏமாற்றி வருவதாகவும் நம்பப்படுகிறது. நல்ல வெளியீடுகளின் வளர்ச்சிக்குக் களைகள் போன்ற அப்புதினத் தாள்கள் நன்மக்களின் மனக் கசப்பி

னுக்கு இலக்காகாமல், தம்மைத் தாமே சீர்திருத்திக்கொள்வனவாக. அவை, விரைவிலே சீர்திருந்துதல் மிகவும் விரும்பத் தக்கது.

அவ்வேடிக்கை விளம்பர முறை, ஏனை வியாபாரிகளாற் கையாளப்பட்டு வருதல் போலவே பத்திரிகை வியாபாரிகளாலும் கையாளப்பட்டு வருகிறதென்று கண்டோம் அல்லவா? வேடிக்கை வியாபார விளம்பர முறை சற்று முன்னர், இந்திய விளம்பர முறை என்னும் தலைப்பில் மருந்து விளம்பரத்தை ஒட்டிச் சிறிது குறிக்கப்பட்டது. இப்பத்தியில் வேடிக்கை விநய விளம்பர முறை விளக்கப்படுகின்றது. வேடிக்கை வியாபார விளம்பர முறை ஏனை வியாபாரத் துறையில் பெரும்பயனைத் தருதல் போலவே, வேடிக்கை விநய விளம்பர முறை பத்திரிகை வியாபாரத் துறையிலே பெரும் பயன் தருகின்றது. இவ்வேடிக்கை விநய விளம்பர முறை நான்குவகையில் அடங்கும். முதலாவது, ஓர் ஓவியக்காரனால் உண்டாக்கப்பட்ட இரு காதலர் வாழ்க்கை நிலையை விளக்கும் எழில் நிரம்பிய சித்திரப் படத்தோடு கூடியது. இப்படத்தின் விளம்பரம் மக்கள் மனத்தில் ஓவியத்திலுள்ள பிறரால் கலைக்கப்பட்டுத்துன்புற்றுப் பின்பு கூடி ஒற்றுமைபூண்ட கணவன் மனைவியாகிய இருவர் குடும்ப வாழ்க்கையின் உயர்தரத்தைத் துலக்கும் வன்மைத்தாகலின், உலகம் கொண்டாடுதல் கண்டு பல பத்திரிகைக்காரரும் தமது பத்திரிகைகளிலே அனைய சித்திரப் படங்களை வெளியிடுவது வழக்கமாகிறது. இரண்டாவது, பி. ஏ. (B. A.) பட்டதாரியான மனைவி, ஆங்கிலம் பயிலாத தாய்மொழிப் புலமைக் கணவனை, உண்ணல், உடுத்தல், இருத்தல், நுகர்தல் முதல் எதிலும் அவனுடன் சம உரிமை பாராட்டிப் பார்த்தும் தான் பயின்றுள்ள ஆங்கில நாகரிக முறையிலே பயிற்றுவித்தல் இயலாமை கண்டு, தனக்கு உண்டி உடை முதலியன எடுத்துத்

தரும் பணிவிடைகளிலே அவனை அமர்த்தி வேலை வாங்கும் நிலையையும்; எம்.ஏ. (M.A.) பட்டதாரிகளான இல்லக் கிழவனும் கிழத்தியும் ஒருவர்க்கொருவர் சிற்றுண்டி வழங்கலுங் கூடத் தமது கல்விச் சமத்துவத்திற்கு இழிவு தருமெனத் தீர்மானித்துப் பசி தாகங்களால் சோர்ந்து கிடத்தலைக் கண்டு உலகம் பழிக்கும் நிலையையும் விளக்கிக் காட்டும் சித்திரப் படங்களுடன் விளம்பரப்படுத்திக் காட்டின், பொது மக்களுக்கு முதலாவது விளம்பர முறையைக்காட்டிலும் இம்முறை ஆர்வம் விளைவிப்பதோடு நற்குண நற்செய்கைகளுடைய கணவனும் கல்வி மிக்க மனைவியும் அன்பு பாராட்டிப் பணிந்து நடக்கவேண்டிய முறையையும், பத்திரிகைகளுக்குப் பொது மக்கள் பேராதரவையும் பெரும்பொருள் வரவையும் மிகுதியாக வாய்ப்பிக்கும் என்பது எனது கருத்து.

மூன்றாவது, இந்தியத் தாய் உருவப் படமும் அதன் முன்னிலையில் தேசியத் தலைவர் பலர் உருவப் படங்களும் அமைத்து, அத்தலைவர் அந்நாட்டுத் தெய்வத்திற்குச் சாற்றி அதனை வணங்குவதாகச் செய்யும் வகையில், 'எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்,' என்ற தலைப்பின் கீழ் வரும், 'இந்தியர் வீர சுதந்திரம் வாழ்க! பர தந்திர தாகம் நிரந்தரம் வீழ்க! பாரதத் தாயடி பற்றுடன் சூழ்க! சந்ததம் தேசீய சாகரம் மூழ்க!' என்னும் ஒரு சில குறுகிய வாக்கியங்களிலே தேசியத் தொண்டினையோ, கொள்கையையோ தெள்ளிதின் விளக்கும் திறனுர் காட்சியாம். நான்காவது, குறிப்பிட்ட சில பெரியோர்களில் இந்திய தேசீயப் பொதுக் கடமைகளிலே நிலை பெற்ற காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, ஸ்ரீமதி சரோஜினி தேவியார் முதலான ஆண் பெண் போலி உருவங்கள் இந்திய தேசீய சிகாமணிகள் என்று தேச மக்களால் வாழ்த்தி வணங்கப்படுவதாகவும், தேசத்

தொண்டிலே நிலை கெட்டவர் கேலி உருவங்கள் (Caricatures) வைக்கோல் உருவங்களிலே கொளுத்தப்படுவதாகவும், ஓவியர் தீட்டிய படங்கள் அமைத்து அந்நிலைகளை மிளிர்வித்தலால் தேசத் தொண்டில் வல்லோரை உலகத்தவர் மதிக்கும் மதிப்பையும், தேசத் தொண்டில் பொல்லாங்கிழைக்கும் பொல்லாரை அவமதிப்பதையும் பல்லோரும் கண்டுகொள்வர். போலித் தேசீய ஊழியர் மெல்ல மெல்ல மறைவர். உண்மைத் தொண்டர் ஊக்கமுறுவர். இந்நால் வகை வேடிக்கை விநய விளம்பர உருவப் படங்களின்கீழ், அதனதன் அடியில் அவ்வப்படத்தின் கருத்தை விளக்கத் தக்க கட்டுரைகளைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தால், பத்திரிகை படிப்போர் பயனடைவர். பத்திரிகைத் தொழிலாளர் பணமடைவர். இந்நால்வகை வேடிக்கை விநய விளம்பர முறைகள் பல்கலையாளரும் சில்கலையாளரும் இல்லற வாழ்க்கையையும் தேசீய வாழ்க்கையையும் எளிதில் உணர்ந்துகொள்ளும்படி துணை செய்யும். சிறிது கல்வியும் அறிவும் உடைய மக்களுக்குப் பெரிய பெரிய குடும்ப வாழ்க்கை முறைகளையும் தேசீய சேவைத் துறைகளையும் நாகரிகமாகக் காட்டியுதவும் வழி வகைகளாக இவ்வேடிக்கை விநய விளம்பரங்கள் பயன்படுதல் போல ஏனை விநய விளம்பரங்கள் அவ்வளவு பயன்படா.

8. விளம்பரச் சீர்திருத்தம்

கதராடை பரப்பல், மதுவிலக்கல், ஊர் வழக்கை ஊரிலே தீர்த்தல், கிராமச் சீர்திருத்தம் முதலிய ஆக்க நெறிகளிலன்றி, ஒருவரைப் பழி தூற்றல், அரசியல் முரண் விளைத்தல் முதலிய அழிவு நெறிகளிலே வேடிக்கை விளம்பர முதலிய எவ்வித விளம்பர முறைகளும் செலுத்தப்படல் ஒரு நாட்டின் நாகரிகத்திற்கும் பத்திரிகைத் தொழிலுக்கும் ஊறு தேடுவதாம். ஆகலின், இந்திய பத்திரிகைத் தொழிலாளரும்

விளம்பரதாரரும் இவ்வகையில் விழிப்புடன் பணி புரிவார்களாக. விளம்பரக் கலையினர் இம்முறையில் மட்டுக்குட்பட்டு ஒழுகுதல் வற்புறுத்தப்படுகிறது. இந்நடுவு நிலைமை அடைவதற்கு அன்னார் தன்னலமின்மை, அன்புடைமை, ஆய்வறிவுடைமை என்னும் இம்மூன்றனையும் கருவிகளாகக் கொள்ளக்கடவர். வேடிக்கை விளம்பர முறைகளைச் சிறு பிள்ளைத்தனமாக ஆக்கப்படாது. மக்கட் கூட்டத்திற்குப் பொதுவான அரசியல் சீர்திருத்தம், சமூக விளக்கம், ஒவ்வாப் பழக்க வழக்கங்களைக் கடிதல், புதியனவற்றின் நல்லன கோடல், உலகியலறிவு ஊட்டல் முதலிய பல்வகைப் படிப்பினையூட்டும் தகுதியில் வேடிக்கை விளம்பர முறைகள் அமைக்கப்படுதலே பத்திரிகை விளம்பரத்திற்கு அழகாம்.

விளம்பரங்களில் சீர்திருத்தத்திற்கு உரியவை இன்னுமிரண்டுள. அவை, அளவு கடந்த பெருமிதமும், துணிந்துரைக்கும் முழுப் பொய்யுமாம். நவீன உலகில் விளம்பரத்தின் சாதக பாதகங்களைப்பற்றி அடிக்கடி விவாதிக்கப்பட்டிருக்கிறது. 1931-ஆம் ஆண்டில் இப்பொருள்பற்றி ஆராயப்பட்ட ஒன்று, "யூனிட்டி" பத்திரிகையின் தலையங்கக் குறிப்பாம். அது நவீன உலகில் விளம்பர முறை என்னும் தலைப்பினை உடையது. ("Advertising in the Modern World", See "The Modern Review for April 1931, page 474.) அவ்வாங்கிலத்தின் கருத்துப்படத் தமிழ் மொழியிலே பின் வருமாறு தருவேனுக:

"நவீனம் என்று சொல்லப்படாநின்ற இந்த நமது நாகரிகத்திலே விளம்பரம் செய்வதைக்காட்டிலும் மிகுதியும் விலக்கத் தக்க ஒன்று இருக்குமாயின், அதனைப்பற்றி அறிய ஆவலுடையோம். உலக நிகழ்ச்சிகளைப் பற்றி அறியும் பொருட்டு நமது பத்திரிகையை எடுத்துப் பார்ப்போமானால்

மோட்டார்கார் என்னும் தமியங்கி வண்டிகள் முதலியன, பற்பொடி முதலியன, சட்டைகள் முதலியன, தொப்பிகள் முதலியன, தட்டுமுட்டுச் சாமான்கள், இதர துணிமணிகள் ஆகிய இவற்றின் அநுகூலங்களைப் பற்றிய பெருத்த அறிக்கைகளில் இங்குமங்கும் இடைச் செருகலான செய்தி வகைகளோடு கூடிய ஒரு சில பத்திகளையுடைய ஏராளமான விளம்பரங்கள் நிரம்பிய பெருத்த பக்கங்களால் நமது மூளைக்குப் பாரமேற்றப்பெறுகிறோம். மிகவும் வெற்றிகரமாக நடந்துவரும் நம் பத்திரிகைகளில் ஏதேனும் ஒன்றிலே விளம்பரப் பத்திகளுக்கும் செய்திப் பத்திகளுக்கும் எவ்வளவு இடம் கிடைத்திருக்கிறது என்பதைப்பற்றி எவரேனும் எப்பொழுதேனும் கவனித்தது உண்டா? அடுத்தபடியாகப் பார்த்தால்; அசாதாரணமான உயரிய நிகழ்ச்சிக் குறிப்புக்களுக்குச் சரி நடுவிலே நமக்கு வேண்டாதனவான மோட்டார் வண்டிகள் என்னும் தமியங்கிகளுக்கு வேண்டிய சாமான்கள், மருந்துகள் முதலியவைகள், இன்னும் வேறொருவரால் செய்யக்கூடாத இதர சாமான்கள் ஆகிய இவைகளைப் பற்றிப் பிரசித்தப்படுத்துவோரின் ஈட்டேற்றுவன போன்ற சத்தங்களால் நமது செவிகள் முழுக்காட்டப்படக் காண்கிறோம். ஒரு சொற்பொழிவுக்கோ, ஒரு பாட்டுக்கச்சேரிக்கோ அல்லது ஒரு நாடகத்திற்கோ போயிருப்பதாக எண்ணிக்கொள்வோமானால், அக்காலப் போக்கின் முதலையும், இடையையும், கடையையும் எவனாவது ஒரு மருத்துவன் தனது மருந்துச் சரக்குக்களின் மேலான பயன்களைப்பற்றி உற்சாகத்துடன் விளம்பரப்படுத்துவதில் பயன்படுத்தக் காண்கிறோம். இவற்றால் வெறுப்படைந்தோராகிப் பத்திரிகையையும் ஒலிபரப்புங் கருவியையும் கீழே வைத்து விடுகிறோம். அவற்றை விட்டு விலகித் திறந்த வெளியிடத்தை நாடுகிறோம். நாடியும் என்ன? ஒவ்வொரு சிறந்த நிலனும்,

ஒவ்வொரு தாவரச் சோலையும், ஒவ்வொரு மலையுச்சியும், சந்திப் பாதைகளும், பெரிய பெரிய விளம்பரப் பலகைகளிலே குட்ரிச்டயர்கள் முதலிய (மோட்டார்) தமியங்கிச் சாமான்களைக் குறித்த விவரங்களையும், உயர்தரச் சிகரெட்டுவாங்கும்படி தூண்டுதலையும், மிக அண்மையிலுள்ள சாப்பாட்டு விடுதிக்கு வழி காட்டும், அல்லது வண்டிகள் நிற்கும் இடத்தைப் பற்றித் தெரிவிக்கும் ஆரவாரங்களையுந்தான் உதவுகின்றன. போதாக்குறைக்கு விளம்பரதாரர் பேசும் இயங்குபடக்காட்சிகளைப் (Talkies) பயன்படுத்தி வருகின்றனர். இனிமேல் நாடகம், இயக்கவிளக்கப் படக்காட்சி (சினிமா) முதலிய ஒவ்வொருபகுதியும் சோப்புமுதலியசாமான்கள்விற்கிறஏதாவது ஒரு வாசனைத் திரவியசங்கத்தார் அல்லது வேறு பலசாமான்கள் விற்கும் கம்பெனியார் இவர் பொருட்டு உத்தரவாதம் உடையதாக வேண்டி இருக்கிறது! துன்ப மயமாகிய இந்தத் தொல்லையைஎதிர்த்தொழிப்பதற்கு ஒரேஒரு தக்கவழியுளது. அது சேதம் உண்டுபண்ணக்கூடிய விளம்பரப் பொருள் எதனையும் விலைக்கு வாங்காமல் இருப்பதேயாம். இவ்வழி எப்போதும் சாத்தியம் ஆனதன்று. இந்நிபந்தனையின்படி நம்முள் எவரேனும் ஒரு மோட்டார்கார் வாங்குவதும், எதனை வாங்குவது என்னும் பிரமிப்பில் விட்டுவிடும். ஆனால், முன்பின் கேள்விப்பட்டிராத ஒரு பற்பொடியைத் தேடிப் பார்த்து வாங்குவதில் பேருழைப்பு எடுத்துக்கொள்ளுகிறோம். என்றும் கண்டிராத மின்சார அடையாளங்களோடு கூடிய பளபளப்பான மிதியடிகளை விலை கொடுத்து வாங்குகிறோம். மிக்க நவீனமென்று ஆர்ப்பரித்து எடுத்துரைக்கப்பட்ட தொப்பிகளையும், கழுத்துப் பட்டைகளையும், உட்சட்டைகளையும், புதுமையுடையன என்பதில் நம்பிக்கை இல்லாமையால், விலைக்கு வாங்க மறுப்பதில் மகிழ்ச்சி

அடைந்து வருகிறோம். அவற்றால் பயனில்லையா? பயனில்லாமலும் இருக்கலாம்.'' இது நிற்க.

இத்தகைய பெரும்பான்மையும் பொய்யான விளம்பரங்களுக்குப் பத்திரிகை ஆசிரியர்கள் பொறுப்பாளிகள் அல்ல; விளம்பரம் செய்யும் வியாபாரிகளே இவற்றின் நலந் தீதுகட்குப் பொறுப்பாளிகள். ஏனை விளம்பரங்களைவிட மருந்து விளம்பரங்கள் நூற்றுக்குத் தொண்ணூறு பங்குக்கு மிகுதியான பொய்யுடையனவாம். இதன் உண்மையை உணர்ந்த அமெரிக்கர் விளம்பரப்படுத்தப்பட்ட மருந்துகளின் தரத்தினை ஆராய்ச்சி செய்து அறிக்கையிடும்படி ஒரு கழகத்தை நியமித்தனர். அக்கழகத்தின் உண்மைத் தொண்டினால் அவ்விளம்பரங்களின் போலித் தன்மையின் மிகுதி வெளிப்படுத்தப்பட்டது. இத்தகைக் கழகமொன்று நமது நாட்டிலே நிறுவப்படின், பெருத்த நன்மை ஏற்படும்.

இந்தியாவில் தற்போது வைத்திய முறை பயின்று அறியாத எத்தனையோ பல மருத்துவரால் மக்கட்கு விளையும் கேட்டிற்கு அளவேயில்லை. கேட்டின் உண்மைக்கு நாட்டின் பழமொழியே சான்று பகரும். அப்பழமொழி, 'ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்,' என்பதாம். இந்தியாவிற் பரவி வரும் போலி வைத்திய முறைகளை (மருந்துகளை) அடக்கும் கழகம் ஒன்றை அரசினர் நிறுவி, அக்கழகத்தாரது அங்கீகாரம் பெற்ற மருந்துகளை மட்டும் விற்பனைக்கு அனுமதிக்கும் ஏற்பாடு செய்வார்களாயின், அவர்களுக்கு எத்தனையோ பலரை வாழ்விக்கும் புண்ணியம் வாய்க்கும்.

பிற நாடுகளைப் போலவே இந்தியாவிலும் பத்திரிகைகளில் மருந்து விளம்பரங்களும் பிற போலி விளம்பரங்களும் வெளி வருதல் மெய்யே. வியாபாரிகள் தங்கள் சரக்கைப்பற்றி உள்ளபடி விளம்பரப்படுத்தும் சீர்திருத்தத்தைத்

தங்களுக்குத் தாங்களே செய்துகொள்ள வேண்டுமேயன்றிப் பிறரால் அது செயற்பாலதன்று. மெய் விளம்பரத்தால் வியாபாரம் பெருகுமேயன்றிப் பொய் விளம்பரத்தால் பெருகுதல் இலது. பொய் விளம்பரத்தின் பயன் காட்டாற்றின் பெருக்கனையது. அது முதலில் பெருத்த ஊதியம் காட்டிச் சிறுகச் சிறுக ஊதியங் குறுக்கி, இறுதியில் முதலுக்கே மோசம் பண்ணிவிடும். ஆகலின், விளம்பரம் செய்வோர் உண்மையை விளம்பரப்படுத்தி, மக்களுக்கும், தங்களுக்கும், பத்திரிகைத் தொழிலுக்கும் ஆக்கம் தேடுவார்களாக. இவ்விளம்பர முறை போலி வாணிகம் போலிக் கல்விப் பயிற்சி இவற்றைக்காட்டினும் ஏனைத் துறைகளில் பெருந்தீங்கு விளைக்கின்றன. மக்களில் ஆணும் பெண்ணும் தங்கள் கல்வியறிவொழுக்கங்களையும், பல துறைத் தேர்ச்சிகளையும், திருமணங்களையும், ஆற்றல்களையும் பற்றி விளம்பரம் செய்யும் முறையை இந்தியர் மேனாட்டினரிடமிருந்து விரும்பிப் பற்றி வருகின்றனர். அது காட்டுத் தீப் போலப் பரவி வருகின்றது. அதனால், மரியாதைகளும் அன்பாதரவுகளும், நம்பிக்கை நாணயங்களும், பிற நடையுடை பாவனைகளும் போலித் தன்மையில் நாளும் விரைந்து விரிந்து வருகின்றன. போலிக் காதலும், போலி மணங்களும் பெருகுகின்றன. இவை தற்கால நாகரிகமாகக் கருதப்படுவதால் பெரிதும் ஆய்ந்தோய்ந்து பார்க்க விருப்பமில்லை. போலும்! ஒரு வேளை, கள்ளக்காதல், கள்ளமணம் இவற்றைப் பற்றிய ஆராய்ச்சியும் அநாகரிகமாகக் கருதப்படும் என்று பலர் அஞ்சுகின்றனர் போலும்! போலி விளம்பரங்களால் போலி நடை முறைகளும், மேனாட்டின் அஃறிணை நாகரிகமும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மக்கள் உடலுயிர் நலன்களைத் தளர்த்தி வருதலின் அத்தகு விளம்பரங்களும் நடை முறைகளும் மிகவும் கண்டிக்கற்

பாலனவாம். இப்போலி விளம்பரத் துறையானது, மக்களின் பொருளை நாகரிகமாகக் கவர்ந்து, சான்ற ஒழுக்கமென்னும் கண்களையே மூடிவிட்டபடியால், இஃது ஒரு பின்னீட்டு முறையென்று ஆன்றோரால் வெறுக்கப்படுவதாம். எனவே, போலி விளம்பரங்கள் சீர்திருத்தத்திற்கு உரிய உண்மை விளம்பரங்களாக மாறுவனவாக.

மற்றும் சில போலி நாகரிக விளம்பரங்களால் மக்களுக்கு மோசமும் நாசமும் ஆங்காங்கு ஏற்படுவதாக அறிகிறோம் அல்லவா? மக்கள் எந்த விளம்பரத்தையும் கண்ட உடனே நம்பி மோச நாசங்கள் அடையா வண்ணம் தங்களறிவைப் பொறுமையுடனே விளம்பர நம்பிக்கையில் செலுத்தல் வேண்டும். "நாகரிக மோசம்" என்னும் தலைக் குறியுடனே "நவசக்தி" 30-10-1929, பக்கம் 8ல் வெளி வந்துள்ள சிறு கட்டுரை, விளம்பர மோசத்தை எடுத்துரைக்கின்றது. அது வருமாறு:

"நாகரிகம் முதிர முதிர மோசங்களும் களவுகளும் அதிகப்படுகின்றனவென்று கூறவேண்டி இருக்கிறது. வட்டி இன்றியே கடன் கொடுப்பதாகவும், வேறு பல மோசக் கருத்துக்களுடனும் பத்திரிகைகளில் பலவித விளம்பரங்கள் வெளி வருகின்றன. இத்தகைய ஏமாற்ற விளம்பரங்களைக் கண்டு பொது ஜனங்கள் மோசம் போகக் கூடாதென்றும், இவர்களைத் தண்டிக்கச் சட்டம் இடங் கொடுக்கவில்லையென்றும் பஞ்சாப்பு அரசாங்கத்தார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். இங்ஙனம் சட்டம் இடங் கொடுக்கவில்லையென்று கூறுவது அரசாங்கத்தாரின் அதிகார மிடுக்குக்கு அகௌரவம் விளைப்பதாகவே இருக்கிறது. இதற்காக வேண்டிய அதிகாரங்களை இந்தியா அரசாங்கத்தாரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டுவதே பஞ்சாப்பு அரசாங்கத்துக்கு அழகாகும். ரௌலட் சட்டம் பொதுஜனப் பாதுகாப்புச் சட்டம்

போன்ற சட்டங்களை இயற்றிக்கொள்ள ஆற்றல் படைத்த இந்திய அரசாங்கத்தார், பொது ஜனங்கள் மோசம் போவதைத் தடுக்க ஒரு சட்டம் இயற்றிக் கொடுக்க ஏன் முன் வரக் கூடாது? சென்னையிலும், இது காலை நாகரிகமான பல களவுகள் மோசங்கள் முதலியன நடைபெற்று வருகின்றன. இவைகளைப் போலீஸ் இலாகாவும் அரசாங்கத்தாரும் எவ்வளவு தூரம் கவனித்துக்கொண்டு வருகின்றனரோ, நாம் அறியோம். வாசகர்களும் இத்தகைய நாகரிக மோசக்காரர்கள் வலையில் சிக்கிக்கொள்ளாமலிருக்குமாறு எச்சரிக்கை செய்கிறோம்.''

9. பத்திரிகைகளும் விளம்பரதாரரும்

பத்திரிகைகள் விளம்பரதாரருக்குப் பெரிதும் உரிமை அல்லது இடம் கொடுக்கின்றனவென்று நம்பப்பட்டு வருகிறது. அஃது, ஒருவாறு உண்மையாகுமென்பது எனது நம்பிக்கை. பத்திரிகைகளில் தன்மையினும் நடை முறையினும் தளர்ச்சியுற்றவை பெரும்பான்மையினவாம். ஒவ்வொரு தொழிலிலும் ஒழுக்கக் கேடு இருப்பது போலவே பத்திரிகைத் தொழிலிலும் உளது. நமது நாட்டிலே வெளியிடப்படும் நாள் வெளியீடுகளில் தளர் நடையினவே பெருந் தொகையினவாம். கோழை நெஞ்சுபடைத்த பத்திரிகைகளே விளம்பரதாரருக்கு அஞ்சித் தங்கள் தலையங்கம் பதிக்கும் இடத்தையும், பத்திரிகையின் முகப்பையும் (மேற்புறத்தையும் - Title page) விளம்பரங்களுக்கு விட்டு வருகின்றன. தற்சார்பும் நடுவு நிலைமையும் பூண்டு விளங்கும் உரனுடைய பத்திரிகைகளோ விளம்பரதாரர் செலுத்தும் விளம்பர விகிதமாகிய மயக்க வலையிலும் வீழ்வதில்லை; அன்னவர் வெருட்டுக்கும் அஞ்சுவதில்லை; அவர்களாற் கைவிடப்படினும் கூடத் தளரமாட்டா. மிக்க புகழோங்கும் பத்திரிகைகளிலே வந்து குவிந்துகொண்டிருக்கும் 'எத்தனையோ பல

விளம்பரங்களால், விளம்பர வருமானத்தால் (By advertisement Revenue), சில விளம்பரதாரர்களின் தனிப்பட்ட செல்வாக்கு, பத்திரிகை ஆசிரியர்களிடமோ, பத்திரிகை முதலாளிகளிடமோ அவ்வளவாகச் செல்வதில்லையென்பதை விளம்பரதாரர்கள் நன்கறிந்துகொண்டார்கள். அச்சில விளம்பரதாரர்களின் வெருட்டுக்களைப் புகழில் நிலை பெற்ற உயர்தரப் பத்திரிகைகள் ஒரு சிறிதும் பொருட்படுத்துவதில்லை. இத்தகைய நிகழ்ச்சி "நியூ யார்க்கு ஓர்ல்டு" ("The New York World") என்னும் பத்திரிகையினுல் நடைபெற்றுள்ளதாகக் கேள்வி. நியூ யார்க்கு நகரிலுள்ள பல சரக்கு மளிகை இலாகாவின் மேற்பார்வையாளர் அம்மளிகையின் பெரிய விபத்தை வெளியிடக்கூடாதென்று கேட்டுக்கொண்டபோது அப்பத்திரிகை தனது விடையை முதற் பக்கத்தின் உச்சியிலே நன்கெடுத்துக் காட்டக்கூடிய தலைக் குறியிட்டு, அவ்விபத்துச் செய்தியை வெளியிடும் முகத்தாற் காட்டியதாம்.

நமது நாட்டுப் பத்திரிகைகளில், பெரிய பெரிய நகர்களிலுள்ள முதல்தரத் தினசரிகள் இவ்விளம்பர வகையிலே பெரிதும் சீர்திருந்தியுளவென்று தடையின்றிக் கூறலாம். இவ்வகையிலே அரைகுறையாகத் திருந்தி வருவனவாக ஒரு சிறிது மட்டும் நம்பப்படும் சிறிய நகர்ப் பத்திரிகைகளும் ஒரு சில உள. பத்திரிகைகளில் பழைய படியே பல இழிதகை மருந்து வகைகளின் விளம்பரங்கள் இடம் பெற்று வருகின்றன. இங்ஙனம் இடம் பெற்று வருதல் ஒரு வேளை அவ்வப்பகுதிகளிலுள்ள பல இளமதியாளரைச் சோதிக்கும் பொருட்டுப் போலும்! பணப் பெருக்கு ஒன்றையே நோக்கமாகக் கொண்டு மோசம் செய்யக்கூடிய கொழுத்த விளம்பரங்களைத் தடுக்கத் தக்க சட்டங்களே பத்திரிகைத் தொழிலாளர் நன்னெறியிலே

உயர்வதற்கு மேலும்மேலும் உதவியாம் என்க. இவ்வாற்ருல் உயர்ந்த பத்திரிகாசிரியரும் உளர் என்ப. நெறி அல்லா நெறியிலே செய்த விளம்பரங்களினுலோ, விளம்பர வாசகங்களின் முரணுலோ ஏற்பட்ட கட்ட நட்டங்களைத் தமது பத்திரிகைகளில் வெளியிடாவிடினும், அக்காரணங்கள் பற்றித் தமக்குப் பகைகளாக நீதி மன்றங்களிலே அடுத் தடுத்தெழுந்த பற்பல விவகார அல்லல்களும் பத்திரிகாசிரியர்கள் தங்கள் விளம்பரப் பகுதிகளைத் தூய்மைப்படுத்தற்குத் துணை செய்துள. பின்னும், காலச் சக்கரத்திற் சிக்கிச் சுழல்பட்டும், உழல்பட்டும், ஒறுக்குண்டும், நொறுக்குண்டும் வந்துகொண்டிருப்பன, அரசியல் விளம்பரங்களே (Political Advertisements). இவ்வுண்மைகளைப் பத்திரிகைத் தொழிலாளரும் விளம்பரதாரரும் ஊடாடிப் பார்த்துத் தமக்கு வரையறுக்கப்பட்டுள்ள வரம்பிலே, எல்லாம் வல்ல கடவுளுடைய திருவடித் துணை தோய்ந்த உண்மையுடன் நின்று கடனுற்றுவார்களாக.

3. பத்திரிகைச் சிறப்பு

(க) பத்திரிகையின் இன்றியமையாச் சிறப்பு

இதுவரையிலே பத்திரிகை வரலாறு ஒருவாறு சொல்லப் பெற்றது. இனி, பத்திரிகைச் சிறப்புக் கூறப் பெறுகின்றது. இந்தியாவிலே பத்திரிகை பிறப்பதற்கு முன்னே கடைகள், சந்தைக் கடைகள், சிற்றுண்டிச் சாலைகள், ஊர்ச் சாவடிகள், கல்விக் கழகங்கள், அற நிலையங்கள், 'மகாநாடு!' என்னும் பேருரைக் கூட்டம் கூடுமிடங்கள் ஆகிய இவ்விடங்களே தான் செய்திகளையும் பல பொருண்மொழிகளையும் பலரும் அறிவதற்கும் பேசுவதற்கும் பரப்புவதற்கும் ஏற்ற முக்கிய நிலையங்களாய் நிலவின. இவற்றுட் பின் மூன்றிடங்களிலே பல்வேறு வகையான பொருண்மொழிகளும் நன்கு ஆராய்ந்து பேசப்பட்டு வந்தன. மேனாடுகளிலும் பழங்காலத்தில் சிற்றுண்டி விடுதிகள் முதலியவற்றிலே செய்திகள் திரண்டு பரவினதாகத் தெரிகிறது. இருக்குமிடத்தில் கிடைத்தவற்றைக் கொண்டு அமைதியுடன் வாழ்ந்து வந்த அக்கால நிலைக்கு வெறும் வாய் வார்த்தையும் கையெழுத்தும் போதியவாய் இருந்தன. ஆனால், போக்குவரவுக்குரிய வழி வகைகள் பெருக்கமுற்றுத் தபால், தந்தித் தபால், ஆகாயத் தந்தி, நீரினும் நிலத்தினும் வானினும் இயங்கும் பொறிகள் இவை மல்கி, முன்னேற்றத் துறைகள் பலவற்றினும் பல தேசங்களும் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுத் தேசீயக் கொள்கைகளையும் உலக அமைதிக்கொத்த முன்னேற்றத்தையும் மேற்குலகமும் கிழக்குலகமும் விரும்பி முயன்று வரும் இக்காலத்திலோ, பத்திரிகை ஒன்றுதான், மிகச் சுருங்கிய செலவிலே, உலகத்திலுள்ள எப்பகுதியினரையும் எச்செய்திகளையும் எவ்வாணிகச் சரக்குக்களையும் மக்களுக்கு அறிமுகப்படுத்துகின்றது. ஆக

லின், உலக நாகரிகத்திலே கல்வி நலத்தைப்போன்றே பத்திரிகையின் இன்றியமையாமையும் நாடோறும் வளர்ந்து வருகின்றது. இஃதியல்பே.

(b) பத்திரிகையின் போதுச் சிறப்பு

இவ்வின்றியமையாமையினுல், பத்திரிகை வெளியீட்டுக்கென்று பல வகைச் செய்திகள் பற்பல வழி வகைகளால் திரட்டி முறைப்படுத்தமைத்துப் பரப்பப்பட்டு வருகின்றன. சேய்மையிலுள்ள செய்திகள் அண்மையிலும், அண்மையிலுள்ள செய்திகள் சேய்மையிலும் எட்டி வருவதால், வெளிநாட்டுப் பத்திரிகைகளால் உள் நாட்டுக்கும் உள் நாட்டுப் பத்திரிகைகளால் வெளிநாட்டுக்கும் விளையும் நன்மைகள் பலப்பல. கீழ் நாட்டால், முக்கியமாக இந்தியாவால் மேனுட்டுக்கு ஆன்ம ஒளியும், மேனுட்டால் கீழ் நாட்டுக்கு இயந்திர நாகரிகமும் பரப்புவதிலே இவ்விரு நாட்டுப் பத்திரிகைகளும் மிக்க பங்கெடுத்து வருகின்றனவன்றே? இப்பெருஞ் சிறப்பினுல், உலக நாகரிகப் போட்டியிலே பத்திரிகைத் தொழில் வளனுற்று வருகின்றது. எனவே, நாகரிகம் படைத்த தேசங்களிலே பத்திரிகைகளின் தொகைகளும் வகைகளும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன. ஒவ்வொரு கொள்கைக்கும், ஒவ்வொரு நலனுக்கும், ஒவ்வொரு தொழிலுக்கும், ஒவ்வொரு மரபுக்கும், ஒவ்வொரு மக்கட் கூட்டத்துக்கும், ஒவ்வொரு மதத்துக்கும், ஒவ்வொரு மொழிக்கும், ஒவ்வொரு நாட்டுக்கும், பற்பல கலைகளுக்கும் தனித்தனியான பத்திரிகைகளும் உள்ளன. அவை திங்கள் வெளியீடுகளாகவும், வார வெளியீடுகளாகவும், நாள் வெளியீடுகளாகவும் போந்துலவுகின்றன. பல தேச மக்கட் கூட்டங்களும் தத்தம் தேச நிலைமையையும், அரசியல் நிலைமையையும், வாக்குரிமை நிலைமையையும் அறிந்து, காலத்துக் கேற்றபடி அவற்றின் நடை முறைகளைச் செப்பஞ் செய்து

நவ நாகரிக வாழ்வு வாழ்வதற்கு வெளியீடுகளும் வழிகாட்டி களாய் உதவுகின்றன. சுருக்கியுரைக்கின், சிறப்பு வகை யிலே அவ்வத்தேசங்களிலே கோனும் குடியும் ஒருமை நிலை யிலே வாழ்வதற்கும், பொதுவகையிலே இம்மண்ணுலகமே நட்புரிமையிற் பிணிப்புண்டு அமைதியுறுவதற்கும் பத்திரிகை களே சிறந்த கருவிகளாம்.

(c) பத்திரிகைப் பயன் சிறப்பு

நூற்கல்வியின் பொருள் நுட்பங்களை வாழ்க்கை முறை யிலே ஊட்டிக் கல்விப்பயனை நுகர்விக்கும் அருந்துணை பத் திரிகையே. சிறிது கல்வியுடையாரையும், பத்திரிகை, நாள டைவிலே பல்பொருள் அறிஞராக்கும்; ஆராய்ச்சி முறையு டன் கூடிய பன்னூலறிவையும், பல தேசப் போக்கினையும், பல் கூட்ட முடிபுகளையும் மக்கட்கு வகுத்துக் காட்டும். பத் திரிகைகள் வெறும் புத்தகப் பூச்சிகளாய் இருக்கும் கல்விச் செல்வரையும் கேள்விச் செல்வரையும் உலகியல் அறிவுச் செல்வராக்கி அவருக்கு அவ்வப்போது உலகத்தோடு ஒட்ட ஒழுகும் உலகியல் ஒழுக்கச் செல்வராகவும் உதவும். பேதைக் கும் நல்லறிவு புகட்டும் வன்மை பத்திரிகைகளுக்கே உண்டு. ஒரு தேசத்தை ஆக்கவும் அழிக்கவும் வல்லன பத்திரிகை களே. எனவே, பத்திரிகை என்பது நன்னூலாய பன்னூற் பொருள்களையும் அலகிலவாய உலகியற் செய்திகளையும் செம்பாகமாக்கித் தொகுத்தும் வகுத்தும் குறித்தும் மக் கட் கூட்டத்திற்கு உயரிய அறிவும் ஆற்றலும் நடை நெறி முறைகளும் அவரவர் வீட்டுவாயிலிலே ஈட்டித் தருவதோர் பெரும்பயனுடைய செல்வமென்க. பத்திரிகையின் பயன் சிறப்பு, சொல்லிலடங்காது. இத்தகைப் பெரும்பயனுடைய பத்திரிகையின் அருமை பெருமைகளை மேனாட்டினரைப் போல உள்ளபடியுணர்ந்து, ஆணும் பெண்ணும், சிறுவரும் சிறுமியரும், எந்நிலையினரும், எத்தகையினரும் போற்றிப்

படித்து வந்தால், நமது பரதப் பெருநாடு பண்டைய மேனிலையைக் கூடிய விரைவிலே அடைதற்கு யாதொரு ஐயமுமில்லை.

(d) பத்திரிகைச் சிறப்பு விளக்கம்

ஓர் உயர்ந்த பத்திரிகை, காலந்தோறும், தேசந்தோறும் செய்திகளை நெறி தவறாமல் மக்கட்கு உணவுபோல ஊட்டி வளர்த்தலால், தாய் போன்றது; பல்கலைப்பொருளுடனே பத்திரிகைத் தொழில் கையொப்பம் (சந்தா),விளம்பரம்இன்னும் நல்லநெறி முறைகளிலே செல்வப் பொருளையும் தேடிப் பரிவுடனே தருதலால், தந்தை போன்றது; நெடுந்தொலைவிலுள்ள செய்திகளையும் கண்ணெதிரில் நடப்பனபோல எடுத்துக்காட்டுதலால் சித்துமூர்த்திபோன்றது; அறியாமையகற்றி அறிவை விளக்கலால், சற்குருபரன் போன்றது; கல்வி, கேள்வி, உலகியல் நடை, அறிவியல் நடை இவற்றை நிலைப்படுத்தி மக்களுக்கு அஞ்சு (ஐந்து) பயந் தீர்த்துச் செவ்விய காவலைத் தந்து முறை தவறாது ஒழுகி வருதலால், செங்கோல் அரசன் போன்றது; பல்வேறு தொழில்களிலும் நெடுநேரம் ஈடுபடுதலாலும், மக்கட்குற்ற களைப்பைத் தீர்த்து உற்சாகம் ஊட்டலாலும் சஞ்சீவிபோன்றது;காட்சியளவிலே மகிழ்வூட்டலால், திங்களைப் போன்றது; ஐயந்திரிபுகளாய இருளை ஓட்டலால், ஞாயிற்றைப் போன்றது; காலந் தவறாது தோன்றலால், இரு சுடர்களையும் போன்றது; மேலோங்கி எழுதலால், எரியினைப் போன்றது; இன்பம் பயத்தலால், காதலைப்போன்றது; துன்பந் துடைத்தலால், நண்பன் போன்றது ; இருமை நலன்களாகிய தானிய மணிகளைப் பெருக்கி வருதலால், குடியானவன் போன்றது; அரசு, அமைச்சு, குடிகள் ஆகிய நாடிகள் மூன்றையும் நிலைபெயராமல் வைத்தலால், மருத்துவன் போன்றது; மல அழுக்கைப் போக்கி உள்ளமாகிய ஆடையைத் தூய்மை

செய்தலால், வண்ணான் போன்றது; கூடா வொழுக்கம் என்னும் மயிரைக் களைதலால், நாவிதன் போன்றது; ஐம்புலக் கள்வர்களை ஓட்டுதலால், காவற்காரன் போன்றது; கொடு நெறிகளாகிய கல்லும் முள்ளும் உறுத்தாமல் நன்னெறிகளாகிய செருப்பை ஈவதால், சக்கிலியன் போன்றது; எளிய சந்தாவென்னும் உணவைக்கொண்டு உயரிய செய்தியெனும் நன்றியைக் காட்டலால், நாய் போன்றது; எங்கும் பரந்து திரிதலால், பேய் போன்றது; கொள்ளுந்தோறும் கொள்ளுந்தோறும் உள்ளுந்தோறும் பேரின்பம் பெய்தலால், கடவுள் போன்றது. படிக்குந்தோறும் படிக்குந்தோறும் அறிவூறிப் பொங்குதலால், ஊற்றுப் போன்றது; செய்திப் பசி தாகங்களுக்கு உம்பர் தேனுப் போன்றது; பல திறப்பட்ட செய்திகளின் வறுமைக்குச் சிந்தாமணி போன்றது; அருந்தல் பொருந்தல் விதி விலக்குக்களைத் திட்டப்படுத்தலால், சுகாதார மந்திரி போன்றது; சுகத்திலும் துக்கத்திலும் ஒன்றுபோலக் கலந்து வருதலால், வாழ்க்கைத் துணைவி போன்றது.

பேரரசனது உறவு பெற்றவன் சிற்றரசர் குடிப்படைகள் இவர்களின் உறவை எளிதிற் பெறுதல் போலவே, பத்திரிகைப் பயிற்சி ஒன்று மட்டும் பெற்றவன் மற்றெல்லாக் கலை அறிவும் எளிதிலே பெற்றவனுவன். ஏனையுறவினர் அனைவராலும் கைவிடப்பட்ட ஒருவன் தனது இல்லக் கிழத்தியுடன் மட்டும் அற நெறி திறம்பாமல் கூடி வாழ்வானாயின், இம்மையின்பம் துய்த்து, மறுமையின்பத்திற்கும் தகுதி உடையவன் ஆவதுபோல, மற்றைக் கல்வித் துணை கூடா திருப்பினும் நிகரற்றுத் திகழும் ஒரு பத்திரிகையின் அருந் துணை வாய்ப்பின், இருமையின்பங்களுக்கும் அஃது ஒன்றே துணை செய்யும். சாணைக் கல்லிற்பட்ட முழு மணியைப் போலப் பத்திரிகையறிவுடையவர் மற்றெல்லா அறிவு விளக்கத்திலும் ஏற்றமுறுவர். உயர்தரப் பத்திரிகை, திருப்பாற்

கடலைப்போலத் தூய்மையும் பெருமிதமும் இனிமையும் உடையதாயும், விலையறியாப் பொருள்கள் உடையதாயும், கைலையை ஒப்ப மிக்க உயர்நிலையுடையதாயும், குருபர தத்துவம் நிகர்ப்பத் தன்னை விழைந்தோரைச் சுத்த சமரச சன்மார்க்கம் என்னும் நன்னிலை அடைவிப்பதாயும் மிளிர்கின்றது.

உலக நிகழ்ச்சிகளைப் படித்தறிதல் என்னும் இயற்கையான தணிக்க முடியாத விடாயைப் பத்திரிகையே தணிக்கின்றது. பத்திரிகை எங்கும் உலாவி, எல்லாருடனும் தோழமை பூண்டு, காலத்திற்கேற்ற கோலம் பூணும் வகையிலே பழையன கழித்தும் புதியன புகுத்தியும் இருபான் மக்களுக்கும் என்ஞான்றும் புத்துயிரளித்து வருகின்றது. நாகரிகம் வளர வளரப் பத்திரிகை வெளியீடும், அரசியல் மக்கட் கூட்டம் சமயம் நுண்ணூல் முதலிய பல்கலைகள் ஆகிய துறைகளிலே சிறப்புடன் புகுந்து பொலிகின்றது அல்லவா? உண்மை நிலை, விரிந்த கொள்கை, உரிமைப் பாங்கு இவற்றினுக்குப் பத்திரிகையே சான்ற கருவி. நவநவமான நிகழ்ச்சிகளும், நுண்ணூலறிவின் வளத்தால் கண்டு பிடிக்கப்பட்ட அறிவை வளர்க்கும் பலப்பல புதுமைகளும் பத்திரிகை வாயிலாகவே வெளி வருவதால், நகர வாசிகளாயினும், கிராம வாசிகளாயினும், தகைசால் அறிஞராயினும், திண்ணைப் பள்ளி மாணவராயினும், கலாசாலை மாணவராயினும் பத்திரிகைப் படிப்பில் நாளும் முயலாதிருக்க இயல்வதில்லையே! பத்திரிகை, வாழ்க்கையின் ஆறுதலுக்கும், உற்சாகத்திற்கும், நாகரிகத்திற்கும் வளனுஞ் செழிப்புந் தருகின்றது. ஆகையினால், பத்திரிகைகள் இல்லையானால், தற்கால உலகம் மிக எளிய வாழ்க்கையினதே என்க. ஆகவே, நாகரிகமான சிற்றூர் வாழ்க்கைக்கும் பேரூர் நகர வாழ்க்கைக்கும் பத்திரிகைகள் இன்றி அமையாச் சிறப்பினவே.

இக்கால நாகரிக வளர்ச்சிகளிலே புதுமை புகுத்தும் பத்திரிகைத் தொழில் வளர்ந்து மதிப்புற்றதுபோல வேறெத் தொழிலும் அவ்வளவு மதிப்புற்றதில்லை. பத்திரிகைத் தொழில் மற்றெத்தொழிலையும்விட வேகத்தோடு கூடிய ஏராளமான பரப்பை அடைந்துவிட்டது. இந்தியாவிலும் வேறு நாடுகளிலும் பத்திரிகைகள் இவ்வாறு திடீரென்று பெருக்கமுற்றது பெருத்த வியப்பைத் தருகின்றது. படித்தறியக் கூடிய ஆண் பெண்களுக்கு இக்காலத்தில் பத்திரிகைகள்தான் தினசரி வாழ்க்கையிலே பெரிதும் உதவுகின்றன. ஓர் உயர்தரப் பத்திரிகை, வாழ்க்கையின் எந்நிலையைப்பற்றியும் குறிப்பிடாமல் செல்வதில்லையாகையால், அதை மக்களின் உயரிய வாழ்க்கைக்கு ஒரு சிறந்த அபிதான விளக்கம் (Encyclopaedia) என்னலாம். அஃது, ஐம்பொறி உணர்ச்சிக்குச் செவ்விதான உற்சாகம் ஊட்டுதல் முதல் தெள்ளிய உலகியல் அறிவையும் கடவுளின் அருளியல் அறிவையும் விளக்குதல் வரை, வாழ்க்கையின் அடி நடு முடி என்னும் முந்நிலைகளினும் ஊடுருவிப் பாய்ந்து, பல திறப்பட்ட பக்குவர்க்கும் பயன் விளைப்பதில் அணுவும் பிளைப்பதில்லை. ஒரு சிறிய கலையறிவு முதல் பெரிய கலையறிவு ஈறாகச் செய்திகளின் வடிவிலே பக்குவஞ் செய்து தருதலால், ஓர் உயர்தர வெளியீட்டில் நாளும் பயில்வோர் பல்கலைக் கழகத்தில் பயில்வோராவர். உலகின் பல பகுதிகளிலுமுள்ள வகைவகையான செய்திகளைத் திரட்டி இருக்குமிடந்தேடி உருக்கமுடன் கொண்டுவந்து உதவும் பத்திரிகையைச் செய்திக் களஞ்சியம் என்னலாம்.

உலகமெங்குமே பத்திரிகை, நிலையிலுயர்ந்து வருகிறது. உயர்குடிப் பிறந்தோரைப் போன்று பத்திரிகையும் தனது தொழிலின் உயர்வையும், சென்ற காலப் பெருமையையும் காத்துவரும் நிலையை உடையது. முன்னேற்றமுற்ற எல்லாத்

தேசங்களிலும் பத்திரிகைக்கு வாய்த்த உயர் நிலை, பொருமைப்படத் தக்கதாய் இருக்கின்றது. இப்பெற்றியினால் பத்திரிகை, அரசினருக்கும் அரசியல் நிர்வாகிகளுக்கும் ஒரு மதிப்புள்ள வழி காட்டியாய் நிலவுகின்றது. நம்பத் தக்க நாணயமுள்ள உயர்வு சால் பத்திரிகைகள் அரசியல் அதிகாரிகளுக்கு எவ்வளவோ தேவையாய் இருக்கின்றன. ஆகவே, அவற்றின் துணைக்கோளில்லாதவர், அரசியல் அதிகாரிகளும் ஆகார் என்க. பத்திரிகை, தனது அமுலைப் படிப்படியாய் நெடுந்தொலைவிலும் செலுத்தி வருதலால், அதன் அதிகாரம் ஆண்டுதோறும் மிகமிகப் பெரிதாக வளர்ந்து வருவதாக அறிவுடைய அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகின்றது. பத்திரிகை மக்கட் கூட்ட நலன்களையும் உரிமைகளையும் காப்பாற்றுதலுடன் நாட்டின் அதிகாரத்தையும் பெருமையையும் அக்கறையுடன் காப்பாற்றக் கடமைப்பட்டுளது. இக்கடப்பாட்டை நிறைவேற்றுதல் பத்திரிகை நடத்தும் பொறுப்பாளர்க்குப் பத்திரிகைகள் ஆற்றும் வாஞ்சையுடன் கூடிய ஆதரவின் திறத்தினைப் பொறுத்ததாய் இருக்கின்றது என்னும் உண்மையைப் பத்திரிகைகளின் முதலாளிகள் பசுமரத்தாணிபோல மனத்திற் பதிக்கக் கடவார்களாக.

(e) பத்திரிகை வன்மைச் சிறப்பு

முற்காலத்திலே நாரத முனிவர் எங்குஞ் சென்று ஆங்காங்கு நிகழும் வியப்புக்குரிய செய்திகளை அறிந்து தெரிவித்து வந்ததாக நாம் நம் நூல்களிலே படித்துள்ளோம். அவரது நிலையிலே பத்திரிகை அமைந்துளது. பத்திரிகை நாரதரைப் போலவே, நாநா பக்கங்களின் நிகழ்ச்சிகளையும் அறிந்து, நல்லன நாட்டித் தீயன ஓட்டி, உலகினுக்கு நலன் பல நாடிப் புரிந்துவரும் திறத்தினது; மக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் பற்றி ஆராய்வது; உலகம் புகழும்

உயர் தொழில்களில் ஒன்றைப் புரிவது; ஆள்வோர்க்கும், ஆளப்படுவோர்க்கும், சீர்திருத்தக்காரர்களுக்கும், நீதிமன்றத்தினருக்கும், வழக்கறிஞருக்கும், நுண்ணூற் புலவருக்கும், இலக்கியப் புலவருக்கும், மருத்துவருக்கும், வணிகருக்கும், அவ்வவர் தம் நடைமுறைக்கேற்ற வரை துறைகளை வகுத்துக் காட்டும் மாண்பினது. பத்திரிகை எந்த வகுப்பிலிருந்தும் தனக்குத் தக்க தொழிலாளரைக் கவர்ந்துகொள்ளும் திருட்டில் வல்லது. தாழ்ந்த நிலையிலுள்ள ஒருவனை; பத்திரிகை, அவனது திறன் கண்டு அரசியலமைச்சன் ஆக்கவும் வல்லது; ஒரு சமூகத்தை ஆக்கவும் அழிக்கவும் வல்லது. பத்திரிகை முடி கவிழ்க்கவும் கவிக்கவும் வல்லது, அதாவது அரசனை ஆண்டியுமாக்கும்; ஆண்டியை அரசனுமாக்கும்; வெஞ்சினத்தால் மூண்டெழுந்த படைவகுப்பு வீரர்களைப் போர்க்களத்தினின்றும் நகர்க்குத் திருப்பி நாட்டினுக்கு அமைதி நாட்டினும் நாட்டும்; பகைவரை இரண வீர பத்திரகாளி கூளிகளுக்குப் பலியாக வீட்டினும் வீட்டும்; தேசத் துரோகிகளை நாட்டை விட்டு ஓட்டினுமோட்டும்; மன்னிக்க முடியாத பெருங்குற்றவாளிகளைத் தூக்கிலே மாட்டினுமாட்டும்; தூக்குத் தண்டனையை நீக்கினும் நீக்கும். பல அரிய பெருமைகள் தோய்ந்து நீடும் பத்திரிகையின் வன்மை அளப்பில! அளப்பில!! ஆனால், ஒரு சில பத்திரிகைகள் கலக நாரதர்களாய் விளங்குகின்றன. அத்தன்மையின், வகுப்புப் பூசல், சமயப்போர், நிற வேற்றுமை, கட்சிப்பிணக்கு முதலியனவாய கேடுகளை விளைத்தலான் அவற்றைப் பொது மக்கள் விலக்கற்பாலர். நச்சுத் தன்மை பரப்பும் எந்த ஒரு தனி வெளியீடும் முற்றிலும் அனாதரவுக்குரியதெனச் சாற்றற்பாற்றே.

மூன்றும் பகுதி முற்றிற்று.

முடிப்புரை

1. பத்திரிகை முப்பால்

தற்காலத்திலே மக்கள் இருமையின்பங்களையும் எளிதிலே உணர்ந்து நுகர்தற்கு ஏனை இலக்கியங்களைக் காட்டினும் பத்திரிகை இலக்கியமே உறு துணையாவது. பத்திரிகை என்பது உயர்தரப் பத்திரிகை என்னுங் கருத்திலே பெரும்பாலும் பேசப்பட்டு வந்துளது. மற்றைப் பொருள்களைப் போலவே பத்திரிகைகளிலும் உயர்வு தாழ்வுகள் உள. பத்திரிகை முப்பால், தலை நிலைப் பத்திரிகை, இடை நிலைப் பத்திரிகை, கடை நிலைப் பத்திரிகை எனப் பகுக்கப்படலாம். தலை நிலையில் வைத்துப் பேசப்படும் பத்திரிகைகள் தத்தம் நாட்டின் கோனுங் குடியும், மரபு சமயம் ஒழுக்கம் இவற்றிலே தேசிய முறைப்படி ஒற்றுமையும் பற்றுமையும் பூண்டும், உலக மக்களெல்லாம் உலக சமுதாய அன்பு முறையிற் கூடியும், இன்பவாழ்க்கை அடைதற்பொருட்டு உண்மையுடன் கூடிய நடுவு நிலைமையிலே உறைத்து நின்று அருங்கடன் ஆற்றி வருவனவாம். இடை நிலையில் வைத்துப் பேசப்படும் பத்திரிகைகள், பொது வகையிலே தத்தம் நாட்டின் முன்னேற்றங் கருதியும், சிறப்பு வகையிலே தத்தம் உயிர்க்கொள்கைகளைப் பெரிதும் வற்புறுத்தியும் தம் நாட்டு மக்கட்கு நற்றொண்டு செய்து வருவனவாம். கடை நிலையில் வைத்துப் பேசப்படும் பத்திரிகைகள், தத்தம் தேச நலத்தையும் உலக நலத்தையும் அவ்வளவாகப் பொருளாக்காமல், தமது தொழில் ஒன்றினையே மிகப்பெரிதும் கருதி உழைத்து, அவ்வுழைப்பால் பெருஞ் செல்வந் திரட்டும் சொந்த நலத்தினவாம்.

இம்முப்பால் நிலைக்கும் அப்பால் நிலையிலே நிற்கும் பத்திரிகைகளும் ஆங்காங்குச் சிற்சில உள. ஆனால், அப்பத்

திரிகைகளோ, உலகம் உண்டென்பதை இன்றென்று குதர்க்கம் அல்லது விதண்டை விளைப்பதும், நற்கொள்கை பிறப்புரிமை இவற்றிலே கோனுங் குடியும் ஒட்டவொட்டாமல் முரணுண்டு தொலைவிலே நிற்பிப்பதும் பொதுவாக மக்களின் வாழ்க்கை நலன்களைக் கூட்டுவதுபோல ஒட்டுவதும் ஆகிய பொல்லாங்குத் தொண்டுகளாற்றித் தம் நாட்டு மக்களுக்குள்ளே கொள்கை வகுப்பு சமயங்களில் பல பிளவுகளையும் பூசல்களையும் பிறப்பித்து வளர்த்து நாட்டைப் பின்னிடும் வகையிலே முன்னேற்றி வரும் போலி நீர்மையின என்க. அத்தகு அவதூத அல்லது நிலை கடந்த பத்திரிகைகளைப் பத்திரிகைப் பதர்களென்று உலகத்தவர் ஒதுக்கித் தள்ளுவாராக. அவ்வாறு செய்தால்தான் அவதூதப் பத்திரிகைகளாகிய களைகள் வேருடன் களைந்தெறியப்பட்டு முற்குறிப்பிட்ட முப்பாற் பத்திரிகைகளாகிய நல்ல பயிர்கள் செழித்து வளர்ந்து மிக்க ஆதாயந் தருவனவாம்.

2. இந்திய சகோதரருக்கு வேண்டுகோள்

பத்திரிகைத் தொழில், தவத் தொழிலுக்கு அடுத்த நிலையினையுடைய உயர்ச்சியுடையது என்பது இங்கு நினைவூட்டப்படுகிறது. பத்திரிகைத் தொழிலும் பத்திரிகாசிரியர்களும் கல்வி செல்வம் உரிமைகளிலே மேம்பட்ட மேனுடுகளில் அரசன் முதல் ஆண்டிவரையுள்ள எல்லோராலும் பலபடியாலும் ஏற்றப்பட்டும் போற்றப்பட்டும் வருகின்றனர். அறம் பொருளின்பங்களை வளர்க்கும் எத்துணையோ பல திறப்பட்ட ஒவ்வொரு பொருண்மொழிக்கும் தனித்தனி வெளியீடுகள் அந்நாடுகளில் இருப்பதுபோல நம் நாட்டிலில்லை. பொருண்மொழிகள் பற்றியன மட்டுமல்ல; ஆண், பெண், சிறுவர், சிறுமியர், தொழிலாளிகள், முதலாளிகள் இவர்களுக்கும், எண்ணிலாப் பத்திரிகைகள் உள. மேனுடுகளில் மக்களும் அரசினரும் பின்பற்றி நடக்கக்

கூடிய சான்ற ஒழுகலாறுகளைக் காட்ட வல்ல உயர்தரப் பத்திரிகைகளும் உள. அந்நாட்டினர், தோட்டி முதல் தொண்டைமான் வரை அவரவர் கைப்பொறுப்பில் வாங்கிய பத்திரிகைகளைத் தமது உண்டி உடைகளைப்போல நாளும் தவறாமல் கொண்டு, ஓதிப் பயனடைந்து வருகின்றனர்.

நமது நாட்டிலோ, பத்திரிகை (அல்லது அச்சுரிமை) வாய்ப்பூட்டுச் சட்டம் முதலிய அரசியல் தடைகள், எளிய பொருளாதார நிலை, குறுகிய கல்விதானும் நாடெங்கும் பரவாமை ஆகிய இவற்றால் பத்திரிகைத் தொழில் வளர்ச்சி குடத்திலிட்ட விளக்குப் போல அடங்கி நிற்கிறது. இஃது இப்படியிருக்க, படித்த இந்திய பெருமக்களுள் பத்திரிகை விலைக்கு வாங்குந் தகுதியுடையாருள்ளும் பெரும்பாலார் தங்கள் கைக்காசு போட்டுப் பத்திரிகைவாங்காமல், அந்தோ! பிறர்பால் இரவச்சமின்றி நாடோறும் இரந்து பத்திரிகை படித்து வருகை மிக வெட்கத்தக்க செயலேயாம்! அன்றியும், ஆங்கில பத்திரிகைகளை ஆர்வத்துடன் ஆதரிப்பது போல உயரிய தாய்மொழிப் பத்திரிகைகளை ஆதரியாமை நாகரிகம் ஆகுமோ? கல்விப் பொருளும் செல்வப் பொருளும் படைத்த இந்தியர் பலர் அறிவு நூல் ஆசிரியர்களையும் பத்திரிகைப் புலமை நடத்தி வரும் ஆசிரியர்களையும் போதிய மட்டும் ஆதரியாமையால் வரும் பழி பாவங்களைவிட, அந்நூல்களையும் பத்திரிகைகளையும் இயன்ற மட்டிலுங்கூட ஆதரியாமையால் மூளும் பழி பாவங்கள் மிகவும் பெரியனவே! இனியேனும் நம் அரிய தாய் நாட்டினர், நல்லாசிரியர்கள் போலவும் அறிவுக் கண்கள் போலவும் தம்மை நன்னெறியில் உய்த்துதவும் உயரிய நூல்களையும், மேதகு பத்திரிகைகளையும், அவற்றின் ஆசிரியர்களையும், ஒல்லும் வகை கைக்கொடுத்து ஆதரித்து, தாய்நாட்

டிற்கும், தாய்மொழிகளுக்கும், இந்திய பத்திரிகைத் தொழிலுக்கும் உரிய பெருமையை என்றென்றும் வளர்த்து வருமாறு அவர்தமை வணக்கத்துடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

3. பத்திரிகைத் தொகைவகை கடமைகள்

மேனாட்டிலே பிறந்து வளர்ந்து வரும் இத்தகு உயரிய பத்திரிகைத் தொழில் 2000 ஆண்டுகட்கு முற்பட்ட பழைமையுடைத்து எனலாம். சீனாவின் "பீகிங் கெஜட்"டே உலகத்தில் முதற் பத்திரிகையாகும் என்பர். நமது இந்திய பத்திரிகைத் தொழில் இற்றைக்கு 155 ஆட்டைப் பிராயத்தினது. உலகத்திலே வெளிவரும் பத்திரிகைகளின் மொத்தத் தொகை 50,000 எனப்படுகிறது. அவற்றுள் இந்திய பத்திரிகைகளின் தொகை (1927ன் கணக்குப்படி) 3,449. இவற்றுள் (1928ன் குறிப்பின்படி) தினசரிகளின் தொகை 1,950. எனவே, வார வெளியீடுகள், திங்கள் வெளியீடுகள் முதலிய பலவற்றின் தொகை சற்றேறக் குறைய 1,500 எனலாம். சென்ற ஒன்றரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட வளர்ச்சியையுடைய நமது இந்திய பத்திரிகைத் தொழிலே மக்கள் சமுக நிலையினும் அரசியல் நிலையினும் உலக சமுதாய நிலையினும் செழித்தோங்கவும், ஒற்றுமை தேங்கவும், துன்பம் நீங்கவும், இன்பம் ஓங்கவும், சிறப்பாகப் பத்திரிகாசிரியரும், பொதுவாகப் பத்திரிகை முதலாளிகளும், நடுவு நிலைமை பெயராத உண்மையுடனும் கடவுளின் திருவருளுடனும் கலந்து நின்று இனிது நடத்தி இன்புற்று வாழ்வார்களாக.

நூல் முற்றுப் பெற்றது.

குரு வாழ்க !

The B. N. Press, Educational Printers, Madras.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
34	26	29—12—1780	29—1—1780
38	20	கருமத்தை	கருத்தை
48	8	(The Amirta Bazaar Patrika)	(The Amrita Bazar Patrika)
54	17	(Mrs. Besent)	(Mrs. Besant)
58	8	பத்திரிகைள்	பத்திரிகைகள்
90	4	சிற்றிறவு	சிற்றறிவு

6990 6

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41.